# பல்துறைத் தோற்றுவாய்க்குச் சங்க இலக்கியத்தின் பங்களிப்பு

தேசியக் கருத்தரங்கம் - 2014




பதிப்பாசிரியர்

முனைவர் ச. முருகேசன்

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

# 9. சங்க இலக்கியங்களில் வணிகம்

முனைவர் இரா. ஜெகதீசன், இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் 632 115.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது உழவு, வணிகம் என்னும் இரு தொழில்கள் ஆகும். உழவினாலும் வணிகத்தினாலும் உயர்ந்த நாடு நாகரிகத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேற்றமடைந்த நாடாக விளங்கும். சங்ககாலத் தமிழகம் இவ்வகைத் தொழில்களை நிறைவாகப் பெற்றிருந்தது என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

வியன்மேவன் விழுச்செல்வத்து
இருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு (மதுரைக். 120-123)

என்ற மதுரைக் காஞ்சி வரிகளுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும்போது, உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு, வணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலை உடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே... எனக்கூறுவதால் தமிழ்நாட்டில் இவ்விரு தொழல்களும் மிகவும் சிறப்புற்றிருந்தன என்பது தெளிவு.

பண்டைக் காலத்தில் வணிகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனைத் தம தொழிலாகக் கொண்டு வாழ்ந்த புலவர்களும் உண்டு. நெல், புல், வரகு முதலான தானியங்களை விற்ற கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார்ஆ ஆடை வணிகம் செய்த அறுவை வணிகன் இளவேட்டனார்ஆ பல்பொருள்களை விற்ற மதுரைப்பண்ட வாணிகன் இளநத்தனார் போன்றோர் தங்கள் பெயருக்கு அடைமொழியாகத் தங்கள் வணிகப்பெயரையும் சேர்த்தே அமைத்துக் கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. மேலும், மதுரைப் பெருங்கொல்லனார்,



உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங்கொற்றனார் முதலியோரின் பெயரும் மேற்கூறிய பொருளை வலியுறுத்தும்.

மேற்காண் இருவகைத் தொழில்களுள் உழவுத்தொழில் ஆண்டிற்கு ஓரிரு முறை மட்டுமே அறுவடை செய்தனர். ஆனால், வணிகம் ஆண்டு முழுவதும் எல்லா இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளதை அறிய முடிகிறது. இத்தகு வணிகம் பண்டைக் காலத்தில் எவ்வாறு இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள்வழிக் காணமுற்படுகிறது இக்கட்டுரை.

பண்டைத் தமிழர்கள் வணிகம் செய்து வந்துள்ள நிலையை உள்நாட்டில் செய்துள்ள வணிகம், பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ள வணிகம் என இருவகைகளாகப் பிரித்து அறியலாம்.

**உள்நாட்டு வணிகம்:**

உள்நாட்டு வணிகத்தில் வியாபாரப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகளும் கழுதைகளும் பயன்படுத்தப்பட்டன. எருதுகள் நிரலாக இழுத்துச் செல்லும் உப்பு வண்டிகளைப் பற்றி சிறுபாணாற்றுப்படை,

நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த (சிறுபாண்.55)

எனக் குறித்துள்ளது. உப்புப் பொதியேற்றிய இந்த வண்டிகளை உமணப் பெண்டிர்களே ஓட்டிச் சென்றுள்ளனர். இவ்வாறு செல்லுமிடத்து அவ்வண்டியின் இருபுறத்தும் உப்பு வணிகர் வண்டியின் அச்சு முறியாமல் பாதுகாத்து நடந்துள்ளனர். அவ்வாறு செல்லும்போது, வண்டியில் பூட்டிய எருதுகள் இளைத்தால், அவற்றை ஓரிடத்தல் ஓய்வுபெறச் செய்துவிட்டு, அந்த நுகத்தடியில் பூட்டுவதற்காகச் சில எருதுகளை உடன் நடத்திச் சென்றுள்ளனர். இச்செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை பறைசாற்றுகிறது.

முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சிறல்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்வெருத் துமணர் பதிபோகு நெடுநெறி (பெரும். 61.-65)

மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் முதுகில் ஏற்றி நடத்திச் செல்வதும் உண்டு. பலாப்பழங்களைப் போன்ற மிளகு மூட்டைகளைச் சுமக்கும் நேரான காதினையும் குறிசுட்ட உரமான முதுகினையும்

உடைய கழுதைகளைப் பற்றியும் பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு குறித்துள்ளது.

தடவுநிலைப் பலவன் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நொன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும் (பெரும். 71-81)

உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறையே பெருவழக்கில் இருந்துள்ளது. பண்டைக்காலத்து மக்கள் நெல்லை அளவாக வைத்தே மற்றைய பொருள்களை மதிப்பிட்டனர் என்பதைச் சங்க இலக்கியங் கள்வழி அறியமுடிகிறது. பெரிய கடலில் மீன்வேட்டை செய்யும் சிறுகுடியில் வாழும் பரதவர் பெரிய உப்பங்கழியாகிய வயலில் விளைவித்த வெள்ளுப்பின் விலையைக் கூறி, ஞாயிற்றின் வெம்மையாலாகிய பிளப்புகளை உடைய குன்றங்களைக் கடந்து செல்லுவாள் உப்பு வணிகரது காதலை உடைய இளையமகள், இவள் திரண்ட ஒலி பொருந்திய வளைகளை ஒலிக்க வீசி, நெல்லுக்கு ஒத்த அளவினதே வெள்ளிய கல்லுப்பு என்று சேரியிற் பண்டமாற்றாகிய விலை கூறும் செய்தியைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகின்றன.

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உடாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின் (அகநா. 40:1-8))

வேழத்தின் வெண்கோடும் ஆமானின் ஊனும் கள்ளும் பொன்னும் ஒரே விலையில் விற்கப்படுவதைப் பார்க்கின்றோம். பொன்னை உடைய கடைத்தெருவில் கள்ளை வாங்குவதும் கவனிக்கத்தக்கது. வெள்ளை வரகும் கொள்ளும் கள்விற்கும் கடைகளில் கள்ளிற்கு விலையாகக் கொடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

கள்ளுடைய நியமத்து ஒள்ளிலை கொடுக்கும்
வெள்வரகு உழுத கொள்ளுடை கரம்பை (பதிற்.75:10-11)

பொன் விற்கும் கடைகளுக்கு அடையாளமாகப் பல கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பொன் நிறைந்த அளவில் விற்கப்பட்டுள்ளன.



கொடி நிழற்பட்ட பொன்னுடை நியமத்து (பதிற்.15-19)

மலையிலிருந்தும் கடலிலிருந்தும் பல்வேறு பொருள்கள் விற்கப்பட்டுள்ளன.

மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும் (பதிற். 59:1)

ஆற்றிலுண்டாய பொருளும் வேற்று நாட்டுப் பொருள்களும் கிடைத்தன.

**ஆற்றவும் பிறவும்**

வளம்பல நிகழ்தரு நினைந்தவை நன்னாட்டு (பதிற்.15:16-17)

கடைவீதிகளில் உணவுப்பொருள்களில் இருந்து தங்கம் வரை கிடைத்துள்ளன.

பண்டகசாலைகள்:

மதுரை நகரத்தில் இருந்த பல வணிக நிலையங்களைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் பகரும். பண்டங்கள் யாவும் பெரிய சாலை களில் வைக்கப்பட்டிருந்தன. கடலில் வந்தவற்றை உள்நாட்டிற்குச் செலுத்தும் முன்பும், உள்நாட்டில் நிலத்தில் வந்தவற்றைக் கடலின்மேற் செலுத்து முன்பும் அவை பண்டக சாலையில் சேர்த்து வைக்கப்படும். அந்தப் பண்டக சாலைகளில் மன்னனது முத்திரையை மூட்டைகளுக்கு இடுவர். அதனை உயரமாய் அடுக்கி வைப்பர் இதனைப் பட்டினப்பாலை வரிகள் பின்வருமாறு பகர்கின்றன.

நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணக்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம் (பட்டினப் 129-136)

அடுக்கி வைத்த மூட்டைகளின்மேல் ஆண்நாய்களும் ஆட்டுக்கிடாய்களும் ஏறிக் குதித்துக் கொண்டு இருக்கும். இது மலைச்சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுது போல இருப்பதாகப் புலவர் கூறுகின்றார்.

பொதிமுடைப் போரேறி
மடையாடு சிமைய மால்வரைக் கவாஅன்

வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுத்தா னேற்றை
ஏழகத் தகரோ டுகளு முன்றில் (பட்டினப். 55:4)

மேற்காண் சங்க இலக்கியப் பாடல்களின் சான்றுகள் வாயிலாக, சங்க காலத்தில் பண்டைத் தமிழர்கள் உள்நாட்டு வணிகத்தில் சிறப்புற்று இருந்தனர் என்பதை ஐயமின்றி அறிய முடிகிறது.

**அயல்நாட்டு வணிகம்:**

பண்டைத் தமிழர்கள் வணிகத்தைப் பிற நாடுகளிலும் செய்துவந்தனர். வணிகத்தொடர்பு சேர நாட்டிற்கும் அயல்நாடு களுக்கும் இடையே இருந்துள்ளதைப் பதிற்றுப்பத்து எடுத்துக் காட்டுகிறது. கிரேக்கர்களும் உரோமானியர்களும் சேரநாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தென்னிந்தியாவில் மேற்குக் கடற்கரையில் உரோமப் பேரரசின் நாணயங்கள்; கிடைத்துள்ளன. அந்த நாணயங்கள் டைபீரியா (Tiberius), காலிகுலன் (Caligula), கிளாடியா(Claudius), நீரோ(Nero) ஆகிய ரோமப் பேரரசர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டன. வெசுப்ப்லீசியன்(Vespasian), தைத்தசு(Titus) ஆகியோர் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் ஒருசிலவே இந்தியாவில் கிடைத்துள்ளன. தொமிசியன் (Domitian), நேவா (Nerva), திரேசன் (Trajan), கேத்திரியன் (Hadrian) முதலிய மன்னர் காலத்து நாணயங்களும் பல இடங்களில் கிடைத்துள்ளன. இவர்களின் காலத்திற்குப் பிறகு கொமோடக் (Commodus) காலத்து நாணயங்கள் நமக்குப் பல இடங்களில் கிடைத் துள்ளன. மேற்காண் மன்னர்கள் யாவரும் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டு களில் வாழ்ந்தவர்கள். எனவே, சங்க இலக்கியங்களில் இருந்து பெறப் படும் செய்திகளும் இந்திய வணிகம் பற்றிய மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகளும் ஒத்திருப்பதை அறிய முடிகிறது.

உரோம நாட்டுக் கப்பல்கள் நாணயங்களை ஏற்றித் தென்னிந்தியாவில் குறிப்பாகச் சேரநாட்டில் இறக்குமதி செய்தன என்றும், நாணயங்கள் செய்யும்முறை உரோம நாட்டினருக்குத் தெரிந்திருந்தது என்றும், இந்தியாவிலிருந்து வெள்ளி, பொன்கட்டிகள் ஏற்றி அனுப்பப்பட்டன. மீண்டும் அவை உரோம் நகரிலிருந்து நாணயங்களாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகிறது.

யவனம் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும் (அகநா. 149:9-10)



சேரநாட்டில் கிடைக்கும் நல்ல மிளகும் அதன் மணமும் உலக வணிகர்கள் அனைவராலும் விரும்பப்பட்டன. மேலும், சேரநாட்டில் கப்பல்கள் செய்யப்பட்டன. பெரியகடலில் செல்லும் மரக்கலங்கள் பழுது பார்க்கப்பட்டன. அவற்றில் பண்டங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும்
பண்ணிய விலைஞர் போல (பதிற். 76:4-5)

முசிறி போன்ற துறைமுகங்களில் சிறுபடகுகளும் சரக்குகளை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப் பட்டன. சேரநாட்டுப் பொருட்களான நல்லமிளகு, ஏலம், இலவங்கம், யானைத் தந்தம் போன்றவற்றைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்வதற்காக அயல்நாட்டவர் தமிழ்நாட்டில் கிடைக்கும் அரிய பொருள்களைப் பெறுவதற்காகக் கடலின்மேல் மிதந்து செல்லும் கப்பல்களைக் கொண்டு வந்தனர்.

அருங்கலந்தரீ இயர்நீர் மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம் (பதிற். 52:3-4)

அரிய பொருள்கள் எவை என்பதைப் புலவர்கள் குறிப்பிடவில்லை. சேரநாட்டில் சிறந்த குதிரைப்படை இருந்ததால் அவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்று அறியமுடிகிறது. துறைமுகங்களில் மேலைநாட்டுக் குதிரைகளும் வடநாட்டுப் பொருள்களும் மரக்கலங்களில் வந்து இறங்கின என மதுரைக்காஞ்சி வரிகள் இயம்புகின்றன.

விழுமிய நாவாய் பெருநி ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
(மதுரைக். 321-323)

பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் எனப்பட்டது. அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைகள் போலப் புகார்நகரின் திரையை உடைய துறையில் நாவாய்கள் நிற்கும். அசைகின்ற அந்த நாவாயின் மேல் கட்டப்பட்ட பாய்மரத்தில் கொடிகள் பறக்கும்.

வெளிவிளக்கும் களிறுபோலத்
தீம்புகார்த் திரைமுன்றுரைத்
தூங்கு நாவாய் நுவன்றிருக்கை
மிசைக்கூம்பி னசைக் கொடியும் (பட்டினப். 172-175)

பெரிய மரக்கலங்கலாகிய கப்பல்களுக்கு நாவாய் என்னும் பெயர் வழங்கியமை போன்று அக்காலத்தில் வங்கம் என்னும் பெயரும் வழங்கியுள்ளது.

**வணிகர்தம் பண்புகள்:**

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் மக்கள் நன்மைக்காகவே சிறப்புற நடந்தது. பொருள் ஈட்டுவது என்னும் கருத்தால் மட்டுமே வணிகம் நடத்தப்பெறவில்லை. பல இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்தில் கொண்டு வந்து குவித்து, அந்தப் பண்டங்கள் கிடைக்காத வேறு இடங்களுக்கு அவற்றை அனுப்பி, நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்கப் பண்டைத் தமிழர்கள் வணிகத்தை ஒரு பாலமாக அமைத்துக் கொண்டனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த வணிகர்கள் உண்மை பேசும் பண்புடையவர்களாக இருந்தனர். பொய்பேசுவதைத் தவிர்த்தனர். தமக்குக் கூடுதலாக வரும் வருவாயை வெளிப்படையாகக் காட்டிப் பண்டங்களுக்கு உரிய விலையைச் சொல்லி விற்பர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும், தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடுக்காமலும் நடுவு நிலைமையோடும் உண்மையோடும் வணிகம் நடத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது செல்வத்தை அறம் தவறாது ஈட்டுவர் எனப் பட்டினப்பாலை வரிகள் பகரும்.

நெடுநுகத்துப் பகல்போல  
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்  
வடுவஞ்சி வாய்மொழிந்து  
தமவும் பிறவு மொப்ப நாழக்  
கொள்வதூஉ மிகைகொளாது  
கொடுப்பதூஉம் குறைகொடாது (பட்டினப். 206-210)

மேலும், அறத்தின்வழி வணிகம் நடத்தியதை மதுரைக்காஞ்சியும்,

அறநெறி பிழையா தாற்றி னொழுகி (மதுரைக். 500)

எனக் குறித்துள்ளது ஈண்டு நோக்கத்தக்கது.

மேற்காண் சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாகப் பண்டைத் தமிழகத்தில் வணிகம் மிகவும் நேர்மையாகவும் சிறப்பாகவும் பண்டைத் தமிழர்கள் செய்துள்ளனர் என்பது வெளிப்படை. அறநெறி பிழையா வணிகத்தை மனமுவந்து செய்து வந்துள்ளனர். இத்தகைய அறிநெறி பிழையா வணிகம்தான் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளதுடன், பல்வேறு நாடுகளையும் ஈர்த்துள்ளது எனில் அது மிகையல்ல.

## 10. சங்க இலக்கியத்தில் வணிக முறைகள்

முனைவர் மா.சிதம்பரம், இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

வளம் சார்ந்த பண்பட்ட சமூகத்தின் அடையாளங்களுள் ஒன்று வணிகம். இவ்வணிகம் சார்ந்த மரபுகள் ஓர் இனம் சார்ந்த சமூகத்திற்குப் பிறிதோர் இனம் சார்ந்த சமூகத்தை அறிமுகப்படுத்து வதுடன், பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் அடித்தளமாய் அமைகின்றன. அத்தகைய விழுமியங்களின் அடிப்படையில் பண்டைத் தமிழர்தம் வணிக முறைகளை ஆய்வதாய் இக்கட்டுரை விரிகின்றது.

**அகநாட்டு வணிகம்**

வணிக முறைகளுள் முதன்மை பெறுவது அகநாட்டு வணிகம் ஆகும். ஐந்திணைப் பிரிவினைக் கொண்ட தமிழ் நிலத்தில் ஓரிடத்து விளைபொருளைக் கொண்டு சென்று பிறிதோர் இடத்து விற்பனை செய்வது பண்டைத் தமிழர் வணிகமுறைகளுள் குறிக்கத்தக்கதாம். இத்தகைய வணிகமுறையினை மேற்கொள்வோர் பாதுகாப்புக் கருதி குழுவாகச் சென்றுள்ளனர். இவ்வணிகக் குழு 'சாத்து' எனப் பெற்றது. இவ்வணிகர்கள் பொதி ஏற்றிய வண்டியினை இழுத்துச் செல்ல, எருது களைப் பயன்படுத்தியுள்ளனர். இத்தகைய எருதினை அரசனுக்கு உவமித்துப் புறநானூற்றுப் புலவன் குறிப்பான். அத்தகைய பாடல் அடிகள்,

'எருது இளைய நுகம் உணராவே  
சகடம் பண்டம் பெருது பெய்தன்றே' (புறம்.102:1-2)

என்பதாம்.

பெரும்பாணாற்றுப்படை, கழுதைகளின்மேல் ஏற்றிச் செல்லப் பெற்ற மிளகுப் பொதிகள் பலாப்பழத்தின் தோற்றம் பெற்று அமைந்திருந்தன எனக் குறிக்கும். இதற்குச் சான்றாய்,

## ஆசிரியர் குறிப்பு



பேராசிரியர் முனைவர் சி. தண்டபாணி, வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம், பொருளியல் துறை பேராசிரியராகப் பணியாற்றுகிறார். முன்னதாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரியில் பொருளியல் விரிவுரையாளராகவும், வேலூர் முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியில் பொருளியல் இணைப்பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். கடந்த 25 ஆண்டுகளாகப் பொருளியல் துறை பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்பில் முதலாவதாக வந்து பட்டம் பெற்றார். ஆய்வியல் நிறைஞர் பட்டத்தில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் மலைவாழ் மக்களின் நலன் குறித்து ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

இவர் மலைவாழ் மக்களின் சமுக, பொருளாதார மேம்பாடு குறித்துப் பல ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். இவர் வட்டார, மாநில, தேசிய மற்றும் பன்னாட்டுப் பொருளாதாரக் கருத்தரங்கங்கள் பலவற்றில் கலந்துகொண்டு எழுபத்து ஐந்திற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். எண்பதுக்கும் மேற்பட்ட பல தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் பொருளியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

தமிழ்நாடு பொருளியல் அறிஞர்கள் கழகம், திருச்சி, இந்திய பொருளியல் அறிஞர்கள் கழகம் புதுதில்லி, இந்திய பொது நிர்வாக நிறுவனம், புதுதில்லி ஆகிய பிரபல நிறுவனங்களில் ஆயுட்கால உறுப்பினராக உள்ளார். பல சமுகநல அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார். இவருடைய வழிகாட்டுதலில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர். எட்டுப் பேர் முனைவர் பட்ட ஆய்விலும் ஈடுபட்டுள்ளனர். இவர் சைவ சமய நெறி குறித்தும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் குறித்தும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

ISBN 978-93-8460-703-6

# செம்மொழி இலக்கியத்தில் பொருளாதாரச் சிந்தனைகள்



பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் சி. தண்டபாணி

# 42. சங்க இலக்கியங்களில் பொருளாதாரச் சிந்தனைகள்

முனைவர் இரா. ஜெகதீசன்,
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் 632 115.*

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது உழவு, வணிகம் என்னும் இரு தொழில்கள் ஆகும். உழவினாலும் வணிகத்தினாலும் உயர்ந்த நாடு நாகரிகத்திலும் பொருளாதாரத்திலும் முன்னேற்ற மடைந்த நாடாக விளங்கும். சங்ககாலத் தமிழகம் இவ்வகைத் தொழில்களை நிறைவாகப் பெற்றிருந்தது என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**வியன்மேவன் விழுச்செல்வத்து**
**இருவகையா னிசைசான்ற**
**சிறுகுடிப் பெருந்தொழுவர்**
**குடிகெழீஇய நானிலவரொடு** (மதுரைக். 120-123)

என்ற மதுரைக் காஞ்சி வரிகளுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதும்போது, *உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு, வணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலை உடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே...* எனக்கூறுவதால் தமிழ்நாட்டில் இவ்விரு தொழல்களும் மிகவும் சிறப்புற்றிருந்தன என்பது தெளிவு.

பண்டைக் காலத்தில் வணிகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனைத் தம தொழிலாகக் கொண்டு வாழ்ந்த புலவர்களும் உண்டு. நெல், புல், வரகு முதலான தானியங்களை விற்ற கூலவணிகன் சீத்தலைச் சாத்தனார்; ஆடை வணிகம் செய்த அறுவை வணிகன் இளவேட்டனார்; பல்பொருள்களை விற்ற மதுரைப்பண்ட வாணிகன் இளநத்தனார் போன்றோர் தங்கள்



பெயருக்கு அடைமொழியாகத் தங்கள் வணிகப்பெயரையும் சேர்த்தே அமைத்துக் கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. மேலும், மதுரைப் பெருங்கொல்லனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங்கொற்றனார் முதலியோரின் பெயரும் மேற்கூறிய பொருளை வலியுறுத்தும்.

மேற்காண் இருவகைத் தொழில்களுள் உழவுத்தொழில் ஆண்டிற்கு ஓரிரு முறை மட்டுமே அறுவடை செய்தனர். ஆனால், வணிகம் ஆண்டு முழுவதும் எல்லா இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளதை அறிய முடிகிறது. இத்தகு வணிகம் பண்டைக் காலத்தில் எவ்வாறு இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்கள்வழிக் காணமுற்படுகிறது இக்கட்டுரை.

பண்டைத் தமிழர்கள் வணிகம் செய்து வந்துள்ள நிலையை உள்நாட்டில் செய்துள்ள வணிகம், பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ள வணிகம் என இருவகைகளாகப் பிரித்து அறியலாம்.

## உள்நாட்டு வணிகம்

உள்நாட்டு வணிகத்தில் வியாபாரப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகளும் கழுதைகளும் பயன்படுத்தப்பட்டன. எருதுகள் நிரலாக இழுத்துச் செல்லும் உப்பு வண்டிகளைப் பற்றி சிறுபாணாற்றுப்படை,

**நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த** (சிறுபாண்.55)

எனக் குறித்துள்ளது. உப்புப் பொதியேற்றிய இந்த வண்டிகளை உமணப் பெண்டிர்களே ஓட்டிச் சென்றுள்ளனர். இவ்வாறு செல்லுமிடத்து அவ்வண்டியின் இருபுறத்தும் உப்பு வணிகர் வண்டியின் அச்சு முறியாமல் பாதுகாத்து நடந்துள்ளனர். அவ்வாறு செல்லும்போது, வண்டியில் பூட்டிய எருதுகள் இளைத்தால், அவற்றை ஓரிடத்தல் ஓய்வுபெறச் செய்துவிட்டு, அந்த நுகத்தடியில் பூட்டுவதற்காகச் சில எருதுகளை உடன் நடத்திச் சென்றுள்ளனர். இச்செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை பறைசாற்றுகிறது.

**முடலை யாக்கை முழுவலி மாக்கள்**
**சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த**
**பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்**
**சிறல்பத வுணவின் கொள்ளை சாற்றிப்**
**பல்வெருத் துமணர் பதிபோகு நெடுநெறி.**
**(பெரும். 61.-65)**

மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் முதுகில் ஏற்றி நடத்திச் செல்வதும் உண்டு. பலாப்பழங்களைப் போன்ற மிளகு மூட்டைகளைச் சுமக்கும் நேரான காதினையும் குறிசுட்ட உரமான முதுகினையும் உடைய கழுதைகளைப் பற்றியும் பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு குறித்துள்ளது.

**தடவுநிலைப் பலவன் முழுமுதற் கொண்ட**
**சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்**
**புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நொன்புறத்**
**தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
**உல்குடப் பெருவழிக் கவலை காக்கும்**
**(பெரும். 71-81)**

உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறையே பெருவழக்கில் இருந்துள்ளது. பண்டைக்காலத்து மக்கள் நெல்லை அளவாக வைத்தே மற்றைய பொருள்களை மதிபபிட்டனர் என்பதைச் சங்க இலக்கியங்கள்வழி அறியமுடிகிறது. பெரிய கடலில் மீன்வேட்டை செய்யும் சிறுகுடியில் வாழும் பரதவர் பெரிய உப்பங்கழியாகிய வயலில் விளைவித்த வெள்ளுப்பின் விலையைக் கூறி, ஞாயிற்றின் வெம்மையாலாகிய பிளப்புகளை உடைய குன்றங்களைக் கடந்து செல்லுவாள் உப்பு வணிகரது காதலை உடைய இளையமகள், இவள் திரண்ட ஒலி பொருந்திய வளைகளை ஒலிக்க வீசி, *நெல்லுக்கு ஒத்த அளவினதே வெள்ளிய கல்லுப்பு* என்று சேரியிற் பண்டமாற்றாகிய விலை கூறும் செய்தியைப் பின்வரும் அகநானூற்றுப் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்**
**இருங்கழிச் செறுவின் உடாஅது செய்த**
**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி**
**என்றூழ் விடர குன்றம் போகும்**



**கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரி விலைமாறு கூறலின் (அகநா. 40:1-8)**

உப்பு விற்றுக்கொண்டே நெல்லினால் சமைத்த மூரலாகிய வெண்சோற்றைப் பற்றியும், *ஊரவரே நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும் கொள்வீராக!...* என்று சேரிகள் தோறும் கூறி விற்கும் அழகிய வளைந்த உந்தியினையும் மூங்கில் போன்ற தோளினையும் உடைய நெய்தல் நிலப்பெண்ணைப் பற்றியும் அகநானூற்றுப் பாடல்வரிகள் கூறுகிறது.

**நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீ ரோலெனச் சேரிதொறும் நுவலும்**
**அவ்வாங் குந்தி அமைத்தோ ளாய்.(அகநா.390:8-10)**

இதனைக் குறுந்தொகைப் பாடல்வரியும் உறுதிசெய்கிறது.

**உப்பை மாறி வெண்ணெற் றரீஇய (குறுந்.269:5)**

மேலும், வெள்ளை உப்பைக் கொடுத்து நெல்லைக் கொண்டுவரும் சிறுஓடங்களைப் பற்றிப் பாட்டினப்பாலைக் கூறுவதைக் காணமுடிகிறது.

**குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு**
**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப்பற்றி.(பட்டினப்.28-30)**

மலைநாட்டு வேட்டுவப் பெண்டிர்கள் தயிர் கொண்டுவந்த மண்குடத்திற்குள் பாண்டிநாட்டு உழத்திகள் நெல்லைச் சொரிவர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன.

**கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்**
**மான்றசை சொரிந்த வட்டியு மாரிமகள்**
**தயிர்கொடு வந்த தசும்பு நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரி வரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணல்**
**முகந்தனர் கொடுப்ப வுகந்தனர் பெயரும்.**
**(புறம். 33:1-6)**

கூரிய பற்களை உடைய வலைப்பாண்மகள், இனிமை உடைய கெடிற்று மீனைச் சொரிந்த அகன்ற பெட்டி நிறையப் பண்டமாற்றாக, மனையோள் பெரும் பயற்றினை நிறைப்பாள் என்று ஐங்குறுநூற்று வரிகள் பகரும்.

**முள்ளெயிற்றுப் பாண்மக ளின் கெடிறு சொரிந்த**
**அகன்பெரு வட்டி நிறைய மனையோள்**
**அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர.(ஐங்.. 47:1-3)**

மேலும், மீனைக் கொடுத்து நெல்லைப் பெறும் வழக்கமும் இருந்துள்ளதைப் புறநானூறு எடுத்தியம்புகின்றது.

**மீனொடுத்து நெற்குவை. (புறநா.343:1)**

தேனையும் கிழங்கு வகைகளையும், மீனின் கொழுப்புக்காகவும் நறவத்துக்காகவும் விற்கும் வழக்கத்தையும்; கள்ளுக்காகவும் மானின் இறைச்சிக்காவும், கரும்பையும் சோற்றையும் கொடுக்கும் வழக்கத்தையும் பண்டைத் தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதைப் பொருநராற்றுப்படை இயம்புகின்றது.

**தேனெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீனெய்யொடு நறவுமறுகவும்**
**தீங்கரும்போ டவல்வகுத்தோர்**
**மான்குறையொடு மதுமறுகவும் (பொருநர்.214-217)**

தயிர் புள்ளியாகத் தெரித்த வாயையுடைய மோர்ப் பானையைத் தலைச்சுமட்டின்மேல் வைத்துக் கொண்டு செல்லும் ஆய்மகள், தான் நெய்யை விற்கின்ற விலைக்கு மாறாகப் பசும்பொன்னைக் கொள்ளாது, பால் கறக்கும் எருமையையும் நல்ல பசுக்களையும் கரிய எருமை (கன்று) நாகினையும் பெற்று வந்தனர் என்பதைப் பின்வரும் பெரும்பாணாற்றுப்படைப் பாடல்வரிகள் சுட்டுகின்றன.

**உறையாமை தீந்தயிர் கலக்கி னுரைதெரிந்து**
**புகர்வாய்க் குழிச பூஞ்சுமட் டிரீஇ**
**நாண்மோர் மாறு நன்மா மேனிச்**
**சிறுகுழை துயவல்வருங் காதிற் பணைத்தோட்**
**குறுநெறிக் கொண்ட கூந்த வாய்மகள்**



**அளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி**
**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாளள்**
**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்**
**மடிவாயக் கோவலர் குடிவயிற் சேப்பின்**
**(பெரும்பாண்.158-166)**

சந்தை கடைத்தெரு போன்ற இடங்களில் பொருள்களைக் கொண்டு வந்து விற்றல் உள்நாட்டு வாணிகத்தின் சிறப்பியல்புகளாகும். பெரும்பான்மையாகப் பண்டமாற்று முறையில் கள்ளுக்கு விலையாக ஆண்மானின் ஊனையும், வேழத்தின் வெண்கோட்டையும் கொடுத்துள்ளதைப் பதிற்றுப்பத்து பகர்கின்றது.

**செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட**
**மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு**
**பொன்னுடை நியமத்துப் பிழிசடை கொடுக்கும்**
**(பதிற்.30:10-12)**

வேழத்தின் வெண்கோடும் ஆமானின் ஊனும் கள்ளும் பொன்னும் ஒரே விலையில் விற்கப்படுவதைப் பார்க்கின்றோம். பொன்னை உடைய கடைத்தெருவில் கள்ளை வாங்குவதும் கவனிக்கத்தக்கது. வெள்ளை வரகும் கொள்ளும் கள்விற்கும் கடைகளில் கள்ளிற்கு விலையாகக் கொடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**கள்ளுடைய நியமத்து ஒள்ளிலை கொடுக்கும்**
**வெள்வரகு உழுத கொள்ளுடை கரம்பை**
**(பதிற்.75:10-11)**

பொன் விற்கும் கடைகளுக்கு அடையாளமாகப் பல கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பொன் நிறைந்த அளவில் விற்கப்பட்டுள்ளன.

**கொடி நிழற்பட்ட பொன்னுடை நியமத்து** (பதிற்.15-19)

மலையிலிருந்தும் கடலிலிருந்தும் பல்வேறு பொருள்கள் விற்கப்பட்டுள்ளன.

**மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்** (பதிற். 59:1)

ஆற்றிலுண்டாய பொருளும் வேற்று நாட்டுப் பொருள்களும் கிடைத்தன.

**ஆற்றவும் பிறவும்**
**வளம்பல நிகழ்தரு நினைந்தவை நன்னாட்டு**
**(பதிற்.15:16-17)**

கடைவீதிகளில் உணவுப்பொருள்களில் இருந்து தங்கம் வரை கிடைத்துள்ளன.

பண்டகசாலைகள்

மதுரை நகரத்தில் இருந்த பல வணிக நிலையங்களைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் பகரும். பண்டங்கள் யாவும் பெரிய சாலைகளில் வைக்கப்பட்டிருந்தன. கடலில் வந்தவற்றை உள்நாட்டிற்குச் செலுத்தும் முன்பும், உள்நாட்டில் நிலத்தில் வந்தவற்றைக் கடலின்மேற் செலுத்து முன்பும் அவை பண்டக சாலையில் சேர்த்து வைக்கப்படும். அந்தப் பண்டக சாலைகளில் மன்னனது முத்திரையை மூட்டைகளுக்கு இடுவர். அதனை உயரமாய் அடுக்கி வைப்பர் இதனைப் பட்டினப்பாலை வரிகள் பின்வருமாறு பகர்கின்றன.

**நீரினின்று நிலத்தேற்றவும்**
**நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்**
**அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்லணக்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கி**
**மதிநிறைந்த மலிபண்டம் (பட்டினப் 129-136)**

அடுக்கி வைத்த மூட்டைகளின்மேல் ஆண்நாய்களும் ஆட்டுக்கிடாய்களும் ஏறிக் குதித்துக் கொண்டு இருக்கும். இது மலைச்சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுது போல இருப்பதாகப் புலவர் கூறுகின்றார்.

**பொதிமூடைப் போரேறி**
**மடையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**



**வரையாடு வருடைத் தோற்றம் போலக்**
**கூருகிர் ஞமலிக் கொடுத்தா னேற்றை**
**ஏழகத் தகரோ டுகளு முன்றில் (பட்டினப். 55:4)**

மேற்காண் சங்க இலக்கியப் பாடல்களின் சான்றுகள் வாயிலாக, சங்க காலத்தில் பண்டைத் தமிழர்கள் உள்நாட்டு வணிகத்தில் சிறப்புற்று இருந்தனர் என்பதை ஐயமின்றி அறிய முடிகிறது.

அயல்நாட்டு வணிகம்

பண்டைத் தமிழர்கள் வணிகத்தைப் பிற நாடுகளிலும் செய்துவந்தனர். வணிகத்தொடர்பு சேர நாட்டிற்கும் அயல்நாடுகளுக்கும் இடையே இருந்துள்ளதைப் பதிற்றுப்பத்து எடுத்துக் காட்டுகிறது. கிரேக்கர்களும் உரோமானியர்களும் சேரநாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தென்னிந்தியாவில் மேற்குக் கடற்கரையில் உரோமப் பேரரசின் நாணயங்கள் கிடைத்துள்ளன. அந்த நாணயங்கள் டைபீரியா (Tiberius), காலிகுலன் (Caligula), கிளாடியா (Claudius), நீரோ (Nero) ஆகிய ரோமப் பேரரசர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டன. வெசுப்பாசியன் (Vespasian), தைத்தசு (Titus) ஆகியோர் காலத்தில் வெளியிடப் பட்ட நாணயங்கள் ஒருசிலவே இந்தியாவில் கிடைத்துள்ளன. தொமிசியன் (Domitian), நேவா (Nerva), திரேசன் (Trajan), கேத்திரியன் (Hadrian) முதலிய மன்னர் காலத்து நாணயங்களும் பல இடங்களில் கிடைத்துள்ளன. இவர்களின் காலத்திற்குப் பிறகு கொமோடக் (Commodus) காலத்து நாணயங்கள் நமக்குப் பல இடங்களில் கிடைத்துள்ளன. மேற்காண் மன்னர்கள் யாவரும் கி.பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர்கள். எனவே, சங்க இலக்கியங்களில் இருந்து பெறப்படும் செய்திகளும் இந்திய வணிகம் பற்றிய மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ள வரலாற்றுக் குறிப்புகளும் ஒத்திருப்பதை அறிய முடிகிறது.

உரோம நாட்டுக் கப்பல்கள் நாணயங்களை ஏற்றித் தென்னிந்தியாவில் குறிப்பாகச் சேரநாட்டில் இறக்குமதி செய்தன என்றும், நாணயங்கள் செய்யும்முறை உரோம நாட்டினருக்குத்

தெரிந்திருந்தது என்றும், இந்தியாவிலிருந்து வெள்ளி, பொன்கட்டிகள் ஏற்றி அனுப்பப்பட்டன. மீண்டும் அவை உரோம் நகரிலிருந்து நாணயங்களாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகிறது.

**யவனம் தந்த வினைமா ணன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**(அகநா. 149:9-10)**

சேரநாட்டில் கிடைக்கும் நல்ல மிளகும் அதன் மணமும் உலக வணிகர்கள் அனைவராலும் விரும்பப்பட்டன. மேலும், சேரநாட்டில் கப்பல்கள் செய்யப்பட்டன. பெரியகடலில் செல்லும் மரக்கலங்கள் பழுது பார்க்கப்பட்டன. அவற்றில் பண்டங்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

**பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுக்கும்**
**பண்ணிய விலைஞர் போல (பதிற். 76:4-5)**

முசிறி போன்ற துறைமுகங்களில் சிறுபடகுகளும் சரக்குகளை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப் பட்டன. சேரநாட்டுப் பொருட்களான நல்லமிளகு, ஏலம், இலவங்கம், யானைத் தந்தம் போன்றவற்றைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்வதற்காக அயல்நாட்டவர் தமிழ்நாட்டில் கிடைக்கும் அரிய பொருள்களைப் பெறுவதற்காகக் கடலின்மேல் மிதந்து செல்லும் கப்பல்களைக் கொண்டு வந்தனர்.

**அருங்கலந்தரீ இயர்நீர் மிசை நிவக்கும்**
**பெருங்கலி வங்கம் (பதிற். 52:3-4)**

அரிய பொருள்கள் எவை என்பதைப் புலவர்கள் குறிப்பிடவில்லை. சேரநாட்டில் சிறந்த குதிரைப்படை இருந்ததால் அவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்று அறியமுடிகிறது. துறைமுகங்களில் மேலைநாட்டுக் குதிரைகளும் வடநாட்டுப் பொருள்களும் மரக்கலங்களில் வந்து இறங்கின என மதுரைக்காஞ்சி வரிகள் இயம்புகின்றன.

**விழுமிய நாவாய் பெருநி ரோச்சுநர்**
**நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்**
**(மதுரைக். 321-323)**



பெருங்கடலில் ஓடும் கலம் நாவாய் எனப்பட்டது. அசையாத கம்பத்தினை அசைக்கும் யானைகள் போலப் புகார்நகரின் திரையை உடைய துறையில் நாவாய்கள் நிற்கும். அசைகின்ற அந்த நாவாயின் மேல் கட்டப்பட்ட பாய்மரத்தில் கொடிகள் பறக்கும்.

**வெளிவிளக்கும் களிறுபோலத்**
**தீம்புகார்த் திரைமுன்றுறைத்**
**தூங்கு நாவாய் நுவன்றிருக்கை**
**மிசைக்கூம்பி னசைக் கொடியும் (பட்டினப்.172-175)**

பெரிய மரக்கலங்கலாகிய கப்பல்களுக்கு நாவாய் என்னும் பெயர் வழங்கியமை போன்று அக்காலத்தில் வங்கம் என்னும் பெயரும் வழங்கியுள்ளது.

## எபிரேயருடன் வணிகம்

தொடக்க காலத்தில் இருந்தே சேரநாட்டின் பொருள் வளங்கள் தொலைநாடுகளில் வணிகரின் கவனத்தைக் கவர்ந்து வந்தன. சாலமன் ஆட்சி செய்த காலகட்டத்தில் (கி.மு.1000) மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறைக் கப்பல்கள் தங்கம், வெள்ளி, யானைத்தந்தம், குரங்குகள், மயில்கள் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு சென்றதை வேதாகமத்தின்வழி அறிகின்றோம். இவை சேரநாட்டில் இருந்துதான் சென்றிருக்க வேண்டும். பதிற்றுப்பத்துச் செய்திகளுடன் இச்செய்திகள் ஒத்திருப்பதையும் அறியமுடிகிறது.

எபிரேய மொழியில் வழங்கும் கபிம், துகிம் போன்ற சொற்கள் முறையே கவி, தோகை என்னும் தமிழ்ச்சொற்களில் இருந்து பிறந்திருக்கலாம் என்று ஆய்வறிஞர்கள் கூறுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## கிரேக்கர்களுடன் வணிகம்

அரேபியர்களும் கிரேக்கர்களும் தமிழக வணிகத்தில் அதிக கவனம் செலுத்தினர். அரிசி, இஞ்சி, கருவாப்பட்டை ஆகியவற்றிற்கு ஒரிச, ஜிஞ்சிபெர், கார்ப்பியன் என்று

கிரேக்கமொழியில் வழங்கப் பட்டன. கிரேக்க வணிகர்கள் இப்பொருட்களையும் தமிழகத்திலிருந்து கொண்டு சென்று ஐரோப்பிய நாடுகளில் பரவச் செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

சேரநாட்டுத் துறைமுகங்களில் நடைபெற்ற அயல்நாட்டு வணிகம் பற்றிப் பெருப்ளூஸ் என்னும் வரலாற்று நூலும் ஏராளமான சான்றுகளை அளித்துள்ளது. பதிற்றுப்பத்தில் கூறப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகச் செய்திகள் வரலாற்றுச் சான்றுகளுடன் புதைபொருள் சான்றுகளுடனும் ஒத்துப் போகின்றன. இவை தமிழக அயல்நாட்டு வணிகத் தொடர்பை நிலைநாட்டுகின்றன. புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேட்டில் கிடைத்த புதைபொருள்கள் உரோமத்தொழிற் சாலை இருந்தமைக்கான சான்றும் கிடைத்துள்ளது.

## துறைமுகங்களும் கலங்கரைவிளக்கமும்

தமிழகத்தில் பெரும் வணிகம் நடைபெற்ற காரணத்தால், காவிரிப்பூம்பட்டினம், முசிறி, கொற்கை முதலான பல துறைமுகங்கள் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியுள்ளன. பெருங்கப்பல்களும் செழித்த வணிகமும் பண்டைக் காலத்தில் இருந்தமையால், நடுக்கடலில் கப்பல்கள் சென்று திரியும் இரவுக்காலத்தில் திசை மாறாமல் கரைசேர்வதற்குத் துணையாகக் கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கங்களை அமைத்தனர். நடுக்கடலில் செல்லும் கலங்களுக்குத் துணையாக உள்ள விளக்குகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது.

**இரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்**
**துறைபிறக் கொழியப் போகி (பெரும்பாண். 349-351)**

## வணிகர்தம் பண்புகள்

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் மக்கள் நன்மைக்காகவே சிறப்புற நடந்தது. பொருள் ஈட்டுவது என்னும் கருத்தால் மட்டுமே வணிகம் நடத்தப்பெறவில்லை. பல இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்தில் கொண்டு வந்து குவித்து, அந்தப் பண்டங்கள் கிடைக்காத வேறு இடங்களுக்கு அவற்றை அனுப்பி, நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்கப் பண்டைத் தமிழர்கள் வணிகத்தை ஒரு பாலமாக அமைத்துக் கொண்டனர்.



காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த வணிகர்கள் உண்மை பேசும் பண்புடையவர்களாக இருந்தனர்; பொய்பேசுவதைத் தவிர்த்தனர். தமக்குக் கூடுதலாக வரும் வருவாயை வெளிப்படையாகக் காட்டிப் பண்டங்களுக்கு உரிய விலையைச் சொல்லி விற்பர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும், தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடுக்காமலும் நடுவு நிலைமையோடும் உண்மையோடும் வணிகம் நடத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது செல்வத்தை அறம் தவறாது ஈட்டுவர் எனப் பட்டினப்பாலை வரிகள் பகரும்.

**நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவு மொப்ப நாழக்**
**கொள்வதூஉ மிகைகொளாது**
**கொடுப்பதூஉம் குறைகொடாது (பட்டினப். 206-210)**

மேலும், அறத்தின்வழி வணிகம் நடத்தியதை மதுரைக்காஞ்சியும்,

**அறநெறி பிழையா தாற்றி னொழுகி (மதுரைக். 500)**

எனக் குறித்துள்ளது ஈண்டு நோக்கத்தக்கது.

மேற்காண் சங்க இலக்கியப் பாடல்களின் வாயிலாகப் பண்டைத் தமிழகத்தில் வணிகம் மிகவும் நேர்மையாகவும் சிறப்பாகவும் பண்டைத் தமிழர்கள் செய்துள்ளனர் என்பது வெளிப்படை. அறநெறி பிழையா வணிகத்தை மனமுவந்து செய்து வந்துள்ளனர். இத்தகைய அறிநெறி பிழையா வணிகம்தான் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளதுடன், பல்வேறு நாடுகளையும் ஈர்த்துள்ளது எனில் அது மிகையல்ல.




ISBN 8190949691
காமாட்சி பதிப்பகம்

சைவ இலக்கியங்கள் | ஆய்வுக் கோவை | தொகுதி 2

# சைவ இலக்கியங்கள்

## ஆய்வுக் கோவை

தொகுதி 2



முனைவர் வேல். கார்த்திகேயன்
முனைவர் வேல். மகேஸ்வரி
முனைவர் இரா. ஜெகதீசன்
முனைவர் சீதா. ராமதாஸ்

மன்னுயிர்களுக்கெல்லாம் முக்தி தரும் சக்தி பொருளாக விளங்குகிறது. சிவபக்தியையும் தெய்வத்தன்மையையும் எட்டு வகை சித்திகளையும் தரவல்லது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்குரிய திருநீறு ஆகும்.

### எண் வகை பக்தி முறைகள்

1) தொண்டர் அடிதொழுதல்
2) பூசைத் தொழில் மகிழ்தல்
3) அர்ச்சனை புரிதல்
4) நியமங்கள் கொள்தல்
5) அருங்கதை கேட்டல்
6) ஆனந்தக் கண்ணீர் விடுதல்
7) திருப்பணி செய்தல்
8) உணவு கொள்ளாது இருத்தல்

இவைகளைத் தருவது திருநீற்றின் மகிமை ஆகும்.

**''புனலி லேடெதிர் போகெனப் போகுமே;**
**புத்தனார் தலை தத்தெனத் தத்துமே**
**கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே;**
**கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே;**
**பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே;**
**பழையஎன்பு பொற் பாவைய தாக்குமே;**
**சினஅ ராவிடந் தீர்க்கெனத் தீர்க்குமே;**
**செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே;**

இது சம்பந்தர் செய்த அற்புதங்களைப் பற்றிய ஒரு தனிப்பாடல் ஆகும்.

### முடிவுரை

ஞானசம்பந்தர் போலித்துறவை வெறுத்துப் பழிப்பதிலும், பெண்களுக்கு நேர்ந்த தாழ்வைப் போக்குவதிலும் ஆர்வம் காட்டினார். சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளுக்கு அவர் வாழ்விலும் இடம் இல்லை. அவரது பாடல்களிலும் இடம் இல்லை. அவரது பாடல்களில் ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்னும் பாடல் நம் மனதிற்கு ஊக்கமும், நம்பிக்கையும் ஊட்டுவன அவரது பாடல்கள் பல ஊர்களில் இருந்த கோயில்கள், கோயில்களில் நடைபெற்ற விழாக்கள், வழிபாடுகள், இசை, நடனம், இயற்கை அழகு, வரலாற்றுக் குறிப்புகள், சைவசமயக் குறிப்புகள் ஆகிய வற்றைக் காண முடிகிறது. இவ்வாறு சைவசமயம் ஞான சம்பந்தர் பாடல்களால் இன்றும் வளர்ந்து வருகிறது.



# உமாபதி சிவம் இயற்றிய நெஞ்சுவிடுதூதும் தூது இலக்கணமும்

முனைவர் இரா. ஜெகதீசன்
*இணைப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர் 632 115.*

சிற்றிலக்கிய வகைகளில் தூது இலக்கியமும் ஒன்று. தொல்காப்பியத்தில் அகத்திணையியல், கற்பியல், பொருளியல், களவியல், மெய்ப்பாட்டியல் ஆகிய பகுதிகளில் தூதின்; இலக்கியக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. தமிழ்மொழி யில் உள்ள தூது இலக்கியங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று புறத்தூது, மற்றொன்று அகத்தூது என்பன. ஓர் அரசன் மற்றோர் அரசனிடம் அனுப்பும் தூதும், ஓர்புலவன் ஓர் அரசனிடம் அனுப்பும் தூதும் புறத்தூதாகும். தலைவி தலைவனிடமோ, தலைவன் தலைவியிடமோ அனுப்பும் தூது அகத்தூதாகும். இவ்விரு வகைகளுக்கும் சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் உள்ளன.

அகநானூற்றில் நண்டையும்(170), நற்றிணையில் நாரையையும்(70) கிளியையும்(54), குறுந்தொகையில் வண்டினையும்(392), ஐங்குறுநூற்றில் பாணனையும்(140) நெஞ்சினையும்(317), திருக்குறளில் நெஞ்சையும் (1200) தலைவி தூது விடுத்ததாக தனித்தனிப் பாடல்கள் உள்ளன. மேலும், தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் ஆகிய நூல்களிலும் இவ்வகைப் பொருண்மை கையாளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. கலம்பகம், அந்தாதி போன்ற சிற்றிலக்கியங் களிலும் தூது விடுத்த செய்தி ஓர் அங்கமாகப் பாடப்பெற்றுள் ளதையும் அறியலாம்.

### பொருளமைதி

தூது இலக்கியங்களில் முதற்பகுதியில் எந்தப் பொருளைத் தூது செல்லுமாறு வேண்டிப் பாடப்பெற்றுள்ளதோ அந்தப் பொருளின் சிறப்பும் பெருமையும் உரைக்கப்படும். இரண்டாம்

பூசையும் மட்டுமே மெய்யானவை என்றான். செல்வம், வாழ்க்கை, மனை என்பன பொய் என்றான். திருஐந்தெழுத்தின் பொருளை உணர்த்தினான். அஞ்செழுத்தின் மேல் விருப்பம் கொண்டு நெஞ்சில் நீங்காதிருக்கச் செய்து, அஞ்செழுத்தை உச்சரிக்கும் அகப்பூசை மரபைஉணர்த்தி, அவை ஆதாரங்களில் வைக்கும் வழியைக் காட்டி, அச்சத்தைநீக்கி, விளக்குச்சுடரைப் பெருக்கி, அதனுள் நிறம் ஒளி இவை மூன்று விதமாக இருப்பதை விளக்கி, வீடுபேறடையும் காட்சியை விளக்கினான். சிற்றறிவு கொண்ட உள்ளத்து அனுபவங்களை எல்லாம் வெளிப்படுத்தி அருள் வெள்ளத்தில் இருக்கச் செய்தான். பிறவியைப் பிளந்த அந்த குருநாதரை வேதங்களாலும் எட்ட முடியாது. அவனது இயல்புகளை எழுதிக்காட்டவும் முடியாது. ஆடல் பாடல்களால் காணமுடியாதவன். பண்பில்லாதவராலும் நட்பில்லாதவராலும் பார்க்கமுடியாதவன். மதுரையில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானை ஊனக்கண்ணால் பார்க்க இயலாது. ஞானக்கண்ணால் பார்க்கத் தக்கவன். பாணர்க்குப் பலகை இட்டவன். சோதி உருவானவன். திருமாலாகிய பன்றிக்கு எட்டாதவனாக இருப்பவன்.

என்னுடைய பிறவிச் சுழற்சியைத் தன்னுடைய மாறா கருணையால் மாற்றியவன். திருநீறணிந்த உடலினன். அமலன், நிமலன், அருளால் வீடுபேறு தரும் தலைவன். என் அறிவுக்கு அறிவாய் இருப்பவன். உண்மை புரிந்த ஞானியர்க்கு அவர் நெஞ்சிலே இருப்பவன்;.''

### அமணர்வழிச் செல்லாதே

நெஞ்சமே மேலும் நான் கூறுவதைக் கேட்பாயாக! 'முத்தி இல்லை என்று கூறும் உலகாயதன்பால் செல்லாதே. நான் பிரம்மம் என்பவரிடம் செல்லாதே. புலால் தருபவர் செய்யும் கொலை தம்மைச் சாராது என்பவரின் சொல்லைக் கேட்டுத் தடுமாறாதே. உடலில் மயிர்பறித்து, நீரில் முழுகாது உடை மற்றும் உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனக்கு வந்து நீக்குதே முத்தி என்னும் அமணர் வழியில் செல்லாதே. வேதங்களின் பயனைச் சிறிதும் அறியாத



வேதியர்கள் சொல்லை விரும்பாதே. திருநீற்றைப் போற்றாத நீசர்களிடம் செல்லாதே. அறியாமை கொண்ட புறச்சமயத் தாருடன் சேராதே. உலகப் படைப்பை அழித்துப் பின் பிறக்க வைக்கும் சிவனை அறியாது, பழித்துத் திரிபவனைப் பாராதே'' என்று கூறி எம்மைக் கண்விழித்து ஆண்டருளும் சம்பந்த மாமுனிவன் எங்குமாய் நின்றான். அவன் இருக்கும் திசைநோக்கி அடிவீழ்ந்து போற்று வணங்குகின்றேன்... என்று முடிக்கின்றார்.

**எந்தை பிரான் வீற்றிருக்கும் ஓலக்கம் எய்தி அடிவீழ்ந்து**
**இறைஞ்சிப் போற்றி சயசய போற்றிஎன...**

இறுதியாக, மன்மதனை எரித்த விழியுடையவனே! உன்னைக் கண்டது முதலாக உன்னை நெருங்கி உன் இன்பக் கடலில் மூழ்கி மதிமறந்த பெண்ணானேன். என்வருத்த மெல்லாம் தீர்ப்பாயாக! என்று சொல்லிச் செந்தாமரையை ஒத்த திருவடியைத் தருவாயாக என்று பலமுறையும்தாழ்ந்து வணங்கி, அழகுடைய பூங்கொன்றையை (கொன்றைப்பூ) வாங்கிப் புகழ்ந்து பேசும் என் நெஞ்சமே இப்போதே இங்கு வருவாயாக! என்று தூதினை முடிக்கின்றார்.

தூது இலக்கியங்களில் முதல் நூலான நெஞ்சுவிடு தூது, அதன் இலக்கணங்களைப் பின்பற்றி இருந்தாலும், தூது இலக்கியத்தின் பொருண்மைவழி, முதல்பகுதியில் தூதுவிடும் பொருளின் பெருமையைப் போற்ற வேண்டும். ஆனால் இங்கு தன் சிற்றறிவினால் நெஞ்சு செய்த செயலையும், இனியாவது தான் சொல்வதைக் கேட்பாயாக நெஞ்சே! என்று தூதுவிடும் நெஞ்சைப் பழித்துக் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இரண்டாம் பகுதியில் தூது இலக்கணத்திற்கு ஏற்ப, பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, தலச்சிறப்பு, தசாங்கம் முதலானவற்றை எடுத்து இயம்பப்பட்டுள்ளது. மூன்றாவது பகுதியான இறுதிப் பகுதியில் இறைவனுடைய அருளால்-குருஅருளால் தனக்குக் கிடைத்த அனைத்து நன்மைகளையும் எடுத்துரைக்கின்றார். மேலும், எதை எதையெல்லாம் செய்யக்கூடாது என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இத்தனையும் தன்நெஞ்சிற்கு

எடுத்து இயம்பி, இறுதியாக, என்வருத்தமெல்லாம் தீர்ப்பாயாக! என்று தாழ்ந்து வணங்கி பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்து பேசும் தன்நெஞ்சை உடனே இங்கே வருமாறு அழைக்கின்றார்.

### நிறைவாக...

தூது இலக்கிய வகைகளுள் தமிழில் முதன் முதலாகத் தோன்றிய நெஞ்சுவிடுதூது, தூதின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூலினை அடிப்படையாகக் கொண்டே பிற்காலத்தில் எழுந்த பாட்டியல் நூல்கள் தூதின் இலக்கணத்தை வகுத்துள்ளன எனலாம். நெஞ்சுவிடுதூதில் நெஞ்சு இதுவரை செய்த இழிசெயலைப் பட்டியலிட்டுப் பழித்துக் காட்டுவதைக் காணமுடிகிறது. இனியாவது, நான் சொல்வதைக் கேட்பாயாக.. என்பதால் ஆற்றுப்படைக்கான இலக்கணத்தை ஈண்டு காண முடிகிறது.

தூது இலக்கணத்தின்படி, பாட்டுடைத் தலைவனிடம் மையல் கொண்ட செய்தியை, 'மன்மதனை எரித்த விழியனே! உன்னைக் கண்டது முதலாக உன்னை நெருங்கி உன் இன்பக் கடலில் மூழ்கி மதிமறந்த பெண் ஆனேன்'' என ஓரிரு அடிகளில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. பின்னர் தோன்றிய தூது இலக்கியங் களில் தலைவனிடம் மையல் கொண்ட செய்தியை விரிவாக உலா இலக்கியத்தைப்போல வந்துள்ளதையும் காணமுடிகிறது.

இறுதிப் பகுதியில், தூது செல்வதற்கு முன்னதாகவே, தனக்கு குருஅருளால் என்ன கிடைத்தது? யார்யாருடன் பேசவேண்டும்? சேரவேண்டும்? செல்லவேண்டும்? என்பதை எல்லாம் அடுக்கிக் கூறியுள்ளார் உமாபதி சிவம். தூது சென்றால் அடையக் கூடிய நன்மையை முன்னதாகப் பெற்றதாக அடுக்கிக் கூறியுள்ளதையும் காணமுடிகிறது. இதனால், தூதின் இலக்கணம் உமாபதி சிவம் காலத்திற்குப் பின்னரே இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று கருத இடமளிக்கிறது.



# சைவ சமய வளர்ச்சியில் திருமுறைகள்

**முனைவர் ச. ஜெயசுதா**
*தமிழ்த்துறை விரிவுரையாளர்,*
*நாகப்பட்டினம்.*

### சைவ சமயம்

தமிழில் உள்ள சமய இலக்கியம் சங்க காலத்தி;லேயே தொடங்கிவிட்டது என்றாலும் வேருன்றி வளரத் தொடங்கியது ஏழாம் நூற்றாண்டு ஆகும். 12-ம் நூற்றாண்டு முடிய இவ் வளர்ச்சி மிக வேகமாகப் பரவிற்று. சைவம், சமணம் ஆகிய மூன்று சமய இலக்கியங்களும் தோன்றின. அதிகமான சமய இலக்கிய பக்திப் பாடல்களைப் பெற்றுள்ளது சைவ சமயம் தான். அதனால் சைவ சமயம் மக்களிடம் அதிக செல்வாக்கைப் பெற்றுது.

அடியார்களுக்குத் தொண்டு செய்தும், சமணர்களோடு போரிட்டும், திருக்கோயில்கள் கட்டியும், மனக்கோயில் கட்டியும், திருப்பதிகங்கள் பாடியும், சிவப்பரம் பொருளால் சோதனைக்கு ஆட்பட்டும், பரம் பொருள் ஒன்றே. அப்பரம் பொருள் ''சிவமே'' என உணர்த்தினார்கள். சைவர்கள், சிவனருட்செல்வர்கள் ''அறுபத்து மூவர்'' ஆவர்.

### பன்னிரு திருமுறைகள்

''சிவ வழிபாடு'' உலக வரலாற்றில் மிகப்பழமையானது என்பதற்குரிய சான்றுகளை உலகம் முழுவதும் காண முடிகிறது. இமயத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட இந்தியர்களின் பழம் பெரும் சமயம் சைவ சமயமாகும்.

சைவ சமயக் குரவர்களின் இறைநெறிக் கோட்பாட்டை யும், அதன் வழித் தமிழகத்தில் அவர்கள் சைவ சமயத்தை வளர்த்ததையும் பன்னிரு திருமுறைகள் வழி அறியலாம். பெரும் பாலானவை பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடுவோரை நெக்கு நெக்கு உருக வைப்பவையாகும். ஒருவர் பாடியவை பல திருமுறைகளாகவும், பலர் பாடியவை ஒரு திருமுறையாகவும் ஒருவர் பாடியது ஒரு திருமுறையாகவும் என மூன்று நிலைகளில் தொகுக்கப் பெற்றுள்ளன.

# சமண இலக்கியம்

(ஆய்வுக்கோவை - 9)




பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந.வெங்கடேசன்
முனைவர் ஏ.வீரப்பன்
முனைவர் தா.திருநாவுக்கரசு
முனைவர் அரங்க.அன்பில்நாதன்
திரு கா.ரெங்கராஜ்
திரு வை.கார்த்திக்

உலையானில் கோல் என்னும் கருவி போன்று, நமது நண்பர் தீப்புகுவரேயாயினும் அவருடன் சேர்ந்து தாமும் தீப்புகுவார். இதனை,

*முட்டிகை போல முனியாது வைகலும்*
*கொட்டியுண் பாரும் குறடுபோல் கைவிடுவர்*
*கட்டுக் கோல் போல எரியும் புகுவரே*
*நட்பார் எனப்படுவார்"*

என்கின்றது நாலடியார்.

## ஈகை

வறியவரது துயர் கண்டு இல்லையென்று கூறாது உள்ளன்புடன் வழங்குவது ஈகை எனப்படும். பொருளை இரக்கின்றவர் கன்றாகவும், கொடுக்கின்ற மேன்மக்கள் பசுவாகவும் விளங்கி, பொருளாகி பாலைச் சுரந்து ஈவது ஈகையாகவும் கொள்ளப்படும். பசு தன் கன்றினது பசியினைப் போக்க எவ்வாறு ஆர்வம் கொள்ளுமோ அதனைப் போன்று ஈகையாளரும் கொண்டிருப்பர்.

*"இரவலர் கன்றாக ஈவார் ஆவாக*
*விரகிற் சுரப்பதாம் வண்மை"*

என்ற ஈதலின் சிறப்பினை நாலடியார் புலப்படுத்துகின்றது.

## நல்லினம் சேர்தல்

உயர்ந்த பண்புடையார் கூட்டத்துடன் சேர்ந்து பழகுதல் வேண்டும். பிறவியானது துன்பம் தருவதாயினும் நல்லிணத்தாரோடு சேர்வதினால் அத்துன்பம் நீங்கிவிடும் என்பதனை,

*"இறப்ப நினையுங்கால் இன்னது எனினும்*
*பிறப்பினை யாரும் முனியார் - பிறப்பினுள்*
*பண்பாற்றும் நெஞ்சத்தவர்களோடு எஞ்ஞான்றும்*
*நண்பாற்றி நட்கப்பெறின்"*

என்னும் பாடலடிகள் சான்றாண்மைகளிலிருந்து நாம் வழுவாது எல்லோரது இயல்புகளையும் ஆராய்ந்து ஒழுகவேண்டும் என்கிறது.

## முடிவுரை

தனிமனிதக் கடமைகள் இல்லறம் தொடங்கி குடும்பமென பரிணமித்து சமுதாயத்துடன் இனங்கொள்வதை அறியமுடிகின்றது. சமுதாயம் நிலையாக அமைய கல்வி நற்செயலில், விருந்தோம்பல் பண்பு கொண்டு நாம் வாழ்ந்தோமானால் உலகம் செழிக்கும் என்பதை நாலடியார் வழி அறியமுடிகின்றது.

---



# 15. சமண சமயமும் தத்துவமும் (இரத்தினத்திரயம்)

முனைவர் இரா.ஜெகதீசன்
பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

மக்கள் மனங்கள் காலந்தோறும் மாறிக்கொண்டே வந்துள்ளன. அதற்குக் காரணம் சமயங்கள் என்று கூறலாம். சங்க காலந்தொடங்கி ஒவ்வொரு காலத்தும் ஒவ்வொரு சமயங்கள் தழைத்து ஓங்கி இருந்துள்ளன. அரசன் எவ்வாழி, மக்கள் அவ்வழி என்பது போல், சங்ககாலத்தில் அரசன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாக இருக்கின்றானோ அந்தச் சமயத்தையே பெரும்பான்மை மக்கள் பின்பற்றி வந்துள்ளனர்.

தமிழக வரலாற்றில் கி.பி. 250 வரை பொதுநிலையில் இருந்துவந்த சமயங்கள், பெரும்பாலும் பொதுவாகவே இருந்துள்ளன. எந்தச் சமயமும் மிகுந்த செல்வாக்குடன் இருந்ததில்லை. கி.பி.300க்குப் பின் வந்த மூவேந்தர்கள் குறுநில மன்னர்கள் ஆட்சி, ஒற்றுமை இன்மை காரணமாக வீழ்ச்சி அடைந்தபோது, களப்பிரர், பல்லவர் ஆகியோர் ஆட்சிக்கு வந்தனர். இக்காலத்தில் சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் சற்று செல்வாக்கு பெற்றன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பக்தி இலக்கியம் தோன்றியபோது மறுபடியும் தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டது. மகேந்திரவர்ம பல்லவன், கூன்பாண்டியன் போன்றோர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர். மருள்நீக்கியார் என்ற இயற்பெருடைய திருநாவுக்கரசர், சமண சமயம் சார்ந்து தருமசேனர் என்ற பெயருடன் சிலகாலம் வாழ்ந்து பின்னர் சைவ சமயத்தைச் சர்ந்த கதை நமக்குத் தெரியும். இத்தகைய சமண சமயத் தத்துவம் ஒன்பது நிலைகளில் (நவபதார்த்தம்) கூறப்படுகிறது. அவற்றை மிகச் சுருக்கமாகக் காண்பதே இக்கட்டுரை.

*'உயிரும்உயி ரல்லதும், புண்ணியம், பாவம், ஊற்றும்*
*செயிர்தீர்செறிப் பும், உதிர்ப்பும், கட்டும், வீடும், உற்ற*
*துயர்தீர்க்கும் தூய நெறியும்சுருக் காய்யுரைப்பன்*
*மயல்தீர்ந்த காட்சி யுடையோய்! இது கேண்மதித்தே'*

என்பது மேருமந்தரபுராணம்.

சமணசமய தத்துவத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன. இவற்றை நவபதார்த்தம் என்பர். இவை: உயிர், உயிரல்லது, புண்ணியம்,

பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பனவாம். இவற்றை முறையே ஜீவன், அஜீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், ஸம்வரை, நிர்ஜரை, பந்தம், மோக்ஷம் என்றும் கூறுவர். இவ்வொன்பது பொருள்களை விளக்குவோம்.

1. **உயிர்** (ஜீவன்): உயிர்கள் எண்ணிறந்தன: அழிவில்லாதன: அநாதியாகவுள்ளன. அதாவது, உயிர்களைக் கடவுள் படைக்கவில்லை. நல்வினை தீவினை என்னும் இருவினைகளை (புண்ணிய பாவங்களைச்) செய்து, அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களைத் துய்ப்பதற்கு நரககதி, விலங்கு கதி, மக்கள்கதி, தேவகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து இறந்து உழன்று திரிவதும், இருவினைகளை அறுத்துப் பிறவா நிலையாகிய பேரின்ப வீட்டினை அடைவதும் உயிர்களின் இயல்பாகும். உயிர்கள் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர்கள் பகுத்தறிவு (மனம்) இல்லாதவை. பகுத்தறிவு உடையவை என இருவகைப்படும்.

உடம்பின் பருமை சிறுமைக்கு ஏற்ப உயிரானது பெரியதாகவும், சிறியதாகவும் உடல் முழுவதும் பரந்து நிற்கும். குடத்திற்குள் வைத்த விளக்கு குடத்திற்குள் மட்டும் ஒளி காட்டும். பெரிய அறையில் வைத்த விளக்கு அறை முழுவதும் ஒளிகாட்டும். அதுபோல, உடம்புகளின் அளவுக்குத் தக்கபடி உயிரானது பெரியதாகப் பரவியும், சிறியதாகச் சுருங்கியும் இருக்கும். "பெரியதன் ஆவி பெரிது" என்பது ஆருகதர் வழங்கும் பழமொழி.

மேலும், உயிர்கள் வீட்டது, மாற்றது என இரு வகைப்படும். வீட்டது எனப்படும் 'மோக்ஷ ஜீவன்' அறிவு விளங்கப் பெற்று இருவினைகளையும் நீக்கி வீடுபேறடையும் தன்மையுள்ளது. மாற்றது என்பது 'சம்சார ஜீவன்' நல்வினை தீவினைகளிற் கட்டுண்டு அவ்வினைப் பயன்களைத் துய்ப்பதற்காக நரகத்திலும் சுவர்க்கத்திலும் பிறப்பதும், இறப்பதுமாக உழன்று திரியும் தன்மையுள்ளது. விலங்கு, நரகர், தேவர் என்னும் பிறப்புகளில் பிறந்த உயிர்கள் அப்பிறவிகளிலே வீடுபேறடையா. மக்களாகப் பிறந்த உயிர்கள் மட்டும் வீடுபெறும் வாய்ப்பு உடையன. அதுவும் துறவு பூண்டவர்களுக்கே வீடுபேறடைய முடியும். இல்லறத்தார்க்கு வீடுபேறு கிடையாது.

2. **உயிரல்லது** (அஜீவன்): புத்கலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம் என்னும் இவை ஐந்தும் உயிரல்லவையாகிய அஜீவப் பொருள்களாம். இவைகளும் உயிரைப் போன்றே அனாதியாக உள்ளன. அதாவது, இவற்றைக் கடவுள் படைக்கவில்லை. உயிர்களின் இயல்பாகிய நல்வினை தீவனை என்னும் இருவினைகளைச் செய்து



அவ்வினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களைத் துய்த்துப் பல பிறவிகளிலும் பிறந்து இறந்து உழல்வதும் பின்னர், நல்லறிவும் நன்ஞானமும் பெற்று இருவினைக் கட்டறுத்து வீடுபேறடைவதும் ஆகிய இத்தன்மைகள் உயிரல்லனவாகிய இந்த அஜீவப் பொருள்களுக்குக் கிடையா.

இந்த ஐந்து அஜீவப் பொருள்களின் இயல்பை விளக்குவோம். புத்கலம் என்னும் பொருள் உயிர்களில் படிந்து அவற்றைப் புண்ணிய பாவங்களாகிய இருவினைகளைச் செய்விக்கும் தன்மையுள்ளது. புத்கலம் என்பதில் ஐந்து புலன்களும், ஐம்புலன்களால் அறியப்படுகிற பொருள்களும், இருட்டும் வெளிச்சமும், வெயிலும் நிழலும், ஒளியும் நிலம் நீர் நெருப்பு காற்று என்னும் நான்கு பூதங்களும் அடங்கியுள்ளன. நுண்ணிய அணுப்பொருளாகவும் (சூக்குமப் பொருள்) பெரிய பருப் பொருளாகவும் (ஸ்தூலப் பொருள்) மாறும் தன்மையுள்ளது இந்தப் புத்கலம். புத்கலத்திற்கு உருவம், நிறம், சுவை, நாற்றம், ஊறு என்னும் இவைகளும் உண்டு. உயிர்களுக்கு உடம்பையும், மனம், வாக்கு, சுக, துக்கம் முதலியவற்றையும், பிறத்தல் வாழ்தல் இறத்தல் முதலியவற்றையும் புத்கலப் பொருள் கொடுக்கிறது. அஃதாவது உயிர்கள் இவற்றை அடைவது புத்கலப் பொருளினாலேதான்.

தர்மம், அதர்மம் என்பவை தர்மாஸ்திகாயம் அதர்மாஸ்திகாயம் என்றும் கூறப்படும். இவற்றைப் புண்ணியம் பாவம் என்று கருதுவது கூடாது. சமணத் தத்துவக் கொள்கைப்படி, தர்மம் அதர்மம் என்பவை நுண்ணிய அணுப்பொருளாக உள்ளன. இவை உயிர்கள் இயங்குவதற்கும், தங்கி நிற்பதற்கும் இடமாக உள்ளன. மீன்கள் நீந்துவதற்கும் ஓய்வு கொள்வதற்கும் நீர்நிலை (தண்ணீர்) எவ்வாறு உதவுகிறதோ, அவ்வாறு உயிர்கள் இயங்குவதற்கும், தங்குவதற்கும் தர்ம அதர்மம் என்னும் அணுப்பொருள்கள் இடமாக உள்ளன. நடத்தல், ஓடுதல் முதலிய இயக்கங்கள் தர்மம் என்னும் அணுக்களின் உதவியினாலாகும். இருத்தல், நிற்றல், கிடத்தல் முதலியவை அதர்மம் என்னும் அணுக்களின் உதவியினால் ஆகும். தர்ம அதர்மப் பொருள்கள் இல்லையானால் புத்கலங்களால் உண்டாகும் பலவகையான உடம்புகள் இயங்கவும் தங்கவும் முடியாது.

*"தருமாத்தி காயம் தானெங்கும் உளதாய்ப்*
*பொருள்களை நடத்தும் பொருந்த நித்தியமாய்*
*அப்படித் தாகி அதன்மாத்தி காயமும்*
*எப்பொருள் களையும் நிறுத்தல் இயற்றும்."*

(மணிமேகலை 27:187-190)

என்வரும் மணிமேகலை அடிகளாலும் இதனை அறியலாம். **தர்மம், அதர்மம்** என்னும் இவை, ஆகாயம் பரந்துள்ள வரையில் நிறைந்து இருக்கின்றன. (மாதவச் சிவஞான யோகிகள் தமது சிவஞானபோத மாபாடியத்திலே

ஆருகத மதத்தைக் கூறுகிறபோது (அவையடக்கம்) "தன்மம்... நன்மையைப் பயப்பது: அதன்மம் தீமையைப் பயப்பது" என்று எழுதியிருப்பது சமண சமய தத்துவக் கருத்துப்படி தவறாகும். தன்மம், அதன்மம் என்பவற்றைப் புண்ணியம் பாவம் என்னும் பொருளில் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று...

**காலம்** என்பது, இமைத்தல், நொடித்தல் முதலிய சிறுகாலம் முதல் கற்பகாலம் முதலிய பெரிய கால அளவு ஆகும்.

*"காலம் கணிகம் எனும்குறு நிகழ்ச்சியும்*
*மேலும் கற்பத்தின்நெடு நிகழ்ச்சியும் ஆகும்"*
(மணிமேகலை 27:191-192)

**ஆகாயம்** என்பது, சமண சமயக் கொள்கைப்படி ஐம்பூதங்களுள் ஒன்றன்று. தர்மம், அதர்மம், காலம், உயிர்கள், புத்கலங்கள் ஆகிய இவ்வைந்து பொருள்களும் தங்குவதற்கு இடம் கொடுப்பது ஆகாயம் எனப்படும்.

*"..... ஆகாயம் எல்லாப் பொருட்கும்*
*பூக்கும்இடங் கொடுக்கும்புரிவற் றாகும்"*
(மணிமேகலை, 27:: 193-194)

ஆகாயம் லோகாகாயம் என்றும் அலோகாகாயம் என்றும் இரண்டு வகைப்படும். லோகாகாயம் என்பது மேலே கூறியபடி புத்கலம் முதலிய ஐந்து பொருள்களுக்கும் இடம் கொடுப்பது. அலோகாகாயம் என்பது லோகாகாயத்திற்கு இடங் கொடுத்து நிற்பது. இவையே உயிரல்லவனவாகிய அஜீவப் பொருள்களாம்.

3,4. **புண்ணியம், பாவம் (நல்வினை, தீவினை):** புண்ணிய பாவங்கள் மூன்று வகையாக உயிருடன் கலக்கின்றன. மனத்தினால் நினைப்பதும், வாக்கினால் சொல்வதும், காலத்தினால் செய்வதும் ஆக மூன்று வகை நல்ல எண்ணங்களாலும் நல்ல சொற்களினாலும் நல்ல செய்கைகளினாலும் பெறப்பட்ட புண்ணியமானது, உயிர்களை மனிதராகவும், தேவராகவும் பிறக்கச் செய்து அறிவு, செல்வம், இன்பம், புகழ், மேன்மை, சிறப்பு முதலிய நன்மைகளையடையச் செய்கிறது. தீய எண்ணங்களாலும், தீய சொற்களாலும், தீய செய்கைகளினாலும் உண்டான பாவமானது உயிர்களை நரககதி, விலங்குகதி முதலிய இழிந்த பிறப்புக்களில் பிறக்கச் செய்து அறிவின்மை, துன்பம், இகழ்ச்சி, வறுமை, சிறுமை முதலிய துன்பங்களை அடையச் செய்கிறது.

5. **ஊற்று** (ஆஸ்ரவம்): நீர் ஊற்றுக்களில் நீர் சுரப்பதுபோல, நல்வினை தீவனை என்னும் இரண்டு வினைகளும் உயிரில் சுரப்பது (சேர்வது) 'ஊற்று' எனப்படும். மனம் வாக்கு காயங்களின் வழியாக ஊற்றுக்கள் உயிரிடம் வந்து சேர்கின்றன. இதனைக் கன்மத் தொடர்ச்சி அல்லது பொறிவழிச் சேறல் என்றும் கூறுவர்.

6. **செறிப்பு** (ஸம்வரை): மேலே கூறப்பட்ட இருவினைகளும் சுரக்கும் ஊற்றினது வழியை அடைத்து விடுவது செறிப்பு அல்லது ஸம்வரை எனப்படும். உயிர், முன்பு செய்த இருவினைகளைச் செய்து மீண்டும் கர்மத்தைத் தேடிக் கொள்கின்றது. உயிர்கள் தாம் முன்பு செய்த வினைப்பயன்களைத் துய்த்து ஒழிக்கும்போது, புதிய கர்மங்கள் வந்து சேராதபடி தடுக்க வேண்டும். அவ்வாறு தடுப்பதுதான் செறிப்பு என்பது, ஒரு குளத்திற்கு நீர் வரும் கால்வாய்களை அடைத்து விட்டால், அக்குளத்தில் மேன்மேலும் நீர் பெருகாமல் தடைப்படுவது போன்று, மனம் வாக்கு காயம் ஐம்புலன் முதலியவற்றை அடக்கி உயிரினிடத்தில் மேன்மேலும் இருவினைகள் சுரவாதபடி, தடுத்தலே செறிப்பு ஆகும்.

7. **உதிர்ப்பு** (நிர்ஜரை): இருவினை ஊற்று உயிரினிடத்து மேன்மேலும் பெருகாதபடி தடுத்த பின்னர், அனுபவித்துக் கழிக்காமல் எஞ்சி நின்ற வினைகளைக் களைந்து விடுவதற்கு 'உதிர்ப்பு' அல்லது நிர்ஜரை என்பது பெயர். இதனைத் துவாதச தபம், குப்தி, சமிதி, தருமத்தியானம், சுக்கிலத்தியானம் முதலியவற்றால் செய்ய வேண்டும்.

*"வரும்பாவம் எதிர்காத்து மன்னுந்தம் பழவினையும்*
*ஒருங்காக உதிர்த்தக்கால் உயிர்த்தூய்மை வீடென்றாள்"*
(நீலகேசி, 312)

இதன் பொருள், "வருகின்ற கர்மங்களைக் குப்தி, சமிதி முதலானவற்றால் அடைந்து தபஸ் ஸம்ய மாதிகளால் நின்ற கர்மங்களை நிர்ஜரிப்பித்தல் (உதிர்த்தல்) ஆத்மாவின்கண் மல நீக்கத்தால் பிறக்கின்ற சுத்தியே வீடாவதென்று சொல்லுவது" (சமயதிவாகர வாமன முனிவர் உரை)

8. **கட்டு** (பந்தம்): மனம், வாக்கு, காயம், ஐம்புலன் முதலியவற்றால் உண்டான வினைகள் உயிருடன் ஒன்றில் கலப்பது கட்டு அல்லது பந்தம் எனப்படும். பழுக்கக் காய்ந்த இரும்பில் நீரைத் தெளித்தால், அவ்விரும்பு நீரை இழுத்துக் கொள்வது போலவும், பாலுடன் நீரைக் கலந்தால் இரண்டும் ஒன்றுபடுவது போலவும் வினைகள் உயிருடன் கலக்கின்றன. எண்ணெய் தோய்ந்த துணியில் அழுக்கு எளிதில் பற்றிக் கொள்வதை இதற்கு உதாரணமாகக் கூறுவதுண்டு. உயிரைத் துணியாகவும், ஐம்புலன் வாக்கு காயம் முதலியவற்றை எண்ணெய்யாகவும் வினைகளை அழுக்காகவும் உபமான உபமேயப்படுத்திக் கூறுவர்.

9. **வீடு** (மோஷம்): ஐந்துவித்து வினைகளின்றும் நீங்கிய உயிர் கேவல ஞானம், கேவல தரிசனம், கேவல வீரியம், கேவல சுகம் என்னும் கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம் என்பவைகளை அடைந்து, எல்லா உலகங்களுக்கும் உயர்ந்த

உலகமாகிய பெறற்கரிய வீட்டுலகம் பெற்று எல்லோராலும் வணங்கப்படும் அருகந்த நிலையையடைவது மோஷம் அல்லது வீடு எனப்படும்.

*"வருவழி இரண்டையும் மாற்றி முன்செய்*
*அருவினைப்பயன் அனுபவித் தறுத்திடுதல் அது வீடாகும்."*
(மணிமேகலை, 27:199-201)

இந்த ஒன்பது பொருள்களின் சுருக்கமான விளக்கத்தை ஈண்டு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமண சமய தத்துவ நூல்களில் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. பந்தத்தினின்றும் விடுபட்டு மோஷ நிலையையடைந்த உயிரே கடவுள் என்பது சமணசமயக் கருத்து, சைவம், வைணவம் முதலிய சமயங்களில் உயிர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனிக்கடவுள் கூறப்படுவதுபோல, சமண சமயத்தில் தனிப்பட்ட ஒரு கடவுள் கூறப்படவில்லை.

மேற்கூறிய ஒன்பது பொருள்களின் உண்மையை அறிந்து கொள்வது 'நன்ஞானம்' என்றும், இவற்றின் தன்மையை ஐயப்பாடின்றி உணர்ந்து கொள்வது 'நற்காட்சி' என்றும், நன்ஞானம் நற்காட்சி இரண்டையும் ஒரு தன்மைத்தாக மனத்திற் கொண்டு ஒழுகுவது 'நல்லொழுக்கம்' என்றும் கூறப்படும். இதனை இரத்தினத்திரயம் என்றும் மும்மணி என்றும் கூறுவர். இரத்தினத்திரயம் வீடு பேற்றிற்கு இன்றியமையாதது.

*"மெய்வகை தெரிதல் ஞானம், விளங்கிய பொருள்கள் தம்மைப்*
*பொய்வகை இன்றித் தேறல் காட்சி: ஐம்பொறியும் வாட்டி*
*உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம்: மூன்றும்*
*இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்."*
(சிந்தாமணி, கேமசரியார், 25)

சுவஸ்திக் சித்திரம் சமணசமய தத்துவத்தை விளக்குகிறது. இந்தச் சித்திரத்திற்குச் சுவஸ்திகம் என்று பெயர். பிறவிச் சக்கரம் என்றும் கூறப்படும். உயிர்கள் தாம் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்கபடி தேவகதி விலங்குகதி நரககதி மனிதகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து உழல்வதைக் குறிக்கிறது இது.

பிறவிச் சக்கரத்திற்கு மேலே உள்ள மூன்று புள்ளிகள் மும்மணிகளைக் குறிக்கின்றன. அதாவது நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கம் என்பவற்றைக் குறிக்கின்றன.

மூன்று புள்ளிகளுக்கு மேலே பிறை போன்ற ஒரு கோடும் அக்கோட்டின் மேலே ஒற்றைப் புள்ளியும் காணப்படுகின்றன. இந்த ஒற்றைப் புள்ளி வினைகளை நீக்கி விட்டு (மோஷம்) அடைந்த உயிரைக் குறிக்கிறது. இந்தத் தத்துவக் குறியைச் சமணர் இல்லங்களிலும் கோயில்களிலும் காணலாம்.

---



# 16. இந்துமதமும் சமணக்கொள்கைகளும்

**முனைவர் வேல்.கார்த்திகேயன்**

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி, புதுச்சேரி

இந்துமதத்தின் இரு கண்களாக விளங்குவன சைவ சமயமும் வைணவ சமயமும் ஆகும். இவ் இந்துமதம் காலத்தாலும் மரபு நிலையிலும் மிகவும் தொன்மையானது. மேலும் இன்றுவரை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதும் நடைமுறையில் போற்றக்கூடியதுமான சிறப்பு கொண்டது. இத்தகைய மதத்தில் பிற மதங்கள் மற்றும் சமயங்களின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் தாக்கமும் பதிவுகளும் நம்மையறியாமல் இழையோடி இணைந்து விடுகின்றன. அதனால் அது நம் பண்பாட்டு மரபு நிலையால் போற்றப்படுவதுண்டு. இருப்பினும் அதனதன் சமயங்களின் தாக்கங்கள் முதன்மைப்படுத்திக் காட்டிவிடும். குறிப்பாகச் சமணசமயக் கொள்கைகளில் சில இப்போதும் இந்துமதத்தில் காணப்படுகின்றன. அத்தகைய சமணக் கொள்கைகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் மையப் பொருளாம்.

## இரண்டு வழிகள்

சமண சமயக் கொள்கைகள், பழம்பெரும் மதமாக விளங்குகின்ற இந்துமதத்தில் இரண்டு வழிகளில் கலந்திருக்க வேண்டும்.

1. இந்துமதம் மேலோங்கிச் சமணசமயம் குன்றியபோது, சமணர்கள் இந்துமதத்தை மேற்கொண்டு இந்துக்களாக மாறியபோது. அப்போது தாம் முன்னர் பின்பற்றியிருந்த சமணக் கொள்கைகளை விடாமல் தொடர்ந்து கடைபிடித்ததால் ஏற்பட்ட நிலை.
2. சமணசமயம் அழிந்தபோது இந்துமதமானது சமணசமயத்தின் சிறந்த கொள்கைகளைத் தன்னகத்தே பெற்றுக் கொண்டது. காலப்போக்கில் இந்து மதக்கொள்கைபோல வெளிப்படுவது.

## ஊன் உண்ணாமை

இக் கொள்கை சமணசமயத்தின் முதன்மையான கொள்கைகளுள் ஒன்று. ஊன் உண்ணாமை மற்றொன்று கொல்லாமை இவற்றைத் தானும் பின்பற்றி மற்றவர்களையும் பின்பற்றிட வற்புறுத்தி நிலைநாட்டினார்கள். இக்கொள்கை சமயக் கலப்பினால் இந்துமதம் ஏற்றுக்கொண்டது. இதற்குச்

# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

தொகுதி – III



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் வ. மகேஸ்வரன்

# 257. பேராசிரியர் சா.வையாபுரிப் பிள்ளையின் திராவிடமொழி ஆய்வும் இலக்கிய ஆய்வும்

முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர் - 632 115.

நெல்லை மாவட்டம் சிக்கநரசய்யன்பேட்டையில் 1891 அக்டோபர் 12இல் பிறந்த சா. வையாபுரிப்பிள்ளை, தமது பள்ளிப்படிப்பைப் பாளையங்கோட்டை புனித சவேரியார் பள்ளியிலும், கல்லூரிப் படிப்பைத் திருநெல்வேலி ம.தி.தா.இந்துக்கல்லூரியிலும் சென்னை கிறித்துவக் கல்லூரியிலும் பயின்றார். பட்டப்படிப்பில் தமிழில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தங்கப்பதக்கம் வென்றார். திருவனந்தபுரம் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று, திருவனந்தபுரத்திலும் திருநெல்வேலியிலும் வழக்கறிஞராகப் பணியாற்றியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்ற இவர், சமஸ்கிருதம், மலையாளம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து ஆய்வு செய்து நூல்களாக வெளியிட்டுள்ளார். பல்வேறு ஓலைச்சுவடிகளைப் புதுப்பித்ததுடன் கால நிர்ணய ஆய்வுகள் மூலம் அவை இயற்றப்பட்ட காலகட்டங்களைக் கண்டறிந்துள்ளார். மனோன்மணியம், நாலாயிர திவ்யப்பிரபந்தம் உள்ளிட்ட பல நூல்களை உரையுடன் பதிப்பித்துள்ளார். களவியற்காரிகை, கம்பராமாயணம், தொல்காப்பியம், திருமந்திரம், திருமுருகாற்றுப்படை உள்பட 40 நூல்களைப் பதிப்பித்துள்ளார். உ.வே. சாமிநாதையருக்குப் பின்னர் பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து, ஆய்வு செய்து வெளியிட்டவர் என்ற பெருமையும் இவருக்குண்டு.

ரசிகமணி டி.கே.சி.யுடன் இணைந்து திருநெல்வேலியில் முதன்முதலில் கம்பன் கழக அமைப்பை உருவாக்கினார். வ.உ.சிதம்பரனார், பாரதியாரோடு நெருங்கிய தொடர்புடையவர்.

சென்னைப் பல்கலைக்கழகம் 1926இல் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் பதிப்பாசிரியராகவும், திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி உள்ளார். அவரது காலம் தமிழின் பொற்காலம் எனப் போற்றப்பட்டது. மலையாள மொழி லெக்சிகன் சொற்களஞ்சியம் பதிப்பின்போது அப்பதிப்புக் குழுவிற்கு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

அகராதி தொகுப்புப் பணியில் சொற்தரவுகளைச் சேகரித்தபோது அவற்றின் ஆதார நூல்கள் நல்லமுறையில் பதிப்பிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த இவர், படைப்பு, திறனாய்வு, பதிப்புப் பணிகளுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவராக 1936இல் பொறுப்பேற்று பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார்.



அகில இந்தியக் கீழ்நாட்டுக் கலைஞர்களுக்காக (19.12.1946) நாகபுரியில் நடைபெற்ற திராவிட மொழிகள் மற்றும் நாகரிகத்திற்கானத் துறையைத் தொடங்கி வைத்துத் தலைமையுரையில் நீண்ட வரலாற்றுப் போக்கில் அமைந்த தமிழியல் ஆய்வுகளைப் பேர.ச.வையாபுரிப்பிள்ளை எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## திராவிடமொழி ஆராய்ச்சி

திராவிடவியல் ஆய்வு முழு அங்கீகாரம் பெறாத சூழலில் திராவிட மொழி மற்றும் கலை இலக்கியம் குறித்து அகில இந்திய அளவில் கவனத்தைக் கோரும் வண்ணம் உரை நிகழ்த்தியவர் பேரா.ச.வையாபுரிப்பிள்ளை. பேராசிரியரின் உரைகள் நவீனத் தமிழியல் ஆய்வின் அடிப்படை ஆவணங்களாக உள்ளன என்பார் பேரா.வீ.அரசு.

திராவிட மொழிகள் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையிலேயே இருப்பதையும், இவ்வாய்வு செய்யும் ஆய்வாளர்கள் தான் ஆய்வு செய்யுங்காலம்வரை எழுந்துள்ள நூல்களைப் படிப்பதில்லை என்று தன்னுடைய வருத்தத்தைக் கூறுகின்றார் பேரா.

திராவிட மொழிகள் பற்றியும், திராவிட நாகரிகம் பற்றியும் இதுவரை எழுந்த ஆய்வுகள் மிகக்குறைவு. இத்துறையில் எழுந்துள்ள அனைத்து ஆய்வுகளையும் படித்தால்தான் இத்துறை ஆய்வாளர்கள் பயனுற இயலும்.

நாம் தாய்மொழியாம் தமிழை நமது கல்வியில் ஒவ்வொரு துறைக்கும் உதவும் கருவியாகக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் நமது மொழி வளரும். அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும். மேலை நாட்டுக் கல்வியால் நாம் அடைந்துள்ள நன்மைகளை மறக்க இயலாது, எனினும் அறிவினால் அடிமைப்பட்டிருப்பது கொடுமையானது. அடிமை வாழ்வு இயற்கை வாழ்வல்ல, அதனை நீக்க வேண்டும்.

ஆராய்ச்சியில்கூட வடமொழிதான் மேலோங்கி இருந்துள்ளது. தற்போது உயிருடன் உள்ள மொழிகள் பலவற்றுக்கும் வளர்ந்து பெருகுவதற்கு வடமொழி பெரிதும் துணை நின்றுள்ளது. இது பெருமையாக இருப்பினும் மீண்டும், மீண்டும் உணர முடியாமல் செய்து விட்டது வடமொழி.

வடமொழியைப் பற்றிப் பிறநாட்டு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். ஆனால் வடமொழி ஒன்றில் மட்டும் இவ்வாறு கவனம் செலுத்துவது மொழியாராய்ச்சி என்ற துறையில் மிகவும் வருந்தத்தக்கது என எஸ்பெர்ஸன் (jesperson) தமது 'மொழி, அதன்

இயல்பு, வளர்ச்சி தோற்றம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் வழக்கொழிந்த மொழிகளை ஆராய்ச்சி செய்வதால் ஏற்படும் மொழி பற்றிய உண்மைகள் குறைபாடு உடையன என்றும் அவை திருத்தமடைவதற்கும் நிரம்புவதற்கும் தற்கால வழக்கில் உள்ள மொழியை ஆராய்வது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடமொழி புராண எல்லையை அடைந்து பெருந்தகுதி பெற்று விட்டது. அதனுடைய இயற்கையான உயிர்வாழ்க்கை முடிந்து விட்டது. இப்போது இம்மொழி வாழ்வது உயிரோடு உலவும் நமது தாய்மொழி மூலமாகத்தான் என்பதை உணரலாம் என்பதைத் தம் உரையில் கூறியுள்ளது போற்றுதற்குரியது.

உயிரோடு வழங்கும் மொழிகளில் செய்யும் ஆய்வு மிகவும் பயன் உடையதாக இருக்கும். தாய்மொழி ஆராய்ச்சிக்கு வடமொழி நமக்குப் பெருந்துணையாக அமையும்.

நமது தாய் மொழியையும், வடமொழியைப் போலவே அதிகமாக ஆராய்ச்சி செய்தல் வேண்டும். நமது தாய்மொழியிலும், அவற்றில் எழுந்துள்ள நூல்களும், வளத்திலும் தொன்மையிலும் வடமொழிக்குச் சமமானவையாகும். தமிழ்மொழி ஆராய்ச்சித் துறையை பற்றிய நமது கல்வியில் சிறந்த பலர்க்கும் நம்பிக்கை பெரும்பாலும் இல்லை. இதனால் தமிழியல் ஆய்வில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளதைக் காணலாம்.

மொழிபற்றி ஆய்வுகளை மொழிபற்றியது, இலக்கியம் பற்றியது என இரு பகுப்பாகப் பகுத்து ஆராயலாம் என வழிகாட்டிச் சென்றுள்ளார். மேலும் மொழி ஆராய்ச்சியைப் பொது மொழியாராய்ச்சி, திராவிட மொழிஆராய்ச்சி என்றும் பகுத்து ஆராய்ந்துள்ளதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

திராவிட மொழி ஆராய்ச்சியைப் பற்றிக் கூறும்போது 'செம்மொழி வடிவம் என்ற ஒரு துறையில் இலக்கணம், சொல் வரலாறு (வடிவ வரலாறு, பொருள் வரலாறு) வாக்கிய அமைதி வரலாறு, சொல்-தொகை வரலாறு, ஒலியியல் வரலாறு, உச்சாரண வரலாறு, நெடுங்கணக்கு வரலாறு, எழுத்து வடிவ வரலாறு என ஆராய்ச்சி பல திறப்படும் என்பர்.

சொல்-தொகை ஆய்வு என்பது, பல நிலைகளில் காண வேண்டும். இயற்கை உரிமைச்சொல், இரவற்சொல், கலப்புச்சொல், சங்கேதச்சொல், அதிகாரமுறைச்சொல், பத்திரிகைச்சொல், வழக்கொழிந்த சொல் முதலியன எல்லாம் சொல்தொகையில் அடங்கும் என்பர்.

மேலும் மொழிமுறை பழமை ஆராய்ச்சிக்காக, மூலத்திராவிட மொழிச் சொற்கள், புராணக் கதைகள், நாடோடிச் செய்யுட்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒப்பு நோக்கு முறையில் நிகழ்த்த வேண்டும். மக்களின் பிரிவு பற்றிய ஆராய்ச்சியும் ஈண்டு பொருந்தும் என்று மொழி பற்றிய ஆராய்ச்சியை நிகழ்த்த ஒரு



களத்தை அமைத்துக் கொடுத்துள்ளார் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை.

## இலக்கிய ஆராய்ச்சி

இலக்கிய ஆராய்ச்சியை நூற்பதிப்புத் துறை, இலக்கிய மதிப்புத்துறை, இலக்கிய வரலாற்றுத்துறை, சரித்திரப் பொருள்களின் துறை என நான்கு பிரிவுகளில் தனிமொழி இலக்கிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும் அப்போதுதான் இவ்வாராய்ச்சி முழுமை அடையும் என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

மொழியாராய்ச்சியை நோக்க, இலக்கிய ஆராய்ச்சி எளிது என்று கூறலாம். ஆனால் இவ்விலக்கிய ஆராய்ச்சியிலும் நாம் பெரிதும் இன்னும் சாதித்துவிடவில்லை. உண்மையில் நமது ஆராய்ச்சி மிகவும் இளமைப் பருவத்தில்தான் இருக்கிறது என்று இன்றைய நிலையை நம்கண்முன் நிறுத்தியுள்ளார் பேராசிரியர்.

**நூற்பதிப்புத் துறையில்** நாம் சிறந்து விளங்கக் காரணம் வித்வான் தாண்டவராய முதலியார், வேதகிரி முதலியார், சரவணப்பெருமாளையர், விசாகப்பெருமாளையர், ஆறுமுக நாவலர், ராவ்பகதூர் தாமோதரம்பிள்ளை, சுப்பராய செட்டியார், டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றோர் சங்க இலக்கியங்கள் முதலான நூல்களைப் பதிப்பித்து உள்ளதுதான்.

சங்க இலக்கிய நூல்களும் கம்பராமாயணம் முதலிய காப்பியங்களும் வரையறை செய்த பாடங்களுடன் தற்காலத்துக்கு உரிய ஆராய்ச்சி உபகரணங்களுடன் சிறந்த பதிப்புகள் இனிமேல்தான் வெளிவர வேண்டும் என்ற கோரிக்கையும், பதிப்புத் துறையில் சிறந்து விளங்கியவர்கள் ஓலைச்சுவடிகள் அழிவதற்கு முன்னர் பதிப்புத்துறையில் வல்ல கல்வியாளர்கள் ஒருங்கு சேர்ந்து நூற்பதிப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

**இலக்கிய மதிப்புத் துறையில்** சில காலமாக திரு.டி.கே.சி., பி.ஸ்ரீ.ஆச்சாரியா போன்றோர் செய்து வந்த முயற்சிகளைத் தவிர இத்துறையில் சிறந்த பணி ஏதும் நடைபெறவில்லை என்று கூறியுள்ளார். இலக்கிய மதிப்பு ஆராய்ச்சியைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பிரித்து ஆராய வேண்டும் என்று வகைப்படுத்தியுள்ளார்.

நாம் இருபதாம் நூற்றாண்டுக்கு முன் மேலை நாட்டு மக்கள் இருந்த நிலையிலேயே இன்றும் இருக்கிறோம். தண்டியாசிரியர் முதலிய முற்காலத்து வடமொழி வாணர்களே இன்றும் நமக்கு வழிகாட்டிகளாய் இலக்கிய மதிப்பு ஆய்வுத் துறையில் நிலைத்து விட்டனர் என்ற வருத்தத்தைப் பின்வருமாறு வெளிப்படுத்தி உள்ளார் பேராசிரியர்.

'தண்டியாசிரியரது பெருநூலைத் திருந்த அமைத்து முற்றுப் பெறச் செய்கிறோம் என்று தவறாக எண்ணி, அர்த்தமற்ற

பிரிவுகளையும், உட்பிரிவுகளையும் வகுப்பதிலேயே நம் அறிவைச் செலுத்தி இலக்கியச் சுவை ஆராய்ச்சியாகிய கலையை முற்றும் இழந்து விட்டோம், (திராவிட மொழிகளில் ஆராய்ச்சி, எஸ்.வையாபுரிப்பிள்ளை, ப.27).

**இலக்கிய வரலாற்றுத் துறையில்**, திரு. கே.எஸ்.சீனிவாசபிள்ளையின் தமிழ் வரலாறும், திரு.எம். சீனிவாச ஐய்யங்காரின் தமிழாராய்ச்சி நூலும் ஒருசில குறைகள் இருப்பினும் பாராட்டத் தகுந்தன. கன்னடத்தில் ராவ்பகதூர் நரசிம்மாச்சாரியாரும், தெலுங்கில் வீரேசலிங்கம் பந்துலுவும், மலையாளத்தில் உள்ளூர்ப்பரமேசுவர அய்யரும் இலக்கிய வரலாற்றுத் துறையில் நல்ல நூல்களை இயற்றியுள்ளதைச் சுட்டிக்காட்டி இதுபோன்ற இலக்கிய வரலாற்று நூல்கள் பல வெளிவரவேண்டும் என்று விருப்பமும் தெரிவித்துள்ளார்.

இலக்கிய வரலாற்றை ஆராய்பவர்கள் 1) பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளையும், நூல்களாக வெளிவந்தனவற்றையும் தொகுக்க வேண்டும். 2) இதுவரைப் பதிப்பில் வந்தனவையும், வெளிவராத சுவடிகளையும் தொகுத்து நூற்பட்டிகை தயாரிக்க வேண்டும். 3) நூற்பட்டிகை தொகுக்கும்போது தமிழ் இலக்கியங்களோடு பிறநூல்களையும் தொகுக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் புதுநூற்பட்டிகை வெளிவர வேண்டும். 4) நூல் தோன்றிய காலங்களை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும் என நான்கு நிலைகளை மனத்துள் கொண்டு ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் மக்களில் ஒரு பகுதியாருக்குத் திருக்குறள், சிலப்பதிகாரம் இவற்றின் காலம் சமயக் கொள்கைகளைப் போல் ஆகிவிட்டது. இதன்பொருட்டு தங்கள் உயிரையும் இழந்து விடுவார்கள்போல் தோன்றுகிறது. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையாக இந்நூல்களைக் குறித்தால், அதற்கு அவர்களுடைய மனம்ஒப்புவதில்லை. பிற்காலத்தனவாக இருக்கக்கூடும் என்று யாரேனும் கூறினால், அவரைத் **தமிழ்த்துரோகி** என்று பட்டங்கட்டி விடுகிறார்கள். இதனால், விஷம்நிரம்பிய காற்று நமது நாட்டில் உலவி வருகிறது. ஆராய்ச்சியை நெரித்து விடுகிறார்கள். உண்மை தனது உயிருக்கே மன்றாட வேண்டியதாக இருக்கிறது. ஆனால், ஆராய்ச்சியாளனுடைய கடமை தெளிவாகவே உள்ளது. உண்மையின் சார்பில் இரண்டொருவர் இருந்தாலும், அவர்களுடன் துணிந்து வாழ்வதே அவன் கடமை. அவ்வாறு செய்யாமல் போனால் அவன் அடிமை என்றே கருதத்தக்கவன் (ப.30) என்ற உண்மையைத் தயங்காமல் எடுத்துக் கூறியுள்ளார்.

**சரித்திரப்பொருள்களின் (வரலாற்று ஆவணங்கள்) துறையில்** வரலாற்றினை ஆய்வு செய்யக் கல்வெட்டுகள் இன்றியமையாத ஆவணங்களாக உள்ளன. கல்வெட்டுக்களில் ஆய்வு செய்துள்ள பேரா.பி.சுந்தரம்பிள்ளை, வி.கனகசபைப்பிள்ளை,



டி.ஏ.கோபிநாதராவ், டாக்டர் எஸ்.கிருஷ்ணசுவாமி அய்யங்கார், பி.தி.சீனிவாசஐயங்கார், க.அ. நீலகண்டசாஸ்திரியார், மு.இராகவையங்கார், ஏ.வி.வேங்கடராமய்யர், கெ.ஜி.சங்கரஜயர், கவிமணி எஸ்.தேசிக விநாயகம்பிள்ளை, ராவ்பகதூர் சி.எம்.இராமச்சந்திரஞ்செட்டியார், எஸ். சோமசுந்தரதேசிகர், டி.வி.சதாசிவபண்டாரத்தார், தி.நா.சுப்பிரமணியம் முதலியோர் நன்கு உழைத்துத் தமிழுக்குத் தொண்டு செய்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என்கிறார்.

கல்வெட்டறிஞர்களிடம் உள்ள குறையைப் பேராசிரியர் வெளிப்படையாகச் சுட்டிக் காட்டியுள்ளார். 'கல்வெட்டறிஞர்கள் தாங்கள் எடுத்து வைத்துள்ள கல்வெட்டுப் பிரதிகளைப் பற்றி தமிழறிஞர்களுக்குக் கொடுத்து உதவ முன்வருவதில்லை. இன்னும் பிரதி எடுக்காத ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் உள்ளன. பிரதிஎடுத்த நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் இன்னும் அச்சிடப்படவில்லை. இவையெல்லாம் வெளிவர வேண்டும். வரலாறு தொடர்பான காவியங்களும் தினசரிதைகளும் இன்னும் ஆராய வேண்டிய நிலையில் உள்ளன. புதுவை ஆனந்தரங்கம்பிள்ளை தமிழில் எழுதியுள்ள தினசரிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு (1904-1920) அரசால் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மூலத்தை இன்னும் வெளியிடாமல் இருப்பது தமிழுக்குப் பெருங்குறை' என்று சுட்டிக்காட்டுகின்றார்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு சுமார் 40 ஆண்டுகளாகத் தொண்டாற்றிய இவர் கட்டுரையாளர், திறனாய்வாளர், காலமொழிஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர், சொற்பொழிவாளர், எழுத்தாளர், கவிஞர் எனப் பன்முகப் பரிமாணம் கொண்டவராக விளங்கியவர் சா. வையாபுரிப்பிள்ளை. இவர் தமது 65ஆவது வயதில் (1956) மறைந்தாலும் தமிழுலகம் இவரை மறக்காது.

# சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்

# ADMINISTRATIVE MANAGEMENT THEORIES IN SANGAM LITERATURE



பதிப்பாசிரியர்

முனைவர் க. முருகேசன்

# 53. அகநானூற்றில் அகமாந்தர்களின் மேலாண்மைச் சிந்தனைகள்

முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர் - 632 115.

பழந்தமிழர் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களோடு தற்காலத்தில் தோன்றிய அனைத்துக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலை தற்போது பரவலாகக் காணப்படுகின்றது. பெரும்பாலும் மேலை நாட்டுக் கொள்கைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் ஆர்வம் தற்கால ஆய்வாளர்களிடையே நிறைந்துள்ளது. மேலை நாட்டுக் கொள்கைகள் அந்நாட்டின் சமய சமூகப் பொருளாதார பண்பாட்டின் அடிப்படையில் தோன்றுகின்றன. அந்தந்த நாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்பவே அந்நாட்டு இலக்கியங்கள் எழுதப்படுகின்றன. ஒரு நாட்டில் தோன்றிய கொள்கையோடு மற்றொரு நாட்டில் தோன்றிய இலக்கியத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது என்பது கடினம். அக்கோட்பாட்டின் அனைத்துத் தன்மைகளும் பொருந்தி வரும் என்று கூறுவதற்கில்லை. ஓரிரு தன்மைகள் பொருந்தி வரலாம். இதனைக் கொண்டு அந்நாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில்தான் இந்நாட்டு இலக்கியம் எழுந்துள்ளது என்று கூறுவது அறியாமை யாகும். இருப்பினும், ஒருசில கொள்கைகள், கோட்பாடுகள் பழந்தமிழர் இலக்கியங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ உள்ளன.

அண்மையில் மிகவும் அதிகமாகப் பேசப்படும் நிர்வாக மற்றும் மேலாண்மைக் கொள்கைகள் பண்டைத் தமிழிலக்கியங்களில் பொதிந்துள்ளன. இக்கொள்கைகளுக்கு உயிரோட்டம் கொடுக்கும் வகையிலும் இக்கொள்கைகளை வெளிக்கொண்டு வருவதிலும் ஒரு கருத்தரங்கம் முனைப்புடன் செயல்படுவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

மேலாண்மைக் கொள்கைகளின் ஒரு பகுதியாக அமைந்துள்ள நவீன மேலாண்மைப் பணிகளுடன் அகநானூற்று அகமாந்தர்களின் கூற்றுகள் (துறைகள்) வாயிலாக அவர்களின் மேலாண்மை தன்மைகளைக் குறிப்பாகத் தலைமை மாந்தர்களான தலைவன், தலைவி இவ்விருவர் கூற்றுகளில் தலைவன் கூற்றுப் பாடல்களில் பொதிந்துள்ள தலைவனின் மேலாண்மைக் கருத்துக்களை எடுத்தியம்ப இவ்வாய்வு முனைகின்றது.

## நவீன மேலாண்மைப் பணிகள் (Modern Functions of Managements)

நவீன மேலாண்மைப் பணிகள் என்பன திட்டமிடுதல், கட்டமைத்தல், ஒருங்கிணைத்து வழிநடத்துதல், கட்டுப்படுத்துதல் ஆகியன.

### 1. திட்டமிடுதல் (Planning)

என்ன செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்தல் திட்டமிடலாகும். செய்ய வேண்டிய செயல் தொடர்பான சிந்தனையும் முடிவையும் திட்டமிடல் அடிப்படையாகக் கொண்டுள்ளது.



### 2. கட்டமைத்தல் (Organising)

ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டிற்குத் தேவையான அனைத்தையும் அளித்தல். அதாவது, பணியாளர்கள் மூலம் பொருட்கள் இயந்திரங்கள் மற்றும் நிதி போன்றவையளித்து அமைப்பது மேலாண்மையாகும்.

### 3. வழிநடத்துதல் (Leading)

பணியாளர்களுக்கிடையே நடவடிக்கையை நிர்வகித்து அதிகாரம் செய்வது, நிறுவனத்தின் நோக்கங்களை அடையும் வண்ணம் குழு முயற்சிகளை ஒருங்கிணைத்து இயக்குதல் வழிநடத்துதல் எனப்படும்.

### 4. கட்டுப்படுத்தல் (Controlling)

பின்பற்றவேண்டிய தத்துவங்கள், வழங்கப்பட்ட ஆணைகள், கற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதை உறுதிப்படுத்திக் கட்டுப்படுத்துதல். இதன்நோக்கம் தவறுகளைக் கண்டுபிடித்துப் பின் அவைகள் எதிர்காலத்தில் மறுபடியும் ஏற்படாதவாறு தவிர்த்தலாகும்.

இத்துடன் மேலாண்மைத் திறன்களில் (Managements Skills) ஒன்றான கருத்தறி திறன் (அ) கற்பனைத்திறன் (Conceptual Skills) மேலாண்மையை மேலும் சிறக்கச் செய்கிறது. கற்பனைத் திறனுடைய மேலாளரால்தான் புதிய ஆக்கத்திறனை உருவாக்க முடியும். திட்டமிட்ட இலக்குகளை அடைவதற்குப் பணியாளர்களின் செயல் திறனை முறையான வழியில் பயன்படுத்துவதே கட்டுப்படுத்துதல் எனப்படும். சிக்கல்களுக்குத் தீர்வு காணுவதே முடிவு எடுத்தலாகும். எனவே, கிடைக்கும் வளங்களையும் மனித ஆற்றலையும் ஒருங்கிணைத்து நிர்ணயிக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட செயல்பாடே மேலாண்மையாகும். இதனைச் செய்யக்கூடிய வல்லமை உடையவராக மேலாளர் இருக்க வேண்டும் என்பது மேலாண்மைக் கொள்கையாகும்.

நவீன மேலாண்மைப் பணிகளின் நான்கு முக்கியக் கொள்கைகளைக் கொண்டுள்ளன. இக்கொள்கைகள் சங்க அகத்துறைகள் பலவற்றில் பொதிந்துள்ளன. அகத்துறைகள் யாவும் புலவர்களால் திட்டமிடப்பட்டு இயற்றப்பட்டதாகும். இத்துறைகளை இயற்றிய புலவர்கள் தம்முடைய மேலாண்மைக் கருத்துக்களைத் தாமே முன்னின்று இயம்பாமல் அகமாந்தர்களைப் படைத்து அம்மாந்தர்கள் கூறுவது போல எடுத்துரைத்துள்ளனர். பேசுவதற்கு உரிய (கூற்றுக்கு) அகமாந்தர்கள் பன்னிருவர் எனக் கூறி களவிற்கூற்றுக்கு உரியோர் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவர் என்றும் (செய்.189), கற்பிற் கூற்றுக்கு உரியோர் மேற்சொன்ன அறுவருடன் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்ற அறுவரையும் சேர்த்துப் பன்னிருவர் (செய்.190) எனச் சுட்டுகின்றார் தொல்காப்பியர். சங்க அக இலக்கியங்களில் பேசுவதற்கு உரிமை படைத்த மாந்தர்கள் பன்னிருவரில் தலைமை மாந்தர்களாகக் கருதப்படும் தலைவன், தலைவி மற்றும் இவர்களை வழிநடத்தும் தோழி ஆகியோர் கூற்றுகளில் குறிப்பாக அகநானூற்றுப் பாடல்களில் மேற்காண் மேலாண்மைக் கொள்கைகள் நான்கினையும் பொருத்திப் பார்க்க முனைகிறது இக்கட்டுரை.

## அகநானூற்று மாந்தர்கள்

அகநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் தலைமை மாந்தர்களின் கூற்றுப் பாடல்கள் எண்ணிக்கை வருமாறு:

தலைவன் - 103

தலைவி - 98

தோழி - 160

அகநானூற்றுப் பாடல்களின் கூற்றுகளை அறிவதற்கு அப்பாடலின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள கொளுக்களே பெரிதும் துணைபுரிகின்றன. அவைதான் பேசுபவர், கேட்பவர், பின்புலச்சூழல் போன்றவற்றை எடுத்து உரைக்கின்றன. அகநானூற்றில் அமைந்துள்ள நானூறு பாடல்களையும் கொளுக்களின் துணைகொண்டு துறை அடிப்படையில் காண்கையில் 371 பாடல்களுக்கு ஒரு துறையும், இருபத்தாறு பாடல்களுக்கு இரண்டிரண்டு துறைகளும், மூன்று பாடல்களுக்கு மூன்றுமூன்று துறைகளும் வகுக்கப் பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

இக்கட்டுரைக்கு ஏற்ப அகநானூற்றுப் பாடல்கள் அமைந்திருக்கும் சூழலுக்குத் தக்கவாறு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம், சேட்படை, இருவகைக் குறியீடு, உடன்போக்கு, மலிவு, ஊடல், பரத்தையர் பிரிவு, பிரிவிடம், இடைச்சுரத்தழுங்கல், வினையிடம், வினைமுற்றி மீளல், இனிதிருத்தல் என்றவாறு அகத்துறைகள் பிரிக்கப்பட்டு மேற்காண் மேலாண்மைக் கருத்துகளுடன் இணைத்துப் பார்க்கப்படுகிறது.

### 1. திட்டமிடுதல் (Planning)

என்ன செய்ய வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவு செய்தல் திட்டமிடலாகும். செய்ய வேண்டிய செயல் தொடர்பான சிந்தனையும் முடிவையும் திட்டமிடல் அடிப்படையாகக் கொண்டுள்ளது. இக்கொள்கையின் பொதுத் தன்மைகளை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் ஆகிய துறைகள் பொருந்துவனவாக அமைந்துள்ளன.

இயற்கைப் புணர்ச்சி என்பது பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, உருவுநிறுத்த காமவாயில், நிறை. அருள், உணர்வு, திரு ஆகிய பத்து வகையால் ஒத்த தலைவனும் தலைவியும் நல்லூழ் வயத்தராய்த் தம்முள் தாமே எதிர்ப்பட்டுக் கூடுகின்ற கூட்டமே இயற்கைப்புணர்ச்சி ஆகும்.

இயற்கைப் புணர்ச்சியின்கண் தலைவியைக் கண்ணுற்ற தலைவன், அவளின் குறிப்பறிந்து கூடிப் பிரிந்தான். தலைவனது மெய்வேறுபாடு கண்ட பாங்கன், இது எதனால் ஆயிற்று? என்று வினவுகிறான். அதற்கு, உமணர் காதல் மடமகள் ஒருத்தி சேரிக்கண் உப்பின்விலை கூறுகையில் நாய் குரைத்தது. அஞ்சிய அவளின்மதர்த்த விழியால் எனக்கு இந்நோய் உண்டாயிற்று! எனத்தலைவன் கூறுவதாக ஒரு பாடலும் (அகநா.140), களவொழுக்கத்தின்கண் தலைவன், தலைவி விளையாட்டயருங்கால் அவனை அணுகி அவனோடு சொல்லாட்டம் நிகழ்த்தி அவள் கண்களில் காமக்குறிப்பு கண்டு மீள்பவன், கடிய செலவினை உடைய உயர்ந்த தேரினைச் செலுத்தும் திறமைமிக்க பாகன் மெல்லெனச் செலுத்த, நாம் அவளை அணுகினோம். யாம் இங்கே பெரிய வருத்தத்தை அடைய அவள் அழகுமிக்க செவ்வரி



பரந்தமை உண்ட கண்களில் உவகைக் கண்ணீர் வருதலை மறைத்துத் தன் தலையினைச் சிறிய அளவில் கவிழ்த்தனள்'(அகநா. 230) எனத் தன்நெஞ்சினை நோக்கிக் கூறுவதாகப் பிறிதொரு பாடலும் அமைந்துள்ளன. இவ்விரு பாடல்களும் தலைவியை முதன்முதல் கண்ணொடு கண் பார்த்து சென்ற அவளை இனிக் கூடுதல் அரிதெனத் தலைவன் கலங்குவாக அமைந்துள்ளன.

இடந்தலைப்பாடு என்பது இயற்கைப்புணர்ச்சி எய்திய தலைவன் அடுத்தநாளும் அவ்விடத்திற்குச் சென்று தலைவியை எதிர்ப்படுதல் இடந்தலைப்பாடாகும்.

இடந்தலைப்பாடு துறையில் தலைவன் கூற்றாக அகநானூற்றில் அமைந்த பாடல்கள் இரண்டு. நாளும் அழகும் மென்மையும் பொருந்திய கூந்தலை உடைய மாமை நிறத்தினளாய நம்தலைவி, நாணத்தின் எல்லையில் அடங்காத காமம் பொருந்தப்பெற்று வந்து நமக்கு இன்பம் அளித்து அருள் செய்தாள். அவள் நீடு வாழ்க'(208) என்றும், 'சினம் ஒழியப்பெற்று மகிழ்ந்த அன்னிமிஞிலி என்பானைப் போல உடல் பூரிக்கப்பட்டு அமையாத மகிழ்ச்சி உடையோம் ஆயினோம்' (269) என்றும் தலைவன், தலைவியைத் தழுவி இன்பம் பெற்றதைக் கூறுவதாக இவ்விரு பாடல்களும் அமைந்துள்ளன.

இடந்தலைப்பாடு துறையில் அமைந்துள்ள இரு பாடல்களும் இரண்டாவது நாள் தலைவியைச் சந்திக்க வேண்டும் என்ற அவாவால் தலைவன் செல்கிறான். தலைவியைச் சந்திக்கின்றான். அவளோடு அளவளாவுகின்றான். அவள் தன்மீது இருந்த சினம் ஒழியப்பெற்று மகிழ்ச்சி உடையவளாக ஆனாள் என்பதாக அமைந்துள்ளது.

தலைவன் திட்டமிட்டு தலைவியைக் காணச் சென்று அத்திட்டத்தை உரிய காலத்தில் முடிப்பதாக இவ்விரு பாடல்களும் அமைந்துள்ளன எனலாம்.

பாங்கற்கூட்டம் என்பது தலைவியோடு தனக்கு ஏற்பட்ட உறவினைத் தலைவன் தன் உயிர்த் தோழனாகிய பாங்கனுக்கு எடுத்துக்கூறி, நீ எனக்குத் துணையாக வேண்டும் என வேண்டுவான். அத்தோழன் குறிவழிச் சென்று தலைவி நின்ற நிலையை உணர்ந்துவந்து உணர்த்தியபின் சென்று கூடுதலே பாங்கற்கூட்டம் ஆகும். பாங்கற்கூட்டத் துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் இரண்டு.

'கண்டோர் நெஞ்சையுண்ணும் கண்களின் காதல் கனிந்த ஒளிமிக்க முகத்தின் கண்ணே மதர்த்த பார்வையினை, நீயும் அவள்முன் நின்று கண்டிருப்பின் இவ்வாறு என்னை இகழ்ந்து உரைக்க மாட்டாய். காணாததால் இவ்வாறு கூறுகின்றாய்' (130) என்று தலைவன் பாங்கன் கூற்றை மறுத்துக் கூறுவதாகவும், 'தழையுடை அசைய நடந்து, ஊரவரே நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும் கொள்வீராக...என்று சேரிகள்தோறும் கூவிநிற்கும் அழகிய வளைந்த உந்தியினையும் மூங்கில் போன்ற தோளினையும் உடையாய். நினது உடலின்கண் உளதாம் இன்பத்திற்கு விலையினை அறிந்திலமே என்று யாம் கூறி நிறுத்தினேன். அவளோ, தனது பெரிய அரிபடர்ந்த மையுண்ட கண்ணினால் மாறுபட்டவள்போல் நோக்கி, எம்மைத் தடுக்க நீவிர் யாவரோ? என்று கூறி இளநகையுடன் சிறிது ஒதுங்கிநின்ற பேதையின் பொருட்டு என் நெஞ்சு தன்வலியினை இழந்து போயொழிந்தது' (390) எனத் தலைவன் தன்நெஞ்சு, உமணர் மகளோடு சேர்ந்து சென்றதை ஆற்றாமையால் பாங்கனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

தலைவனின் உடல் மற்றும் உள்ள மாற்றத்திற்குக் காரணம் யாது? என வினவி அதனைக் கேட்ட பாங்கன் இகழ்ந்து உரைக்கின்றான். தலைவன் அவளுடைய ஒளிமிகுந்த முகத்தில் மதர்த்த பார்வையினை நீ பார்த்திருப்பின் இவ்வாறு என்னை இகழமாட்டாய், என்று தோழனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இடந்தலைப்பாட்டில் தலைவன் திட்டமிட்டு தலைவியைச் சந்திக்கச் செல்கின்றான்.

மற்றொரு அகநானூற்றுப் பாடலில் வீதியில் உப்பை விற்றுச் செல்லும் உமணப் பெண்ணைப் பார்த்து உன் உடலின்கண் உளதாம் இன்பத்தின் விலை யாது? எனக் கூறித் தடுத்து நிறுத்தினான். அவள் மாறுபட்டவள் போல் கண்ணினைக் காட்டி இளநகை புரிந்து சென்றாள் பேதை.

இப்பாடலில், தலைவன் தான் செய்ய வேண்டிய செயலை முழுமையாகச் சிந்தித்து என்ன செய்யவேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவெடுத்துத் திட்டமிட்டு இச்செயலைச் செய்துள்ளதைக் காண முடிகிறது.

திட்டமிடாமல் நடக்கும் இயற்கைப்புணர்ச்சிக்குப் பின்னர் வரும் இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் ஆகிய துறைகளில் வந்துள்ள அகநானூற்றுப் பாடல்களில் தலைவன் சிந்தித்து, செய்ய வேண்டியதை முடிவெடுத்து, அம்முடிவைச் செயல்படுத்துகின்றான். எனவே, திட்டமிடல் என்னும் மேலாண்மைக் கருத்துடன் அகநானூற்றுப் பாடல் தலைமை மாந்தர் பண்புடன் ஒத்தமைந்துள்ளது எனலாம்.

## 2. கட்டமைத்தல் (Organising)

ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டிற்குத் தேவையான அனைத்தையும் அளித்தல். அதாவது, பணியாளர்கள் மூலம் பொருட்கள் இயந்திரங்கள் மற்றும் நிதி போன்றவையளித்து அமைப்பது மேலாண்மையாகும். சேட்படை, இருவகைக்குறியீடு ஆகிய துறைகள் செயல்பாட்டிற்குத் தேவையானவற்றை அளித்து கட்டமைக்கின்றது எனலாம்.

சேட்படை என்பது தோழி தலைவனது குறையுணர்வாள். ஆயினும், உடனே அதை முடிக்க மாட்டாள். தலைவியின் அருமையைத் தலைவன் உணர வேண்டியும், தலைவன் தலைவிபால் கொண்ட அன்பைத் தான் உணர வேண்டியும் தலைவனைச் சேட்படுத்துவாள். இத்துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் இரண்டு.

'நெஞ்சே! நாளும் நின் தலைவியை விரும்பி, அச்சம்மிகுந்த வழியில் இரவு நேரத்தில் யாவர்க்கும் பெரிய இகழ்ச்சி தோன்றக் காமம் அளவுகடந்து மிகுதலால் ஒழியாத உய்தற்கரிய துன்பத்தினை எம்மிடத்துக் கொண்டுவந்தனை' (258) எனத் தலைவன் குறியெதிர்ப்பட்டு, ஏமாற்றம் எய்திய தன் நெஞ்சிற்குக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. மற்றொரு பாடல், தலைவி அல்ல குறிப்பட்டுத் தலைவனைக் காணாது இல்லம் புகுந்தாள். தலைவன் குறியிடத்து வந்து புள்ளெழும்பச் செய்தும் இதுவும் இயற்கையாய் நிழ்வதே என்றெண்ணித் தலைவி வாராது இருக்கத் தலைவன் ஏக்கமுடன் தன்நெஞ்சிடம் கூறுவதாக அமைந்துள்ளது'(62) இது தோழி உணராமலே தலைவன் தலைவியைக் கூடினமையின் சேட்படையாயிற்று.

இருவகைக்குறியீடு என்பது, தோழியின் உதவியால் தலைவியைப் பகற்குறியிலும் இரவுக்குறியிலும் தலைவன் சந்திக்க நிகழ்த்துவது இருவகைக் குறியீடாகும். இத்துறையில் அகநானூற்றில் அமைந்த பாடல்கள் பதினொன்று.



'தலைவன் இரவுக்குறிக்கண் வந்து தலைவியைக் கூடிக் களித்த பின் பிரிந்து செல்லும்போது வருந்தித் தன்நெஞ்சிற்குக் கூறியதாக மூன்று பாடல்களும்' (126,152,280), 'அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவனவாய் ஐந்து பாடல்களும்' (212,322,338,342,372) அமைந்துள்ளன.

'தலைவியை இரவுக்குறிக்கண் புணர்ந்து மகிழ்ந்து செல்லும் தலைவன் தன்நெஞ்சை விளித்துப் பலரும் அறிவார் என அஞ்சியஞ்சி நம் காதலி நள்ளிரவில் யாருமறியாமல் வந்து தீமொழி பல பேசித் தனது தொடிக்கண் வடுக்கொள நம்மைத் தழுவினாள். அவளை நினைந்து நினைந்து நெஞ்சே நீ மகிழ்வாயாக' என்று கூறுவதாக மூன்று பாடல்களும் (142,162,198) அமைந்துள்ளன.

தலைவனுக்குத் தலைவி குறியிடம் அமைத்துக் கொடுப்பது, தலைவனைப் புள்ளெழுப்பச் சொல்வது, இருவர்தம் களவுக் காதலுக்குக் கட்டமைத்தலுக்குரிய தேவையானவற்றை அளிப்பது போன்ற செயல்பாடுகளைச் சுட்டலாம். இருவகைக் குறியீட்டில், இரவுக்குறியை அமைத்துக் கொடுப்பவள் தலைவி. இரவுக்குறி இடையீடு அல்லகுறிபட்டு செல்பவன் தலைவன். இரவுக்குறி செய்தும் இயற்கையாய் நிகழ்ந்தது என எண்ணி அல்லகுறியாக நினைப்பவள் தலைவி. இரவுக்குறியில் தலைவனுடன் இன்பம் எய்தியவள் தலைவி. தேன்போன்ற மொழிகளைப் பேசுபவள் தலைவி.

ஒருநிறுவனம் செயல்படத் தேவையான பொருள்களை வழங்குவது போல, தன் களவுக்காதல் தொடர்ந்து செயல்படத் தேவையான பகற்குறி மற்றும் இரவுக்குறிகளை அமைத்தல், அல்லகுறிகள், இருவகைக் குறிகளில் வரும் இடையீடுகள் கூறி அவற்றை மறுத்தல், வழிஏதங்களால் அஞ்சுதல் இவையெல்லாம் தாண்டி இரவுக்குறியில் தலைவனுடன் இன்புற்று இருத்தல், தேமொழிகளைப் பேசுதல், தலைவனைத் தழுவுதல் முதலான செயல்கள் களவுக் காதலைக் கட்டமைக்கின்றது எனலாம்.

## 3. வழிநடத்துதல் (Leading)

பணியாளர்களுக்கிடையே நடவடிக்கையை நிர்வகித்து அதிகாரம் செய்வது. நிறுவனத்தின் நோக்கங்களை அடையும் வண்ணம் குழு முயற்சிகளை ஒருங்கிணைத்து இயக்குதல் வழிநடத்துதல் எனப்படும். உடன்போக்கு என்னும் துறை வழிநடத்துதல் என்னும் மேலாண்மை கொள்கைக்கு இணையாக அமைந்துள்ளது.

அலரும் அம்பலும் களவினை வெளிப்படுத்தும் எனத் தலைவி அஞ்சிய நிலையில் தலைவி இற்செறிக்கப்படுகிறாள். இற்செறிப்புக் கடுமையினின்று அவளை உய்விக்க விரும்பிய நிலையிலும் வரைவு தனக்கு மறுக்கப்பட்ட நிலையில் தலைவன் தோழியோடு பேசி முடிவு செய்து, ஒருநாள் தேர்ந்தெடுத்து அந்நாளில் யாரும் அறியா வண்ணம் தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்வது உடன்போக்கு எனப்படும். இத்துறையில் அகநானூற்றில் அமைந்த பாடல்கள் இரண்டு.

'பாலைவழியில் யானே நடக்க இயலாது பெரிதும் துன்புறுகின்றேன். இவளோ, தன் ஒலிக்கின்ற வளையணிந்த கரங்களைவீசி யானும் வியக்கும் வண்ணம் என்னோடு நடக்கின்ற நடையின்கண் பெரிதும் வன்மை உடையவளாய்க் காணப்படுகின்றாள். இதற்குக் காரணம் என்மீது அவள்

கொண்ட பேரன்பே! என்று தலைவன், தலைவியை உடன் அழைத்துச் செல்லும் சுரத்திடத்து அவளது நடையை வியந்து பாராட்டுவதாக' இப்பாடல்(257) அமைந்துள்ளது. 'தலைவியை உடன்அழைத்துச் செல்லும் தலைவன்தன் காதலிக்கு வழிநடைத் துன்பம் தெரியாமல் இருக்கக் காட்டின் அழகினைக்கூறி மகிழ்ச்சியை ஊட்டுவதாகப்' பிறிதொரு பாடல்(99) அமைந்துள்ளது.

பணியாளர்களுக்கு இடையே உள்ள நடவடிக்கைகளைக் கண்காணித்து நல்வழிப்படுத்தி நிறுவன நோக்கங்களை அடையும் வண்ணம் ஒருங்கிணைத்து இயக்குதல் வழிநடத்துதல் எனப்படும்.

'பாலைவழி கரடுமுரடான பரல்கள் நிறைந்தவழி. அதில் நடப்பதற்கு நானே துன்புறும்போது இவள் தன்வளைகரங்களை வீசி யானும் வியக்கும் வண்ணம் நடக்கின்றாள்' எனத் தலைவன் கூறுகிறான்.

தலைவியைப் பாலைவழியில் உடன் அழைத்துச் செல்கிறான். செல்லும் சுரத்திடையே அவளது நடையை வியந்து பாராட்டுகின்றான். காட்டின் அழகினைக் கூறி மகிழ்ச்சி ஊட்டுகின்றான். தலைவியை மகிழ்ச்சியுடன் பாலைவழி நடத்தும் தலைவனின் மேலாண்மைக் கொள்கையுடன் ஒத்துள்ளதைக் காணமுடிகிறது.

பிரிவிடம் என்பது, தலைவன் தலைவியை ஓதல், பகை, வேந்தற்குற்றுழி உதவுதல், தூது, காவல், பொருள் முதலான ஆறில் ஒன்றன் காரணமாகப் பிரிந்து செல்வதைப் பிரிவிடம் என்பர். இப்பிரிவுகளில் பொருள்வயிற் பிரிவே பரந்து விரிந்தது. எல்லோர்க்கும் உரியது. களவிற்கும் கற்பிற்கும் பொதுவாய் நிற்பது. எனவேதான் இத்துறை சங்கப் புலவர்களின் நெஞ்சைவிட்டு அகலாது நின்றது எனலாம். இத்துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் இரண்டு.

'தலைவியைப் பிரிந்து வினைமேற் செல்ல நினைத்த தலைவனின் எண்ணத்தை அறிந்த தோழி, தலைவியும் உடன் வருவாளாம்' என்று கூறினாள். தலைவனோ வினைவயிற் செல்லும் ஆடவரை மகளிர் தொடர்ந்து போதல் மரபன்று(121) என்று கூறி உடன்வர நினைத்த தலைவியைத் தடுத்து நிறுத்திச் செல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. பிறிதொரு பாடலில் 'பரத்தையர் சேரியினின்று வந்த தலைவன் தோழியை வாயில் வேண்ட அவள் மறுத்தாள். முன்னர்த் தலைவிக்கும் தனக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றனை எடுத்துக் கூறி இச்செய்தியைக் கேட்டாகிலும் தோழி வாயில் நேரலாம்' (86) என்று எண்ணிக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

செலவழுங்கல் என்பது தலைவியின் மனக்கவலையை ஆற்றாது தலைவன் பொருள் தேடிப் புறப்படுதல் அறிவுடைமை அன்று. அதனால், தலைவன் மேலும் சிலநாள் வீட்டிலிருந்து அவளுடன் அன்பாய்க் கலந்துரையாடிப் பிரிதல் தலைவனின் கடமை. இச்செலவுத் தாழ்ச்சி, செலவழுங்கல் ஆகும். சங்கச் சான்றோர் செலவழுங்கல் துறையைப் பெரிதும் பொருள்வயிற் பிரிவிலேயே பாடியுள்ளனர். இத்துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் மூன்று.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே, யான் தலைவி உடனே இன்பத்திலே தாழ்ந்து கிடப்பது எம் ஆண்மைக்கு அழகன்று. இப்பொழுதே இவளைப் பிரிந்துபோய்ப் பொருளீட்டி வருதல் வேண்டுமென



இடையறாது ஊக்குவிக்கும் தன்நெஞ்சினை நோக்கி, நெஞ்சமே நீ தலைவியோடு இருந்து இன்பம் நுகர்வதைக் காட்டிலும் ஈதலே சிறப்புடைத்து என்கின்றனை. அவ்வாறாயின், இவளைப் பிரிந்து யான் நின்னோடு வருகிலேன்' (131,199,245) என்று அறிவுறுத்துவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

இடைச்சுரத்தழுங்கல் என்பது தலைவியைப் பிரிந்து செல்லும் போது இடைச்சுரத்து அவளின் நினைவு தலைவனுக்கு வரும். அப்போது வருந்தி தலைவிபால் மீண்டு வருவதை நினைப்பான். இதனை இடைச்சுரத்தழுங்கல் என்பர். இத்துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் இருபத்தாறு.

தலைவன் இடைச்சுரத்துத் தன்தலைவியின் துன்பநிலையை எண்ணி நெஞ்சிற்குக் கூறுவதாக 23 பாடல்களும் (21, 24, 33, 47, 79, 81, 93, 109, 114, 174, 181, 279, 289, 291, 297, 299, 339, 343, 351, 361, 365, 371, 373, 381) வேந்தனுடன் போர்புரிய சென்ற இடத்தில் பாசறைக்கண் தலைவியின் நிலையை நினைந்து நினைந்து துன்புறுவதாக எஞ்சிய 3 பாடல்களும் (24,164,174) அமைந்துள்ளன.

வினையிடம் என்பது போர் காரணமாகச் சென்ற வேந்தன் போர்முடிந்த பின்னரும் சினம் குறையாது இருந்தான். வேந்தனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் பாசறையில் தலைவியை நினைந்து வருந்துவதை வினையிடம் என்பர். இத்துறையில் அமைந்த அகநானூற்றுப் பாடல்கள் ஐந்து.

கார்காலம் வந்துற்றபோதும் நம் தலைவர் இன்னும் வரவில்லை. எனவே தலைவர் பெரிதும் அறவோர் அல்லர் என்று கூறுவதாகவும், எமக்கு முன்னரே என்நெஞ்சம் விரைந்து சென்று தலைவியைத் தழுவிக்கொண்டது என்று கூறுவதாகவும், விரைவில்சென்று அவள் துயர் தீர்ப்பேன் என்று கூறுவதாகவும் இப்பாடல்கள் (84,304,9,54,124) அமைந்துள்ளன.

வினைமுற்றி மீளல் என்பது வினைவயிற் பிரிந்த தலைவன் செவ்வனே அவ்வினையை முடித்துத் திரும்புவதே வினைமுற்றி மீளல் என்னும் துறையாகும். இத்துறையில் அமைந்த் அகநானூற்றுப் பாடல்கள் பதினெட்டு.

வினைமுடிந்து திரும்பும் தலைவன் தேர்ப்பாகனை நோக்கிப் பிரிந்திருக்கும் தலைவியின் துயர் நீங்கவும் அவளின் தோளைத் தழுவவும் கார்ப்பருவ நிலை கூறியும் தன்பால் ஊடல்கொண்ட தலைவியை மனக்கண் முன்னர் நிறுத்தியும் கூறுவதாக 14 பாடல்களும் (34, 44, 64, 94, 114, 134, 144, 154, 174, 204, 224, 234, 334, 344) பாணன் பாசறைக்கண் தூது வந்து கூறியதாக ஒரு (244) பாடலும், தலைவியின் ஊர்ப்பெருமைகளையும் வளமைகளையும் கூறி ஆங்குச் செல்க என்று கூறுவதாக இரண்டு (274,284) பாடல்களும், தன் எண்ணத்தைக் கூறுமுன்னே விரைந்து வந்து ஊரிடை நிறுத்திய தேர்பானை வாழ்த்துவதாக ஒரு(254) பாடலும் அமைந்துள்ளன.

இனிதிருத்தல் என்பது, வினைமுற்றி மீண்ட தலைவன் தன்இல்லம் அடைந்து தலைவியோடு இன்புற்றிருத்தல் ஆகும். இல்லத்தில் தலைவன் இன்புற்றிருக்கும் காலத்து இடைச்சுரத்து நிகழ்ந்தவற்றை நினைத்துப் பார்க்கையில் தலைவன் கூறுவதாக இரண்டு பாடல்கள் அகநானூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன.

வினைமுடிந்து மீண்ட தலைவன், தன் தலைவி ஆர்வமுடன் கூடி மகிழ்வாள் என எதிர்பார்த்தான். அவளோ, எம்மை நீவிர் நினைத்தது உண்டோ?

எனக்கேட்டு நின்றாள். தலைவியின் உள்ளத்தைத் தெளிவிக்க சிலசொற்களைக் கூறுவதாக இவ்விரு பாடல்களும் (29,39) அமைந்துள்ளன.

கட்டுப்படுத்தல் என்பது பின்பற்ற வேண்டிய ஆணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் என்ன என்பதை உறுதிப்படுத்திக் கட்டுப்படுத்துதல், தவறுகளைக் கண்டு களைந்து இனி நிகழாமல் தடுத்தல் ஆகும். பொருள்வயிற் பிரிந்து செல்ல நினைத்த தலைவனின் எண்ணத்தை அறிந்த தோழி, தலைவியும் உடன் வருவாளாம் என்று கூற, வினைவயிற் செல்லும் ஆடவரை மகளிர் தொடர்தல் மரபல்ல என்று தடுத்து நிறுத்துகின்றான். பரத்தையர் சேரியிலிருந்து வரும் தலைவனின் தவறைக் கண்டு வாயில் மறுக்கின்றாள் தலைவி. தலைவன் முன்னை நிகழ்ச்சி ஒன்றைக் கூறி வாயில் நேர்தல்.

தலைவியோடு இல்லறத்தில் இருப்பது மாண்பன்று, தானே பொருளீட்டி பிறர்க்கு ஈதலே சிறப்பு என்று நினைப்பதும், இடைச்சுரத்திலும் பாசறையிலும் தலைவியின் நினைவு வருவதுமாகிய இத்தனைத் துன்பங்களையும் அனுபவித்த தன் நெஞ்சு எடுத்துக் கூறியும் தலைவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறான். தலைவன் எடுக்கும் நடவடிக்கைகள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. தன்னால் நிகழ்ந்த தவறுகளை உணர்ந்து இனியும் நிகழாமல் இருக்க வேண்டியவற்றைச் செய்கின்றான் தலைவன். இங்குத் தலைவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதால் கட்டுப்படுத்தல் என்னும் மேலாண்மைக் கொள்கையுடன் ஒத்தமைவதைக் காணமுடிகிறது.

## நிறைவாக

நவீன மேலாண்மைப் பணிகள் என்று கூறப்படும் திட்டமிடுதல், கட்டமைத்தல், வழிநடத்துதல், கட்டுப்படுத்துதல் ஆகிய நான்கு கொள்கைகளும் சங்க அக இலக்கியப் பாடல்களில் பொறுத்தமுறப் பயின்று வந்துள்ளதை இக்கட்டுரை உறுதிப்படுத்தி உள்ளது.

நவீன மேலாண்மைப் பணிகளான கொள்கைகள் நான்கினை மட்டும் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது. அகநானூற்றுத் தலைவன் கூற்றுப் பாடல்களில் பயின்றுவந்துள்ள துறைகள் மட்டுமே ஈண்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறே தலைமைப் பண்புடைய சங்க அகமாந்தர்கள் கூற்றுகள் யாவும் மேலாண்மைக் கொள்கைகளுடன் இணைத்து ஆய்வு நிகழ்த்தலாம்.

## பயன் நூல்

(கல்விப் புதுமைகளும் மேலாண்மையும், எஸ். அருள்ஜோதி, இரா.பரமேஸ்வரி, ஸ்ரீகோமதி பப்ளிகேஷன்ஸ், சென்னை-5,ஜூலை 2010.).



# 54. ஆற்றுப்படை நூல்களில் கலை மேலாண்மை

**பா. மகேஸ்வரி**
ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர்
ந.ம.க. கல்லூரி
பொள்ளாச்சி.

## முன்னுரை

கலைகள் பல வகைப்படும். தமிழன் கண்ட கலைகள் தமிழகத்தின் கலைகளே. ஆய்வுக்கலை, எழுத்துக்கலை, சொற்கலை, கவிதைக்கலை, மருத்துவக்கலை, இசைக்கலை, நடிப்புக்கலை, நடனக்கலை மற்றும் நூல் இயற்கலை, ஓவியக்கலை, கட்டிடக்கலை, சிற்பக்கலை, வானநூற்கலை, உளநூற்கலை, கணித நூற்கலை, உடற்பயிற்சிக்கலை, உழவுக்கலை, கைத்தொழிற்கலை, நுண்கலை, சாகசக்கலை, பாசனக்கலை என்று இருபத்தோரு கலைகளும் தமிழுக்குரிய சிறப்பான கலையாகும். இக்கலைகள் எல்லாவற்றிலும் பண்டையத் தமிழர் சிறப்புற்றிருந்தனர். கலைகள் வளர்த்தது தமிழ்நாடு என்று சான்றோர் பகர்வது உண்மையாகும்.

சங்ககாலக் கலைகள் பற்றி டாக்டர் சுப. அண்ணாமலையும், தமிழகக் கலைகள் பற்றித் 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்ற நூலில் மயிலை சீனி. வேங்கடசாமியும், 'தமிழகக் கலைகள்' என்ற நூலில் டாக்டர் இராசமாணிக்கமும் ஆய்வு நடத்தியுள்ளனர்.

## சங்க காலக் கட்டடக்கலை

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் இக்கலையில் சிறப்புற்று விளங்கினர். இக்கலை அழகுத் தொழில்நுட்பம், கற்பனை அனைத்தும் சேர்ந்த கலையாகும். இக்கலை நாகரிகத்தின் கருவாக அமைந்துள்ளது. பண்டைத் தமிழர் கட்டடக்கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். கட்டடங்கள் பல்வேறு அமைப்புகளைப் பெற்றவை. தமிழகக் கட்டடக்கலை, மக்களின் அறிவியல் வளர்ச்சி சமுதாய அமைப்பு, வாழ்க்கை, சமயம், பொருளியல் இவற்றின் எதிரொலியாக விளங்கக் கூடியது. இக்கலையின் வனப்பு, இனம், இடம், காலம், இவற்றிற்கேற்ப வேறுபட்டுக் காணப்படும். தமிழ் மக்கள் மிகவும் தொன்மைக்காலத்தில் இருந்தே கட்டடக்கலை அறிவைப் பெற்றிருந்தனர். இதற்கு ஏற்ப ஆற்றுப்படையில் செல்வரின் வீடுகள் மாடங்களையும் நிலா முற்றங்களையும் கொண்டு விளங்கின என்பதை,

*"விண்பொர நிவந்த, வேயா மாடத்து"*

என்ற அடிகளால் வானுலகு ஏறச் சாத்திய ஏணிகள் எனவும் வருணிக்கப்படுகின்றன.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பர். அதில் கட்டடக் கலையும் சிறப்பான ஒன்று. இது அழகு, தொழில்நுட்பம், கற்பனை ஆகிய மூன்றும் இணைந்த கலையாகும். இது நாகரிகத்தின் அடித்தளம். ஒரு நாட்டின் கட்டடங்களைக் கொண்டு அக்கால மக்களின் நாகரிகத்தினை அறியலாம்.


செவ்வியல் பனுவல்களில்
பாலை நில வாழ்வியல்
(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு)
பதிப்பாசிரியர்
முனைவர் கோ.குணசேகர்
வெளியீடு
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
விழுப்புரம் - 605 602.

## 42. அகநானூற்றில் பாலை நிலமும் மக்கள் வாழ்வியலும்

முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர்-632 115

செம்மொழி இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு தனிச் சிறப்பு உடையது. பழந்தமிழரின் அகவொழுக்க எண்ணங்களோடு மட்டுமல்லாது அவர்களின் பெருமையும் மறமும் ஒழுக்கமும் வலிமையும் பண்பும் இன்னபிற வாழ்வியல் நெறிகளும் காணக்கிடக்கின்றன. இவையெல்லாம் நம் முன்னோர் வாழ்வியலோடு ஒன்றி ஒளிர்ந்த செப்பத்தையும் பெருமிதத்தையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

அகநானூற்றை **நெடுந்தொகை** என்றும் அழைப்பர். அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர், தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

அகநானூற்றுப் பாடல்கள் தொகுக்கப்பட்டதைப் போல வேறு எந்த இலக்கியமும் தொகுக்கப் படவில்லை. தொகுப்பாசிரியர் மேற்கொண்ட இம்முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது.

அகநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1 முதல் 120 பாடல்கள் முடிய உள்ள பகுதி களிற்றியானைநிரை எனவும்

121 முதல் 300 முடிய உள்ள பாடல் பகுதியை மணிமிடைபவளம் எனவும்



301 முதல் 400 முடிய உள்ள பாடல் பகுதியை நித்திலக்கோவை எனவும்

மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர். மேலும்,

1, 3, 5, 7, 9, 11... என ஒற்றை எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் பாலைத்திணை

2, 8, 12, 18 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் குறிஞ்சித்திணை

4, 14, 24 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் முல்லைத்திணை

6, 16, 26 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் மருதத்திணை

10, 20, 30 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் நெய்தல்திணை

என முறையே எண்முறை திணைமுறை ஒழுங்கோடு தொகுக்கப்பெற்றுள்ளமை இந்நூலுக்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

### பாலை நிலம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைகளுக்கே இயல்பான நிலப் பாகுபாடுகள் உள்ளன. இதனால் நானிலம் என்பது உலகிற்கு ஒரு பெயராயிற்று. பாலைக்கு இயல்பான நிலம் இல்லை. என்றாலும், திரிநிலம் உண்டு என்றும், காடும் மலையும் கோடைத் தீ வெப்பத்தால் தத்தம் பசுமை இழந்த திரிநிலையே பாலை என்றும் சிலப்பதிகாரம் நன்கு தெளிவு படுத்தும்.

*வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்*
*தானலந் திருகத் தன்மையில் குன்றி*
*முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து*
*நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்*
*பாலை என்பதோர் படிவங் கொள்ளும் (சிலப்.15:95-99)*

ஒரு காலவேற்றுமையால் இரண்டு திங்கள் இயல்பு மாறித் தோன்றும் நிலச் செயற்கையே பாலைத் திணைக்கு இடமாகும். எனினும், நிலையில்லா நீரில்லா நிலத்திலிருந்து நீடித்து நிலைக்கும் பன்னூறு பாலைப் பாடல்களை விளைவித்துக் கொண்ட சங்ககாலச் சொல்லேருழவர்களின் இலக்கிய உழவு அறிவின் கொழுமுனைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பர் வ.சுப. மாணிக்கனார். மலைப்பகுதியும் காட்டுப்பகுதியும் கலந்த நிலப்பரப்பு வேனிற்காலக் கடுங்கதிர் வெம்மையால் கவினழிந்து வறண்டு கிடக்கும். அந்நிலப் பரப்பு வறண்டுகிடப்பதால் மக்கள் போக்குவரத்து குறைந்திருக்கும். அதனால், வழித்தடங்களும் தெளிவாக இராது. அவ்வாறான அருவழிகளையும் சூடேறிய பரற்கற்களையும் கொண்டதாக உள்ள வறண்ட நிலப்பரப்பே பாலை நிலம்எனச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். முல்லைநிலமும் குறிஞ்சிநிலமும் திரிந்து உருவான நிலம் பாலைநிலம் என்பதால், இவ்விரு நிலங்களின் பெயர்களே பாலைத்திணைப் பாடல்களில் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. பாலை நிலத்தை வெளிப்படையாக உணர்த்தவல்ல சுரம், சுரன், அத்தம் போன்ற சொற்கள் பாலைநில வழியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாலை நிலத்தில் மட்டுமே ஏனைய நான்கு நிலங்களும் சுட்டப்பட்டுள்ளன. பாலை நிலத்தில் மட்டுமே அனைத்துப் பிறநான்கு நிலங்களும் பேசப்பட்டிருக்கின்றன. நால்வகை நிலங்களில் முல்லைக்கும் குறிஞ்சிக்கும் பாலையாகத் திரிய மிகுதியான வாய்ப்பு இருக்கிறது. எனினும், பிற இருநிலமும் கோடைக்காலத்துக் கடுவெயிலில் பாலையாக மாற வாய்ப்பு பெற்றிருக்கின்றன. மேலும், பாலை நான்கு திணைகட்கும் பொது என்பதும் கருதத்தக்கது என்பர் கோவி. இராசகோபால்.



எனவே, நடுவுநிலைத் திணைக்குரிய நிலம் நால்வகை நிலத்தோடும் தொடர்புடையதாகவும் உள்ளது எனக்கொள்ளலாம். வறட்சியும் வெம்மையும பகற்போதும் கொண்டு புனையப்படும் பின்புலமாகிய பாலை நான்கு நிலத்தோடும் கலந்து வருவதுபோல் புலனெறி வழக்கம் செய்யப் பெற்றுள்ள பாங்கினைச் சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பாக அகநானூற்றுப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

பிறர் இன்பம் கண்டு மகிழ்வதைவிட துன்பம் கண்டு உருகுவதே கலைஞர்களின் இயல்பு. இன்பத்தைப் பாடுவதைவிடத் துன்பத்தைப் பாடுவதில் புலவர்கள் முனைந்துள்ளனர். காதலைப் பாடும் புலவர்கள் காதலரின் இன்பநிலையைப் பாடுதல் குறைவாகவே உள்ளது. காதலரின் பிரிவாற்றாத் துயரத்தைப் பாடுதலே மிகுதியாக உள்ளது. பழந்தமிழ் இலக்கியத்தின் அகப்பொருள் பாட்டுகளிலும் பாலைத்திணைப் பாட்டுகளே மிகுதியாக இருத்தல் காணலாம். முல்லையிலும் ஒருவகை பிரிவே உள்ளது. மருதத்திலும் ஒருவகை பிரிவே உள்ளது. நெய்தல் திணையிலோ பிரிவாற்றாத் துயரம் எல்லையைக் கடந்து விடுகிறது. காதலரின் கூட்டத்தைப் பற்றிப் பாடுவதற்கு உரிய குறிஞ்சித் திணையிலும் காதலன் குறித்தபோது வராமையால் நேரும் ஏமாற்றமும் காதலியின் ஏக்கமும் காதலன் வழியில் உள்ள இடர்ப்பாடுகளும் மிக்குள்ளன என்று மு.வ. (இலக்கியத்திறன், பக்.91-92) கூறுவது முற்றிலும் உண்மையாகும்.

இதனால், பாலை என்ற நிலம் தொல்காப்பியர் காலத்தே உருவாகி உள்ளது என்றும், தொல்காப்பியரே பாலை நிலத்திற்கு முதல், கரு, உரிப்பொருள்கள் கூறிச் சென்றுள்ளதாலும், பாலை நிலத்தில் மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது.

பாலைநில மக்களைப் பற்றிப் பல்வேறு இலக்கியங்களில் பல்வேறு புலவர்கள் பாலைத் திணைவழி எடுத்துக்கூறியுள்ளனர். எனினும், அகநானூற்றுப் பாடல்களின்வழி குறிப்பாகக் களிற்றியானைநிரையில் காணலாகும் பாலைப்பாடல்களில் அந்நில மக்களின் ஒழுகலாறுகளைக் காணமுற்படுகிறது இக்கட்டுரை.

## மக்கள் வாழ்வியல் நிலை

பாறைகளும் கொதிக்கும்படியாக நீரற்றுப்போன பசுஞ்சுனைகள், நீர்ப்பசையே அற்றுக் காய்ந்து போனதால், சொரிந்த நெல் பொரியாகப் போகும் அளவிற்குக் கொடிய வெம்மையினை உடையது. யாவரும் அவ்வழியாக வருபவர் இல்லாததால் வழிப்பறித்து உண்டு வாழ்பவரும் தமக்கு ஏதும் கிடைக்காததால் பசியினால் மடிந்து அழகிழந்து போன சுரம் என்பதால், மக்கள் வழிப்பறி செய்து வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

*உகுநெல் பொரியும் வெம்மைய யாவரும்*
*வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடிய*
*சுரம்புல் லென்ற ஆற்ற* (1:13-15)

அருஞ்சுரத்துக் கள்வர்கள் தொழுவங்களில் இருந்து பசுக்களைக் கவர்ந்து செல்ல, அவரைப் பின்தொடர்ந்து வெருட்டிச் சென்று போரிட்டு, அவற்றை மீட்க விரைவர். உரிமை உடையவர்கள் என்பதால், கள்வர்கள் பசுக்களைக் கவர்ந்து சென்றுள்ளதை அறியமுடிகிறது.

*ஆயிடை அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தென*
*பிற்படு பூசலின் வழிவழி ஓடி* (7:13-15)

பாலை நிலத்தில் உள்ள அழகிய சிற்றூரிடத்தே, மென்மையான கூந்தலின் மயிர்கள் சுருண்டு சுருண்டு விளங்கும் மகளிர், பூண் பூட்டிய உலக்கைகளைக் கைகளால் உயர்த்தித் தினையைக் குற்றுவர். அப்போது



உரலின்கண் நின்றெழுந்த உலக்கை ஒலியானது, நெடிய பெரிய மலைச்சாரல்களில் இருந்தும் எழுகின்ற ஆந்தைகளின் ஒலியோடு கலந்து ஒலியும் எதிரொலியும் போல மாறிமாறி ஒலித்துக் கொண்டிருந்தது என்பதால் பெண்கள் உலக்கைகளைக் கொண்டு தினையைக் குற்றுவதை அறியலாம்.

*அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்*
*கொடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய*
*தொடிமாண் உலக்கைத் தூண்டுரல் பாணி*
*நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்*
*குன்றுபின் ஒழியப் போகி* (9:10-14)

நீர்ப்பசை அற்ற சுரங்களின் அரிய இடங்களிலே கொடுமையாக அடிக்கும் கோல்களை உடைய உப்பு வணிகர் மேற்செல்லாது நின்ற எருமைக் கடாக்களை அடித்து உரப்பி ஓட்டுகின்ற தெளிவான ஒலிகள், ஊர் அனைத்தும் திரண்டு எழுந்தாற்போல ஆரவாரத்துடன் கேட்கும் என்பதால், எருமைக் கடாக்களைப் பூட்டிய வண்டியில் உப்பு வணிகர்கள் அவ்வழிச் சென்றுள்ளனர் என்பது உறுதியாகிறது.

*ஊர்எழுந் தன்ன உருகெழு செலவின்*
*நீர்இல் அத்தத்து ஆர்இடை மடுத்த*
*கொடுங்கோல் உமணர் பகடுதெழி தெள்விளி*
*நெடும்பெருங் குன்றத்து இமிழ்கொள இயம்பும்* (17:11-14)

மண்மேடாகிய வன்நிலத்தைக் கூழினை உண்ணும் கோவலராகிய கிணறு வெட்டுவோர், வலிய வாயினை உடைய குந்தாலியினால் உடைத்துக் கிணறு அகழ்ந்தனர். அகழ்ந்தும் நீர் ஊறாது போகவே அவர்கள் கைவிட்டுச் சென்ற தழை மூடிய அந்தக் கிணறுகள் காடுகளின் இடையிடையே இருக்கும் என்பதால், கோவலர்கள் கிணறு அகழ்ந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

தமது வெண்மையான தந்தங்களைக் கொள்ள வரும் இரக்கமற்ற வேட்டைக்காரர்களிடமிருந்து தப்பிக்க, அக்குழிகளில் யானைகள் மறைந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் என்பதும் பெறப்படுகிறது.

*பரல்மண் சுவல முரண்நிலம் உடைத்த*
*வல்வாய்க் கணிச்சி கூழார் கோவலர்*
*ஊறாது இட்ட உவலைக் கூவல்*
*வெண்கோடு நயந்த அன்பில் கானவர்*
*இகழ்ந்தியங்கு இயவின் அகழ்ந்தகுழி செத்து*
*இருங்களிற்று இனநிரை தூர்க்கும்*
*பெருங்கல் அத்தம் விலங்கிய காடே*

(21:21-27)

ஒப்பற்ற மணியானது மாறிமாறி ஒலிப்பதும், கடையாணி இட்ட காம்பினை உடையதும், கூர்மையான முனையை உடையதுமாகிய நெடிய வேலினை உடையவர்கள் மழவர்கள். வெட்சியராகிய அவர்கள் போர் முனையிலே வென்று பசுக்களை மீட்டனர். அவ்வெட்சியரை, வில்லாண்மை மிக்க சிறந்த அம்பினை உடைய கரந்தை வீரர்கள், மேட்டுநிலத்திலே வீழ்த்தித் தாம் வெற்றி கொண்டனர். தங்களுடைய ஆண்மையினால் கரந்தையர்கள் பதுக்கைக் கடவுள் வழிபாடு செய்ய முற்பட்டனர். களத்திலே பட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு, அந்நடுகல்லுக்கு மயிலின் தோகைகளைச் சூட்டினர். துடியினை அடித்தனர். நெல்லால் ஆகிய கள்ளோடு செம்மறி ஆட்டுக் குட்டியையும் பலி கொடுத்தனர். நடந்துபோவதற்கும் இயலாத கவர்த்த வழிகளை உடைய புலால் நாற்றம் வீசும். அத்தகைய அரிய பாலைநில வழி என்பதால், குறும்படை மழவர்கள் பசுக்களைக் கவர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

*தனிமணி இரட்டும் தாளுடைக் கடிகை*
*நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்*
*முனைஆத் தந்து முரம்பின் வீழ்த்த*
*வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்*
*வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்*
*நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்*
*தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்*
*போக்கருங் கவலைய புலவுநாறும் அருஞ்சுரம்*

(35:3-10)



விரைந்து நடக்கும் இயல்புடைய மறவர்கள், ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். அவ்வாறு கொணரும் அவர், தம் ஊர் மன்றுகளிலே ஒருங்கே பல கறவைகளையும் கொணர்ந்து அடைத்திருப்பர். அப்படி அடைக்கப்பட்ட அவை, தம் கன்றுகளைக் காணாமையால், பொலிவிழந்த கண்களால் தம் செவிகளைச் சாய்த்து, மன்றிலே நிறைவானதால் வந்த துன்பமும் மிகுதியாகக் கல்லென்னும் ஆரவாரத்துடனே கதறிக் கொண்டிருக்கும் அத்தகைய சிற்றூர் என்பதால், மறவர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து ஊர் நடுவிலே ஒருங்கே அடைத்து வைப்பர் என்பது புலனாகின்றது.

*அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்*
*கன்று காணாது புன்கண்ண செவிசாய்த்து*
*மன்றுநிறை பைதல் கூறப் பலஉடன்*
*கறவை தந்த கடுங்கான் மறவர்*
*கல்லென் சீறூர்*

(63:9-13)

இருளில் தம் நிரைகளைக் கவர்ந்து சென்ற கள்வர்களிடமிருந்து அவற்றை மீட்பதற்காக விரையச் சென்ற அவருடன் போரினைச் செய்து வென்றவர்கள், மானமிகுந்த வீரமறவர்களுள் சிலர்.

அவர்களுடைய பொய்களையும் சிறப்புகளையும் பொறித்து, நெறிதோறும் மயிற்பீலி சூட்டிய நடுகற்களானவை விளங்கும். ஊன்றிய வேல்களையும் சார்த்திய பலகைகளையும் உடையனவாக அந்நடுகற்கள் போர்முனை போலக் காணப்படுகின்றது.

*நிரம்பா நோக்கின் நிரயம் கொண்மார்*
*நெல்லி நீளிடை எல்லி மண்டி*

*நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்*
*பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்*
*பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்* (67:6-10)

கல்லா இளையர் சுரம் எல்லாம் மணங்கமழும் வலமாகச் சுரித்த வெண்கடம்பினது புதிய பூக்களைச் சுருளாகத் தம் தலையிலே அணிந்துகொள்வர். உரல்போன்ற அடியினை உடைய பெண் யானையானது கானத்திலே அலறிக்கொண்டிருக்க, அதனுடைய கன்றினைப் பிரித்துக் கொண்டு வருவர். அந்த மகிழ்ச்சியினை உடையவர்களாகச் செருக்குமிக்க வலிய அடிமரத்தை உடைய வெண்கடம்பின் கிளையைப் பிளந்து அதனின்றும் உரித்த வெண்மையான நார் கயிற்றினால் அக்கன்றினை அழுத்தமாகக் கட்டுவர் கல்ல இளையர் என்பதால், யானைக் கன்றினைப் பிடித்து வரும் வேடர்கள் உள்ள சுரம் என்பது பெறப்படுகிறது.

*வலம்சுரி மராஅத்துச் சுரம்கமழ் புதுவீச்*
*சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி*
*கறைஅடி மடப்பிடி கானத்து அலறக்*
*களிற்றுக் கன்றுஒழித்த உவகையர் கலிசிறந்து*
*கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து*
*பெரும்பொழி வெண்நார் அழுந்துபடப் பூட்டி*
*நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்* (83:1-7)

மழவர்கள் தம் வாயிலிருந்து எழும் பகையினை எழாமல் தடுக்கும் பொருட்டுப் புற்று மண்ணைத் தம் வாயிலே அடக்கிக் கொள்வர். கடுமையான சக்திவாய்ந்த அம்பினை வில்லிலே தொடுத்துச் செல்வர். சென்று, தயிர்கடையும் மத்தினைக் கவர்ந்து கொள்வர். ஆநிரைகள் உள்ளவிடத்து தம் காலடித் தடங்களை மறைக்கும் செருப்புகள் ஒலிக்கா வண்ணம் சென்று, காவல் மிகுந்த தொழுவங்களிலே உள்ள கன்றுகளுடன் கூடிய பசுக்கூட்டங்களைக் கொள்ளை இடுவர். அப்படிக் கொள்ளையிடப்பட்ட ஆனினங்களை அவர் தம்மிடமாகிய பெரிய காட்டிற்கு ஓட்டிக்கொண்டு செல்வர்.



இதனால், மழவர்கள், தங்கள் இருப்பிடத்திலிருந்து பிற இடங்களுக்குச் (பிற நிலங்களுக்கு) சென்றும் கொள்ளையிடுவர் என்பது பெறப்படுகிறது.

*தகர்மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த*
*சுவல்மாய் பித்தைச் செங்கண் மழவர்*
*வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்*
*தீப்படு சிறுகோல் வில்லோடு பற்றி*
*நுரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து*
*அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்*
*கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்*
*இனம்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்டு*
(101:4-11)

## பாலை - தெய்வம்

பாலைத் திணைக்குரிய தெய்வமாகக் கொற்றவையைக் குறிப்பிடுவர். பலமுறையும் யாம் அவருடன் செல்வதற்கு விரும்பி வேண்ட, மிகுந்த புகழ் வாய்ந்த கொற்றவை அருள் செய்தமையால் ஏழிற்குன்றத்தைப் பாடிய சிறந்த புலன் ஒருவனுக்குக் ஷகானமா செல்வி' குதிரையைப் பரிசாகக் கொடுத்தான் என்ற செய்தியால்,

*விசும்புதளி பொழிந்து வெம்மை நீங்கித்*
*தண்பதம் படுதல் செல்கெனப் பன்மாண்*
*நாஞ்செல விழைந்தன மாக ஓங்குபுகழ்க்*
*கானமர் செல்வி அருளலின் வெண்காற்*
*பல்படைப் புரவி எய்திய தொல்லிசை*
*நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய*
*இனமழை தவழும் ஏழிற் குன்றத்து* (அகநா.345:1-7)

அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடலில் கொற்றவை பற்றிய குறிப்பு வந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வொரு பாடலைத் தவிர ஏனைய பாடல்களில் பாலைக்குரிய தெய்வம் குறிப்பிடப்படவில்லை. ஆனால், முருகன்(அகநா.1:3,59:11) நேமியஞ்செல்வன்(175:14), முக்கட்செல்வன் (181:16)

என்னும் வேற்றுநிலத் தெய்வங்கள் பாலைத்திணைப் பாடல்களில் வந்துள்ளன.

பாலைக்கென்று தனிநிலம் இல்லாமையாலும் பாலை என்பது குறிஞ்சி முல்லையின் கலப்பால் உருவானதாலும் அக்குறிஞ்சி முல்லைக்கான தெய்வங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகிறது. முக்கட் செல்வன் திணைத் தெய்வமன்று அது பொதுத்தெய்வம் என்று அமைதி கூறலாம்.

## பாலை - மக்கள் உணவு

மக்கள் உயிர்வாழ இன்றியமையாதது உணவு. உணவின்றி உயிர் வாழார். ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மக்கள் அவ்வந்நிலத்தில் கிடைக்கும் உணவுகளைப் பெரிதும் உண்டு வந்தனர். பாலைநிலத்தில் வாழும் மக்களோ விளைநிலப் பகுதிகளில் வாழாததால் ஆறலைத்தலால் வரும் பொருள்களையும் அயலூர்களில் சென்று கவர்ந்துவந்த பொருள்களையும் உண்பர். அவற்றொடு, தாம் வாழும் வறண்ட நிலத்தில் விளைந்த உணவுப் பொருள்களையும் உண்பர். அகநானூற்றில் அமைந்த பாலைத்திணைப் பாடல்களில் வரும் மக்கள்தாம் வாழுமிடப் பகுதிகளில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களையே பெரும்பாலும் உண்டு வந்துள்ளனர் என்பதை அறிகின்றோம்.

பாலை நில மக்கள் மூங்கிலரிசி, வெண்பழத்தரிசி ஆகிய அரிசி வகைகளையும், கள், நறவு தோப்பி என்றழைக்கப்படும் மதுவகைகளையும், கூழ், மிதவை ஆகிய சோறுவகைகளையும் உண்டு வாழ்ந்திருந்தமையை அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் வாயிலாக அறிகின்றோம். இவ்வுணவு வகைகள் வறண்ட பின்புலத்தை உடைய பாலைக்கு ஏற்புடையனவாக



இருப்பதால் இவற்றைப் படிப்பதன் மூலம் பாடல்களின் திணையை உணர வழிவகையும் உண்டாகின்றது எனலாம்.

## பாலை - விலங்கினங்கள்

மலையும் காடும் திரிந்து விளங்கும் பாலைநிலம் நீரின்றி வறண்டு கிடக்கும். ஆங்காங்கே சிறுமரங்களும் செடிகளும் காணப்பெறும். எனினும், அவை இலைகள் இன்றிக் காய்ந்த நிலையில் நிற்கும். அத்தகைய பாலைநிலங்களில் வாழக்கூடிய விலங்குகளைப் பாலைத்திணைப் பாடல்களின் கருப்பொருளாக அமைத்துப் பாடுவதில் புலவர்கள் வலலமை உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

யானை, களிறு, வேழம், ஒருத்தல், இருள்கொள் நாகம் என ஆண்யானையையும், பிடி எனப் பெண்யானையையும் பாலைப் பாடல்களில் காட்டியுள்ளனர். ஆண்புலியைப் புலி, ஏறு, வேங்கை, உழுவை, எனவும் பெண்புலியைப் பிணவு எனவும், ஆண்நாயைச் செந்நாய் எனவும் பெண்நாயைப் பிணவு எனவும் அகநானூற்றுப் பாடல்களில் புலவர்கள் பாலைநிலத்து உறையும் விலங்குகளாகக் காட்டியுள்ளனர். இந்த் விலங்குகளைச் சித்திரிக்கும் காட்சிகள் அனைத்தும் பாலையொழுக்கத்திற்குப் பின்புலங்களாக அமையும் வகையில் புனைந்துரைத்துள்ளனர்.

பாலைக்குரிய விலங்கினங்களுள் ஆண்யானை மான், மரையேறு, கலை, இரலை எனவும், பெண்மானைப் பிணை, மரை, நவ்வி எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர். இவை மட்டுமின்றி, நரி, பகடு, எருமை, ஆளி, வெருகு, பன்றி, கழுதை, ஒட்டகம், வெள்எலி, என்கு, உளியம், முசு, முந்தி, வெளில், நொள்ளை(நத்தை), பல்லி என்பனவும் பாலைத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள உயிரினங்கள் ஆகும்.

எனினும், மேற்குறித்த உயிரினங்களைப் பாலைநிலத்துச் சூழலுக்கு ஏற்பக் காட்டி அவை கருப்பொருளாய் அமைந்து திணையை அறியப் பயன்படுமாறு அகநானூற்றுப் பாடல்களில் அமைந்து உள்ளதை உணர முடிகிறது. வறட்சிப் பின்புலத்திற்கேற்ப நீரின்றி அலையும் யானைகளையும் மான்களையும் காட்டி அவை தம்துணைகளுக்காக வாழும் வாழ்க்கையில் அன்பு கோலோச்சுவதை உணரவைக்கும் பொழுது பாலைத்திணையை உணரவைக்கும் பாங்கு புலனாகின்றது.

**பாலை - தாவரங்கள்**

பாலைநிலம் வறண்ட நிலமாதலால், பெரும்பாலும் நீர் சிறிதளவே கொண்டு வளரும் தாவரங்களே காணப்படும். பல மரங்கள் இலைகள் இன்றிக் காணப்படும். எனவே நீராவிப்போக்கு நடைபெறுவதில்லை. இதனால், நீரின் தேவையை வெகுவாய்க் குறைத்து விடுகின்றன. ஒருசில தாவரங்களில் இலைகளே முட்களாய் மாறியும் அமைந்து உள்ளன. வறண்ட நிலத்திற்குத் தக்கவாறு தாவரங்களும் தங்களை அமைத்துக் கொள்கின்றன.

பாலைநிலத்தில் வளரும் மரங்களைக் கண்ட புலவர்கள் அவற்றைத் தத்தம் பாடல்களில் அழகுபடப் புனைந்து கூறியுள்ளனர்.

பாலைநிலத்தின்கண் வளர்ந்துள்ள மரங்களாக இருப்பை, ஓமை, மூங்கில், யா, மரா, நெல்லி, பலா, வேங்கை, ஞெமை, நொச்சி, இற்றி, இத்தி, தேக்கு, உழிஞ்சில், வாகை. அமை. மருது. யாமை, உலவை(வேலம்) ஆகியவை அகநானூற்றுப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.



**பாலை - பறவையினங்கள்**

பாலைநிலத்தில் வாழும் பறவையினங்களாக எருவை, பருந்து, புறா, கழுகு, குடிஞை, கோழி, மஞ்ஞை, குயில், வானம்பாடி, குரா(கோட்டான்), வெள்ளாங்குருகு, காக்கை, தும்பி, சில்வண்டு ஆகிய பறவையினங்களை அகநானூற்றுப் பாடல்களில் புனைந்துரைத்துள்ளனர்.

**பாலை - பறை**

பாலைநிலத்தில் ஒலிக்கப்படும் பறைகள் அகநானூற்றுப் பாடல்களில் வருணனைப் போக்கிலும், உவமை வாயிலாகும் சுட்டப்பெறுகின்றன. அவை, அரசர்களின் வீரத்தை எடுத்தியம்பும் கருவியாகவும் புனையப்பட்டுள்ளன. அரிக்கோற் பறை, குழல், பறை எனவரும் இடங்களில் உவமை வாயிலாகவும், ஆடுகளப்பறை, கிணை, குழல், தண்ணுமை, துடி, பறை, முழவு எனவரும் இடங்களில் வருணனைப் போக்கிலும், முரசம், முரசு எனவரும் இடங்களில் அரசர்களின் வீரத்ினை இயம்பும் கருவியாகவும் பறை பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. வறண்ட புலத்தில் பிறர்பொருள் கவர்ந்துண்பதையே செய்தொழிலாகக் கொண்டிலங்கும் பாலைநில மக்களுக்குப் பறை ஏற்புடைய கருவியாய் இருந்து பாலைத்திணைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

**பாலை - தொழில்**

ஓர் இடத்தில் தங்கி வாழ்பவர்கள் அவர்களுக்கென ஒரு தொழிலை மேற்கொள்கின்றனர். அத்தொழிலைக் கொண்டே அவர்களின் வாழ்க்கையை நடத்துகின்றனர். அதுபோலப் பாலை நிலத்தில் வாழ்பவர்கள் தாங்கள் வாழும் இடத்திற்கேற்பப் பெரும்பாலும் அவ்விடத்தைக் கடப்பவர்களிடம் கொள்ளையடித்தும், வேட்டையாடியும் சிறுபான்மை உழவுசெய்தும் வாழ்க்கையை நடத்துவர்.

பாலைநிலத்தில் உறைபவர்கள் சூறையாடலையும் சாத்தெறிதலையும் தொழிலாகக் கொண்டவர்கள் என உரையாசிரியர் கூறுவர். ஆனால், அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் யாவும் அங்கு வாழும் மக்கள் பொரும்பாலும் இயற்கையாய்க் கிடைக்கும் உணவுப்பொருள்களையே உண்டு வந்துள்ளதாகப் பாடல்கள் பகர்கின்றன.

**பாலை - பண் - யாழ்**

பாலைநிலத்தில் வாழ்வோர் பயன்படுத்திய இசைக்கருவிளாக யாழ், சீறியாழ் ஆகியன குறிக்கப் பெற்றுள்ளன. அந்த யாழிலிருந்து பாலைப்பண் பாடப்படுவதாகக் கூறப்பெற்றுள்ளது. புறத்தே உள்ள கடுமையை மறக்க வைத்து அகத்தே உள்ள அன்பைப் பிலிற்றச் செய்யும் அருமைப்பாடு உடையது யாழொலி. அது வன்மையை மென்மையாக்கும் மாயச்செய்கை கொண்டது. அதனால், அன்பின் கொடுமுடியைக் காட்டவல்ல பாலைத்திணைக்குரிய கருப்பொருளாக யாழ் அமைத்து திணை உணர வைப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது எனலாம்.

இக்கட்டுரைவழி, அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் காணலாகும் மக்களின் வாழ்வியல் செய்திகளும், மக்களோடு தொடர்புடைய கருப்பொருள்களையும் ஆய்ந்து எடுத்தியம்பப் பட்டுள்ளன. பாலைநிலத்திற்கேற்ப அம்மக்கள் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளமை ஈண்டு உறுதிப்படுத்தப்படுகிறது.

* * *



# 43. ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் செலவழுங்குவித்த பத்தில் தலைவனின் நிலைப்பாடு

முனைவர் சீ.ஜெயசுதா
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,
விழுப்புரம் - 605 602.

**முன்னுரை:**

பாலை என்பது அகத்திணைகள் ஐந்தனுள் ஒன்று. பாலைக்கென்று தனிநிலம் இல்லை. காடும் மலையும் கோடையினால் வெப்பம் மிகுந்து மழையின்றி வாடுகிற போது அவை வறட்சியுற்றுக் காணப்படும் நிலைமை பாலைத் தன்மை என்று பண்டையோர் கருதினர். இக்கட்டுரை செலவழுங்குவித்தல் பத்து என்பதைப் பற்றிக் கூற விழைகிறது. செலவு என்றால் தலைவியை விட்டுத் தலைவன் பிரிந்து செல்லுதலைக் குறிக்கும். **அழுங்குவித்தல்** என்றால் மனம் சோரச் செய்தல் என்று பொருள். தலைவனுக்குத் தலைவியை விட்டுப் பிரியும் நினைப்பைத் தொடர விடாமல் செய்தல் செலவழுங்குவித்தல் எனப்படும். பிரிய நினைக்கும் தலைவனை, உடனே பிரியாமல் சற்றுக் காலம் தாழ்த்திப் பிரியுமாறு செய்தல் எனப்படும். செலவைத் தள்ளிப் போட வைக்கும் செய்தி இப்பகுதியில் வரும் பத்துப் பாடல்களிலும் இடம் பெறுவதால் இப்பகுதிக்குச் **செலவழுங்குவித்த பத்து** என்று பெயரிடப்பட்டது.

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது என்ற துறைவாயிலாக தலைவன், தலைவியைப் பிரியப் போவதை அறிந்த தோழி, தலைவனிடம் இவ்வாறு கூறுகிறாள். கருமையான மேகம்


செம்மொழி
இலக்கியப் புலவர்களும்
பாடுபொருள்களும்
பதிப்பாசிரியர்
பேராசிரியர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர் சா. சரவணன்

என வரும் புறநானூற்றுப்பாடல் ஒழுக்க நெறியினைக் கடைப்பிடித்து வாழும் மனிதர்களைக் கொண்ட நாடே செழிப்பு மிக்கதாகவும் புகழ்ந்து பேசக் கூடியதாகவும் அமையும் என்பது ஔவையின் கருத்தாகும்.

**தொகுப்புரை:**

ஒரு நாட்டினுடைய பண்பாட்டையும் பெருமையும் சமகால நிலையையும் எடுத்துக் காட்டுவனவாக அமைவன இலக்கியங்கள். உலக வழக்கு நாடக வழக்கு சான்ற புலனொறி வழக்கில் சில வரையறை அமைத்து அக்கால சங்கப் புலவர்கள் தம் படைப்புகளின் மூலம் உலகமறிய தம் பாடல்களில் அவர்களின் கருத்துகளை வெளிப்படுத்தினர். புலவர்களுள் இயற்பெயர் தெரிந்தவர். பாடல்களின் தொடரால் பெயர் பெற்றோர், தொழிலால் கண்டறியப்பட்டோர் என பல வகையினராகச் சங்ககாலப் புலவர்களைக் காணலாம். 102 பாடல்களின் ஆசிரியர்கள் யார் எனத் தெரியவில்லை. இருப்பினும் அவாதம் புலமையின் பண்பினை நாடறியும். புலவர்களின் பாடல்களில் பல்வேறு வேற்றுமைகள் இருந்த போதிலும் "பாடல் சான்ற புலனெறி வழக்கம்" எனும் போது சங்ககாலப் பாடல்கள் ஒருவகை ஒருமைப்பாட்டினை உருவாக்கி புலவர்களின் புலமையை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பது சங்க காலத்தின் தனிச்சிறப்பாகும்.



## வெள்ளிவீதியார் பாடல்களும் நடத்தை உளவியலும்

முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
*வேலூர் 632 115.*

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நடத்தையைப் பற்றிய அறிய ஆர்வம் கொண்டவனாக இருக்கின்றான். மனிதனுடைய நடத்தையைப் பற்றிப் பல்வேறு சமூக அறிவியல்கள் அவனோடு தொடர்புடைய பிறரது நடத்தையைப் பற்றி ஏதாவது ஒரு வகையில் ஆராய்கின்றன. அவை ஒவ்வொன்றும் மனித வாழ்வின் ஒவ்வொரு பண்பினை மட்டுமே ஆராய்கின்றன. ஆனால் உளவியல் மட்டும்தான் மனித வாழ்வின் எல்லா நிலைகளையும் ஆராய முயற்சி செய்கிறது. இதன் விளைவாகவே, பல்வேறு அறிவியல் துறைகளைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு உளவியல் ஆழமாகவும் அகலமாகவும் தன்னுடைய ஆய்வினைச் செய்ய முனைகிறது.

மனிதனது இயல்பு நடத்தையைப் பற்றி ஆராய்ந்தறிய முயலும் மனஇயல் அறிஞர்கள் பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்தனர். அவர்களுடைய நோக்குகள் அனைத்தும் கோட்பாடுகள் என வரையறுக்கப்பட்டன. ஏறக்குறைய ஒரேவிதமான அணுகுமுறைகளைக் கையாண்டவர்கள் ஒரே அமைப்பினைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். இப்படி உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் பல உண்டு. அவற்றுள் முக்கியமானவை:

1. அமைப்புநிலைக் கொள்கை (Structuralism)
2. சொல்நிலைக் கொள்கை (Runctionalism)
3. நடத்தைக் கொள்கை (Behaviourism)
4. நோக்கக் கொள்கை (Purposivism)
5. உளப்பகுப்புக் கொள்கை (Psycho-analysis)
6. முழுமைக் காட்சிக் கொள்கை (Gestaltilism)

**உளவியல் அணுகுமுறைகள்:**

'உளவியல் ஒரு நடத்தை பற்றிய ஓர் அறிவியல்' என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. ஓர் அறிவியல் அணுகுமுறைக்கான சோதனை, ஒழுங்குமுறை, அளவு ஆகிய மூன்று முக்கிய பண்புக் கூறுகளையும் உளவியல் பெற்றுள்ளது. ஆதலால், உளவியல் அறிஞர்கள் ஒருசில உளவியல் முறைகளையும் நுணுக்கங்களையும் வளர்ந்து வருகின்றனர். அவற்றுள் சில முக்கிய உளவியல் அணுகுமுறைகளைக் காண்போம்.

## 1. அகக்காட்சி முறை (Introspective Method)

ஒருவர் தன் உள்ளத்தில் உள்ளதைத் தானே நோக்கி அறியும் தன் சிந்தனைகள், உணர்ச்சிகள், செயல்கள் ஆகியவற்றை உற்றுநோக்கி அறியும் முறையை 'அகக்காட்சி முறை' என்கிறோம். உள்ளத்தின் நடவடிக்கைகளை அறியவும், அவற்றை விளக்கி உரைக்கவும் இம்முறை பயன்படுகிறது. இம்முறையின் மூலம் பெறப்படும் விவரங்கள் யாவும் உண்மை என்று உறுதியாகக் கூறிவிட முடியாது. இம்முறையில் உற்று நோக்குபவரின் சொற்களையே பெரிதும் நம்ப வேண்டி உள்ளது. எனவே இது புறச்சார்பான அறிவியல் முறை ஆகும். இம்முறையில் மேற்காண் குறைபாடுகள் இருப்பினும், கொண்டிருப்பினும் சில முக்கியமான உளவியல் அய்வுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

## 2. பரிசோதனை முறை (Experimental Method)

மாறும் இரு பொருள்களின் இயல்புகளில் காணப்படும் உறவு முறைகளைக் கண்டறியும் முயற்சிதான் பரிசோதனை முறை ஆகும். ஒரு பரிசோதனையின் போது நேரடியாக உற்றுநோக்கிச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை விளக்கும் செயல்முறையே 'பரிசோதனை முறை' எனப்படும். ஒரே மாதிரியான சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் செய்யக் கூடிய வகையில் அமைந்த ஒன்றுதான் பரிசோதனை முறை. இம்முறை அறிவியல் முறையின் பண்புகள் அனைத்தும் பெற்றுள்ளன. அதேசமயம் உளவியல் பரிசோதனைகளை மிகவும் எச்சரிக்கையாக மேற்கொள்ளாவிடின், தவறான புள்ளி விவரங்களையே நாம் சேகரிக்க நேரிடும்.

## 3. புறவய உற்றுநோக்கல் (Observation Method)

சில உயிரின நடத்தை, இயற்பியல், வானியல், கடலியல் போன்ற நடவடிக்கைகளைப் பரிசோதனை நிலையில் பரிசோதிக்க இயலாது.



எனவே, இவற்றை ஆராய இயற்கைச் சார்பான புறவய உற்று நோக்கல் தேவைப்படுகிறது. இவ்வகையில் சில உளவியல் நிகழ்ச்சிகள் ஆராயப்படுகின்றன. வளர்ச்சிசார் உளவியல், உயிரின நடத்தைசார் உளவியல், சமூக உளவியல், தொழிற்சாலை உளவியல் போன்ற துறைகளில் இம்முறை மிகமிகப் பயனுடையதாக விளங்குகிறது. சிறு குழந்தைகள் நடக்கத் துவங்கும் சராசரி வயது, பேச்சு வளர்ச்சயின் பல்வேறு படிநிலைகள், பிற வளர்ச்சிசார் செயல்முறைகள் ஆகியவற்றைத் தீர்மானிக்க இம்முறை பெரிதும் உதவி செய்கிறது. தனிநபரின் உள்ஊக்க நிலைகளையும் மெய்ப்பாட்டுப் பாங்கையும் உற்றுநோக்க இயலாது இருப்பது இம்முறையில் உள்ள ஒரு குறைபாடாகும். நாம் உயிரியின் வெளியே காணப்படும் வெளிப்பாடு களை-செயல்பாடுகளை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

## 4. நிகழ்ச்சி வரலாற்று முறை (History Method)

ஒருவரின் வரலாறு பற்றி ஆராய அவரைச் சார்ந்த புள்ளி விவரங்களை அறிவியல் முறையில் சேகரிக்கின்றோம். இதனைத் 'தனிநபர் வரலாறு' என்கிறோம். ஒரு குறிப்பிட்ட வகையான நடத்தையின் முன் வரலாறுகளை ஆராய்வதன் மூலம் முறையான நல்லிணக்கங்கள், தீய இணக்கங்கள் என்பவனவற்றின் காரணங்களைக் கண்டுபிடித்துவிட இயலும் என உளவியலார் நம்புகின்றனர். தனிநபர் வரலாறு பொதுவாக அ) நாட்குறிப்பேட்டு முறை, ஆ) மருத்துவ முறை, இ) வாழ்க்கை முறை ஆகிய மூன்று முறைகளில் அமையும்.

## 5. பேட்டி முறை (செவ்வி) (Interview Method)

ஒருவரைப் பற்றி நாம் அறிய விரும்பினால், அவரைப் பல கேள்விக் கேட்டு அவர்தரும் விடைகளை மதிப்பீடு செய்கிறோம். இந்த முறை பேட்டி முறை என்று அழைக்கப்படுகிறது. பேட்டி பொதுவாக நான்கு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது. அவையாவன:

1. பேட்டியாளர்களிடமிருந்து விவரங்களைப் பெறுவதற்கும்
2. பேட்டி கேட்போர்க்கு விவரங்களைத் தருவதற்கும்
3. பேட்டியாளர்களின் ஊக்கநிலையை அறிந்து கொள்வதற்கும்
4. தரப்படுத்தப்பட்ட நிலைகளில் அவர்களின் நடத்தையை மதிப்பீடு செய்வதற்கும் பேட்டிகள் (செவ்விகள்) பயன்படுகின்றன.

இனி, நடத்தை உளவியல் தொடர்பான தூண்டல் துலங்கல் முறை மற்றும் அகக்காட்சி முறைகள் வெள்ளிவீதியார் பாடல்களில் எவ்வாறு பொருந்தி உள்ளன என்பதைக் காண்போம்.

நற்றிணை: பாலைத்திணை: தலைமகள் கூற்று:

தலைவியைச் சந்திக்க இரவும் பகலும் வரத்தொடங்கினான். சிறிது காலம் சென்ற பின்னர் அவளைக் காண்பதில் தடை ஏற்பட்டு அவனால் வர இயலவில்லை. இக்காரணத்தால் தலைவி காதல் வேட்கை அதிகமானதால் தான் படும் துயரை நாரையிடம் சொல்லுபவள் போலத் தோழி கேட்பச் சொல்லியது.

*சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே*
**துறைபோகு அறுவைத் தூமடி அன்ன**
**நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே**
*எம்மூர் வந்துஎம் ஒண்துறை துழைஇச்*
*சினைக்கெளிற்று ஆரிகையை அவர்ஊர்ப் பெயர்தி*
**அனையஅன் பினையோ பெருமற விலையோ**
**ஆங்கண் தீம்புனல் எங்கண் பரக்கும்**
**கழனி நல்லூர் மகிழ்நர்க்குஎன்**
*இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே* (நற்றிணை, 70)

நீர்த்துறையில் புதிய வெள்ளாடையைத் துவைக்க அது பெற்ற வெண்மை நிறம் போலக் காண்கின்ற சிறிய வெளிய குருகே! தலைவனின் ஊரிலிருந்து வருகின்ற இத்தீம்புனல் எங்கள் ஊரில் உள்ள வயல்களில் பாயும். அத்தகைய ஊரில் வாழ்கின்ற தலைவன், அவன்பால் சென்று என் அணிகலன்கள் உடலில் வாட்டத்தால் கழன்று போகின்றன. இத்துன்பத்தை இதுவரை நீ தலைவனிடம் சொல்லவில்லை. ஆனால் எம் ஊருக்கு வருகின்றாய். அவன் ஊரிலிருந்து வரும் நீர்நிரம்பிய பொய்கைத் துறையில் புகுந்து தழுவி சினையுள்ள கெளிற்று மீனைத் தின்கின்றாய். எம்மூர் வந்து உண்ட நன்றி மறவாமல் தலைவனிடம் சென்று எம்நிலை சொல்கின்ற அன்பை உடையையோ? அன்றேல், பெருமறதியை உடையையோ? இவற்றில் ஒன்றினை ஆராய்ந்து தக்கவாறு செய்க... என்றனள்.

இப்பாடலில், தலைவி இருக்கும் ஊருக்கு வந்து, தலைவியைச் சந்தித்துச் சென்ற தலைவன் இப்போது வரவிலையே என்ற தூண்டல் தலைவிக்கு ஏற்படுகிறது. அதனால் தலைவி உடல் வாடுகின்றது.



உடல் துன்பத்தைக் குருகிடம் சொல்லிப் புலம்புகின்றாள். இது துலங்கல் ஆகும்.

மேலும், அகக்காட்சி முறையில் நோக்கும் போது, புலவர் கூறியுள்ள சொற்களை மட்டுமே நாம் நம்ப வேண்டி உள்ளது. சந்தித்துச் சென்ற தலைவன் வரவில்லை என்பதால், அவள் உடல் மெலிந்து விட்டது என்பதைப் பாடல் வரிகள் மட்டுமே நமக்கு எடுத்து விளக்குகிறது. தலைவனுடைய ஊரில் உள்ள வெள்ளாங்குருகு தன் ஊருக்கு வந்துள்ளதாகத் தலைவி நினைக்கின்றாள். தன்னுடைய துன்பத்தைத் தலைவனுக்குச் சொல்லவில்லையே என்று வெள்ளாங்குருகிடம் கேட்கின்றாள். இவை யாவும் அகக்காட்சி முறைக்குள் அடங்கும். ஆனால், உண்மை என்ன என்று பாடல் புனைந்த புலவர் மட்டுமே அறியமுடியும்.

ஏனெனில், அகப்பாடல்கள் யாவும் சிறுசிறு காட்சிகளை மட்டுமே மையப்படுத்தி பாடப்பட்டவை. தலைவன்-தலைவியின் முழு வாழ்க்கையையும் பாடப்படவில்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நற்றிணை: நெய்தல்திணை: தலைமகள் கூற்று:

காமம்மிக்க கழிபடர்கிளவி மீதூர்ந்து தலைமகள் சொல்லியது. தலைமகளைத் தலைவன் பிரிந்து விட்டான். இரவு நேரத்திலும் துயில் கொள்ளாமல் வருந்துகின்றாள் தலைமகள். ஊர் ஒலி அடங்கிய தன்மையும் சேர்ந்து அவளைப் பெரிதும் வருத்துகிறது. தலைவியின் புலம்பலாகவே இச்செய்யுள் அமைகிறது.

*திங்களும் திகழ்வான் ஏர்தரும்இமிழ்நீர்ப்*
**பொங்குதிரைப் புணரியும் பாடுஓ வாதே**
**ஒலிசிறந்து ஓதமும் பெயரும் மலிபுனற்**
**பல்பூங் கானல் முள்இலைத் தாழை**
**சோறுசொரி குடையின் கூம்புமுகை அவிழ**
**வளிபரந்து ஊட்டும் விளிவுஇல் நாற்றமொடு**
**மைதரும் பனைமிசைப் பைதல உயவும்**
**அன்றிலும் என்புறம் நாலும் அன்றி**
**விரல்கவாந்து உழந்த கவர்வின் நல்யாழ்**
**யாமம் உய்யாமை நின்றன்று**
*காமம் பெரிதே களைஞரோ இலரே* (நற்றிணை, 335)

மாசற்ற வானில் மதி எழுந்து நிலவு பொழிகின்றது. கடல் சிறிதே பொங்கி அலையோசையை ஓயாது எழுப்புகின்றது. கடல்நீர் கரைகடந்து வந்துவிட்டுத் திரும்புகிறது. உப்பங்கழி சூழ்ந்த கடற்கரைச் சோலையில் தாழையின் முள்ளுடைய இலைகளின் இடையே சோறு நிரம்பிய குடம் போலத் திகழும் அரும்புகள் மலர, அதன் மிகுந்த மணம் எங்கும் கமழ்கின்றது. கறுத்து உயர்ந்த பனையின் மடலில், துணையைப் பிரிந்த அன்றில் பறவையின் சோகக்குரல் என் காதருகில் ஒலிக்கின்றது. இவை மட்டுமா? விரலை மீட்டி வாசிக்கும் நல்ல யாழ்கூட நடுயாமத்தில் சோக இசையே வழங்கி என் உயிர் போகுமளவு துன்பம் தருகின்றது. யான் அவர்மீது கொண்ட காமம் பெருகிவிட்டது. ஆனால், அத்துன்பத்தை நீக்குவதற்கு இப்போது அவரில்லை.

இப்பாடலில், தலைவன்மீது கொண்டுள்ள காமத்தால் துன்பம் பெருகிவிட்டது என்பது தூண்டல். அன்றில் பறவையின் சோகக்குரல் என் காதில் ஒலிக்கின்றது: யாழின் சோக இசை துன்பம் தருகின்றது. இப்படிப்பட்ட என்துன்பத்தைப் போக்குவதற்குத் தலைவன் இல்லையே என்பது துலங்கல் ஆகும்.

இங்கும் அகக்காட்சி முறையைப் பொருத்திப் பார்க்கலாம்.

நற்றிணை: நெய்தல்திணை: தலைமகள் கூற்று:

வேட்கை பெருகத் தாங்கதாளாய் ஆற்றாமை மீதூர்கின்ற சொல்லியது: தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றதனால் அப்பிரிவின் துயரத்தைத் தாங்கஇயலாத தலைவி புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

நிலவே நீல்நிற விசும்பின் பல்கதிர் பரப்பிப்
பால்மலி கடலின் பரந்துபட் டன்றே
ஊரே ஒலிவரும் சும்மையொடு மலிதொகுப் ஈண்டிக்
கலிகெழு மறுகின் வழவுஅய ரும்மே
கானே பூமலர் கஞலிய பொழில்அகம் தோறும்
தாம்அமர் துணையொடு வண்டுஇமி ரும்மே
யானே புனைஇழை ஞெகிழ்த்த புலம்புகொள் அவலமொடு
கனைஇருங் கங்குலும் கண்படை இலெனே
அதனால் என்னொடு பொரும்கொல்இவ் உலகம்?
உலகமொடு பொரும்கொல்என் அவலம்உறு நெஞ்சே?
(நற்றிணை, 348)



நிலவானது நீலநிறத்தை உடைய வானில் தோன்றி எங்கும் ஒலி வீசுகின்ற தன்மை உடையதாய்க் காணப்படுகிறது. நான் இருக்கின்ற ஊரிலோ திருவிழாக் கொண்டாட்டமொடு ஆரவாரம் நிறைந்து காணப்படுகிறது. காட்டிலோ பூக்கள் மலர்ந்த சூழலில் வண்டினம் திரிந்து ஒலி செய்வதாக உள்ளது. யானோ மெலிவடைந்த காரணத்தால் அணிகலன்கள் கழன்று விழும் அளவிற்கு மெலிந்தும் இரவு நேரங்களில் கண் துயிலாது வாடியும் உள்ளேன். இந்த உலகம் அதனொடு சேர்ந்து மகிழவில்லை என்று என்னுடன் போராட்டம் நடத்துமோ? என் நெஞ்சம் வருத்தம் மிகுதியினால் உலகோடு போராட்டம் நடத்த முற்படுமோ? என்று தெரியவில்லை.

இப்பாடலில், திருவிழாவின் ஆரவார ஒலி, காட்டு வண்டின ஒலி இவை யாவும் தூண்டலாய் அமைந்தன. அணிகலன்கள் கழன்றது, கண்துயிலாது வாடியது, உலகோடு போராட்டம் நடத்த முற்படுமோ என்பது துலங்கல் ஆகும்.

இப்பாடலிலும் அகக்காட்சி முறையைப் பொருத்திப் பார்க்கலாம்.

குறுந்தொகை: பாலைத்திணை: தலைமகள் கூற்று:

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, தலைமகள் உரைத்தது:

**கன்றும் உண்ணாது கலத்தினும் படாஅது**
**நல்ஆன் தீம்பால் நிலத்துக் காஅங்கு**
**எனக்கும் ஆகாது என்ஐக்கும் உதவாது**
**பசலை உணீஇயர் வேண்டும்**
**திதலை அல்குல்என் மாமைக் கவினே** (குறுந்தொகை, 27)

நல்ல பசுவினது இனிய பாலை, அதன் கன்றும் குடிக்காமல், பாத்திரத்திலும் பிடித்து வைக்கப் படாமல், வீணே மண் தலையில் ஊற்றிவிட்டதுபோல எனது தேமல் படர்ந்த மாந்தளிர் போலும் மேனி அழகு எனக்கும் பயன்படாமல் என் தலைவனுக்கும் பயன்தராமல் பசலை என்னும் நோய் அவ்வழகைத் தின்னுமாறு எண்ணுகின்றது. பிரிவால் மேனி அழகு கெடுகிறது. என்செய்வேன்! என்பது குறிப்பால் பெறப்படுகிறது.

இப்பாடலில், தலைவனின் பிரிவை ஆற்றாமல் இருப்பது தூண்டல். பசலை என்னும் நோயால் என் அழகு கெடுவதைக் கூறுவது துலங்கல்.

இப்பாடலிலும் அகக்காட்சி முறையைப் பொருத்திப் பார்க்கலாம்.

குறுந்தொகை: பாலைத்திணை: செவிலித்தாய் கூற்று:

இடைச்சுரத்துச் செவிலித்தாய் கைற்றுச் சொல்லியது: உடன்போக்கில் தன் மகள் காதலனுடன் சென்று விடவே, அவர்களைத் தேடிப்போகும் செவிலித்தாய் பாலைநில வழியிடையே அவர்களைக் காணாமல் செயலற்று வருந்திச் சொல்கிறாள்.

**காலே பரிதப் பினவே கண்ணே**
**கோக்கி நோக்கி வாள்இழந் தனவே**
**அகல்இரு விசும்பின் மீனினும்**
**பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே (குறுந்தொகை, 44)**

என் கால்கள் நடந்து நடந்து ஒரு சீராக அடி எடுத்து வைக்க முடியாமல் தவறுகின்றன. கண்களோ முன்னே இணை இணையாக வருபவர்கள் என்மகளும் அவள் காதலனுமோ? என எண்ணிப் பார்த்துப் பார்த்துப், பார்த்த கண்கள் ஒளிஇழந்து பூத்துப் போயின. பார்ப்பவரெல்லாம் மற்றவர்களாகவே தெரிவதால், நிச்சயமாக இந்த உலகத்தில் அவர்களிருவர் அல்லாத பிறர், அகன்ற பெரிய வானத்தில் தோன்றும் மீன்களைவிடப் பலரேயாவர். அவர்களை மட்டுமே காணவில்லை எனத் தனக்குத்தானே சொல்லிச் செயலற்று வருந்துகின்றாள் செவிலித்தாய்.

இப்பாடலில், தலைவன் தலைவி இருவரும் உடன்போக்கு சென்றுவிட்டநிலையில் தேடிச்சென்றும் காணாத நிலையைத் தூண்டல் எனலாம். கால்கள் நடக்க முடியாமல் தவறுவதும், எதிரில் வருபவர்கள் தலைவனும் தலைவியுமோ என்று பார்ப்பதும், பார்த்த கண்கள் பூத்து நிற்பதும் துலங்கல் ஆகும்.

இப்பாடலில், அகக்காட்சி முறையையும் பொருத்திப் பார்க்கலாம்.

குறுந்தொகை: குறிஞ்சித்திணை: தலைவன் கூற்று:

கழற்றெதிர்மறை: கழறுதல்- பாங்கன், தலைவனை ஒரு பெண்மீது கொண்ட காதலைக் கேலி செய்து இடித்துரைத்தல். எதிர்மறை - தலைவன் அதை மறுத்துத் தன் காதலை நியாயப்படுத்துதல்.



**இடிக்கும் கேளிர் நும்குறை யாக**
**நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல**
**ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்**
**கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன்று இந்நோய். நோன்றுகொளற்கு அரிதே (குறுந்.58)**

என்னை இடித்துரைக்கும் நண்பரே நுமது வேணடுகோளை நிறைவேற்று முகமாக, இத்துன்பத்தை யான் நிறுத்தி ஆற்றியிருப்பேனாயின் மிக நல்லது. அதுவே என் விருப்பமும். ஆனால், இயலவில்லையே. சூரியன் காயும் வெப்பம் மிக்க பாறையின்மேல் கைகள் இல்லாத ஊமை ஒருவன் தன் கண்ணெதிரே பார்த்துக் காக்கின்ற உருகும் வெண்ணெயைப் போல இத்துன்பம் என்னுள் பரந்து அதிகமாகி விட்டது. என்னால் பொறுத்துக் கொள்வதற்கு அரிதாக இருக்கின்றது.

பாங்கன் இடித்துரைக்கும் செயல் தூண்டல்: உருகும் வெண்ணையைப் போல இத்துன்பம் படர்வது, பொறுத்துக் கொள்ள இயலாத நிலையில் இருப்பது துலங்கல் ஆகும்.

இப்பாடலை அக்காட்சி முறையிலும் பொருத்திப் பார்க்கலாம்.

அகநானூறு: பாலைத்திணை: தலைமகள் கூற்று:

வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது: தலைவனைப் பிரிந்து ஆற்றாமை அடைந்த தலைவியைத் தோழி ஆற்றுவிக்கின்றாள். அப்போது ஆற்றாமை மிகுதியால் வருந்திய தலைவி, அவ்வாறு ஆற்றியிருக்க என்னால் ஆகாது என்ற பொருள்படக் கூறுகிறாள்.

**வாடல் உழுஞ்சில் விளைநெற்று அம்துணர்**
**ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்பக்**
**கோடை நீடிய அகன்பெருங் குன்றத்து**
**நீர்இல்ஆர் ஆற்று நிவப்பன களிறுஅட்டு**
**ஆள்இல் அத்தத்து உழுவை உகளும்**
**காடு இறந்தனரே காதலர் மாமை**
**அரிநுண் பசலை பாஅய் பீரத்து**
**எழில்மலர் புரைதல் வேண்டும் அலரே**
**அன்னி குறுக்கைப் பறந்தலை திதியன்**
**தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி**
**புன்னை குறைந்த ஞான்றை வயிரியர்**

இன்இசை ஆர்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதி மந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் கிளாந்த வென்றி நல்வேல்
வான வரம்பன் அடல்முனைக் கலங்கிய
உடைமதில் ஓர்அரண் போல
அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே (அகநா. 45)

தலைவனைப் பிரிந்த ஆற்றாமையில் இருந்த தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள். ஆனால் தலைவி ஆதிமந்தியைப் போல ஆற்றியிருக்க முடியாமையைக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு.

தோழியே! நம் தலைவர் நம்மைப் பிரிந்து உலநர்ந் வாகை மரத்தின் முற்றிய காய் நெற்றுக்கள் கூத்தரின் பறைபோல விட்டுவிட்டு ஒலிக்க கோடையின் வெப்பம் மிகுந்த குன்றுகளில் உள்ள அரிய காட்டில் மக்கள் நடமாட்டம் இல்லாத நிலையில யானைகளைக் கொல்லும் புலி திரிகின்ற வழியைக் கடந்து சென்றார்.

அப்பிரிவால் மாமையுடன் கூடிய பீர்க்க மலரை ஒத்த மஞ்சள் நிறப்பசலையுடன் இருக்கும் என்னைப் பார்த்து இவ்வூர் அலர் எழுப்பியுள்ளது. அந்த அலர் எப்படிப்பட்டது எனில், குறுக்கை என்னும் ஊரில் நடந்த போரில் ஐம்பொரும் வேளிருள் ஒருவனாகிய திதியனது காவல் மரமான புன்னையை அன்னி என்பவன் வெட்டி வீழ்த்தியதால போர் ஆரவாரம் ஏற்படுவதாயிற்று. அந்த ஆரவாரத்தைவிடப் பெரியதாக இவ்வலர் எங்கும் பாந்து திரிவதாயிற்று.

இதனால் யானோ, காதலனாகிய ஆட்டனத்தியைக் கடல் கொண்டு சென்றதால் அவனைக் காணாமல் அமைந்த காதலியான ஆதிமந்தியானவள் வீரம்மிக்க வானவரம்பனது போரால் கலங்கிய அரணில் உள்ளோர் அச்சமுடன் துயிலாதிருந்ததைப் போலத் துயிலாது வருந்தி அரற்றித் துன்புற்றுத் திரிந்ததைப் போல உழல்வேனோ? உழல முடியாது! அமைதி கொள்ள இயலாது என்பது கருத்து.

இப்பாடலில், தலைவி ஆற்றியிருக்க இயலாத நிலை தூண்டல் அலரும் ஆரவாரமும் எழுந்த நிலை, ஆட்டனத்தியைக் காணாமல் கலங்கிய ஆதிமந்தியை ஒத்த நிலை ஆகியன துலங்கல் எனலாம்.



அகநானூறு: குறிஞ்சித்திணை: தோழி கூற்று:

இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

பாம்புடை விடர பனிநீர் இட்டுத்துறைத்
தேம்கலந்து ஒழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட்டு யானை பொருதபுண் கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்அளைச் செறிய
முருக்குஅரும்பு அன்ன வல்உகிர் வயப்பிணவு
கழகொள வாழங்கார் ஆறே ஆயிடை
எல்லிற்று என்னான் வென்வேல் ஏந்தி
நசைதர வந்த நன்ன ராளன்
நெஞ்சுபழு தாக வறுவியன் பெயரின்
இன்றுஇப் பொழுதும் யான்வா ழலனே
எவன்கொல்? வாழி தோழிநம் இடைமுலைச்
சுணங்குஅணி முற்றத்து ஆரம் போலவும்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பின்
இலங்குவெள் அருவி போலவும்
நிலம்கொண் டனவால் திங்கள்அம் கதிரே (அகநா. 362)

பாம்புகள் நிறைந்த மலைப் பிளவுகளில் இருந்து வரும் குளிர்ந்த நீர், ஒடுக்கமான துறைகளின் வழியாகத் தேனுடன் கலந்து பாய்வதால் ஆறுகள் அனைத்தும் நிறைந்தன.

வெண்மையான கொம்புடைய ஆண் யானைகள் பாய்ந்து குத்தியதால் புண்மிகுந்து பசிய கண்ணை உடைய ஆண் புலியானது கற்குகையின் உள்ளே ஒடுங்கி இருக்க, செம்முருக்கம் பூவின் அரும்பு போன்ற கூரிய நகத்தை உடைய வலிய பெண்புலி அக்குகையின் காவலை மேற்கொண்டு இருத்தலால், அவ்வழியில் ஒருவரும் செல்லார்.

அந்த நிலையில் இருள் வந்துவிட்டது என்று கருதாதவனாய் வெற்றி தரும் வேலைக் கையில் கொண்டு நம்மிடம் காதல் மிகுதியும் கொண்டு வந்த நன்மையாளனாகிய தலைவன் தன் எண்ணம் பயனின்றிப் போக நம்மைச் சேராது வறிதே மீண்டதால் இன்றைய இரவுப் பொழுதிலும் நான் உயிருடன் வாழ்ந்து இருக்க மாட்டேன்.

நமது முலையில் தேமலால் அழகு பெற்ற பரப்பில் கிடக்கும் முத்து மாலையைப் போன்றும் மலையிலே உள்ள நீண்ட சோலையில் துளிகளைச் சிதறும் குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய அருவியைப்

போன்று திங்களின் அழகிய கதிர்கள் நிலவுலகெங்கும் பரவியது இனி நாம் என்ன செய்வோம்?

இப்பாடலில், காவல் மிகுதியாய் இருப்பதால், தலைவன் இன்றும் என்னைக் காணாமல் போய்விட்டது என்பது தூண்டல்: உடலில் தேமல் படர்ந்த நிலையில், இன்றைய இரவுப் பொழுதும் நான் உயிருடன் இருப்பது எவ்வாறோ? என்பது துலங்கல்.

இவ்வாறே வெள்ளிவீதியாரின் பிற பாடல்களையும் நடத்தை உளவியல் கண்கொண்டு பார்க்கலாம்.

**வெள்ளிவீதியார் பாடிய நற்றிணை பாடல்கள்:**

மருதத்திணை : 70
நெய்தல்திணை : 335,348 (3 பாடல்கள்)
வெள்ளிவீதியார் பாடிய குறுந்தொகை பாடல்கள்:
குறிஞ்சித்திணை: 58,146
மருதத்திணை : 169
நெய்தல்திணை : 386
பாலைத்திணை : 27,44,130,149 (8 பாடல்கள்)

**வெள்ளிவீதியார் பாடிய அகநானூறு பாடல்கள்:**

குறிஞ்சித்திணை: 362
பாலைத்திணை : 45 (2 பாடல்கள்)

**நிறைவாக:**

மாணவர்களிடையே காணப்படும் விரும்பத்தகாத நடத்தைகளை மாற்றி நெறிப்படுத்துவதுதான் கல்வியின் தலையாய நோக்கமாகும். ஒரு மாணவரிடம் காணலாகும் பண்புகள் அனைத்தும் அவருடன் பிறந்தவை. அதேசமயம், அவை மாறுதலுக்கு உட்பட்டவை. ஓர் ஆசிரியரின் ஆளுமைத் தன்மை, மாணவாகளின் ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே, ஆசிரியருக்கும் மாணவர்க்கும் இடையே கற்பித்தல் கொள்கைகளை உருவாக்குவதும், நடத்தை உளவியலோடு பொருத்திப் பார்ப்பதும் கற்பித்தலில் இன்றியமையாததாக அமைகிறது எனலாம்.



# ஒக்கூர் மாசாத்தியார் அகப்பாடல்களின் பாடுபொருள்

*வெ.ஜோதி*
முனைவர் பட்ட ஆய்வாளர் - முழுநேரம்
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி (ஆடவர்)
கிருட்டினகிரி - 635 001.

உலகோர் போற்றிப் புகழும் வாழ்வியல் விழுமியங்களைப் பாடுபொருளாகக் கொண்டவை சங்க இலக்கியங்கள். அவ்விலக்கியங் களில் பெண்பாற் புலவர்கள் பாடிய அகப்பாடல்கள் மகளிரின் அகமன உணர்வுகளை நுண்ணிதின் சித்திரிக்கும் ∴ வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை. இவ்வகையில் சங்ககாலப் பெண்பாற் புலவர்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவராக விளங்கியவர் ஒக்கூர் மாசாத்தியார் ஆவார்.

ஒக்கூர் மாசாத்தியார் ஒரு பெண்பாற் புலவர். இவர் பாடியுள்ள பாடல்கள் குறுந்தொகையில் அய்ந்து பாடல்களும் (126, 186, 220, 275, 139), அகநானூற்றில் இரண்டும் (324, 384) புறநானூற்றில் ஒன்றும் (279), என மொத்தம் எட்டுப் பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

குறுந்தொகையில் இவர் பாடிய அய்ந்து பாடல்களும், அகநானூற்றில் இரண்டு பாடல்களும் கற்புக் கைகோளில் அமைந்துள்ள பாடல்களாகும். இப்பாடல்கள் காதலன் வரவு நோக்கி வாடும் காரிகையின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இப்பாடல்களில் அமைந்துள்ள கருத்துக்களை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**அரும்பிய முல்லை**

பொருள்மேல் உள்ள ஆசையினால் தலைவன் பொருள்தேடச் சென்றானாயினும் இருவருடைய இளமையும் வீணாவது பற்றி அவர் எண்ணாமல் இங்ஙனமும் வராது எவ்விடத்தில் என்ன செய்கின்றாரோ எனவும் அறியாத நிலையில் அரும்பிவிட்ட முல்லையும் இன்னுமா உயிர் வைத்துக்கொண்டிருக்கிறாய் என்று என்னை ஏளனம் செய்து நகைப்பது போல் உள்ளது என்று தலைவி தோழியிடம்,

**"தொகுமுகை யிலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே"** (குறுந். 126)

எனக் கூறுகிறாள்.

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. இராமலிங்கம்

# 49. தலைநாள் கொண்ட கோலங்கள்

**முனைவர் இரா. ஜெகதீசன்**
*பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர் - 632115*

## முன்னுரை

வைணவ இலக்கியங்களில் ஆழங்கால்பட்ட பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் வைணவ வியாக்கியானத்திற்கு பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எழுதிய அஷ்ட பிரபந்தத்தில் ஒரு பாசுரமே ஒளிவிளக்காக அமைந்துள்ளது. இதனை எடுத்து உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இறுதியாகச் சேர்க்கப்பட்டவை பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் அஸ்டபிரபந்தங்கள். இப்பிரபந்த பாசுரம் ஒன்றில், அண்டங்களின் அமைப்பையும், அவை விண்வெளியில் சுழலும் அற்புதத்தையும் மற்றொரு கோணத்தில் காண்கிறார். ஐயங்கார்,

*"ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி*
*நடத்தும் அந்தக்*
*காலத்திகிரி முதலான யாவும்*
*கடல்க டந்த*
*நீலத்திகிரி அனையர், அரங்கார்*
*நிறைந்த செய்கைக்*
*கோலத்திகிரி தலைநா ளினில்*
*கொண்ட கோலங்களே"*

இப்பாசுரத்திலுள்ள திகிரிகளை முதலில் எவை எவை எனச்சுட்டி இப்பாடலின் இறுதியில் அரங்கர் இறைவனாகின்றார் என்று முடிக்கின்றார்.

## ஞாலத்திகிரி

பூமியின் சுற்றளவு 25000 மைல். இவ்வளவு பெரிய உடம்பைத் தூக்கிக் கொண்டு மனோ வேகத்தில் சுற்றிக் கொண்டுள்ளது பூமி. சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் ஒன்பது கோடி மைல். தான் சுற்றுவதும் அல்லாமல் சூரியனையும் சுற்று வழியில் சுற்றி வருகின்றது. பூமி இந்தச் சுற்று வழியின் சுற்றளவு 54 கோடி மைல். ஒரு முறை சுற்ற ஓராண்டாகின்றது. பூமியைப் போலவே பல அண்டங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனும் அதன் பரிவாராமான செவ்வாய், புதன், முதலான கோள்களும் எட்டாத வெட்ட வெளியில் சுற்றிக் கொண்டுள்ளன. இதைப் போலவே எத்தனையோ சூரியன்கள் உடுக்கள் போல் காட்டிக் கொண்டு



வானவெளி சுற்றுவழியில் சுற்றிக் கொண்டேயுள்ளன. ஒரு கணக்குப்படி சுற்றுகின்றன. இவ்வாறு சலியாது சுற்றும் அண்டங்களும், பிரம்மாண்டங்களும், கவிஞர் மனக்கண்ணுக்கு உருளைகள் அல்லது சக்கரங்கள் போல் தோன்றுகின்றன. இந்த பேரண்ட சக்கரம் தான் 'ஞாலத்திகிரி' பூமிச் சுற்றும் போது அத்துடன் சூழ்ந்துள்ள காற்று மண்டலமும் சேர்ந்தே சுற்றுகின்றது என்பது அறியத்தக்கது.

## முதுநீர்த்திகிரி

ஒவ்வோர் அண்டத்துடன் அவ்வண்டத்தில் உள்ள பொருள்களும் உருமாறிச் சுற்றுகின்றன. எடுத்துக்காட்டாக கடல் நீர்- நீராவி- மேகம், மழை - ஆறு என்று மாறி கடலுடன் கலக்கின்றது. மீண்டும் ஆவி - மேகம் - மழை - ஆறு - கடல் என்று சக்கரம் சுழல்கின்றது இவ்வாறு கடல் நீர்ச் சுற்றுவதை 'முதுநீர்த்திகிரி' என்கின்றார் ஐயங்கார். (முதுநீர் - கடல்நீர்) இந்த சக்கரத்தைப் போலவே கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று பருவச் சக்ரங்களும் பிறப்பு- இறப்பு- என்ற சக்கரங்களும் சுழன்று வருகின்றன.

## கோலத்திகிரி

இது கண்ணுக்கு தெரியாதச் சக்கரம். இதுவே ஞாலத்திகிரி, முதுநீர்த் திகிரி முதலியவற்றை இயக்கும் ஓர் அற்புதத் திகிரி. இதுவே மூலத்திகிரி ஒரு கடிகாரத்தில் உள்ள பல சக்கரங்களை வில்லோடு இணைத்துக் கொண்டும் சுற்றிக் கொண்டிருக்கும் மூலச் சக்கரம் போன்றது இது. கண்ணுக்குப் புலப்படாத இந்த காலத்திகிரி தான் இந்த உலகத்தில் பல்வேறு அற்பதங்களை நிகழ்த்துகின்றது. மிகப்பெரிய ஆலமரம் அடையாற்றில் உள்ளது போன்றது - ஒன்றைக் காண்கின்றோம். அதன் வயது 250 ஆண்டுகள் இருக்கலாம். 250 ஆண்டுகளுக்கு முன் அது ஒரு சிறு ஆல விதையில் ஒளிந்து கொண்டிருந்தது. காலச்சக்கரம் சுழன்று, சுழன்று விதையில் ஒளிந்து கொணடிருந்த ஆலமரத்தை மெல்ல மெல்ல இழுத்து வெளிக்கொணர்ந்து விட்டது. இந்த அகிலத்தில் நடைபெறும் நிகழச்சிகள் யாவும் காலச்சக்கரத்தின் சுழற்சியால் வெளிவந்ததே. ஆகவே நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டும் சூத்திரங்களாக இருப்பது காலமென்ற திகிரி எனலாம் இதனையே சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

*"ஞாலத்திகிரி முதுநீர்த் திகிரி*
*நடத்தும் அந்தக்*
*காலத்திகிரி முதலான யாவும்".*

என்று பாடினார்.

## நீலத்திகிரி

இவர் திருவரங்கத்தில் பள்ளிக் கொண்டிருக்கும் பெருமாள் பாற்கடலைக் கடந்த போது ஒரு நீலமலையை மத்தாக வைத்துக்

கடைந்தார் அவர். அந்த மத்தைப் போல நீலமேனி உடையவர் நம் அரங்கர். அரிதுயில் கொண்டிருக்கும் அரங்கர் ஒரு நியதி கோலத்தைப் போட வேண்டும் அதற்கு அடங்கிப் பேரண்ட உருளைகள் உருள வேண்டும் என்று தீர்மானித்தார்.

## கோலத்திகிரி

இஃது அரங்கர் கையிலிருக்கும் சுதர்சனம் என்னும் அழகிய சக்கரம். அரவாழி ஆழ்வான் என்றும் இதனைச் சொல்லுவர். இஃது அவர் கையை விட்டுப் பாய்ந்த மரம் நடுபவர் முதலில் போடும் கோலப்புள்ளிகள் போல உலகப் படைப்புக் காலத்தில் புள்ளிகள் போட்டது. அந்தக் கோலத்தில் காலத்திகிரி பயபக்தியோடு உருண்டு சென்றது. காலத்திகிரியினின்றும் பிறந்து கடிகாரச் சக்கரங்கள் போல் அதோடு இணைந்து நிற்கும் ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி முதலிய திகிரிகளெல்லாம் நியதி தவறாமல் தொடர்ந்து சுழன்றன. இத்திகிரி தொடர்களைக் கற்பனையில் கண்டு உள்ளம் பூரிக்கின்றார் கவி. அந்தப் பூரிப்பில் தோன்றியதுதான் மேற்குறிப்பிட்ட கவிதை. சுர்தல் அறக்கொள்கை அய்யங்கார் சிந்தையில் - சிந்தனையில் ஓர் அற்புதக் கவிதையாக மலர்ந்த விட்டதைக் கண்டு வியப்பெய்துகின்றோம். அதைப் படித்து சுவைக்கின்றோம். மனத்தில் நினைத்து அசை போடுகின்றோம். இதுவே உலகப் படைப்பின் முறைமையைக் காட்டும் அற்புதக் கவிதையாகத் திகழ்கின்றது.

அண்டங்களின் ஒழுங்குமுறையை பாரதியார் முகர்ந்து தமது கவிதையில் வெளிப்படுத்துவதையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

*"விண்டு ரைக்க அரிய அரிதாய்*
*விரிந்த வான வெளியென - நின்றனை*
*அண்ட கோடிகள் வானில் அமைத்ததனை*
*அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை*
*மண்டலத்தை அணுஅணு வாக்கினால்*
*வருவ தெத்தனை அத்தனை யோசனை*
*கொண்ட தூரம் அவற்றிடை வைததனை*
*கோல மேநினைக் காளியென் றேத்துவேன்"*

அண்டங்களுக்கு இடையேயுள்ள தொலைவுகளையும் கற்பனையாகக் கணக்கிட்டுக் காட்டுகின்றார் பாரதியார். புறமுக ஆற்றல் என்ற இறைவனது ஆணையினால் இக்கோள்கள் ஒன்றையொன்று விலகாமல் சுற்றிக் கொண்டு உள்ளன. ஒவ்வொரு கோள்களுக்கு இடையிலும் ஆயிரக்கணக்கான மைல்கள் இடைவெளி இருப்பினும் அவ்விடைவெளியில் எறி மீன்களையும், வால்மீன்களையும் காண முடிகிறது என்று ந.சுப்புரெட்டியார் தன்னுடைய ஆழ்ந்த விண்வெளி ஆய்வினை விளக்குகின்றார்.

இதே செய்தியைத் திரிகூடராசப்பக் கவிராயர் ஒரு பம்பரம் கயிற்றின் துணையின்றி எவ்வாறு சுற்றுகின்றதோ அதைப் போல



இந்த அண்டங்கள் சுழலுகின்றன. அதனை குற்றாலத்து குறைகழல் ஈசன் செய்து கொண்டிருக்கிறார் என்று ஒப்பிட்டுக் காட்டுவதைக் காணமுடிகிறது.

*"சாட்டி நிற்கும் அண்டமெலாம்*
*சாட்டையிலாப் பம்பரம்போல்*
*ஆட்டு விக்கும் குற்றாலத்து*
*அண்ணலார்"*

## முடிவுரை

வைணவ பிரபந்தமாகிய அஷ்டபிரபந்த பாசுரத்தில் இருந்து ஓர் பாடலை அண்டங்களின் முறைமைகளைக் கூறுவதாக மிக நீண்ட விளக்கத்தைப் பேராசிரியர் ந. சுப்புரெட்டியர் அளித்திருப்பது வியக்கத்தக்கதாய் உள்ளது. ஞாலத்திகிரி, முதுநீர்த்திகிரி, காலத்திகிரி, நீலத்திகிரி, கோலத்திகிரி என பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் மிகச் சுருக்கமாக அண்டங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள நிலையில் பேராசிரியர் மிக நீண்ட விளக்கங்களை அறிவியல் பார்வையுடன் அளித்திருப்பது அவரது அறிவியல் சிந்தனைக்குச் சான்றாக விளங்குகிறது.

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-IV

பண்பாடென்பது அஃறிணை உயர்திணை ஆகிய இரண்டிற்கும் பொதுவானது என்றாலும், வெவ்வேறான தன்மையுடையது. பக்குவப்பட்ட மன நிலையுடன் செய்யும் பயன் தரக்கூடிய செயல்கள்யாவும் பண்பாட்டோடு தொடர்புடையது. சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரையிலும் மக்கள் பண்பாடு மலர்ந்து மணம் வீசுவதைக் காணலாம். பழந்தமிழர் தூவிய பண்பாட்டு விதைகள் இன்று விருட்சமாகி நிழல் கொடுப்பினும், அந்நியக் கலாச்சார நுழைவால் அவ்வப்போது இலையுதிர் காலத்தையும் சந்திக்காமலில்லை. உலக மக்கள் பண்பாட்டில் தமிழர் பண்பாடு உயர்ந்தது; உன்னதமானது; போற்றுதலுக்குரியது.

-செம்மூதாய் பதிப்பகம்

செம்மூதாய் பதிப்பகம்
A3, அபிராமி நிவாஸ்
நெ. 43, வால்மீகித் தெரு
கிழக்குத் தாம்பரம்
சென்னை 600 059
கைபேசி : 94442 00369
semmoodhai@gmail.com

ISBN:978-93-81006-72-6

₹.300

தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-IV

தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகளும் மாற்றங்களும்

தொகுதி-IV



பதிப்பாசிரியர்
முனைவர் க. முருகேசன்
முனைவர் கிருஷ்ணன் மணியம்
முனைவர் சு. சதாசிவம்

# 434. காக்கையும் பண்பாடும்



முனைவர் இரா. ஜெகதீசன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர்.

'பண்பாடு' என்ற சொல் கலாச்சாரம் என்ற சொல்லில் இருந்தும், 'கலாச்சாரம்' என்ற சொல் Culture என்ற ஆங்கிலச் சொல்லில் இருந்தும் வந்ததாகும். தற்பொது பண்பாடு என்ற சொல்லையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர். கலாச்சாரம் என்ற சொல் வடமொழிச்சொல் Culture என்ற ஆங்கிலச்சொல் உணர்த்துகின்ற பொருளை முழுமையாகத் தமிழில் சுட்டுவதாக இல்லை. கலை- சாரம் என்பது கலைகளின் சாரம் என்றாகி விடுகிறது. பண்பாடு என்ற சொல்லே இணைமொழிப்பெயர்ப்புச் சொல்லாகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இச்சொல் 1937ஆம் ஆண்டில் இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரால் தமிழுக்குக் கொண்டுவரப்பட்ட சொல் என்பர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. (தமிழர் பண்பாடு, ப.14). பண்பாடு என்ற சொல் வினைச்சொல்லாக வரும்போது பண்படுத்துதல் என்றும்: பெயர்ச்சொல்லாக வரும்போது பண்பாடு என்றும் பெறப்படுகிறது. இவற்றின் வேர்ச்சொல்லாகப் பண்பு என்ற சொல் வந்துள்ளது எனப் பாவாணர் குறிப்பிடுகின்றார் ச.தமிழ்ச்செல்வன். (எது கலாச்சாரம்,ப.2).

பண்பு என்பதற்குப் பின்வரும் கலித்தொகைப் பாடல்வரி நல்லொழுக்கத்துடன் இருத்தலே பண்பு என்ற விளக்கத்தை அளிக்கின்றது.

*பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல் (கலித்.133)*

இதன்வழி நன்னெறியின் பாற்பட்ட அனைத்து இயக்கங்களின் வெளிப்பாடுகள், நாம் வாழ்கின்ற சமூகத்தின் போக்குகள், சட்டதிட்டங்கள், பழக்கவழக்கங்கள், செந்நெறிகள் போன்ற பல்வேறு நன்னெறிகளை அறிந்து அதன்படி ஒழுகுதலே பண்பு என்று கூறலாம்.

மக்களின் வாழ்க்கை பண்புடையதாக அமையத் திருவள்ளுவர், பண்புடைமை என்னும் ஒரு தனி அதிகாரத்தை வகுத்துப் பண்பாவது, நற்குணம், நல்லொழுக்கம் என்றும் இதனைப் பெற்றுள்ளவர் யாவரும் உயர்வு பெறுவர் என்றும் விளக்கம் தருகின்றார். பிறர்க்கு எளிமையாகக் காட்சி தந்து உதவுதலே பண்புடைமை என்றும் வள்ளுவர் இயம்புகின்றார்.

*எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு (குறள்.991)*

பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம் எனச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி(தொகுதி,4.ப.43) பண்பிற்கு விளக்கம் அளிக்கிறது. வாழ்வில் பலப்பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் பண்பாடு என்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சில் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும் என்பர் தெ.பொ.மீ. (தமிழும் பிறபண்பாடும், ப.9).



பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், அது எல்லாப் பொருட்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவது என்பார் பாவாணர்.(பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப.6).

பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளபோதும், ஒரு சமுதாயத்தின் பழக்கத்தைத் தொடக்க நிலையாகவும், வழக்கத்தை வளர்நிலையாகவும் மரபினைப் பண்பாட்டின் முதிர்நிலையாகவும் கொள்ளலாம். பழக்கம் வழக்கமாகும்போது மரபு பிறக்கின்றது. காலம் காலமாகச் செய்யப்படும் பல முறைமைகளை மரபுகள் என்கிறோம். தனிமனிதப் பழக்கம் காலப்போக்கில் சமுதாயப் பழக்கங்களாக உருப்பெற்றுப் பண்பாடாக வளர்ச்சியடைகின்றது எனலாம்.

இத்தகைய பண்பாடுகள் பல சங்க இலக்கியங்களில் இன்றைக்கும் நிலைத்து நிற்கின்றன. அவற்றுள், ஒன்று காக்கைக்கு உணவிடும் பண்பாடு. இப்பண்பாடு இலக்கியங்களில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

உண்பதற்குமுன் காக்கைக்குச் சோறிடுவது தமிழரின் பண்டை வழக்கமாக, பண்பாடாக இருந்துள்ளது. இவ்வழக்கத்தை இன்றும் பின்பற்றி வருகின்றனர். விரத நாட்களில் காக்கைக்குச் சோறிட்ட பிறகுதான் உணவு அருந்துவது என்ற பண்பாட்டை இன்றும் பலர் பின்பற்றி வருகின்றனர். இத்தகைய பண்பாட்டை பழக்கத்தை ஓரிரு சங்க இலக்கியப் பாடல்கள்வழிக் காணலாம்.

பண்டைக்காலத்தில் காக்கைக்கு உணவு வழங்கும்போது நிணம் கலந்த உணவினை வழங்குவதை ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளனர். "வளைந்த தென்னை மரங்கள் நிறைந்த குளிர்ந்த சோலைகளில் வாழும்மக்கள் இரத்தம்கலந்த சோற்றைக் காக்கைக்குப் பலியாகக் கொடுத்தனர். அதனைக் கருங்காக்கைகள் உண்டன". இதனைத்,

*தாழ்தாழைத் தண்தண்டலைக் கூடுகெழீஇய குடிவயினான்*
*செஞ்சோற்ற பலமாந்திய கருங்காக்கை (பொருநர்.181-184)*

என்னும் பொருநராற்றுப்படை அடிகள் தமிழரின் பண்படைய வழக்கத்தை எடுத்துக் காட்டுகின்றன. இதனால், பண்டைத் தமிழர்கள் காக்கைக்கு உணவிடும்போது இரத்தம் கலந்த உணவை அளித்துள்ளனர் என்பதும், இந்த வழக்கமே பின்னர் பண்பாடாக மாறி சிறுதெய்வ வழிபாட்டின்போது அவிஉணவு காக்கைகளுக்கு அளிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

மேலும், காட்டில் வாழும் இடையர்கள் பசுநெய்யுடன் வெண்ணெல் அரிசியால் செய்த வெண்ணிறச் சோற்றைப் பாத்திரங்களில் ஏந்திக்காக்கைக்குக் கொடுத்து உள்ளதையும் பின்வரும் குறுந்தொகைப் பாடல்வழி அறியமுடிகிறது.

*பல்ஆ பயந்த நெய்யில் தொண்டி*
*முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு*
*எழுகலத் தேத்தினும் (குறுந்.210:2-4)*

இப்பாடலால், நெய்கலந்த சோறும் காக்கைக்கு அளிக்கப்பட்ட செய்தியை அறிய முடிகிறது.

காகம் கரைந்தால், அன்றைய தினம் புதிய விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை பண்டைத் தமிழர்களிடம் இருந்து வந்துள்ளதைக் காண முடிகிறது. இத்தகைய நம்பிக்கை பண்டைத் தமிழர் காலம் முதல்

இன்றும் இருந்து வருவதைக் காணலாம்.

*விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே (குறுந்.210:6)*

என்ற தொடரைப் பாடிய புலவர் நச்செள்ளையார். விருந்தினர் வருவதைக் குறித்து நன்னிமித்தமாகக் காக்கை கரைவதைப் பாராட்டிப் பாடியதால், இவரைக் 'காக்கை பாடினியார்' என்ற சிறப்புப் பெயருடன் அழைக்கின்றோம்.

ஐங்குறுநூற்றுத் தலைவியின் தாய் ஒருத்தி, "நல்ல இறகினை உடைய சிறுகருங் காக்கையே... உனது சுற்றத்தோடு நீயும் உண்ணும் பொருட்டுப் பசிய நிணமாகிய உணவைப் பொன்னால் செய்யப்பெற்ற பாத்திரத்தில் வைத்துத் தருவேன். கொடிய சினம் பொருந்திய வேலை கையில் உடைய காளையோடு, உடன்போக்கு சென்ற என்னுடைய மகளை மீண்டும் வரும்வண்ணம் கரைவாயாக" என்று நம்பிக்கையோடு கூறுகின்றாள். இதனால், காகம் கரைவதால் உறவினர் வருவர் என்ற நம்பிக்கையும், காக்கையுடன் தொடர்புடைய பண்பாடும் உறுதிப்படுத்தப்படுகிறது. இப்பாடல் இதோ...

*மறுஇல் தூவிச் சிறுகருங் காக்கை*
*அன்புடைய மரபினின் கிளையோ டாரப்*
*பச்சூன் பெய்த பைந்நிணை வல்சி*
*பொலம்புனை கலத்திற் குருகுவென்*
*மாதோ வெஞ்சின விறல்வேற் காளையொடு*
*அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே (ஐங். 391)*

மேலும், காக்கைக்கு அடைமொழி கொடுத்து இலக்கியங்கள் பகர்ந்துள்ளன. அவை வருமாறு:

*சிறுவெண் காக்கை (நற்.31:2. 345:4, 358,9),*
*பகங்காக்கை (நற்.258:8),*
*பலிஉண்காக்கை(நற்.281:1),*
*தொகுவிரற் காக்கை(நற்.343:5),*
*நெடுங்கண்காக்கைக் கூர்வாய்ப் பேடை(நற்.367:1),*
*சிறுவெண் காக்கை(ஐங்.17),*
*கருங்கட்காக்கை(ஐங்.32:4),*
*சிறுகருங்காக்கை(ஐங்.41),*
*கடற்சிறுகாக்கை(அகநா.170:10),*
*மணிவாய்க்காக்கை(அகநா.327:15),*
*வாய்வன்காக்கை(புற.238:3: 362:17),*
*கானக்காக்கை(புற.342:1),*
*கருங்கண்காக்கை(பதிற்.30:30)*

எனக் காக்கைக்கு அடைமொழி கொடுத்து இலக்கியங்கள் இயம்பியுள்ளதைக் காணமுடிகிறது. பண்பாடு பற்றிப் பல அறிஞர்கள் பல கருத்துக்களை மொழிந்தாலும், பண்பாடு என்ற சொல் பிறமொழித் தழுவலாகவே இருந்து வருகிறது என்பதும், காக்கைக்கு உணவிடுதல் என்பது பண்டைக் காலத்தில் வழக்கமாக இருந்து, பின்னர் பண்பாடாக மாறி இன்றுவரை தொடர்ந்து வழக்கில் இருந்து வருகின்றது என்பதும் இக்கட்டுரைவழி அறியலாகும் செய்திகள். காக்கைக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள தொடர்பினை உளவியல்வழி அணுகினால் பல்வேறு செய்திகள் நமக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.



# 435. பெரிய புராணத்தில் குடும்பப் பண்பாடு

**முனைவர் வேல் கார்த்திகேயன்**
*தமிழ்ப் பேராசிரியர்*
*தாகூர் கலைக் கல்லூரி*
*புதுச்சேரி 605 008.*

சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாந் திருமுறையாக விளங்குவது திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம். இதனை இயற்றியவர் அருண்மொழித் தேவர் எனும் சேக்கிழார் ஆவார். சிவனை வணங்கியும் தொண்டுசெய்தும் வீடுபேறு பெற்ற அடியவர்களின் சிறப்பினை உலகுக்கு எடுத்துக் கூறும் ஞானப் பெட்டகமாகத் திகழ்கின்ற நூல் பெரிய புராணம் எனில் மிகையாகாது. சமய நெறியில் நின்று முத்திப் பேறு வழங்குவதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் நல்லிணக்கம். முன்னேற்றம் மேம்பாடு முதலான பல செய்திகளையும் வழங்குவதில் முனைப்புடன் இந்நூல் திகழ்கின்றது. குறிப்பாக இந்நூலின்கண் காணலாகும் தனிமனிதம் மற்றும் சமுதாயநிறுவனம் செயல்படக் காரணமாக இருக்கும் குடும்பம் பற்றிய பண்பாட்டுச் சிந்தனையை ஆய்ந்து வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## குடும்பம்

குடும்பம் என்பது சமுதாய அமைப்பின் அடிப்படை அங்கமாகும். பால் சம்பந்தமாகவோ, விருந்தின் காரணமாகவோ இணைந்து வாழத் தொடங்கும் குழுவே குடும்பம் எனப்படுகிறது. சமூக அமைப்பில் மிகப்பெரிய இடத்தைப்பெறும் நிறுவனமான குடும்பம் என்பது சொத்தைப் பாதுகாக்க ஏற்பட்டது என்று சமூகவியலாரும் மார்க்கிய வாதிகளும் கூறுகிறார்கள். ஒரு சமுதாயத்தின் பண்பாடுகளும் மரபுகளும் மதக் கோட்பாடுகளும் காப்பாற்றப்படக் கூடிய களமாகவும் குடும்பம் திகழ்கிறது குடும்பம் சமூகத்தின் மிகச்சிறிய, ஆனால் அதிநெருக்கமான குழுவாகும். இங்குதான் மனித வர்க்கத்தினுடைய ஒற்றுமை, பாசம் போன்ற உன்னத அபிலாஷைகளும், தேவைகளும் முழுமைபெறுகின்றன என்பது சமூகவியலாரின் சிந்தனையாகும். இச்சிந்தனைகள் யாவும் பெரிய புராணத்தில் இடம்பெறும் அடியவர்களின் இல்லத்துநிகழ்ச்சிகள் வெளிப்படுத்துவனவாகும். சான்றாக இளையான்குடி மாற நாயனார், அப்பூதி யடிகள் காரைக்காலம்மையார் முதலானவர்களின் வாழ்வியலைக் கூறலாம்.

## திருமணம்

குடும்பம் என்ற கோப்பை ஏற்படுத்துவதற்கு மூலகாரணமாக விளங்குவது திருமணம்தான். இவ்வகையில் பண்டைத்தமிழரது திருமண முறைகள் சிறப்பாக விளங்கியிருந்தன. . மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சடங்கின்மூலம் ஆணும் பெண்ணும் புதிய குடும்பத்தை உருவாக்கிக் கொள்ள நிறுவப்பட்ட ஒருவினையே மணம் ஆகும் என்பார் ஜெ. நாராயணன். (சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் ப.99 ). பெரிய புராணத்துள் பல்வேறு வகைப்பட்ட திருமணங்கள் இடம் பெறுகின்றன. களவுமணம். கற்பு மணம் பலதார மணம், கலப்பு மணம் ஆகியவைகள்

இந்நூலில் இருநூற்றைம்பது இலக்கிய ஆளுமைகள் தங்கள் பங்களிப்பைப் பதிவு செய்துள்ளனர். சங்ககாலம் தொட்டு தற்காலம் வரையிலான இலக்கியப் படைப்பாளிகளின் ஆளுமைத்திறன்களை இந்நூல் முன்னிறுத்து கிறது. இத்தகைய பன்னாட்டளவிலான கருத் தரங்கம் வாயிலாக நம் மொழி யையும், அதன் பாலுள இலக்கியங்களையும், அதில் தோய்ந்து திளைத்த சான்றோர் பெருமக்களையும் நினைவு கூர்ந்து போற்ற முடிந்திருக்கிறது. கலாச்சார சிதைவில் சிக் குண்டுவிட்ட இன்றய தமிழகத்தில் இது போன்ற கருத்தரங்குகள் இன்று தேவையாகிறது.

- பதிப்பகத்தார்

செம்மூதாய் பதிப்பகம்
எண் 17. தாகூர்தெரு
எம்.எம்.டி.ஏ.நகர்
சிட்லபாக்கம்
சென்னை 600 064
கைபேசி : 94442 00369
semoodhai@gmail.com

ISBN 978-93-81006-56-6

Rs. 500

# தமிழிலக்கியங்களில் பன்முக ஆளுமை



பதிப்பாசிரியர்
முனைவர் பா. வேலம்மாள்
முனைவர் கே. கண்ணாத்தாள்
முனைவர் சோ. முத்தமிழ்ச் செல்வன்
முனைவர் சு.சதாசிவம்

**முடிபு**

உயிருக்கு ஊறுவிளைவிக்கும் தமிழர் தம் வீர விளையாட்டுகள் நீதி இலக்கியங்களில் சுட்டப்படவில்லை.

உயிர் வதையாகக் கருதப்படும் வேதனை தரும் பறவை, விலங்குப் போர் விளையாட்டுக்களை அந்நூல்கள் போற்றவில்லை.

போர்ச்சூழல் மிகுந்திருந்த அக்காலத்து விரைந்து செல்ல குதிரையேற்றம் குறிப்பிடத்தக்க விளையாட்டாகவும் பயிற்சியாகவும் போற்றப்பட்டுள்ளதை அற இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

பொழுது போக்கு விளையாட்டாகவும், பந்தய விளையாட்டாகவும் கருதப்படும் சூது பதினெண் கீழ்கணக்கு நூல்களில் தீமை விளைவிப்பதாகக் கருதி வன்மையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அக்காலத்தில் சூது பலராலும் விரும்பி விளையாடப்பட்டுள்ளது என்பதை எதிர்மறை நோக்கில் அறியமுடிகின்றது.

திருவள்ளுவர் மக்களுக்குத் சூதின் தீமையை உணர்த்த அதிகாரமே படைத்துள்ளார்.

**முனைவர் இரா. ஜெகதீசன்**
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு, வேலூர் - 632 115.*

# 245. மாமூலனாரின் ஆளுமைத் தன்மை

அகநானூற்றிலுள்ள நானூறு பாடல்களுள் செம்பாதி பாலைத் திணைப் பாடல்கள் தாம். அந்த இருநூறு பாலைத்திணைப் பாடல்களுள் மாமூலனார் பாடியவை இருபத்து ஏழு பாடல்களாகும்.

சங்கப்பாடல்களுள் மாமூலனார் பாடியனவாக நமக்குக் கிடைத்திருப்பவை முப்பது பாடல்கள். அவற்றுள் குறுந்தொகையில் உள்ள ஒரு பாலைத் திணைப் பாடலும், நற்றிணையில் உள்ள ஒரு பாலைத் திணைப்பாடலும், ஒரு குறிஞ்சித் திணைப்பாடலும் அடங்கும். ஆக, அவர் பாடியனவாகக் கிடைத்துள்ள முப்பது பாடல்களுள் இருபத்து ஒன்பது பாடல்கள் பாலையொழுக்கப் பாடல்களாகவே உள்ளன.

அகநானூற்றிலுள்ள இருபத்தேழு பாடல்களுள் தலைமகன் கூற்றாக அமைந்துள்ள பாடல்களும், தலைமகளுக்குத் தோழி கூற்றாக அமைந்துள்ள பாடல்களும், தாய் கூற்றாக அமைந்துள்ள பாடல்களுமாய் உள்ளன. தலைமகன் கூற்றாக அமைந்துள்ள பன்னிரெண்டு பாடல்களுள் இரண்டு பாடல்கள் தோழி கூற்றாகவும் கொள்ளுமாறு உள்ளன. தாய் கூற்றுப் பாடலாக அமைதுள்ளவை இரண்டு பாடல்கள்தாம். அவை நற்றாய் கூற்றுப் பாடல்களா? செவிலித்தாய் கூற்றுப் பாடல்களா? என வினா எழலாம். தொல்காப்பிய பொருளதிகாரப் போக்கில் அப்பாடற் பொருள்களை நோக்கினால், அப்பாடல் இரண்டையும் செவிலி கூற்றுப் பாடல்களாகக் கொள்வதே பொருத்தமாக இருக்கும் எனலாம்.

பாலையொழுக்கப் பாடல்களைச் சங்ககாலப் புலவர்கள் பலரும் பாடியிருப்பதை நாம் அறிவோம். ஓதலாந்தையார், பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலான பல புலவர்கள் பாலையொழுக்கப் பாடல்களைப் பாடியிருப்பினும், மாமூலனார் பாடல்களுக்கென ஒரு தனிச்சிறப்பு உண்டு எனலாம். வாழ்வியல் தத்துவங்களை ஊடும்பாவுமாக இடையிடையே நுழைய விட்டுப் பாலைப் பாடிய பெருங்கடுங்கோ பாடியிருப்பினும், மாமூலனார் பாலையொழுக்கப்பாடல்களைத் தமக்கென ஒரு முறை வகுத்துக் கொண்டு பாடியிருப்பதைக் கற்றோர் உணர முடிகிறது. பாலையொழுக்கமாய் பிரிவினைப் பாடும் பாடல்களில் பெரும்பாலும் வரலாற்றுக் குறிப்புகளையும், அரிய செய்திகளையும் பாடல்களுள் இடம்பெறுமாறு அவர் அமைத்திருக்கும் அழகு, படிப்போரைச் சிந்திக்க வைக்கிறது. பண்டைத் தமிழகத்தின் வரலாற்றுக் குறிப்புகள் பலவற்றை அவர்தம் பாடல்களில் பதிவு செய்துவிட்டுப் போயுள்ளார். அவர் பதிவு செய்து வைத்துள்ள வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழக வரலாற்றை எழுதுவோர்க்கு மாமூலனார் தம் பாடல்களில் பதிவு செய்துள்ள வரலாற்றுக் குறிப்புகள் பயன்படும் என்ற நோக்கில் எனது பேராசிரியர் இரா.கு.நாகு அவர்கள் தந்த குறிப்புகளின் அடிப்படையில் அகநானூற்றில் காணலாம் மாமூலனார் பாடல்கள் வழிக்காணலாகும் வரலாற்றுக் குறிப்புகள் இக்கட்டுரையில் தரப் பெற்றுள்ளன.

பண்டைக் காலத் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பெற்றது என்பதைப் பல புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மாமூலனார் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பெற்று வந்ததை தமிழ்கெழு மூவர் காக்கும் (அக.31,

34) உள்ள நிலப்பகுதி என்கிறார். மேலும் தமிழ்நாட்டின் எல்லையைத் தாண்டியுள்ள நிலப்பகுதியை அவர் வேற்றுமொழி வழங்கும் நிலம் என்று குறிப்பிட்டதோடு அமையாது, அந்த வேற்றுமொழி வழங்கும் நிலப்பகுதியையும் தமிழ் மன்னர்கள் தம்முடைய ஆளுகைக்கு உட்படுத்தி வைத்திருந்தனர் என்ற தகவலையும் மாமூலனார் பதிவு செய்துள்ளார். அம்மூவேந்தர்களையும்,

*"வென்றியோடு*
*வில்லலைத் தண்ணும் வல்லாண் வாழ்க்கை" (அக.நா.31:12-13)*

உடையவர்கள் எனக் காட்டி, அவர்கள் மொழிபெயர்த்தேய்துள்ள பன்மலைகளடங்கிய நிலப்பகுதியை தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி இருந்தனர் என்பதை,

*"தமிழ்கெழு மூவர் காக்கும்*
*மொழிபெயர் தேஎத்த பன்மலை" (அகநா.31:14-15)*

என்று கூறியுள்ளார்.பாண்டியனுடைய வீரத்தையும், அவன் நாட்டிலுள்ள கொற்கைப் பதியின் சிறப்பையும், அங்கு முத்துக்களையும் வலம்புரிச் சங்குகளையும் சொரிந்து பரதவர் குலப்பெண்கள் அந்திப் போதில் தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்தியதையும் மாமூலனார் அழகாகச் சித்தரித்துள்ளார். பாண்டிய மன்னனிடம் போர்ப்பயிற்சி பெற்ற யானைகள் இருந்தமை கூறப்பெற்றுள்ளன. பாண்டிய மன்னன் புகழுடன் வாழ்ந்தமை கூறப்பெற்றுள்ளது. கொற்கைத் துறைமுகத்தில் தழையுடை அணிந்த பரதவப் பெண்கள் அந்திப்போதில் அங்குள்ள தெய்வத்தின் முன்பு முத்துக்களையும் சங்குகளையும் சொரிந்து வழிபட்ட சமுதாய வரலாறும் சொல்லப் பெற்றுள்ளது. (அகநா. 201: 1- 8)

பாண்டியர் சிறப்பைக் கூறிய மாமூலனார், சோழர்கள் பற்றிய தகவல்களையும் தந்துள்ளார். சோழர்கள் நாட்டை, நல்நாடு எனக் கூறுவதோடு அமையாது அந்நாட்டிலுள்ள ஊர்களில் வெண்ணெல் விளையும் என்று சிறப்பித்துள்ளார். (அகநா.201:12)

சோழ மன்னர்களுள் புகழ் வாய்ந்த மன்னனாகக் கரிகால் வளவன் விளங்கியதை நாம் அறிவோம். அக்கரிகால் வளவன் சேரமன்னனோடு போர் செய்து வெற்றி பெற்ற வரலாற்றைக் கூறியதோடு அமையாது, அக்கரிகால் வளவனிடம் சேரலாதம் வெண்ணிப் பறந்தலையில் தோற்றுப் போனதையும் அச்சேரமன்னன் அப்போரில் புறப்புண் பட்டதையும், அப்புறப் புண் பட்டமைக்கு நாணிய அச்சேர மன்னன் வெண்ணிப் போர்க்களத்துக்கு அண்மையில் வடக்கிருந்து உயிர்நீத்த செய்தியையும் அவன் வடக்கிருந்து உயிர்நீத்ததைக் கேட்ட சான்றோர் பலர், அவன் வடக்கிருந்த இடத்திற்கு வந்து தாமும் அவன் பக்கத்தே அமர்ந்து உயிர்நீத்த தகவலையும் மாமூலனார் விளக்கமாகக் காட்டியுள்ளார். (அக.55:9-15) இத்தகைய குறிப்புகள் அன்றைய அரசியல் வரலாற்றைக் காட்டுவதோடு அமையாது அன்றுள்ள சமுதாய வரலாற்றையும் காட்டுவனவாக உள்ளன எனலாம்.

காடுகளில் திரியும் யானைகளைப் பிடித்து வந்து போர் முதலானவற்றிற்குப் பயன்படுத்தும் வழக்கம் முன்பு இருந்தமை புலனாகிறது. யானைகளை அகப்படுத்தும் வேட்டையைச் சோழ மன்னனாகிய எழினி வராமல் இருந்துவிட்டான். அதனால் எழினி மீது சினங் கொண்ட சோழ மன்னன், தன் படைத் தலைவனாகிய மத்தியை அனுப்பி, அந்த எழினிக்குப் புத்தி புகட்டி வருமாறு அனுப்ப, அச்சோழனால் அனுப்பப் பெற்ற மத்தி. அவ்வெழினியோடு போரிட்டு அவனைத் தோல்வியுறச் செய்து, தோற்ற



அவன் பல்லைப் பறித்து வந்து வெண்மணி எனும் ஊரினது வாயிற்கதவில் பதித்தான் என்பதும், அந்த வெற்றிக்கு அடையாளமாக ஆங்குள்ள நீர்த்துறையில் கல்நாட்டினான் என்பதும் மாமூலனார் பாடலால் அறிய வரும் செய்திகளாகும். (அகநா.211 : 9 - 17)

வெற்றிக்கு அடையமாகக் கல்நாட்டுதல், தோல்வியுற்ற மன்னனின் பல்லைப் பிடுங்கி வெற்றி பெற்றவன் கோட்டை மதில்களில் பதித்தல், யானையை அகப்படுத்தக் குழிதோண்டி, அக்குழிக்குள் அவை விழுந்த பின் அவற்றை அகப்படுத்திப் பயன்படுத்துதல் முதலான பலவகைச் சமுதாய நடைமுறைகள் அன்று இருந்தன என்பதையன்றோ இப்பாடல் காட்டுகிறது. இப்பாடல் மூலம் மத்தி என்ற படைத்தலைவன் பற்றிய குறிப்பும் அறிய வருகிறது. அவன் பரதவர் குடியைச் சார்ந்தவன் என்பதையும் அவன் கழாஅர் என்னும் ஊருக்கு உரியவன் என்பதையும் சங்ககாலப் பாடல் தெரிவிக்கிறது.

மூவேந்தர்களுள் சேர மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் மாமூலனார் பாடல்களில் மிகுதியாகவே உள்ளன எனலாம். அவர் உதியஞ்சேரல் என்னும் மன்னனின் வீரத்தையும் கொடைத் தன்மையையும் ஒரு சேரப் புகழ்ந்துரைப்பது போல,

*"நாடுகண் அகற்றிய உதயஞ் சேரன்*
*பாடிச் சென்ற பரிசிலர் போல" (அகநா.65 : 5 - 6)*

என்று பாடியுள்ளார். சங்ககாலப் புலவர்கள் சேரமன்னர்களைப் பாடும் பொழுது அவர்கள் படையுடன் கடலுக்குள் சென்று அங்குள்ள கடல் கொள்ளையர்களை அடக்கி, அவர்கள் காவல் மரத்தை வெட்டிக் கொண்டு வந்து, அக்காவல் மரத்தால் முரசு செய்தனர் என்றும், கடல் கொள்ளையர்களை ஒடுக்கிக் கடம் மரமறுத்ததோடு அமையாது இமயம் சென்று அங்குத் தங்கள் வில்இலச்சினை பொறித்து வந்துள்ளனர் என்றும் பாடியுள்ளமையை அறிகின்றோம். மாமூலனார் பாடல்களிலும் அச்செய்திகள் விளக்கமுற இடம்பெற்றுள்ளன. (அக.127 : 3-10, 347 : 3-6) மாமூலனார் பாடலில் சேரலாதனுடைய நன்னகர், மாந்தை என்றும் அவனோடு பகைகொள்ள விரும்பாத மாற்று மன்னர்கள் அவன் மாந்தை நகருக்கு வந்து, அவன் முற்றத்துள் பணிந்து நின்று திறை செலுத்துவர் என்றும் அவ்வாறு திறைப் பொருளாக வந்த நல்ல அணிகலன்களையும் பொற்பாவைகளையும் வயிரங்களோடு சேர்த்துக் குவித்து வைத்திருப்பர் என்றும், அச்செல்வப் பொருள்கள் எல்லாம் நிலத்தில் வீணே பரவிக் கிடக்கும் என்றும், அவ்வாறு கிடக்கும் நிதியம், ஆம்பல் என்னும் எண்ணிக்கை அளவில் பெருகிக் கிடக்கும் என்றும் கூறியுள்ளார்.

மாமூலனார் பாடலால் நாம் அறிய வருவன

1. கடம்பறுத்து வந்த மரத்தால் முரசு செய்தல் என்ற பழக்கம் இருந்தமை

2. ஆம்பல் என்னும் எண்ணிக்கை அளவுப் பெயர் அன்று வழக்கில் இருந்தமை (அம்பல் - ஒரு பேரெண்)

சேர மன்னர்கள் பெருஞ்சோறு அளித்துப் புரந்த வரலாறு சங்கப் பாடல்களிலும் உள்ளது. சங்கமருவிய கால இலக்கியமான சிலம்பிலும் உள்ளது. பெருஞ்சோறு பாரதப் போரில் அளித்ததாகப் புறநானூற்றிலும் சிலப்பதிகாரத்திலும் சொல்லப்படுகின்றது. ஆனால், மாமூலனார் பாடலில் துறக்கம் எய்திய முன்னோர்க்குப் பிண்டம் ஈதலாகிய கடன் ஆற்றியபோது உதியஞ்சேரல் பெருஞ்சோறு அளித்தான் என்று உள்ளது. அவன் அளித்த

பிண்டச்சோற்றை உண்பதற்குப் பேய்ச்சுற்றங்கள் பலவாகக் கூடி இருந்தன என்பதை மாமூலனார்,

*பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல*
*கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு (அகநா. 233 : 6 -10)*

எனப் பாடியுள்ளார். எனவே ஒரைவர் ஈரைம்பதினர்க்குச் சோறு உவந்தளித்த வரலாற்றினின்றும் இது வேறுபட்டது எனலாம்.

இவ்வாறு அகநானூற்றில் மாமூலனார் தாம் பாடிய இருபத்தேழு பாடல்களில் இருபத்தாறு பாடல்களில் வரலாற்றுக்குரிய குறிப்புகளை இடம்பெறச் செய்துள்ளார். அவர் பாடல்களில் வேளிர்களுள் ஒருவனான ஆவி பற்றிய தகவலும் அவன் ஆட்சிக்கு உட்பட்ட பழனி (பொதினி) குறித்த தகவலும் உள்ளன. கோசர் பற்றியும் துளுநாடு பற்றியும் நன்னன் பற்றியும், எவ்வி குறித்தும், அஞ்சி என்பான் பற்றியும், கண்ணன் எழினி என்பான் பற்றியும், அந்த எழினியை வென்ற மத்தி என்பான் பற்றியும் குறிப்புகள் உள்ளன. திதியன், அதியன், அள்ளன் எனப் பலரைப் பற்றிய குறிப்புகளும் உள்ளன. இவ்வாறு பலருடைய வரலாற்றுக் குறிப்புகள் மாமூலனார் பாடல்களில் இடம்பெற்றிருப்பதால் மாமூலனார் பாடல்களை வரலாற்றுக் களஞ்சியம் எனப் போற்றலாம் போல் தோன்றுகிறது.

**முனைவர் கேப்டன் திருமதி பா.வேலம்மாள்**
*இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்,*
*தமிழியற்புலம்,*
*ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி,*
*குற்றாலம் - 627 802.*

# 246. திருக்குற்றால யமக அந்தாதியில் அழகியல்

இலக்கியத்தை ஆராயும் முறைகளுள் அழகியல் திறனாய்வு சிறந்த இடத்தைப் பெறுகிறது. வாழ்வியலை முழுமையாகச் சித்தரிக்கின்ற இலக்கியங்கள் கூறும் கருத்துக்களை அழகோடு விளக்குவது இலக்கியத்தின் மரபாகும். இலக்கியத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது? எப்படி சொல்லப்பட்டிருக்கின்றது என்பதை அழகியல் திறனாய்வு மூலம் அறிந்து கொள்ளலாம். அழகியல் ஒரு இயக்கமாகவே வளர்ந்து வந்திருக்கின்றது. குற்றாலத்தையும், திருக்குற்றாலநாதரையும் மையமாகக் கொண்டு திரிகூடராசப்பக் கவிராயர் எண்ணற்ற இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவற்றுள் திருக்குற்றால யமக அந்தாதியில் காணலாகும் அழகியல் பற்றி காண்பதே இவண் நோக்கம்.

தமிழ் மரபில் தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்களில் அந்தாதியும் ஒன்று. அந்தாதி என்ற சொல்லானது அந்தம் + ஆதி என்ற இரண்டு சொற்களின் கூட்டால் உருவானது. ஒன்றின் முடிவு மற்றொன்றின் தொடக்கமாக அமைவது அந்தாதி. சிற்றிலக்கியங்களுள் எண்ணிக்கையாலும், பொருட்சிறப்பாலும் முதலிடம் பெற்றுத் திகழும் பெருமை இலக்கியத்திற்கு உண்டு. அந்தாதித் தோற்றத்திற்கான வித்து சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

*மண்டிணிந்த நிலனும்*
*நிலனேந்திய விசும்பும்*
*விசும்புதை வரு வளியும்*
*விளித்தலை இயதீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்தியற் கைபோல (புற.நா.பா.2)*

*செயலெழுதித் தீர்ந்த முகந் திங்களோ காணீர்*
*திங்களோ காணீர் திமில் வாழ்நர் சீறூர்க்கே (சில.கா.வரி:11)*

என்ற பாடலில் வரிகள் அந்தாதி முறையில் அமைந்துள்ளது.

சங்கம் மற்றும் மருவிய காலங்களில் தோன்றிய அந்தாதியின் தோற்றத்திற்கான கூறுகள், பக்தி மறுமலர்ச்சி கால இலக்கியங்களில்தான் முழுமை பெற்றது எனலாம். காரைக்காலம்மையாரின் 'அற்புதத்திருவந்தாதி' என்பதுகளில் முழுமையான முதல் அந்தாதி நூலாகும்.

அந்தாதியில் பலவகை அந்தாதிகள் காணப்படுகின்றன. அவற்றுள் யமக அந்தாதியும் ஒன்று. ஒரு பாடலின் நான்கடிகளிலும் முதற்சீர் ஒத்து வருமாறு கட்டளைக் கலித்துறையில், நூறு பாடல்கள் கொண்டு பாடப்படும் அந்தாதிகளில் யமக அந்தாதியும் ஒன்று.

உலக மக்களை சிற்றின்ப மயக்கத்திலிருந்து நீக்கி முக்தியை அடையச் செய்யவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு பாடப்பட்டுள்ள நூல் திருக்குற்றால யமக அந்தாதியாகும். இந்நூல் திருக்குற்றால குறவஞ்சி பாடிய திரிகூடராசப்ப கவிராயரால் பாடப்பட்டது. நான்கு காப்பு

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

கழிப்பவர்கள், பொருளை வாங்கிக் கொண்டு ஓடி விடுபவர்களும் சமுதாயத்தில் இல்லாமல் இல்லை. உலகியலை நன்கு உற்று நோக்கி உணர்ந்த நிலையில் பெருங்கடுங்கோ இப்பாடலைப் பாடியுள்ளார் என்பது தெரிகின்றது.

## பொருளால் ஆகும்

அறச் செயலை மேற்கொண்டு அருள் செய்யத்தக்கவர்களுக் குத் கொடுத்தாலும், மிகப்பெரிய பகைகளையெல்லாம் வென்று அச் செருக்கினால் தம்மைப் பணியாதவர்களை அழித்தலும் முற்பிறப்பில் இருவருக்கும் உண்டான காதலினால் இப்பிறப்பிலும் மனம் பொருத்துதல் அமர்ந்த கூட்டத்தினையும் தரவல்லது பொருளாகும் என்பதை.

*"அரிதாய அறன் எய்திஅருளியோர்க்கு அளித்தலும்*
*பேரிதாய ககைவென்று பேணாரைத் தெறுதலும்*
*புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்"*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

இப்பாடலில் பெருங்கருங்கோவின் "செருநர் செருக்கருக்கும்" இப்பொருளும் அறத்தின வழியில் சேர்க்கப் பட வேண்டும் என்ற கருத்து அறத்தின் மேன்மையை உணர்த்துவதாகும். மேலும்,

*"செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் சேய்வோர்க்கு*
*அப்பொருள்*
*இம்மையும் மறுமையும் பகையாவது பகையாவது*
*அறியாயோ?"*

என்றும் சுட்டுவது வாழ்வியல் சிந்தனைக்குச் சிறந்த சான்றாகும்.

## முடிவுரை

வாழ்வியல் சிந்தனைகள் பெருங்கடுங் கோவின் பாலைக் கலியிலும், நல்லந்துவனாரின் நெய்தற்கலியிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களில் பெரும்பாலானவை தோழி கூற்றுப் பாடல்கள் வரைவுகடாதல் செலவழுங்குவித்தல் ஆகிய துறைகளில் இடம் பெறுகின்றன. தலைவிக்குச்சார்பாகத் தலைவனை இடித்துரைத்து அறிவுரைகூறும் பாங்கில் அமைகின்றன. தோழியின் சொல்லாற்றலும், உலகியல் அனுபவமும் வியப்பிற்குரியன. பெருங்கடுங்கோ, நல்லந்துவனார், இவர்களின் பல் துறைப் பெருமைக்குச் சான்று பகர்வன வாழ்வியல் குறித்த இவர்களது கண்ணோட்டமே சிங்கப்புலவரில் குறிப்பிடத்தக்கவர்களாக இவர்களை நிலைநிறுத்துகிறது. கலித்தொகை நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கத்தில் "அறநூல் மறநூல், விலங்குநூல் முதலிய பல நூற்றறையிலும் வல்லவர்" எனப்பெருங்கடுங்கோவும், "உலகமாந்தர்க்கு நன்னெறி காட்டும் அறவுரைகள் இவர் பாடிய கவியுள் மலிந்து காணப்படுகின்றன" என நல்லந்துவனாரும் புகழப்படுகின்றனார். சங்க இலக்கியம் எனும் களஞ்சியத்தியலிருந்து அடுத்த காலகட்ட அறநூல்கள் தோன்றின என்பதற்கு மேற்கண்ட பகுதிகள் எடுத்துக்காட்டுகளாகும்.



# 114. அகநானூற்றில் பாலை நிலமும் மக்கள் வாழ்வியலும்

**முனைவர் இரா. ஜெகதீசன்**
*பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர் 632 115.*

செம்மொழி இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு தனிச் சிறப்பு உடையது. பழந்தமிழரின் அகவொழுக்க எண்ணங்களோடு மட்டுமல்லாது அவர்களின் பெருமையும் மறமும் ஒழுக்கமும் வலிமையும் பண்பும் இன்னபிற வாழ்வியல் நெறிகளும் காணக்கிடக்கின்றன. இவையெல்லாம் நம் முன்னோர் வாழ்வியலோடு ஒன்றி ஒளிர்ந்த செப்பத்தையும் பெருமிதத்தையும் நன்கு வெளிப்படுத்துகின்றன.

அகநானூற்றை 'நெடுந்தொகை' என்றும் அழைப்பர். அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர், தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

அகநானூற்றுப் பாடல்கள் தொகுக்கப்பட்டதைப் போல வேறு எந்த இலக்கியமும் தொகுக்கப் படவில்லை. தொகுப்பாசிரியர் மேற்கொண்ட இம்முயற்சி பெரிதும் பாராட்டிற்குரியது.

அகநானூற்றுப் பாடல்கள் அனைத்தும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1 முதல் 120 பாடல்கள் முடிய உள்ள பகுதி களிற்றியானைநிரை எனவும்

121 முதல் 300 முடிய உள்ள பாடல் பகுதியை மணிமிடைபவளம் எனவும்

301 முதல் 400 முடிய உள்ள பாடல் பகுதியை நித்திலக்கோவை எனவும்

மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர். மேலும்,

1, 3, 5, 7, 9, 11... என ஒற்றை எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் பாலைத்திணை

2, 8, 12, 18 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் குறிஞ்சித்திணை

4, 14, 24 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் முல்லைத்திணை

6, 16, 26 ... என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் மருதத்திணை

*10, 20, 30 ...* என்ற எண்களுடன் வரும் பாடல்கள் யாவும் நெய்தல்திணை

என முறையே எண்முறை திணைமுறை ஒழுங்கோடு தொகுக்கப்பெற்றுள்ளமை இந்நூலுக்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

## பாலை நிலம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைகளுக்கே இயல்பான நிலப் பாகுபாடுகள் உள்ளன. இதனால் நானிலம் என்பது உலகிற்கு ஒரு பெயராயிற்று. பாலைக்கு இயல்பான நிலம் இல்லை. என்றாலும், திரிநிலம் உண்டு என்றும், காடும் மலையும் கோடைத் தீ வெப்பத்தால் தத்தம் பசுமை இழந்த திரிநிலையே பாலை என்றும் சிலப்பதிகாரம் நன்கு தெளிவு படுத்தும்.

***"வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்***
***தானலந் திருகத் தன்மையில் குன்றி***
***முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து***
***நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்***
***பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"***
***(சிலப். 15:95-99)***

ஒரு காலவேற்றுமையால் இரண்டு திங்கள் இயல்பு மாறித் தோன்றும் நிலச் செயற்கையே பாலைத் திணைக்கு இடமாகும். எனினும், நிலையில்லா நீரில்லா நிலத்திலிருந்து நீடித்து நிலைக்கும் பன்னூறு பாலைப் பாடல்களை விளைவித்துக் கொண்ட சங்ககாலச் சொல்லேருழவர்களின் இலக்கிய உழவு அறிவின் கொழுமுனைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்பர் வ.சுப. மாணிக்கனார்.

மலைப்பகுதியும் காட்டுப்பகுதியும் கலந்த நிலப்பரப்பு வேனிற்காலக் கடுங்கதிர் வெம்மையால் கவினழிந்து வறண்டு கிடக்கும். அந்நிலப் பரப்பு வறண்டுகிடப்பதால் மக்கள் போக்குவரத்து குறைந்திருக்கும். அதனால், வழித்தடங்களும் தெளிவாக இராது. அவ்வாறான அருவழிகளையும் சூடேறிய பரற்கற்களையும் கொண்டதாக உள்ள வறண்ட நிலப்பரப்பே பாலை நிலம்எனச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

முல்லைநிலமும் குறிஞ்சிநிலமும் திரிந்து உருவான நிலம் பாலைநிலம் என்பதால், இவ்விரு நிலங்களின் பெயர்களே பாலைத்திணைப் பாடல்களில் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. பாலை நிலத்தை வெளிப்படையாக உணர்த்தவல்ல சுரம், சுரன், அத்தம் போன்ற சொற்கள் பாலைநில வழியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பாலை நிலத்தில் மட்டுமே ஏனைய நான்கு நிலங்களும் சுட்டப்பட்டுள்ளன. பாலை நிலத்தில் மட்டுமே அனைத்துப் பிறநான்கு நிலங்களும் பேசப்பட்டிருக்கின்றன. நால்வகை நிலங்களில்



முல்லைக்கும் குறிஞ்சிக்கும் பாலையாகத் திரிய மிகுதியான வாய்ப்பு இருக்கிறது. எனினும், பிற இருநிலமும் கோடைக்காலத்துக் கடுவெயிலில் பாலையாக மாற வாய்ப்பு பெற்றிருக்கின்றன. மேலும், பாலை நான்கு திணைகட்கும் பொது என்பதும் கருதத்தக்கது என்பர் கோவி. இராசகோபால்.

எனவே, நடுவுநிலைத் திணைக்குரிய நிலம் நால்வகை நிலத்தோடும் தொடர்புடையதாகவும் உள்ளது எனக்கொள்ளலாம். வறட்சியும் வெம்மையும் பகற்போதும் கொண்டு புனையப்படும் பின்புலமாகிய பாலை நான்கு நிலத்தோடும் கலந்து வருவதுபோல் புலனெறி வழக்கம் செய்யப் பெற்றுள்ள பாங்கினைச் சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பாக அகநானூற்றுப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன.

பிறர் இன்பம் கண்டு மகிழ்வதைவிட துன்பம் கண்டு உருகுவதே கலைஞர்களின் இயல்பு. இன்பத்தைப் பாடுவதைவிடத் துன்பத்தைப் பாடுவதில் புலவர்கள் முனைந்துள்ளனர். காதலைப் பாடும் புலவர்கள் காதலரின் இன்பநிலையைப் பாடுதல் குறைவாகவே உள்ளது. காதலரின் பிரிவாற்றாத் துயரத்தைப் பாடுதலே மிகுதியாக உள்ளது. பழந்தமிழ் இலக்கியத்தின் அகப்பொருள் பாட்டுகளிலும் பாலைத்திணைப் பாட்டுகளே மிகுதியாக இருத்தல் காணலாம். முல்லையிலும் ஒருவகை பிரிவே உள்ளது. மருதத்திலும் ஒருவகை பிரிவே உள்ளது. நெய்தல் திணையிலோ பிரிவாற்றாத் துயரம் எல்லையைக் கடந்து விடுகிறது. காதலரின் கூட்டத்தைப் பற்றிப் பாடுவதற்கு உரிய குறிஞ்சித் திணையிலும் காதலன் குறித்தபோது வராமையால் நேரும் ஏமாற்றமும் காதலியின் ஏக்கமும் காதலன் வழியில் உள்ள இடர்ப்பாடுகளும் மிக்குள்ளன என்று மு.வ. (இலக்கியத்திறன், பக்.91-92) கூறுவது முற்றிலும் உண்மையாகும்.

இதனால், பாலை என்ற நிலம் தொல்காப்பியர் காலத்தே உருவாகி உள்ளது என்றும், தொல்காப்பியரே பாலை நிலத்திற்கு முதல், கரு, உரிப்பொருள்கள் கூறிச் சென்றுள்ளதாலும், பாலை நிலத்தில் மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுத்தப் படுகிறது.

பாலைநில மக்களைப் பற்றிப் பல்வேறு இலக்கியங்களில் பல்வேறு புலவர்கள் பாலைத் திணைவழி எடுத்துக்கூறியுள்ளனர். எனினும், அகநானூற்றுப் பாடல்களின்வழி குறிப்பாகக் களிற்றியானைநிரையில் காணலாகும் பாலைப்பாடல்களில் அந்நில மக்களின் ஒழுகலாறுகளைக் காணமுற்படுகிறது இக்கட்டுரை.

## மக்கள் வாழ்வியல் நிலை

பாறைகளும் கொதிக்கும்படியாக நீரற்றுப்போன பசுஞ்சுனைகள், நீர்ப்பசையே அற்றுக் காய்ந்து போனதால், சொரிந்த நெல் பொரியாகப் போகும் அளவிற்குக் கொடிய வெம்மையினை உடையது. யாவரும் அவ்வழியாக வருபவர் இல்லாததால் வழிப்பறித்து உண்டு வாழ்பவரும் தமக்கு ஏதும் கிடைக்காததால் பசியினால் மடிந்து

அழகிழந்து போன சுரம் என்பதால், மக்கள் வழிப்பறி செய்து வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

*உகுநெல் பொரியும் வெம்மைய யாவரும்*
*வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடிய*
*சுரம்புல் லென்ற ஆற்ற*
(1:13-15)

அருஞ்சுரத்துக் கள்வர்கள் தொழுவங்களில் இருந்து பசுக்களைக் கவர்ந்து செல்ல, அவரைப் பின்தொடர்ந்து வெருட்டிச் சென்று போரிட்டு, அவற்றை மீட்க விரைவர். உரிமை உடையவர்கள் என்பதால், கள்வர்கள் பசுக்களைக் கவர்ந்து சென்றுள்ளதை அறியமுடிகிறது.

*ஆயிடை*
*அத்தக் கள்வர் ஆதொழு அறுத்தென*
*பிற்படு பூசலின் வழிவழி ஓடி*
(7:13-15)

பாலை நிலத்தில் உள்ள அழகிய சிற்றூரிடத்தே, மென்மையான கூந்தலின் மயிர்கள் சுருண்டு சுருண்டு விளங்கும் மகளிர், பூண் பூட்டிய உலக்கைகளைக் கைகளால் உயர்த்தித் தினையைக் குற்றுவர். அப்போது உரலின்கண் நின்றெழுந்த உலக்கை ஒலியானது, நெடிய பெரிய மலைச்சாரல்களில் இருந்தும் எழுகின்ற ஆந்தைகளின் ஒலியோடு கலந்து ஒலியும் எதிரொலியும் போல மாறிமாறி ஒலித்துக் கொண்டிருந்தது என்பதால் பெண்கள் உலக்கைகளைக் கொண்டு தினையைக் குற்றுவதை அறியலாம்.

*அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்*
*கொடுநுண் ஓதி மகளிர் ஓக்கிய*
*தொடிமாண் உலக்கைத் தூண்டுரல் பாணி*
*நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்*
*குன்றுபின் ஒழியப் போகி*
(9:10-14)

நீர்ப்பசை அற்ற சுரங்களின் அரிய இடங்களிலே கொடுமையாக அடிக்கும் கோல்களை உடைய உப்பு வணிகர் மேற்செல்லாது நின்ற எருமைக் கடாக்களை அடித்து உரப்பி ஓட்டுகின்ற தெளிவான ஒலிகள், ஊர் அனைத்தும் திரண்டு எழுந்தாற்போல ஆரவாரத்துடன் கேட்கும் என்பதால், எருமைக் கடாக்களைப் பூட்டிய வண்டியில் உப்பு வணிகர்கள் அவ்வழிச் சென்றுள்ளனர் என்பது உறுதியாகிறது.

*ஊர்எழுந் தன்ன உருகெழு செலவின்*
*நீர்இல் அத்தத்து ஆர்இடை மடுத்த*
*கொடுங்கோல் உமணர் பகடுதெழி தெள்விளி*
*நெடும்பெருங் குன்றத்து இமிழ்கொள இயம்பும்*
(17:11-14)

மண்மேடாகிய வன்நிலத்தைக் கூழினை உண்ணும் கோவலராகிய கிணறு வெட்டுவோர், வலிய வாயினை உடைய குந்தாலியினால் உடைத்துக் கிணறு அகழ்ந்தனர். அகழ்ந்தும் நீர் ஊறாது போகவே அவர்கள் கைவிட்டுச் சென்ற தழை மூடிய அந்தக் கிணறுகள் காடுகளின் இடையிடையே இருக்கும் என்பதால், கோவலர்கள் கிணறு



அகழ்ந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

தமது வெண்மையான தந்தங்களைக் கொள்ள வரும் இரக்கமற்ற வேட்டைக்காரர்களிடமிருந்து தப்பிக்க, அக்குழிகளில் யானைகள் மறைந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் என்பதும் பெறப்படுகிறது.

*பரல்மண் சுவல முரண்நிலம் உடைத்த*
*வல்வாய்க் கணிச்சி கூழார் கோவலர்*
*ஊறாது இட்ட உவலைக் கூவல்*
*வெண்கோடு நயந்த அன்பில் கானவர்*
*இகழ்ந்தியங்கு இயவின் அகழ்ந்தகுழி செத்து*
*இருங்களிற்று இனநிரை தூர்க்கும்*
*பெருங்கல் அத்தம் விலங்கிய காடே (21:21-27)*

ஒப்பற்ற மணியானது மாறிமாறி ஒலிப்பதும், கடையாணி இட்ட காம்பினை உடையதும், கூர்மையான முனையை உடையதுமாகிய நெடிய வேலினை உடையவர்கள் மழவர்கள். வெட்சியராகிய அவர்கள் போர் முனையிலே வென்று பசுக்களை மீட்டனர். அவ்வெட்சியரை, வில்லாண்மை மிக்க சிறந்த அம்பினை உடைய கரந்தை வீரர்கள், மேட்டுநிலத்திலே வீழ்த்தித் தாம் வெற்றி கொண்டனர். தங்களுடைய ஆண்மையினால் கரந்தையர்கள் பதுக்கைக் கடவுள் வழிபாடு செய்ய முற்பட்டனர். களத்திலே பட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு, அந்நடுகல்லுக்கு மயிலின் தோகைகளைச் சூட்டினர். துடியினை அடித்தனர். நெல்லால் ஆகிய கள்ளோடு செம்மறி ஆட்டுக் குட்டியையும் பலி கொடுத்தனர். நடந்துபோவதற்கும் இயலாத கவர்த்த வழிகளை உடைய புலால் நாற்றம் வீசும். அத்தகைய அரிய பாலைநில வழி என்பதால், குறும்படை மழவர்கள் பசுக்களைக் கவர்ந்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது பெறப்படுகிறது.

*தனிமணி இரட்டும் தாளுடைக் கடிகை*
*நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்*
*முனைஆத் தந்து முரம்பின் வீழ்த்த*
*வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்*
*வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்*
*நடுகல் பீலி சூட்டித் துடிப்படுத்துத்*
*தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்*
*போக்கருங் கவலைய புலவுநாறும் அருஞ்சுரம் (35:3-10)*

விரைந்து நடக்கும் இயல்புடைய மறவர்கள், ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். அவ்வாறு கொணரும் அவர், தம் ஊர் மன்றுகளிலே ஒருங்கே பல கறவைகளையும் கொணர்ந்து அடைத்திருப்பர். அப்படி அடைக்கப்பட்ட அவை, தம் கன்றுகளைக் காணாமையால், பொலிவிழந்த கண்களால் தம் செவிகளைச் சாய்த்து, மன்றிலே நிறைவானதால் வந்த துன்பமும் மிகுதியாகக் கல்லென்னும் ஆரவாரத்துடனே கதறிக் கொண்டிருக்கும் அத்தகைய சிற்றூர் என்பதால், மறவர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து ஊர் நடுவிலே ஒருங்கே அடைத்து வைப்பர் என்பது புலனாகின்றது.

*அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்*
*கன்று காணாது புன்கண்ண செவிசாய்த்து*
*மன்றுநிறை பைதல் கூறப் பலஉடன்*
*கறவை தந்த கடுங்கான் மறவர்*
*கல்லென் சீறூர்* **(63: 9-13)**

இருளில் தம் நிரைகளைக் கவர்ந்து சென்ற கள்வர்களிடமிருந்து அவற்றை மீட்பதற்காக விரையச் சென்ற அவருடன் போரினைச் செய்து வென்றவர்கள், மானமிகுந்த வீரமறவர்களுள் சிலர்.

அவர்களுடைய பொய்களையும் சிறப்புகளையும் பொறித்து, நெறிதோறும் மயிற்பீலி சூட்டிய நடுகற்களானவை விளங்கும். ஊன்றிய வேல்களையும் சார்த்திய பலகைகளையும் உடையனவாக அந்நடுகற்கள் போர்முனை போலக் காணப்படுகின்றது.

*நிரம்பா நோக்கின் நிரயம் கொண்மார்*
*நெல்லி நீளிடை எல்லி மண்டி*
*நல்அமர்க் கடந்த நாணுடை மறவர்*
*பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்*
*பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்* **(67:6-10)**

கல்லா இளையர் சுரம் எல்லாம் மணங்கமழும் வலமாகச் சுரித்த வெண்கடம்பினது புதிய பூக்களைச் சுருளாகத் தம் தலையிலே அணிந்துகொள்வர். உரல்போன்ற அடியினை உடைய பெண்யானையானது கானத்திலே அலறிக்கொண்டிருக்க, அதனுடைய கன்றினைப் பிரித்துக் கொண்டு வருவர். அந்த மகிழ்ச்சியினை உடையவர்களாகச் செருக்குமிக்க வலிய அடிமரத்தை உடைய வெண்கடம்பின் கிளையைப் பிளந்த அதனின்றும் உரித்த வெண்மையான நார் கயிற்றினால் அக்கன்றினை அழுத்தமாகக் கட்டுவர் கல்ல இளையர் என்பதால், யானைக் கன்றினைப் பிடித்து வரும் வேடர்கள் உள்ள சுரம் என்பது பெறப்படுகிறது.

*வலம்சுரி மராஅத்துச் சுரம்கமழ் புதுவீச்*
*சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி*
*கறைஅடி மடப்பிடி கானத்து அலறக்*
*களிற்றுக் கன்றுஒழித்த உவகையர் கலிசிறந்து*
*கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து*
*பெரும்பொழி வெண்நார் அழுந்துபடப் பூட்டி*
*நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்* **(83:1-7)**

மழவர்கள் தம் வாயிலிருந்து எழும் பகையினை எழாமல் தடுக்கும் பொருட்டுப் புற்று மண்ணைத் தம் வாயிலே அடக்கிக் கொள்வர். கடுமையான சக்திவாய்ந்த அம்பினை வில்லிலே தொடுத்துச் செல்வர். சென்று, தயிர்கடையும் மத்தினைக் கவர்ந்து கொள்வர். ஆநிரைகள் உள்ளவிடத்து தம் காலடித் தடங்களை மறைக்கும் செருப்புகள் ஒலிக்கா வண்ணம் சென்று, காவல் மிகுந்த தொழுவங்களிலே உள்ள கன்றுகளுடன் கூடிய பசுக்கூட்டங்களைக் கொள்ளை இடுவர். அப்படிக் கொள்ளையிடப்பட்ட ஆனினங்களை அவர் தம்மிடமாகிய பெரிய காட்டிற்கு ஓட்டிக்கொண்டு செல்வர்.



இதனால், மழவர்கள், தங்கள் இருப்பிடத்திலிருந்து பிற இடங்களுக்குச் (பிற நிலங்களுக்கு) சென்றும் கொள்ளையிடுவர் என்பது பெறப்படுகிறது.

*தகர்மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த*
*சுவல்மாய் பித்தைச் செங்கண் மழவர்*
*வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்*
*தீப்படு சிறுகோல் வில்லோடு பற்றி*
*நுரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து*
*அடிபுதை தொடுதோல் பறைய ஏகிக்*
*கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்*
*இனம்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்டு* **(101:4-11)**

## பாலை - தெய்வம்

பாலைத் திணைக்குரிய தெய்வமாகக் கொற்றவையைக் குறிப்பிடுவர். பலமுறையும் யாம் அவருடன் செல்வதற்கு விரும்பி வேண்ட, மிகுந்த புகழ் வாய்ந்த கொற்றவை அருள் செய்தமையால் ஏழிற்குன்றத்தைப் பாடிய சிறந்த புலன் ஒருவனுக்குக் 'கானமா செல்வி' குதிரையைப் பரிசாகக் கொடுத்தான் என்ற செய்தியால்,

*விசும்புதளி பொழிந்து வெம்மை நீங்கித்*
*தண்பதம் படுதல் செல்கெனப் பன்மாண்*
*நாஞ்செல விழைந்தன மாக ஓங்குபுகழ்க்*
*கானமர் செல்வி அருளலின் வெண்காற்*
*பல்படைப் புரவி எய்திய தொல்லிசை*
*நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய*
*இனமழை தவழும் ஏறிற் குன்றத்து* **(அகநா.345:1-7)**

அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடலில் கொற்றவை பற்றிய குறிப்பு வந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வொரு பாடலைத் தவிர ஏனைய பாடல்களில் பாலைக்குரிய தெய்வம் குறிப்பிடப்படவில்லை. ஆனால், முருகன்(அகநா.1:3,59:11) நேமியஞ்செல்வன்(175:14), முக்கட்செல்வன் (181:16) என்னும் வேற்றுநிலத் தெய்வங்கள் பாலைத்திணைப் பாடல்களில் வந்துள்ளன.

பாலைக்கென்று தனிநிலம் இல்லாமையாலும் பாலை என்பது குறிஞ்சி முல்லையின் கலப்பால் உருவானதாலும் அக்குறிஞ்சி முல்லைக்கான தெய்வங்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகிறது. முக்கட் செல்வன் திணைத் தெய்வமன்று அது பொதுத்தெய்வம் என்று அமைதி கூறலாம்.

## பாலை - மக்கள் உணவு

மக்கள் உயிர்வாழ இன்றியமையாதது உணவு. உணவின்றி உயிர் வாழார். ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மக்கள் அவ்வந்நிலத்தில்

கிடைக்கும் உணவுகளைப் பெரிதும் உண்டு வந்தனர். பாலைநிலத்தில் வாழும் மக்களோ விளைநிலப் பகுதிகளில் வாழாததால் ஆறலைத்தலால் வரும் பொருள்களையும் அயலூர்களில் சென்று கவர்ந்துவந்த பொருள்களையும் உண்பர். அவற்றொடு, தாம் வாழும் வறண்ட நிலத்தில் விளைந்த உணவுப் பொருள்களையும் உண்பர். அகநானூற்றில் அமைந்த பாலைத்திணைப் பாடல்களில் வரும் மக்கள்தாம் வாழுமிடப் பகுதிகளில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களையே பெரும்பாலும் உண்டு வந்துள்ளனர் என்பதை அறிகின்றோம்.

பாலை நில மக்கள் மூங்கிலரிசி, வெண்பழத்தரிசி ஆகிய அரிசி வகைகளையும், கள், நறவு தோப்பி என்றழைக்கப்படும் மதுவகைகளையும், கூழ், மிதவை ஆகிய சோறுவகைகளையும் உண்டு வாழ்ந்திருந்தமையை அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் வாயிலாக அறிகின்றோம். இவ்வுணவு வகைகள் வறண்ட பின்புலத்தை உடைய பாலைக்கு ஏற்புடையனவாக இருப்பதால் இவற்றைப் படிப்பதன் மூலம் பாடல்களின் திணையை உணர வழிவகையும் உண்டாகின்றது எனலாம்.

## பாலை - விலங்கினங்கள்

மலையும் காடும் திரிந்து விளங்கும் பாலைநிலம் நீரின்றி வறண்டு கிடக்கும். ஆங்காங்கே சிறுமரங்களும் செடிகளும் காணப்பெறும். எனினும், அவை இலைகள் இன்றிக் காய்ந்த நிலையில் நிற்கும். அத்தகைய பாலைநிலங்களில் வாழக்கூடிய விலங்குகளைப் பாலைத்திணைப் பாடல்களின் கருப்பொருளாக அமைத்துப் பாடுவதில் புலவர்கள் வலலமை உடையவார்களாகத் திகழ்ந்துள்ளனர்.

யானை, களிறு, வேழம், ஒருத்தல், இருள்கொள் நாகம் என ஆண்யானையையும், பிடி எனப் பெண்யானையையும் பாலைப் பாடல்களில் காட்டியுள்ளனர். ஆண்புலியைப் புலி, ஏறு, வேங்கை, உழுவை, எனவும் பெண்புலியைப் பிணவு எனவும், ஆண்நாயைச் செந்நாய் எனவும் பெண்நாயைப் பிணவு எனவும் அகநானூற்றுப் பாடல்களில் புலவர்கள் பாலைநிலத்து உறையும் விலங்குகளாகக் காட்டியுள்ளனர். இந்த் விலங்குகளைச் சித்திரிக்கும் காட்சிகள் அனைத்தும் பாலையொழுக்கத்திற்குப் பின்புலங்களாக அமையும் வகையில் புனைந்துரைத்துள்ளனர்.

பாலைக்குரிய விலங்கினங்களுள் ஆண்யானை மான், மரையேறு, கலை, இரவை எனவும், பெண்மானைப் பிணை, மரை, நவ்வி எனவும் பெயரிட்டு அழைத்துள்ளனர். இவை மட்டுமின்றி, நரி, பகடு, எருமை, ஆளி, வெருகு, பன்றி, கழுதை, ஒட்டகம், வெள்ளலி, என்கு, உளியம், முசு, முந்தி, வெளில், நொள்ளை(நத்தை), பல்லி என்பனவும் பாலைத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள உயிரினங்கள் ஆகும். எனினும், மேற்குறித்த உயிரினங்களைப் பாலைநிலத்துச் சூழலுக்கு ஏற்பக் காட்டி அவை கருப்பொருளாய் அமைந்து திணையை அறியப் பயன்படுமாறு அகநானூற்றுப் பாடல்களில் அமைந்து உள்ளதை உணர



முடிகிறது. வறட்சிப் பின்புலத்திற்கேற்ப நீரின்றி அலையும் யானைகளையும் மான்களையும் காட்டி அவை தம்துணைகளுக்காக வாழும் வாழ்க்கையில் அன்பு கோலோச்சுவதை உணரவைக்கும் பொழுது பாலைத்திணையை உணரவைக்கும் பாங்கு புலனாகின்றது.

## பாலை - தாவரங்கள்

பாலைநிலம் வறண்ட நிலமாதலால், பெரும்பாலும் நீர் சிறிதளவே கொண்டு வளரும் தாவரங்களே காணப்படும். பல மரங்கள் இலைகள் இன்றிக் காணப்படும். எனவே நீராவிப்போக்கு நடைபெறுவதில்லை. இதனால், நீரின் தேவையை வெகுவாய்க் குறைத்து விடுகின்றன. ஒருசில தாவரங்களில் இலைகளே முட்களாய் மாறியும் அமைந்து உள்ளன. வறண்ட நிலத்திற்குத் தக்கவாறு தாவரங்களும் தங்களை அமைத்துக் கொள்கின்றன.

பாலைநிலத்தில் வளரும் மரங்களைக் கண்ட புலவர்கள் அவற்றைத் தத்தம் பாடல்களில் அழகுபடப் புனைந்து கூறியுள்ளனர்.

பாலைநிலத்தின்கண் வளர்ந்துள்ள மரங்களாக இருப்பை, ஓமை, மூங்கில், யா, மரா, நெல்லி, பலா, வேங்கை, ஞெமை, நொச்சி, இற்றி, இத்தி, தேக்கு, உழிஞ்சில், வாகை. அமை. மருது. யாமை, உலவை(வேலம்) ஆகியவை அகநானூற்றுப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.

உரையாசிரியர்கள் கருப்பொருள்களாகக் கூறும் இருப்பை, கள்ளி, சூரை, ஓமை, பாலை ஆகிய மரவகைகளில் இருப்பையும் ஓமையும் மட்டுமே அகநானூற்றுப் பாலைப் பாடல்களில் அமைந்துள்ளன.

## பாலை - பறவையினங்கள்

வறட்சியான நிலப்பின்னணிக்கேற்ப பாலைநிலத்தில் வாழும் பறவைகளும் உள்ளன. வறுநிழல் மரத்தில் துணையொடு வாடி நிற்கும் பறவைகளையும் துணைக்காக உணவுதேடச் சென்றிருக்கும் பறவைகளையும் கடுமைக்கு இடையிலும் அன்பு பிலிற்றும் வகையில் அமைந்துள்ள பறவைகளின் செயற்பாடுகளையும் காணமுடிகின்றன.

பாலைநிலத்தில் வாழும் பறவையினங்களாக எருவை, பருந்து, புறா, கழுகு, குடிஞை, கோழி, மஞ்ஞை, குயில், வானம்பாடி, குரா(கோட்டான்), வெள்ளாங்குருகு, காக்கை, தும்பி, சில்வண்டு ஆகிய பறவையினங்களை அகநானூற்றுப் பாடல்களில் புனைந்துரைத்துள்ளனர்.

## பாலை - பறை

பாலைநிலத்தில் ஒலிக்கப்படும் பறைகள் அகநானூற்றுப் பாடல்களில் வருணனைப் போக்கிலும், உவமை வாயிலாகும் சுட்டப்பெறுகின்றன. அவை, அரசர்களின் வீரத்தை எடுத்தியம்பும் கருவியாகவும் புனையப்பட்டுள்ளன. அரிக்கோற் பறை, குழல், பறை எனவரும் இடங்களில் உவமை வாயிலாகவும், ஆடுகளப்பறை, கிணை, குழல், தண்ணுமை, துடி, பறை, முழவு எனவரும் இடங்களில்

வருணனைப் போக்கிலும், முரசம், முரசு எனவரும் இடங்களில் அரசர்களின் வீரத்தினை இயம்பும் கருவியாகவும் பறை பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. வறண்ட புலத்தில் பிறர்பொருள் கவர்ந்துண்பதையே செய்தொழிலாகக் கொண்டிலங்கும் பாலைநில மக்களுக்குப் பறை ஏற்புடைய கருவியாய் இருந்து பாலைத்திணைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

## பாலை - தொழில்

ஓர் இடத்தில் தங்கி வாழ்பவர்கள் அவர்களுக்கென ஒரு தொழிலை மேற்கொள்கின்றனர். அத்தொழிலைக் கொண்டே அவர்களின் வாழ்க்கையை நடத்துகின்றனர். அதுபோலப் பாலை நிலத்தில் வாழ்பவர்கள் தாங்கள் வாழும் இடத்திற்கேற்பப் பெரும்பாலும் அவ்விடத்தைக் கடப்பவர்களிடம் கொள்ளையடித்தும், வேட்டையாடியும் சிறுபான்மை உழவுசெய்தும் வாழ்க்கையை நடத்துவர்.

பாலைநிலத்தில் உறைபவர்கள் சூறையாடலையும் சாத்தெறிதலையும் தொழிலாகக் கொண்டவர்கள் என உரையாசிரியர் கூறுவர். ஆனால், அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்கள் யாவும் அங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் இயற்கையாய்க் கிடைக்கும் உணவுப்பொருள்களையே உண்டு வந்துள்ளதாகப் பாடல்கள் பகர்கின்றன.

## பாலை - பண் - யாழ்

பாலைநிலத்தில் வாழ்வோர் பயன்படுத்திய இசைக்கருவிளாக யாழ், சீறியாழ் ஆகியன குறிக்கப் பெற்றுள்ளன. அந்த யாழிலிருந்து பாலைப்பண் பாடப்படுவதாகக் கூறப்பெற்றுள்ளது. புறத்தே உள்ள கடுமையை மறக்க வைத்து அகத்தே உள்ள அன்பைப் பிலிற்றச் செய்யும் அருமைப்பாடு உடையது யாழொலி. அது வன்மையை மென்மையாக்கும் மாயச்செய்கை கொண்டது. அதனால், அன்பின் கொடுமுடியைக் காட்டவல்ல பாலைத்திணைக்குரிய கருப்பொருளாக யாழ் அமைத்து திணை உணர வைப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது எனலாம்.

இக்கட்டுரைவழி, அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் காணலாகும் மக்களின் வாழ்வியல் செய்திகளும், மக்களோடு தொடர்புடைய கருப்பொருள்களையும் ஆய்ந்து எடுத்தியம்பப் பட்டுள்ளன. பாலை நிலத்திற்கேற்ப அம்மக்கள் தங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்ந்துள்ளமை ஈண்டு + உறுதிப்படுத்தப் படுகிறது.



# 115. புறநானூற்றின் வழி பண்டைத் தமிழர் வாழ்வியலில் ஆடைகளின் பயன்பாடு

அ. திலிப் ஏங்கல்ஸ்
*முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*சேர்க்காடு*

## முன்னுரை

தொடக்ககாலத்தில் மனிதர்கள் தென்னைஓலை, பனைஓலை, மரநார், ஆகியவற்றால் ஆனதழையாடைகளையும்,விலங்குகளின் தோல்களையும் ஆடைகளாகப் பயன்படுத்தினாகள். பின்னர்ப் பருத்தியில் இருந்த பஞ்செடுத்து நூல்நூற்கவும் ஆடை நெய்யவும் அறிந்து கொண்டு நூலாடைகளைப் பயன்படுத்தினார்கள்.

பண்டைத் தமிழர்களின் உணவுமுறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், போன்ற வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள புறநானூறு முக்கிய சான்றாக உள்ளது. அவற்றுள் மக்களின் வாழ்வினில் இன்றியமையாது இடம்பெற்ற ஆடைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## ஆடைகள்

'பண்டைத் தமிழ்நாட்டில் நெய்யப்பட்ட ஆடை வகைகளுள் 'கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம்,தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி' என 36 வகைகள் அடியார்க்கு நல்லாரால் குறிக்கப்பட்டுள்ளன என்று தேவநேயப் பாவாணர்தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலத்திலேயே மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக ஆடை இருந்தது. இதனை நக்கீரர்மன்னாளும் வேந்தனாயினும் கல்வியறிவற்ற வேடனாயினும் அவர்களுக்குப் பொதுவாகத் தேவைப்படுவது உடையும், உணவும் தான் எனக் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது. இதனை,

*"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி*
*வெண்குடைநிழற்றியஒருமையோர்க்கும்*
*நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*
*கடுமாப் பார்க்கும் கல்லாஒருவற்கும்*
*உண்பதுநாழிஉடுப்பவை இரண்டே"*

என்னும் புறநானூற்றுப் பாடல் வழி அறியமுடிகிறது.

# தமிழர்
# நாகரீக பண்பாட்டு வாழ்க்கை முறைகள்

பேராசிரியர் சி. இளம்பரிதி



சங்கரி பதிப்பகம்

எப்படி வாழ்க்கை நடத்தப் போகிறோம் என்பதோடு மட்டுமின்றி தலையில் பூச்சூடுவதோ, திலகம் இடுவதும் கூடாது என்பார்கள். கையில் வளையல் அணியவும் கூடாது வெண்ணிற ஆடை அணிய வேண்டும். ஆண்கள் எங்கியாவது வெளியில் செல்லவேண்டும் என்றால் கணவனை இழந்த பெண் எதிரில் வரக்கூடாது அப்படி வந்தால் அவ்வேலை நடக்காது என்று எண்ணி தண்ணீர் அருந்தியப் பின்தான் வெளியில் செல்வார்கள். இப்பழக்கம் சமூகத்தில் இருந்து கற்புடையப் பெண்கள் கணவனை கண்கண்ட தெய்வமாக போற்றுவார்கள். கணவன் இறப்பிற்குப்பின் மறுமணம் செய்துக்கொள்ள மாட்டார்கள். கணவனுக்காகப் பாடும் பாடல்

"நானூறு வண்டியிலே
நடுவே வரும் சாமானம்
சாமானப் பெட்டியிலே - என்
சாமி வரப்பார்கிலையே
சின்ன நடை நட நடப்பார் - நான்
தெருக்கதவை கொஞ்சம் ஒத்திவைப்பேன்
தாளிப்பேன் நூறு வகை
பொன்னு கரண்டியிரே
பொரிப்பேன் நூறு வகை
வெள்ளி கரண்டியிலே
விதவிதமாய் கொத்தமல்லி
சாதத்திலே கொஞ்சம் வைப்பேன்
ஜலம் வாங்கி கையலம்பி
சாப்பிட்டு திண்ணையிலே - இனி
கூடிப் படுப்பதெப்போ"

என்று அன்றாட நிகழ்வுகளைக் கூறிப் புலம்பி அழுவாள். ஒரு சிலர் துயர் தாங்க முடியாமல் மனைவியும் சிலநாட்கள் கழித்து இறந்து விடுவாள் என்று சொல்லப்படுகிறது. புலவர்வலசை மக்கள் சிறந்த கலாச்சார பண்பாடு மிக்கவர்கள். கிராமத்தில் சிலர் வசிக்கின்றனர் சிலர் பொருள் தேடவே வெளியூர் சென்று வருவார்கள். அப்படி சென்று வருங்கால் குறித்தகாலம் வரும் வரை மனைவி வீட்டில் குழந்தை பராமரிப்பு மற்றும் குடும்பப் பாங்குடன் கணவரின் பெற்றோருக்கு பணிவிடைகள் செய்து உடன் வசித்து வருவார்கள். விருந்தோம்பலையே தெய்வீகமாகக் கருதினர். வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை அன்போடு வரவேற்பார்கள்.

✱✱✱✱

முனைவர் இரா. ஜெகதீசன்,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
திருவள்ளுர் பல்கலைக்கழகம்,
வேலூர் 632 115.

## 72. புலவர்களும் தன்னுணர்ச்சிப் பாடல்களும்

உலகச் செம்மொழிகளுள், தனிப்பெரும் பெருமை உடையது தமிழ்ச் செம்மொழி. இலக்கிய வளமும் இலக்கணச் செறிவும் உடைய பெருமை உடையது தமிழ்மொழி. தமிழ்மொழியில் பண்டைக் காலத்தே வாழ்ந்த புலவர்கள் பாடல்களாகவும், நூற்பாக்களாகவும், பாட்டும் உரையும் கலந்தும், உரையாகவும் நூல்களைப் படைத்துள்ளனர்.

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளைத் தம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுகினர். தான் மட்டும் அல்லாமல் சமுதாயத்தில் பிறரும் குறிக்கோளுடன் வாழ்வதற்குரிய நல்ல அறிவுரைகளைக் கூறிப் பேருதவி புரிந்தனர். தாம் சமுதாயத்திற்குக் கூற நினைத்த பல நல்ல கருத்துக்களைத் தம்முடைய பாடல்கள் வழியாகவே வெளிப்படுத்தினர். சங்க காலப் புலவர்கள் சமகால மக்களிடம் நெருங்கிய நட்பு கொண்டிருந்தனர். புலவர்களின் அறிவுரைகளை மக்கள் கேட்டு அதன்படி நடந்து வாழ்ந்துள்ளனர். சங்ககால மக்கள் சமகாலப் புலவர்களால் தாம் பாடப்பட வேண்டும் என்று விரும்பியுள்ளனர். அதேசமயம் புலவர்களும் நற்பண்புகளைக் கொண்ட மக்களையே பாடினர். மக்கள் மட்டுமல்லாமல், நாட்டை ஆளும் அரசனையும் பாடினர். அரசர்கள் தம்மைப் புலவர்கள் பாடுவதைப் பெருஞ்சிறப்புடையதாகக் கருதினர்.

புலவர்கள், எந்த ஒரு குறிக்கோளும் இன்றி பாடல்களைப் புனைவதில்லை. ஒரு பாடல் புனைய வேண்டும் என்றால், அப்பாடல் தோன்றுவதற்கு ஏதோ ஒருசில பின்புலங்கள் அவசியம் இருந்திருக்க வேண்டும். எந்த ஒரு காரணமும் இன்றிக் கவிதை பிறப்பதில்லை. கவிதை பிறப்பதற்கான பின்புலம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். அத்தகைய பின்புலச் சூழலை அறிந்கொண்டு பின்னர் அப்பாடலின் பொருளை அறிந்தால்தான் அப்பாடலின் உண்மையான, உணர்வுப்பூர்வமான உணர்ச்சிப் பூர்வமான முழுமையான இன்பத்தையும் படிப்பவர் பெற முடியும் என்பதில் ஐயமில்லை.

இலக்கியப் பாடல்களுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் புலவரின் பாடலைப் பயின்று அப்பாடல் தோன்றிய சூழலை ஓரளவு கூற முற்பட்டனர். பழைய உரையாசிரியர்கள் இதனைக் கொளு என்று அழைத்தனர். பாடலைப் பாடியோர், பாடப்பட்டோர், இருப்பிடம் பற்றி யும், பெயராய்வு பற்றியும் இயம்பி உள்ளனர். பின்னர் வந்த உரையாசிரி யர்கள் இப்பாடல் யார் யாருக்கு கூறியது? என்று கூற்று நிலையையும் அப்பாடல் அமைந்துள்ள துறை மற்றும் துறை விளக்கம் போன்றவற்றை யும் இயம்பி, அப்பாடலின் சூழலை ஓரளவு விளக்க முற்பட்டுள்ளனர். எனினும் பாடல் பாடிய புலவர்தம் உள்ளக் கிடக்கையை பாடல் பிறந்த கதையை முழுமையாக எடுத்தியம்பவில்லை என்றே கூறலாம்.

புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் மன்னர் தம் மான நிலை, புலவர் நட்புநிலை, பாரிமகளிரின் கையறு நிலை, ஆதிமந்தியின் ஆற்றாமை இன்னபிற வரலாற்றுச் செய்திகளை உணர்வுடனும் உணர்ச்சியுடனும் எழுதப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதனைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (lyrics) என்றழைப்பர்.

மேலைநாட்டு இலக்கியங்கள் அகத்திணை புறத்திணை என்ற பாகு பாடுகள் இல்லை. என்றாலும், அப்பாடல்களின் உள்ளுணர்வின் அடிப் படையில் பல்வேறு பாகுபாடுகளைப் பெற்றிருக்கின்றன. உள்ளத்தின் உணர்ச்சி வெளியீடாக ஒலிப்பது தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyric) என்றும், சிறந்த தலைமக்களின் வாழ்க்கையை வரலாறு போல் காட்டு வதைக் காவியம் (Epic) என்றும், நீதியை வழுவாது விளக்குவது நீதிநூல் (Didactic Literature) என்றும், எள்ளல் பொருள் பற்றிய நகைச்சுவையாய் வருவதை அங்கதம் (Satiric) என்றும், முல்லைநில நிகழ்ச்சியை முன் நிறுத்தும் பாடலை முல்லைப்பாட்டு (Postoral Poetry) என்றும், மெய் யுணர்வு பற்றிய பாடலை பிரதிபலிப்புப் பாடல் (Reflective Poetry) என்றும், பக்தியை இயம்பும் பாடலைப் பத்திமைப் பாடல்கள் (Hymas) என்றும், வகைப்படுத்தி விளக்கி உள்ளன என்பார் மு.வ. இலக்கியமரபு ப. 29)

இவற்றுள் முன்னோர் கண்ட மரபுகளை ஒட்டியே பாகுபாடுகளாகக் காணப்படுகின்றன. அதே சமயம் அறிவியல் நெறியில் அமையும் பாகுபாடுகளும் உண்டு. இலக்கியத்தில் உள்ள உணர்ச்சி அனுபவங்கள் ஐந்து வகைப்படும் என்றும் அவற்றை ஒட்டி இலக்கியத்தை ஐந்து வகைகளாகப் பகுக்கலாம் என்றும் வின்செஸ்டர் கூறுவர். அவையாவன வருமாறு.

### 1. தனி ஒருவரின் சொந்த அனுபவம் பற்றிய இலக்கியம்

பாடிய புலவனின் சொந்த வாழ்க்கையின் அனுபவத்தில் இருந்து



இது பிறக்கும். புறநானூற்றிலுள்ள தன்னுணர்ச்சிப் பாடல்கள் முதல் தனிப்பாடல் திரட்டில் உள்ள புலவனின் அனுபவப் பாடல்கள் வரையில் உள்ளவை இந்த வகைக்கு எடுத்துக்காட்டாகும்.

### 2. மனிதனின் பொதுவான அனுபவம் பற்றிய இலக்கியம்

மனிதரின் வாழ்க்கையில் பலர்க்கும் பொதுவாக உள்ள அனுபவம் பற்றியது இவ்வகை. சிலப்பதிகாரம் முதலான காவியங்களிலும் கலம்பகம் முதலான நூல்களிலும் இதனைக் காணலாம்.

### 3. தனிமனிதர்களும் மற்றவர்க்கும் அல்லது சமுதாயத்திற்கும் உள்ள உறவின் அனுபவம்

புறநானூறு முதலான நூல்களில் புலவர் அரசரை வாழ்த்தியும் நன்றி கூறியும் பாடுவனவும் உலகை வியந்தும் வெறுத்தும் பாடுவன வும் இவ்வகையில் அடங்கும்.

### 4. இயற்கையோடு அமையும் உறவின் அனுபவம் பற்றிய இலக்கியம்

இயற்கை அழகில் ஈடுபட்டுப் பாடுவனவும் இயற்கையை வெறுத்தும் சினந்தும் பாடுவனவும் இவ்வகையின.

### 5. உலகில் இல்லாத புதுமைகளைக் கற்பனையில் கண்ட அனுபவம் பற்றிய இலக்கியம்.

பாரதியாரின் குயில்பாட்டு முதலியன இந்த வகைக்குச் சான்றாகும் என மு.வ. பிரித்துக் கூறியுள்ளார்.

புல்வர் உணர்ச்சியமாகித் தாம் கலந்து பாடியவை 'ஒன்றியப் பாட்டு'(Personal or Subjective Poety) எனவும், பிறருடைய அனுப வத்தைப் பற்றின்றி உணர்த்தும் வகையில் பாடியவை 'ஒன்றாப்பாட்டு' (Impersonal of Objective Poetry) எனவும் ஆங்கில அறிஞர்கள் பாகு பாடு செய்துள்ளனர். தன்னுணர்ச்சிப் பாடல்களும் (Lyrics), பக்திப் பாடல்களும் (Hymas) முன்னைய வகையைச் சார்ந்தவை. எடுத் துரைப் பாடல்களும் (narrative), காவியங்களும் (Epics) பின்னைய வகையைச் சார்ந்தவை. நாடகத்தில் புலவர் பற்றின்றி நின்றும் நாடக மாந்தரின் உணர்ச்சிகளை ஒன்றி வாய்ப்பாட்டால் கூறுவதால் இரு வகையும் (Subjective and Objective) கலந்த கலப்பினைக் காணலாம். நாடகம் பொருளால் ஒன்றா இலக்கியமாகவும், கூறும் முறையில் ஒன்றிய இலக்கியமாகவும் உள்ளது எனலாம்.

புலவர், தாம் கலந்து ஒன்றிப்பாடுதல் தாம் கலவாமல் பற்றின்றிப் பாடுதல் என்ற இரண்டும் தனித்தனியே இல்லை. இரண்டும் ஓரளவு கலந்தே அமைகின்றன என்று கூறலாம். புலவரின் உணர்ச்சியும் மன நிலையும் கலவாமல் எந்த இலக்கியமும் அமைவதில்லை. எனினும், புலவரின் சொந்த உணர்ச்சி தன்னுணர்ச்சிப் பாடல்கள் பக்திப் பாடல்கள் கையறு நிலைப் பாடல்கள் ஆகியவற்றில் மிகுந்து காணப்படும். ஆகையால் அவை ஒன்றிய பாடல்கள் என்று கூறலாம். ஒன்றியப் பாடல்கள் புலவரின் உணர்ச்சி மிகுந்து காணப்படும். காவியம், நாடகம் முதலியவற்றில் புலவரின் சொந்த உணர்ச்சியைக் கொட்டி எழுத முடியாது. எனினும் குறைவான உணர்ச்சியைப் புகுத்தி எழுத வாய்ப்பு உண்டு. எனவே இவை 'ஒன்றாப் பாடல்கள்' என்று கூறலாம்.

தன்னுணர்ச்சியை வெளியிடுதலே நோக்கமாக உடைய புலவர், கற்பனையில் மிகுதியாக ஈடுபட்டு விடுகிறார் என்றும் பொருளின் உண்மைகளைவிடத் தம் மனநிலைகளையே பெரிதும் மதிக்கின்றார் என்றும் ஆபர்குரோம்பே கூறுவர். அதற்கு மாறாகப் பொருள்களின் உண்மையை உணர்த்துதலே நோக்கமாக உடைய புலவர் கற்பனையில் மிதத்தலை விட்டுவிட்டுக் கற்பவர்க்கு உண்மையை விளக்குவதில் ஈடுபடுகிறார் என்பர். ( To regard Literature as the expression of th author's mind for mood or temperamnt emphasizes the subjective element in it and thus lands ultimately to remanticisim: in which what the author falt is the importment thing. The opposite way of regarding Literature, as a method of representing things to the reader, emphasises the objective element and thus leads ultimately to realism. l. Abercrombie, Principles of Literary Criticism, pp. 23-24)

தன்னுணர்ச்சிப் பாடல்களே மிகவும் பழைமையான இலக்கிய வகையாகும். இன்றும் இவை பெருவழக்கிலும் மிகவும் தூயதாகவும் விளங்குகின்றது என்பர் வின்செஸ்டர். அதே நேரத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் தொடக்க காலத்தில் தனி ஒருவரின் உணர்ச்சி வெளிப்பாடாக அமையாமல் ஒரு கூட்டத்தினரின் உணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்தது என்பர் ஹட்சன்.

புறநானூற்றில் உள்ள பாடல்களில் பெரும்பான்மையானவை புலவரின் சொந்த உணர்ச்சியைப் பற்றியவையாக உள்ளன. ஔவையார், கபிலர் முதலான புலவர்கள் தம் உள்ளத்து உணர்ச்சிகளையே பாடியுள்ளமையால் அவை ஒன்றிய பாடல்கள் என்பதில் ஐயமில்லை. தன்னுணர்ச்சிப் பாடல்களைப் புறத்திணையிலும் அகத்திணையிலும் காணலாம்.



கடையெழு வள்ளல்கள் எழுவருள் ஒருவன் பாரி. முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் தனக்கு உரிய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கியவன். வளமிக்க பறம்புமலைக்குத் தலைவன். பாடல்வல்ல புதல்வியர் இருவர்க்குத் தந்தையாக விளங்கியவன். பாரி தான் ஆண்ட பறம்பு மலையை மூவேந்தர்களின் வஞ்சத்தால் இழந்தான். இவரது நண்பர் கபிலர். பாரியின் புகழோடு ஒன்றியவர் இப்புலவர். பாரி மாய்ந்த பின்னர் அவர்தம் மகளிரை உரிய இடத்தில் சேர்ப்பிக்க இருங்கோவேளிடம் வேண்டியதும் வேள் மறுத்ததும் தமிழக வரலாறு பகரும். கபிலர் என்ற பெயர் இருக்கும் வரை பாரியையும், பாரி மகளிரையும் இணைத்தே பார்க்கக்கூடிய பெருமை தமிழ் இலக்கியத்தில் நிலைத்து விட்டது எனலாம். இத்தகைய உணர்ச்சி மிகுந்த பாடல்களை இனிக் காணலாம்.

புறநானூற்றில் பாரி பாடிய பாடல்கள் ஏதும் நமக்குக் கிடைக்கவில்லை. அவன் பாடல்கள் இயற்றும் வல்லவனாக இருந்திருக்கலாம். அதனால்தான் அவனுடைய மகளிர் பாடல் இயற்றும் வல்லமை பெற்றுள்ளதை அறியமுடிகிறது. இது பாரியின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக உள்ளது.

பாரி மகளிர் இருவரும் தன் தந்தை மாய்ந்த பின்னர் இரவு நேரத்தில் வெண்ணிலவைப் பார்க்கின்றனர். அவர்கள் தந்தையொடு அமர்ந்து வெண்ணிலவைப் பார்த்து மகிழ்ந்த மகிழ்ச்சியை நினைக்கின்றனர். ஆனால் தற்போது இருக்கும் நிலை வேறு.

கடந்த நிலவு நாளில் நாங்கள் இருவரும் தந்தையுடன் உடையவராக இருந்தோம். எங்கள் பறம்பு மலையைப் பகைவர்கள் எவரும் கொள்ளவில்லை. ஆனால் இப்போதோ எங்கள் மலையைப் பிறர் கொண்டனர். நாங்கள் எங்கள் தந்தையை இழந்து நிற்கின்றோம். இதை அறியாத எங்கள் துன்பத்தை அறியாத வெண்ணிலவு மட்டும் வந்துக் கொண்டிருக்கிறது என்று சோகம் ததும்ப கையறுநிலையில் தன்னுணர்ச்சித் தோன்றப் பாடுகின்றனர்.

*"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்*
*எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்*
*இயற்கைத் திங்கள் இவ்வெண் நிலவின்*
*வென்றுஎறி முரசின் வேந்தர்எம்*
*குன்றும் கொண்டார் யாம்எந்தையும் இலமே"* (புறநா. 112)

பாரி இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்டதும் கலக்கமுற்றார் கபிலர். நண்பனின் மகளிர் துன்பநிலையைக் கண்டுக் கண்ணீர் விட்டார்.

புகழ்மிக்க பறம்பு மலைக்கு உரிமை உடைய பாரியே உன்னுடைய மகளிர் இருவரையும் அவர்க்கு உரிய தலைவரிடம் சேர்க்கத் தேடிச் செல்கிறார். தனக்கே பிறந்த மகளிரைப் போல அவர்தம் வாழ்க்கையைச் செழுமையாக்க உள்ளன்போடு அழைத்துச் செல்வதைப் பார்க்க முடிகிறது.

*"பாரி மாய்த்தெனக் கலங்கிக் கையற்று*
*நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்*
*சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே*
*கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்*
*நாறிரும் கூந்தல் கிழவரைப் படர்ந்தே"* (புறநா. 113)

பாரி மகளிரைக் கபிலர் வேள்பாரியிடம் அழைத்துச் செல்கின்றார். செல்லும் முன்பு பாரியின் பறம்புமலையைப் பார்க்கின்றார். பாரி மகளிரை அழைத்துச் செல்கின்றார். பறம்பு மலையை விட்டு வெகு தூரம் சென்று மீண்டும் பறம்பு மலையைப் பார்க்கின்றார். பறம்பு மலையின் அருகில் நின்று பார்த்தாலும் பறம்புமலை தெரியும் வெகு தூரத்தில் சென்று பார்த்தாலும் பறம்புமலை தெரியும். பாரி வாழ்ந்த காலத்தில் பெருமையுடன் விளங்கிய இந்தப் பறம்புமலை இப்போது வெறும் பறம்பு மலையாக மட்டுமே தெரிகிறது. அதுவும் யானை மென்று துப்பிய கவளச் சிதறல் போல உள்ளத்து என்று உள்ளார்ந்த உணர்வுடன் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

*"ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை*
*சென்றுநின் றோர்க்கும் தோன்றும் மன்ற*
*களிறுமென்று இட்ட கவளம்போல*
*நறவுப்பிழிந்து இட்டகோதுஉடைச் சிதறல்*
*வார் அசும்பு ஒழுகும் முன்றில்*
*தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே "* (புறா.114)

பாரியின் பறம்புமலையின் ஒருபக்கத்தில் அருவி ஓசையுடன் வீழ்ந்துக் கொண்டிருக்கும் மற்றொரு பக்கத்தில் கலம் நிறைய பெய்யும் மதுவைக் கையில் ஏந்திய பாணர்கள் இருந்தனர். பகைவர்களுக்குக் கொடியவனாகவும் பரிசிலர்களுக்கு இனியவனாகவும் இருந்தது பாரியின் பறம்புமலை.

*"ஒருசார் அருவி ஆர்ப்ப ஒருசார்*
*பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்*



*வாக்க உக்க தேக்கள் தேறல்*
*கல்லலைத்து ஒழுகும் மன்னே பல்வேல்*
*அண்ணல் யானை வேந்தர்க்கு*
*இன்னான் ஆகிய இனியோன் குன்றே"* (புறநா. 115)

பாரி இருந்தபோது பறம்பு மலையில் உள்ள வீட்டின் முற்றத்தில் பீர்க்கங் கொடிகளும், சுரைக் கொடிகளும், ஈந்தின் இலைகளும் நிரம்பிய குப்பை மேட்டின் மேல் ஏறி மகளிர் உப்பு வாணிகர்கள் செல்லும் வண்டிகளை வரிசை வரிசையாக எண்ணினர். சோலைகளில் மயில்கள் ஆடின. முசுக்கலைகள் பாய்ந்து திரிந்தன. மரம்பயில் குரங்குகள் மரத்திற்கு மரம் தாவி விளையாடின. அப்படிப்பட்ட செழுமை மிகுந்த பறம்புமலை இருந்தது. பாரியின் திறம் அறியாது அவனிடம் போரிட வந்தவர்கள் எல்லாம் குதிரைகளை எண்ணுபவராக இருந்தனர். இப்போது பாரி இல்லை. பறம்பு மலையும் அவனுக்குச் சொந்தம் இல்லை. பாரி இல்லாமல் இனியும் நான் வாழ்ந்து பயன் என்ன? என்று கையறு நிலையுடன் தன் உள்ளுணர்வைப் பதிவு செய்துள்ளார் கபிலர்.

*"பீரை நாறிய சுரைஇவர் மருங்கின்*
*ஈத்தலைக் குப்பை ஏறி உமணர்*
*உப்பொய் ஒழுகை எண்ணுப மாதே*
*நோகோ யானே தேய்கமா காலை"* (புறநா.116 6-9)

மேலும், பாரியின் நாடு இப்போது வளம் இழந்து காணப்படுகிறது. (117) என்றும் பாரியின் நாட்டில் தெளிந்த நீரை உடைய குளம் பாதுகாப்பவர் இல்லாமல் உடைவது போன்று உள்ளது (118) என்றும் பறம்பு நாட்டில் நிழலே இல்லாத நெடிய வழியில் நிற்கும் ஒரு மரத்தைப் போல இரவலர்க்கு ஈயும் தன்மை உடையவன் பாரி (119) என்றும் பாரியின் சிறப்பையும் பறம்புமலையின் சிறப்பையும் கபிலர் நேரில் கண்டு உணர்ந்து தன் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை அப்படியே கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

பாரியின் மகளிர் இருவரையும் விச்சிக்கோவிடம் அழைத்துச் சென்று அவர்களை அறிமுகப்படுத்துகின்றார் கபிலர். இவர்கள் யார்? என்று கேட்பாயானால் முல்லைக்குத் தேர் வழங்கிய நிலைத்த புகழை உடைய பறம்பு மலைத் தலைவனாகிய பாரியின் மகளிர். அந்தப் பாரியின் நண்பன் நான். அதனால் இம்மகளிர் என்னுடைய மக்கள் ஆவர். அருள் நிறைந்த புலவனாகிய யான் இவர்களை அழைத்து வந்தேன். நாற்பத்து ஒன்பது தலைமுறையினராக விளங்கும் வேளிர்களில் வேளிராக விளங்கும் இருங்கோவே புலிகடிமால் என்னும் பெயரை உடையவனே.

*"இவர்யார் என்குவை யாயின் இவரே*
*ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்*
*முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசைப்*
*படுமணி யானைப் பறம்பில் கோமான்*
*நெடுமாப் பாரி மகளிர் யானே*
*தந்தை தோழன் இவரென் மகளிர்*
*அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே"* (புறநா. 201. 1-7)

பாரியின் மகளிர்களாகிய இவர்களை நான் அந்தணனாக இருந்த மணமகளிராகத் தர நீ ஏற்றுக் கொள்வாயாக என்று வேண்டுகிறார். இதுவே யான் வேண்டும் பரிசில் என்று யாசிக்கின்றார் கபிலர்.

*"பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும்ப இருப்பப் பாடாது ஆயினும்*
*கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த*
*பரந்துஓங்கு சிறப்பிற் பாரி மகளிர்*
*யானே பரிசிலன் மன்னும் அந்தணன் நீயே*
*வரிசையில் வணக்கும் வாள்மேம் படுநன்*
*நினக்கியான் கொடுப்பக் கொண்மதி...."* (புறநா 200 9- 15)

இருங்கோவேள் பாரி மகளிர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் என்னுடைய வேண்டுகோளை நீவிர் இகழ்ந்ததால் உனக்கு எந்த விதத் தீங்கும் கேடும் வராதிருக்க வேண்டும் என்று கூறிச் செல்கின்றார் கபிலர். (முன்னர் கழாத்தலை என்னும் பெயருடைய புலவரை இகழ்ந்த தன் காரணத்தால் எவ்வி என்பவனுடைய அரையம் அழிந்தது என்பதையும் நினைவுப்படுத்துகின்றார் கபிலர்).

கபிலர் தன்னுடைய நண்பர் பாரியை இழந்த பிறகு தம் நண்பருடைய மகளிரைத் தன்மகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஏற்ற இடத்தில் மணமுடித்துத் தர வேண்டும் என்ற எண்ணத்துடன் கடமையாகச் செய்யாமல் உணர்வுப் பூர்வமாக உணர்ச்சித் ததும்பத் தன்னணர்ச்சியோடு செய்துள்ளதை அவரது பாடல்கள் வாயிலாக அறியமுடிகிறது. செய்த செயல்களைக் காணமுடிகிறது. கபிலர் பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாக மட்டுமல்லாமல் ஒரு வரலாற்று ஆவணமாகவும் பார்க்கமுடிகிறது.

குடவாயில் கீரத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று அவர் தம் தன்னுணர்ச்சியை வெளிப்படுத்தி வியப்பில் ஆழ்த்துவதைக் காணலாம்.



ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் மாய்ந்த பின்னர் அவன் விரும்பிய முல்லைப்பூ வழியெங்கும் பூத்திருப்பதைப் பார்க்கின்றார் குடவாயில் கீரத்தனார். இளமையான ஆடவர் சூடிக்கொள்ளார். வளையல் அணிந்த மகளிரும் பறிக்க மாட்டார். நல்ல யாழின் தண்டினால் மெதுவாக வளைத்துப் பாணனும் சூடமாட்டான். பாடினியும் அணிந்து கொள்ளமாட்டாள். ஆற்றல் மிக்க வீரர்களை எல்லாம் வென்ற வலிய வேலையுடைய சாத்தன் இறந்தான். அவன் இறந்த பின்னே அவனுக்குரிய ஒல்லையூர் நாட்டில் முல்லையே நீ மலர்ந் தாயே? அதனால் என்ன பயன்? என்று தன்னுணர்ச்சியுடன் கூறுவதை அறியமுடிகின்றது.

*"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்*
*நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்*
*பாணன் சூடான் பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த*
*வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"* (புறநா 242)

மேலும் புறநானூற்றுப் பாடல்களில் காணலாகும். கையறுநிலை துறையில் அமைந்த பாடல்களும் தாபதநிலை (புற 250, 251, 252) யாவும் பெரிதும் தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே அமைந்துள்ளதையும் காணமுடிகிறது. அவையாவன பின்வருமாறு.

| | |
|---|---|
| ஆடுதுறை மாசாத்தனார் | புறநா 227 (கையறுநிலை) |
| உறையூர் இளம்பொன் வாணிகனார் | 264 |
| உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் | 241 |
| கருங்குழலாதனார் | 224 |
| கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் | 219 |
| கழாத்தலையார் | 270 |
| குட்டுவன் கிழார் | 240 |
| சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை | 245 |
| சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார் | 265 |
| தொடித்தலை விழுத்தண்டினார் | 243 |
| பாரிமகளிர் | 112 |

| | |
|---|---|
| பெருஞ்சித்திரனார் | 237 238 |
| பொத்தியார் | 217 220 221 222 223 |
| வெள்ளெருக்கிலையார் | 233 234 |
| தாயங்கண்ணியார் | 250 (தாபதநிலை) |
| மாற்பித்தியார் | 251 252. |

இவற்றுள் விரிவஞ்சி ஓரிரு பாடல்கள் மட்டும் இங்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. ஏனைய பாடல்களை ஆய்வாளர்கள் ஆராய வழிவகுக்கும்.

புறப்பாடல்கள் மட்டும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைய வில்லை. அகப்பாடல்களும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந் துள்ளதை ஓரிரு பாடல்கள் வாயிலாக காணலாம்.

தன் காதலனைக் காணாது வருந்திய ஆதிமந்தியின் தன்னுணர்ச்சிப் பாடல் இது. என் மாட்சியமைப்பட்ட தகுதிவாய்ந்த தலைவனை வீரர்கள் குழுமி விளையாட்டுப் போர் நடத்தும் விழாவிலும் மகளிர் கூடி ஒருவரை ஒருவர் தழுவி ஆடும் துணங்கைக் கூத்திலும் பிற எவ்விடத்திலும் காணப் படவில்லை. யானும் நாட்டிய மாடும் களத்திற்குரிய ஓர் ஆடற்கலைப் பெண்ணே என் கையிலிருந்த சங்கறுத்துச் செய்த ஒளிவிளங்கும் வளையல்கள் நெகிழுமாறு என்னை மெலிவித்துப் பிரித்த பெருமை பொருந்திய அந்த தலைவனும் ஓர் ஆடற்கலை வல்ல ஆண்மகனே அவனை எங்ஙனம் தேடிக் கண்டு மணப்பேன்? என்பது தெரிய வில்லையே.

*"மள்ளர் குழீஇய விழவி னானும்*
*மகளிர் தழீஇய துணங்கை யானும்*
*யாண்டும் காணேன் மாண்தக் கோனை*
*யானும்ஓர் ஆடுகள மகளே என்கைக்*
*கோடுஈர் இலங்குவளை நெகிழ்த்த*
*பீடுகெழு குரிசிலும்ஓர் ஆடுகள மகனே"* (குறுந் 31)

அன்பைப் பொழிந்த தலைவன் இப்போது பிரிந்துபோய் அன்பை மறந்து நடப்பதை நினைத்து தலைவி வருந்துவதைக் காமஞ்சேர் குளத்தார் தன்னுணர்ச்சி ததும்ப விளக்குகின்றார்.

தோழி என் நெஞ்சம் நோகும். என் நெஞ்சம் நோகும். தலைவன் பிரிவினால் யான் வருந்தி அழ இமையைத் தீய்ப்பதுபோல் கொட்டும்



வெப்பம் மிக்க என் கண்ணீரைத் தடுத்து என்னுடன் அளவளாவி மகிழ் வதற்குரிய நம் காதலர் அவ்வாறு நடந்துக் கொள்ளாது பிரிந்து வருத்துதல் கண்டு என் நெஞ்சம் நோகும்.

*"நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே*
*இமைதீயப்பு அன்ன கண்ணீர் தாங்கி*
*அமைதற்கு அமைந்தநம் காதலர்*
*அமைவில ராகுதல் நோம்என் நெஞ்சே"* (குறுந் 4)

பிற்காலத்தில் பாரதியார் பாடிய பாடல்கள் பல தன்னுணர்ச்சிப் பாடல்களே என்பதை அறியலாம்.

*"நல்லதோர் வீணை செய்தே - அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?....."*

இப்பாடல் தம்மிடையே இருந்த உணர்ச்சியால் வெளியானதால் இது ஒன்றிய பாடல் வகையைச் சார்ந்ததாகும். ஒன்றிய பாடல்கள் யாவும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்பதை இதனால் அறியலாம்.

இதனால் பாடல் எழுதிய புலவரின் சமகால வரலாற்றுச் செய்தி களை அறிந்து கொள்வதுடன் பாடல் தோன்றிய பின்புலமும் முழுமை யாக அறிந்துகொள்ளமுடிகிறது.

புலவர் தம் சமுதாயத்தில் மக்களிடம் கண்ட காட்சிகளையும் நுகர்ந்த அனுபவத்தையும் சேர்த்து அத்துடன் புலவர்தம் உள்ள உணர்ச்சியையும், மனநிலையையும் இணைத்தே பாடலைப் புனை கின்றனர். புலவரின் உணர்ச்சியும் மனநிலையும் தாம்கண்ட காட்சியை யும் கலவாமல் எந்த இலக்கியமும் உருவாவது இல்லை என்பதை இலக்கிய உலகம் ஒருபோதும் மறுத்ததில்லை.

எனவே செம்மொழி இலக்கியப் பாடல்களைப் புலவர்கள் எழுது வதற்கு உரிய முழுமையான பின்புலத்தை ஆராய இந்த ஆய்வினை மேலும் விரிவுபடுத்தலாம். தனித்தனி இலக்கியங்களை புலவர்களை மையமாகக் கொண்டு ஆய்வினை நிகழ்த்தினால் புலவர்தம் பாடல் தோன்றிய பின்புலச் சூழலை அறிந்துகொள்ள இயலும். இந்த ஆய்வின் முடிவுகள் செம்மொழித் தமிழ் இலக்கிய உலகிற்கு ஓர் ஒளி விளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை.

****

# திருப்புகழ் அமுதம்

## ஆய்வுக்கோவை




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் வேல். கார்த்திகேயன்**

**முனைவர் வே. மகேஸ்வரி**

"சுத்தச் சித்தத் தொறப்பத் தர்க்குச்
சுத்தப் பட்டிட் டமுறாதே"[6]

எனப் பாடியுள்ளார் திருவடியார்கள் அல்லது முருகப் பெருமானின் அருள் பெற்றவர்கள் அருளிய நூல்களை ஓதுதலும், அடியவர்களைக் கண்ணுறக் காணுதலுமே பெண்மயக்கம் அற, காரணிகளாகும். அவற்றால் உள்ளம் பல கூறுகளாக மாறாமல் ஒரே கூறாகச் சீராக இயங்கும். சுத்தமான அடியவர்களோடு சத்விசாரம் செய்வதே ஞானம் பெற வழிவகுக்குமென அருணகிரிநாத சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

## முடிவு

| | | | |
|---|---|---|---|
| அ) | உள்ளம் நிலை | அருள் நாட்டம் | பெண்∴ஆண் |
| | | உலகியல் நாட்டம் பொருள் பற்று | மண் |
| ஆ) | பெண் அல்லது | வடிவம் வண்ணம் | மயக்க உள்ளம் ஆண் |

இ) மயக்க உள்ளத்துக்குப் பெருங்காரணம்
நாலாவது அறிவும் ஐந்தாவது அறிவும்

ஈ) அடியவர்களோடு கலந்திருந்தால்
விரைவில் ஞானம் கிட்டும்

## மேற்கோள் விவரம்


1. மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம், சிவபுராணம்
2. திருவள்ளுவ தேவர், திருக்குறள், அவா அறுத்தல், எண்.368
3. அருணகிரி நாத சுவாமிகள், திருப்புகழ், முருகவேள் திருமுறை காஞ்சிபுரம், கழகப்பதிப்பு, பகுதி-3பக்கம்: 66, பாடல் தலைப்பு 471
4. மேலது, பாடல் தலைப்பு 472
5. மேலது, பக்கம் 70, பாடல் தலைப்பு 474
6. மேலது


❖ ❖ ❖



# 81. அருணகிரிநாதரும் வில்லிபுத்தூராரும்


முனைவர் **இரா ஜெகதீசன்**
பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வலூர்


தமிழ்நாடு பிறமொழி பேசுபவரால் ஆளப்பட்டுவந்த ஒரு காலகட்டம்தான் பதினைந்தாம் நூற்றாண்டாகும். விசயநகர வேந்தரின் சார்பாளர்கள் மாநில ஆளுநர்களாக ஆட்சி புரிந்து வந்தனர். கன்னடத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்களின் கையில் ஆட்சி இருந்தமையால் தமிழ் ஆட்சிமொழியாக இல்லை. புலவரைப் போற்றும் வாய்ப்பும் குறைந்தது. ஆனால், இறைவனிடம் பேரன்பு கொண்டோர் தாய்மொழிப் பற்று குன்றாதவாறு நற்றமிழ்ப் பாக்கள் பாடினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அருணகிரிநாதர்.

முருகன் புகழையன்றி வேறு எதையும் பாடாத பத்திமையுடையவராய் விளங்கியவர் அருணகிரிநாதர். இறைவனிடம் பேரன்பு செலுத்துவதில் குறைந்தவர்கள்கூட இவரது பாட ல்களை மனமகிழப் படியாடுவார்கள். அருணகிரிநாதரை ஒத்துப் பிறர் ஒருவர் இன்னும் தோன்றினாரல்லர்.

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழில் ஒரு பாடலேனும் பாடாத தமிழர் இலர் எனக்கூறலாம். கந்தரலங்காரம், கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல்விருத்தம், மயில் விருத்தம், திருவெழுக் கூற்றிருக்கை என முருகன் புகழ்பாடும் நூல்களைப் பாடியுள்ளார். எல்லா நூல்களும் மிகவும் புகழ்பெற்று விளங்குகின்றன. ஆயினும் அவரது வாழ்க்கை வரலாற்றைப் பல கதைகளோடு கூட்டி பேசப் பட்டு வருகின்றது.

அருணகிரிநாதர் இளமையிலேயே இலக்கிய இலக்கணங் களில் வைசத் திருமுறைகளில் சாத்திரங்களில் இதிகாச புராணங்களில் மொழிநூல்களிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். பெரும் புலமை பெற்ற இவர்தம் செல்வர்கள் மேல் கோவை, உலா, கலம்பகம், மடல் முதலிய பல சிற்றிலக்கியங்கள் பாடிப்

பொருள் பெற்றார் என்றும், அப்பொருளைச் சிற்றின்பத்தில் செலவிட்டு வாழ்ந்தார் என்றும், அதனால் சில தீராத நோய்கள் வர நொந்து பாடினார் என்றும் கதை வழங்கப்பட்டு வருகிறது. இவர்தம் கூடாவொழுக்கத்தை நினைந்து வருந்தி ஆறுமுகப் பெருமானிடம் தவங்கிடந்து அருள்பெற்றார் என்றும், அருள் பெற்றமையால் வாழ்க்கையில் வெறுப்புற்றதாகவும் அதனால், உயிர்விட எண்ணித் திருவண்ணாமலைக் கோயில் கோபுரத்தில் ஏறிக் குதித்ததாகவும் அப்போது முருகன் காட்சி தந்து, *முத்தைத் தருபத்தித் திருநகை* என்று முதலடி எடுத்து உதவினான் என்று கதை நீண்டு முடிகிறது. (வ.சுப.மாணிக்கம், தமிழ்ப்புலவர் வரலாற்றுக் களஞ்சியம், பகுதி-1, ப.94).

அருணகிரிநாதரின் நூல்களில் உள்ள அகச்சான்றுகளைக் கொண்டு திரு.ம.பாலசுப்பிரமணியம் அவர்களும், திரு. தணிகைமணி செங்கல்வராய பிள்ளையவர்களும் தனித்தனியே ஆய்வு செய்து வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர்.

அருணகிரிநாதர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். வேளாளர் குடும்பத்தில் தோன்றியவர். ஊர் திருவண்ணாமலை. காலம் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர்தம் திருப்புகழில் பிரபுட தேவ மாராயனைக் கூறியுள்ளார். இந்தப் பெயருடன் விசயநகர வேந்தர் மூவர் இருந்தனர் என வரலாறு காட்டும். ஆனால், இம்மூவரின் காலம் கி.பி.1406 முதல் கி.பி. 1465 வரைதாம் உள்ளது. இம்மூவருள் எவரை அருணகிரிநாதர் பாடினார் என்று தெரியவில்லை. மூவரும் பதினைந்தாம் நூற்றாண்டினராதலால் அருணகிரிநாதர் காலமறிவதில் குழப்பம் இல்லை.

முருகப்பெருமானையே பரம்பொருளாகக் கொண்டு வழிபட்டுப் பேறுபெற்றவர் அருணகிரிநாதர். சங்ககாலத்தில் முருகனைத் தமிழ்நாட்டார் வழிபட்ட வகைகளைப் பரக்கக் காணலாம். பழங்காலம் முதற்கொண்டு முருகனை வழிபட்டுப் பேறுபெற்ற பெரியோர் பலர். வடநாட்டில் முருகனைப் பற்றிய வரலாற்றைப் பலர் அறிந்திலர். ஆனால், முருகனுடைய கதைகளும் முருகனைப் பற்றிய தத்துவ உணர்வும் தமிழ்நாட்டில் நிரம்ப வழங்குகின்றன. முருகனைப் பற்றிய பாடல்களும் தோன்றின. முருகனின்



திருவருளில் ஈடுபட்டு மிகமிக விரிவாகத் திருப்புகழ் என்ற பாக்கடலை வழங்கியவர் அருணகிரிநாதர்தாம் என்பார் கி.வா.ஜகந்நாதன்.(சித்திவேழம், கட்டுரைகள்,ப.22).

முருகன் அருள் பெற்றவர் பலரானாலும் பிரணவ மந்திரம் அறிவுறுத்தப் பெற்றோர் மூவராவர். சிவபெருமான், அகத்தியருடன் அருணகிரிநாதரையும் சேர்த்துக் கூறுவர். அந்த அருணகிரிநாதர் உரிய காலத்தில் மணம் புரிந்து கொண்டு மனைவி மக்களோடு வாழ்ந்தார். எனினும் கன்ம வசத்தால் விலை மாதரோடுகூடிச் சிற்றின்பத்தில் மூழ்கி, கைப்பொருள் யாவும் இழந்து வறுமையுற்ற தாகவும், பிணிபற்றி நொந்து போனதாகவும், உறவும் உலகமும் வெறுத்து ஒதுக்கியதாகவும் அதனால் உயிர்விடத் துணிந்ததாகவும் பாடல் பாடியுள்ளார்.

***மனையவள் நகைக்க ஊரின் அனைவரும் நகைக்க லோக***
***மகளிரும் நகைக்க தாதை - தமரோடும்***
***மனமது சலிப்ப நாயன் உளமது சலிப்ப யாரும்***
***வகைமொழி பிதற்றி நாளும் - அடியேனை***
***அனைவரு மிழிப்ப நாடு மனவிருள் மிகுத்து நாடி***
***அகமதை எடுத்து சேமம் - இதுவோ வென்***
***அடியனும் நினைத்து நாளும் உடலுயிர் விடுத்தபோதும்***
***அணுகிமு னளித்தபாதம்*** - அருள்வாயே! *(திருப்புகழ், 392)*

உலகியலில் உழலும் மக்களுக்காகப் பாடிய பாடல் இதுவாகும். இப்பாடல் வழியே இவர் திருவண்ணாமலைக் கோபுரத்திலிருந்து கீழே குதித்தார் என்றும், அப்போது பெருமான் இவரைத் தாங்கிக் காத்துத் தரையில் விட்டார் என்றும் ஒரு கதை தோன்றிவழங்கி வருகின்றது. இது இவர் முருகன் அருள்பெற்றார் என்ற அளவுக்குத் தாம் பொருந்தும் என்பார் மு.அருணாசலம்.

பிரபுடதேவராயன் அருணகிரிநாதரின் பெருமையை உணர்ந் தான். தக்கபடி வழிபட்டான். முருகனின் திருக்கோலத்தினைத் தானும் கண்டுகளிக்க வழிகாட்டுமாறு கேட்டான். அந்த மன்னனின் அவைக்களப் புலவனாக இருந்தவன் சம்பந்தாண்டான். அவன் இறைவியை வணங்குபவன். அருணகிரிநாதர்பால் பொறாமை கொண்டான். இறைவியை அவையில் காட்டுவதாகக் கூறித்

# தொல்காப்பிய ஆய்வுக்கோவை



பதிப்பாசிரியர்

முனைவர் இரா. ஜெகதீசன்

முனைவர் வேல் கார்த்திகேயன்

# தொல்காப்பிய மாந்தர் கூற்றும் மாற்றும்

*பேராசரியர் இரா. ஜெகதீசன்*
*தமிழ்த்துறைத் தலைவர்*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர், 632 115.*

தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுவதும் சங்க இலக்கியக் கோட்பாடுகளாக அமைந்துள்ளன. இந்த இலக்கியக் கோட்பாடுகளில் ஒன்று மாந்தர் கூற்று. கேட்போர் யார் அவருடைய தகுதி என்ன என்பது அறிந்தே கூற்றினைக் நிகழ்த்துபவர் கூறுவதாகப் பாடல் புனைவது அவசியமாகிறது. எனவே மாந்தர் கூற்றினைக் கேட்போர் இன்றியமையாதவர்களாக விளங்குகின்றனர்.

தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலில் செய்யுட்குரிய பதினைந்தாவது உறுப்பாகக் கூற்று வகையைக் குறிப்பிட்டுள்ளார். அடுத்த பதினாறாவது உறுப்பாகக் கேட்போரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

அகத்திணைப் பாடல்கள் ஒவ்வொன்றும் படிப்போர் கண்முன் சிறு நாடகக் காட்சியைத் தோற்றுவிக்குமாறு அமைக்கப்பெறல் வேண்டும் என்பது தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகளுள் ஒன்றாகும். அத்தகுக் கோட்பாட்டு மரபினைப் புலப்படுத்தவே திணை, கூற்று, கேட்போர், களன் ஆகிய செய்யுள் உறுப்புகளை இயம்பியுள்ளார்.

நாடகப் பாங்குடைய அகப்பாடல் நிகழ்ச்சியைக் கூறும்பொழுது ஒருவர் சொல்ல, மற்றொருவர் கேட்குமாறு புனைய வேண்டுமென்பது தொல்காப்பியர் கருத்து. இக்கருத்தைச் செய்யுளியலில் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கேட்போரைக் கூறி வலியுறுத்துகின்றார்[1].

கூற்று நிகழ்த்துபவர் தாம் கூறுவதைப் பிறர் கேட்க வேண்டும் என்ற அவாவின் அடிப்படையிலேயே நிகழ்த்துவர். தொல்காப்பியர் கூற்றுகளைத் தொகுத்துரைக்கும் பொழுது, ஆங்காங்கே கேட்போரையும் வெளிப்படையாக இணைத்தே கூறியுள்ளார். அவற்றுள் சில வருமாறு,

" ... ... முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்"[2]

"பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும்"[3]

என்று தலைவன் கூற்றுகளில் பாகனும்,

*"னைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை யுயிர்த்தலும்"*[4]



"கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்"[5]

"உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்"[6]

என்று தலைவி கூற்றுகளில் தோழியும்,

*"தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணும"*[7]

என்று தலைவி கூற்றில் தலைவனும்,

*"பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்"*[8]

என்ற தோழிகூற்றில் தலைவனும் கேட்போராக இணைத்தே கூறியுள்ளதைக் காணமுடிகிறது.

இலக்கியத்தில் பாடப்பெறும் காதல், யாரோ ஒருவரை நோக்கிப் புலப்படுத்தும் உணர்ச்சியாக இருப்பினும், அஃது பிறரால் கேட்கப் படுவதற்கென்றே படைக்கப்பட்டது ஆகும். இவ்வாறு, பிறரால் கேட்கப்படாமல் தொடர்புடைய காதலர்க்கு மட்டுமே உணரத்தக்கதாயின் அதனை எவரும் பாட்டாகப் படைக்க முனைவதில்லை. எனவே, கேட்போர் என்னும் செய்யுள் உறுப்பு, கூற்று என்னும் உறுப்போடு ஒன்றிப் பின்னிப்பிணைந்திருப்பதை உணரமுடிகிறது.

இங்ஙனம் கூற்று-கேட்போர் என்னும் இரு உறுப்புகளும் பிரிக்க இயலாத ஒன்றாக விளங்குவதால், கூற்றுடன் தொடர்புடைய 'கேட்போர்' பற்றித் தொல்காப்பியர் இலக்கியக் கோட்பாடாகக் கூறியவற்றை இக்கட்டுரை ஆராய முனைகிறது.

## கருதுகோள்:

தொல்காப்பியர் கேட்போர் குறித்துக் கூறியுள்ள நூற்பாக்களை முதற்கண் சுட்டிப் பின்னர் அவற்றுக்கு உரையாசிரியர் தந்துள்ள விளக்கங்களைப் பெய்து, அதன்பின்னர் உரையாசிரியர்களுக்கு இடையே காணப்பெறும் கருத்து வேறுபாடுகளை எடுத்துக்காட்டித் தெளிவுறுத்தப் பெறும். கேட்போர் பற்றிய தொல்காப்பியரின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் 'கேட்போரை' வகைதொகை செய்து ஆய்ந்து கூறும் முயற்சி இங்கு மேற்கொள்ளப் பெறுகிறது.

தொல்காப்பியர் அகத்திணை மாந்தர் கூறும் கூற்றைக் கேட்பவராகவும் கேட்பவையாகவும் இருபிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றார்.[9]

**கேட்போர் - மாந்தர்**
**கேட்பவை - அஃறிணைப் பொருள்கள்**

என இருபிரிவினராதலால் இருபிரிவாகக் காணலாம்.

**கேட்போர் - மாந்தர்**

ஒருவர் கூறும் கூற்றை மற்றொரு மாந்தர் கேட்பதாகத் தொல்காப்பியர் செய்யுளியலில் ஏழு நூற்பாக்களில் கூறியுள்ளார்.[10] இந்த நூற்பாக்களில் யாருடைய கூற்றை யார் கேட்பர் என்ற செய்திகளை மட்டும் கூறுகின்றார். அங்ஙனம் கூறும்பொழுது தலைவன், தலைவி, பார்ப்பான், அறிவர், நற்றாய், கண்டோர், பரத்தை, வாயில்கள் முதலான எண்மர்தம் கூற்றுகளைக் கேட்போரை மட்டுமே விளக்கியுள்ளார்.

**தலைவன்-தலைவி கூற்றைக் கேட்போர்**

தலைவன்-தலைவி கூற்றை ஏனைய கூற்றுக்குரிய அனைவருமே கேட்டற்குரியராவர்.

> ***'மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்***
> **நினையுங் காலைக் கேட்குந ரவரே'**[11]

என்ற நூற்பாவில் 'அவரே' என்ற சுட்டு கூற்றுக்குரியரென வரையறுக்கப் பட்ட பன்னிருவருள் தலைவனும் தலைவியும் தவிர்த்துப் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, பாணன், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய பதின்மரை மட்டும் சுட்டுகின்றது. தலைவன் கூற்றையும் தலைவி கூற்றையும் மேற்சொன்ன பதின்மரும் கேட்பர். மேலும், தலைவன் கூற்றைத் தலைவியும் தலைவி கூற்றைத் தலைவனும் கேட்பர் என்பது ஒருபுடை தெளிவு. எனவே, 'தொல்காப்பியரின் கருத்துப்படி கூற்றிற்குரிய அனைவரும் கேட்போர் ஆவர்'.[12]

மேற்கண்ட நூற்பாவில், 'நினையுங்காலை' என்று தொல்காப்பியர் கூறியதை நச்சினார்க்கினியரும் பேராசியரும் 'தலைமகன்கூறப் பரத்தை கேட்டலும் தலைமகள்கூறப் பரத்தை கேட்டலும் புலனெறி வழக்கிற்கு ஏலாதென விலக்கப்பட்டன' என்றுகூறித் தலைவன் தலைவி ஆகிய இருவர்தம் கூற்றைக் கேட்போருள் பரத்தையைப் புலனெறி வழக்குக்கு ஏலாத சூழல்களில் விலக்குகின்றனர்.

தொல்காப்பியர் கற்பியலில் தலைவன் கூற்றுகளைத் தொகுத்து மொழியும்போது,

> ***'பிரிவ னெச்சத்துப் புலம்பிய இருவரைப்***
> **பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்'**[13] எனவும்,



> ***'காமக் கிழத்தி மனையோ ளென்றிவர்***
> **ஏமுறு கிளவி செல்லிய வெதிரும்'**[14]

எனவும் கூறுவதன் வாயிலாகக் காமக்கிழத்தி தலைவனது கூற்றைக் கேட்பாள் என்பதை அறியமுடிகின்றது. இவற்றால், புலனெறி வழக்குக்கு ஒவ்வாத சூழல்களிலன்றிப் பிறவிடங்களில் காமக்கிழத்தியாரகிய பரத்தை கேட்டற்குரிய பட்டியலில் இடம்பெறுவாள் என்பது போதரும்.

தலைவி பரத்தையரிடம் உரையாடுவதைத் தொல்காப்பியர்,

> ***'காமக் கிழத்தி தன்மகத் தழீஇ***
> **ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணும்'**[15]

என்று கற்பியலில் தலைவியின் கூற்றாக இயம்பியுள்ளார். இதனால், காமக்கிழத்தி, தலைவியின் புதல்வனைத் தழுவிக்கொண்டு விளையாடும் பொழுது, தலைவி பரத்தையோடு உரையாடுவதை உணரலாம்.

**நற்றாய் கூற்றைக் கேட்போர்**

நற்றாய் தலைவனோடும் தலைவியோடும் நேரடியாகப் பேசுதல் இல்லை என்பதைத் தொல்காப்பியர்,

> ***'கிழவன் றன்னொடுங் கிழத்தி தன்னோடு***
> **நற்றாய் கூறன் முற்றத் தோன்றாது'.**[16]

என்று கூறுகின்றார். தலைவன் தலைவி ஆகிய இருவரிடமும் முற்றத் தோன்றாது. எனவே, நற்றாய் ஏனோர் கேட்குமாறு கூற்று நிகழ்த்துவாள் என்பதை உய்த்துணரலாம். இவ்விருவர் கூற்றைக் கேட்போர் பற்றி,

> ***'பரத்தை வாயி லெனவிரு கூற்றுங்***
> **கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப்பய விலவே'**[17]

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இந்நூற்பாவிற்கு,

**பரத்தையென்று சொல்லப்படும் வேறுபாட்டிலும் வாயிலென்று சொல்லப்படும் வேறுபாட்டினுந் தலைமகனைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை'**[18]

என்று இளம்பூரணரும்,

**'பரத்தையும் வாயில்க ளுமென்னும் இரண்டு வேறுபாட்டின் கண்ணும் எழுந்த கிளவி கிழத்தி கேட்பாளாகக் கருதிச் சொல்லாக்காற் பயனில'**[19]

என்று பேராசிரியரும் உரைகூறி, 'தலைவிக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லினும் அமையும்' என்று விளக்கி விதிவலக்கு அளிக்கின்றனர். நச்சினார்க்கினியரும் இக்கருத்தையே மொழிந்துள்ளார்.[20] எனவே,

உரையாசிரியர்கள் கருத்துப்படி 'பரத்தை', 'வாயில' ஆகிய இருவரும் தலைவியோ தலைவிக்குப் பாங்காயினாரோ கேட்குமாறு கூற்று நிகழ்த்தலாம் என்பது உறுதியாகிறது.

### கண்டோர் கூற்றைக் கேட்போர்

கண்டோர் கூற்றை யார்யார் கேட்பர் என்பதைத் தொல்காப்பியர்,

**'ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு**
**கண்டோர் மொழிதல் கண்ட தென்ப'[21]**

என்று கூறியுள்ளார். இந்நூற்பாவில் வரும் ஒண்டொடி மாதர் என்ற சொற்கு,

**'ஒண்டொடி மாதராவார் நற்றாயும் தோழியும் செவிலியும் இவரொடுந் தலைவனொடுந் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப் பட்டது என்றவாறு'[22]**

என்று இளம்பூரணரும்,

**'ஒள்ளிய தொடியினையுடைய செவிலியோடும் தலைவனோடும் தலைவியோடும் இடைச்சுரத்துக் கண்டோர் மொழிந்தன'[23]**

என்று நச்சினார்க்கினியரும் உரை வரைந்துள்ளார். இதனால், இளம்பூரணர் கருத்துப்படி கண்டோர் கூற்றைக் கேட்போர் நற்றாய், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய ஐவராவர். நச்சினார்க்கினியர் கருத்துப்படி செவிலி, தலைவன், தலைவி ஆகிய மூவராவர். பேராசிரியரும் மூவரையே சுட்டிக் கூறுகின்றார். நற்றாயும் தோழியும் சுரத்திடைச் செல்வதாகப் புலனெறி வழக்கு இன்மையின் இளம்பூரணர் கருத்து வலிவுடையதாகாது எனலாம்.

### பார்ப்பார், அறிவர் கூற்றைக் கேட்போர்

பார்ப்பார், அறிவர் ஆகிய இருவர் கூற்றையும் கேட்போர் யாவர் என்பது குறித்துத் தொல்காப்பியர்,

**'பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி**
**யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே'[24]**

என்று மொழிந்துள்ளார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், 'பார்ப்பார் அறிவரென்று சொல்லப்பட்ட இருவர் கூற்றை எல்லோரும் கேட்கப் பெறுவர்' என்று உரைவரைகின்றார்.[25] பேராசிரியர், 'யார்க்கும் வரையார' என்பதில் உள்ள உம்மையே எச்சப்படுத்திச் சிலரே கேட்கப் பெறுவர் எனக்கூறிப், 'பார்ப்பார் கூற்றைத் தலைவன், தலைவி, செவிலி, நற்றாய்



ஆகிய நால்வரும் கேட்டற்குரியர்' என்று விளக்கந் தருகின்றார்.[26] நச்சினார்க்கினியர், பார்ப்பார் கூற்றைக் கேட்போராகக் கூறுவதில் பேராசிரியரை முழுவதும் உடன்பட்டு, அறிவர் கூற்றைக் கேட்போரில் மட்டும் தலைவனைச் சேர்த்துக் கூறுகின்றார்[27] இங்ஙனம் உரையாசிரியர்களின் மாறுபட்ட கருத்துகளுக்குக் காரணம்,

**'இடித்துவரை நிறுத்தலு மவர தாகுங்**
**கிழவனுங் கிழத்தியு மவர்வரை நிற்றலின்'[28]**

என்னும் நூற்பாவின் வாயிலாக அறிவர் கூற்றைத் தலைவன் தலைவி இருவரும் கேட்பர் என்று கூறியதே.

தொல்காப்பியர் கேட்போர்-மாந்தர் குறித்துக் கூறுவன இவ்வளவே. தோழி, செவிலி, பாங்கன், பாகன், பாணன், கூத்தர், விறலி, இளையர் ஆகிய எண்மர் கூற்றைக் கேட்போர் யாவர் என்பது பற்றி எவ்விடத்தும் இயம்பவில்லை.

### கேட்பவை - அஃறிணைப் பொருள்கள்

மிகவும் துன்பம் எய்திய காலத்திலோ எல்லையில்லா இன்பம் அடைந்த காலத்திலோ மாந்தர் தம்மனத்தில் உள்ளதை வாய்விட்டுச் சொல்ல விழைவது இயல்பு. அச்சூழல்களில் தம்பக்கத்தில் யாரும் இல்லாத நிலையிருந்தால் தம்நெஞ்சு கேட்குமாறோ அல்லது தம்கண்ணெதிரே தோன்றும் உயிர்ப் பொருள்கள் உயிரில்லாப் பொருள்கள் கேட்குமாறோ வாய்விட்டுப் பேசுதல் உண்டு. அவ்வாறு பேசும்போது நெஞ்சு, அஃறிணைப் பொருள்கள் ஆகியனவற்றைக் கேட்போராகச் சித்திரிக்கப் பெறுதல் புலனெறி வழக்காகும். அத்தகைய புலனெறி வழக்கில் அகப்பாடல்களைப் புனையலாம் என்பது தொல்காப்பியர் கருத்து.[29] அப்பாடல்களில் கேட்டற்குரிய அஃறிணைப் பொருள்களாக ஞாயிறு, திங்கள், அறிவு, நாண், கடல், கானல், விலங்கு, மரம், பொழுது, புள், நெஞ்சு ஆகிய பதினொன்றும் இவைபோன்ற பிறவும் இடம்பெறும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

### முடிவுரை:

சங்க அகப்பாடல்களைப் புலவர்கள் தாம் கூறுவதுபோல் அமைப்பின், அது நாடக அமைப்பில் அமையாது எனக் கருதி பாடல்களுள் பயின்றுவரும் மாந்தர் கூறுவது போலவும் கேட்பது போலவும் அமைத்துப் பாடியுள்ளனர். அகத்திணை நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கென்றும் கேட்பதற்கென்றும் மாந்தர் பலரை உருவாக்கி, அவர்களுள் ஒருவர் சொல்ல மற்றொருவர் கேட்குமாறு பாடல்கள்

புனைய வேண்டும் என்ற மரபினை - இலக்கியக் கோட்பாட்டினைத் தொல்காப்பியர் உருவாக்கி உள்ளார் என்பது போதரும். கேட்போர் இன்றி எந்தப் பாடலும் தோன்றுவதில்லை. எனவே, கேட்போரின் இன்றியமையாமை புலனாகின்றது.

***சான்றெண் விளக்கம்***

1. தொல். செய். 1:5-6
2. தொல். அகத். 41:19-20
3. தொல். கற். 5:48
4. தொல். கள. 20:12-13
5. மேலது, 20:22
6. மேலது, 21:3
7. தொல். கற். 6:15-16
8. மேலது, 9:8-9
9. தொல். செய். 192,193,195,196,197,199,201
10. மேலது, 192,193,195,196,197,199 பேரா.
11. மேலது, 196 பேரா.
12. பாலகிருட்டினன், நா., தொல்காப்பியப் பொருளதிகாரவழி நற்றிணை-ஓர்ஆய்வு, ப.150
13. தொல். கற். 5:37-38
14. மேலது, 5:49-50
15. மேலது, 6:18-19
16. தொல். செய். 192 பேரா.
17. மேலது, 199 பேரா.
18. மேலது, 190 இளம். உரை
19. மேலது, 199 பேரா. உரை
20. மேலது, 198 நச். உரை
21. மேலது, 193 பேரா.
22. மேலது, 185 இளம். உரை
23. மேலது, 193 நச். உரை
24. தொல். செய். 193 பேரா. உரை
25. மேலது, 189 இளம். உரை
26. மேலது, 197 பேரா. உரை
27. மேலது, 197 நச். உரை
28. தொல். கற். 14 நச்.
29. தொல். செய். 201 பேரா.



# தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் உயிரினச்செய்திகள் -ஓர் ஒப்பீடு

***முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்***
*இணைப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கேரளப்பல்கலைக்கழகம்*
*காரியவட்டம், கேரளா*

## முன்னுரை

தொல்காப்பியம் தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறவந்த நூலாயினும் அறிவியல், தத்துவம், மருத்துவம், வானவியல், சோதிடம் மற்றும் கணிதம் போன்ற துறைகளின் கருத்துக்களை வெளியிடும் ஓர் இலக்கண நூலாகவும் அமைந்துள்ளது. உலகில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மேலைநாட்டு அறிவியல் சிந்தனையாளர்களான தேல்ஸ் (கி.மு. 639-544) அனாக்ஸிமாண்டர் (கி.மு.611-547) ஷீனோ பேன்ஸ்(கி.மு. 576-480) எம்படோகில்ஸ்(504-433) அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322) போன்றோர்கள் வெளியிடாத பல அறிவியல் கருத்துக்களைச் சமணரான தொல்காப்பியர் வெளியிட்டுள்ளார்.

தொல்காப்பியம் கூறும் அறிவியல் கருத்துக்கள் ஆராய்ச்சி வசதி இல்லாத காலத்தில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஊடகங்கள் அடிப்படையில் கூறப்பெற்றவை. இக்கட்டுரையில் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் காணப்படும் உயிரினச் செய்திகள் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

## உயிரியல் சிந்தனைகள்

தாவர விலங்குகளைப் பற்றி விரிவாக அறியக்கூடிய ஓர் அறிவியல் பிரிவே உயிரியல் மேலைநாட்டு விஞ்ஞானிகள் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு கூட உயிரினப் பாகுபாட்டை தெளிவாக விளக்கவில்லை. ஆங்கில அறிவியலாரான ஜான்ரே கி.பி.1700-ஆம் ஆண்டில் முதன் முறையாக அறிவியல் முறையில் உயிரினங்களின் பாகுபாட்டைக் கூறியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஒன்பதாவது இயலான மரபியல் உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் தெளிவாக வகைப்படுத்திக் காட்டும் ஓர் இயலாக அமைந்துள்ளதை அறியலாம் உயிரினங்களின் வகைப்பாட்டைத் தொல்காப்பியர்,

செம்மொழி இலக்கிய

# உரைகளும் உரை ஆசிரியர்களும்



பதிப்பாசிரியர்

**இரா.ஜெகதீசன்**

குறிஞ்சிப் பதிப்பகம்



## அடியார்க்குநல்லாரின் சிலப்பதிகார உரைத்திறன்

*பேராசிரியர் இரா. ஜெகதீசன்*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர்.*

உரையாசிரியர்கள் அவ்வக்கால இலக்கிய மரபு, கலை, பண்பாடு இவற்றின் பெட்டகமாகத் திகழ்ந்தனர். இவ்வகையில் தனித்து நிற்பவர் அடியார்க்குநல்லார். சிலப்பதிகாரத்தின் அருமை பெருமைகளை அடியார்க்கு நல்லார் உரையால்தான் தமிழகம் அறிய வந்துள்ளது. பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழங்காற்பட்ட நல்லார் உரையின் வாயிலாகப் பழந்தமிழரின் பல்வகைக் கலைகளையும் பண்புகளையும் மரபுகளையும் இன்னபிற அரிய கருத்துக்களையும் அறிந்துகொள்ள முடிகிறது.

சிலப்பதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதிய அடியார்க்குநல்லார் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் முழுதுணர்ந்து பரந்துபட்ட தம் புலமையால் ஒருகலைக் களஞ்சியமாகத் தம் உரையை ஆக்கித் தந்துள்ளார். அவரது அரங்கேற்றுக்காதை உரை, இசை கூத்துக்களின் இலக்கணமாக மிளிர்கின்றது. அடியார்க்கு நல்லார் பற்றி அறிய உதவுவது அவரது உரைச் சிறப்புப் பாயிரம் மட்டுமே. இப்பாயிரம் பாடிய ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

பருந்தும் நிழலுமெனப் பாவும் உரையும்
பொருந்து நெறிஎல்லாப் பொருளும் - தெரிந்துஇப்
படியார்க்கு நல்லமிர்தம் பாலித்தான் நன்னூல்
அடியார்க்கு நல்லானென் பான்.

ஒருந் தமிழொடு மூன்றும் உலகின்புற வகுத்துச்
சேரன் தெரிந்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்
ஆருந் தெரிய விரித்துரைத்தான் அடியார்க்கு நல்லான்
காருந் தருவும் அனைய நிரம்பையர் காவலனே.

காற்றைப் பிடித்துக் கடத்தி லடைத்துக் கடியபெருங்
காற்றைக் குரம்பை செய்வார் செல்கை போலுமற்
காலமெனும்
கூற்றைக் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர்
கோனளித்த
சோற்றுச் செருக்கல்லவோ தமிழ்மூன்றுரை சொல்வித்ததே.



எனவரும் மூன்று சிறப்புப் பாயிரச் செய்யுட்களே இவ்வுரையாசிரியர் பெயர் 'அடியார்க்கு நல்லார்' எனவும், 'நிரம்பை' என்னும் ஊர்க்காவலர் எனவும், அவரை ஆதரித்தவன் 'பொப்பண்ண காங்கெயர் கோன்' எனவும் தெரிவிக்கின்றன.

டாக்டர் உ.வே.சா. அவர்கள் இவருக்கு 'நிரம்பையர் காவலன்' என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், 'நிரம்பை' என்னும் ஊர் கொங்குமண்டலத்தில் குறும்பு நாட்டில் பெருங்கதை ஆசிரியராகிய கொங்குவேளிர் பிறந்த விசயமங்கலத்தின் பக்கத்தில் உள்ளதென்றும் கொங்குமண்டல சதகம் தெரிவிக்கின்றது எனக் குறிப்பிடுவார்.[1]

**சமயம்:**

அடியார்க்குநல்லார்(ஞானசம்பந்தர், தேவாரம் 1766) என்ற பெயர் சிவனைக் குறிப்பதாலும் சிவபிரானைக் குறிக்கும் இடங்களிலெல்லாம் இறைவன் என நல்லார் குறிப்பிடுவதாலும் சரியை- கிரியை- யோகம்- ஞானம் பற்றி நல்லார் கூறுவன சைவ சமயக் கருத்துக்களாதலாலும் அவரைச் சைவர் என்பர். நல்லார் சைன சமயக் கருத்துக்களை மிகுதியாக எடுத்தாளுவதும் அவற்றில் ஈடுபட்டு உரை எழுதுவதும் இதனாற் சொல்லியது நமது தரிசனத்திற்குக் கடியப்பட்டவற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க.. எனச் சைனக் கொள்கையை உளப்பாட்டுத் தன்மையில் வுறுவதும் நல்லார் சமணர் என்பதை உறுதிப்படுத்தும். மேலும், தம் உரை முழுவதிலும் சைவ சமய நூலான திருக்கோவையாரை நான்கே இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். சமய நூல்களான சீவக சிந்தாமணி 48 இடங்களிலும், பெருங்கதையிலிருந்து 9இடங்களிலும், வளையாபதியிலிருந்து 5 இடங்களிலும், சூளாமணியிலிருந்து 2 இடங்களிலும், நாலடியாரிலிருந்து நான்கு இடங்களிலும், திரிகடுகத்திலிருந்து ஈரிடத்தும், நான்மணிக்கடிகை, பழமொழி ஆகியவற்றிலிருந்து முறையே ஒவ்வோரிடத்தும் மேற்கோள் காட்டியுள்ளார். சைவ வைணவக் காப்பியங்களான பெரியபுராணம், கம்பராமாயணம் பற்றி ஓரிடத்தும் குறிப்பிடாததும் நல்லார் சமணர் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது எனலாம்.

**காலம்:**

அடியார்க்கு நல்லார், இறையனார் அகப்பொருள் உரை, இளம்பூரணர் அரும்பதஉரை பற்றிக் குறிப்பதால் அவர்தம் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது தெளிவாகின்றது. கலிங்கத்துப்பரணி நூலை நல்லார் மூன்று இடங்களில் மேற்கோள் காட்டுகின்றார். கலிங்கத்துப்பரணியின் காலம் 12ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது

13ஆம் நூற்றாண்டின் தொடக்கம் எனலாம். இவ்வாறு பல சான்றுகளைக் காட்டி நல்லாரின் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு என்பர் ச.வே. சுப்பிரமணியன்.[2] இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என்று மு. அருணாசலம்[3] உரைப்பர்.

அடியார்க்கு நல்லார் உரை, நூல் முழுமைக்கும் கிடைக்க வில்லை. 19ஆவது காதையாகிய ஊர்சூழ்வரி வரை நல்லார் உரை கிடைத்துள்ளது. இடையில் கானல்வரிக்கு அவரது உரை கிடைக்கவில்லை. 30 காதைகளைக் கொண்ட சிலப்பதிகாரத்தில் 18 காதைகளுக்கே இவரது உரை கிடைத்துள்ளது. கானல்வரியில் கூறுதும் (3:13 உரை), அழற்படு காதைக் கண்ணே விளித்துக் கூறுதல் (3:106-107), கட்டுரைக் காதையுள் விரியக் கூறுவாம் (8:45-71 உரை) என்று நல்லார் குறிப்பிடுவதால் அவர் நூல் முழுமைக்கும் உரை எழுதியிருக்கலாம் என ஊகித்தறிய முடிகிறது.

அடியார்க்கு நல்லார் தம்உரையில் அரும்பதவுரையாசிரியரை மேற்கோள் காட்டுவதோடு எட்டு இடங்களில், 'உரைப்பாரும் உளர்', 'என்பாரும் உளர்' எனப் பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடவேறுபாடுகளால் (5:157-160, 5:235-240, 10:94-97, 16:117-120, 16:142-147, 18:2-7, 18:25-28) சிலப்பதிகாரத்திற்கு நல்லார் உரைக்கு முன்னர் வேறு பல உரைகளும் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

அடியார்க்குநல்லார் உரை பொது உரை மரபைப் பின்பற்றியே அமைந்துள்ளது. இப்பொது மரபுகளின் வழியே ஒவ்வொரு உரையாசிரியர்களின் தனித்தன்மைகளையும் காண முடியும். அவற்றை இனிக் காணலாம்.

### 1.பதவுரை:

மூலநூலில் வரும் அருஞ்சொல், தொடர் முதலானவற்றிற்குப் பொருள் தருவதே பதவுரை. உரையாசிரியர்கள் மூலநூலார் எடுத்தாண்ட தமிழ்ச்சொல் அல்லது தமிழ்ப்படுத்தப்பட்ட சொற்கு வடசொல் தருதல், வடசொல்லுக்குத் தமிழ்ச்சொல் தருதல், ஒருசொல் அல்லது தொடருக்குப் பல பொருள் தருதல், நயந்தோன்றப் பொருளுரைத்தல் முதலானவற்றைக் கடைபிடிக்கின்றனர். உரையாசிரியர்கள் பல தமிழ்ச்சொற்களுக்கு வடசொல் பொருள் தருவது அவர்தம் வடநூல் பயிற்சியைக் காட்டுவதோடு, தமிழ்மொழியில், வடமொழிக் கலப்பு மிகுதியாகிவிட்ட அவர்தம் காலச் சூழலையும் காட்டும். இந்நிலையில் நல்லார் பதவுரையும் சிறந்து அமைந்துள்ளது.



| | |
|---|---|
| திகிரி | - ஆக்கினா சக்கரம் (1:5) தமிழ்ச்சொல்-வடசொல் |
| நாகநீணகர் | - சுவர்க்கம் (1:21) |
| பகவான் | - கேவலஞானி (10:178) |
| சதுமுகன் | - நான்முகன் வடசொல்-தமிழ்ச்சொல் |
| அசுடு | - நடு (14:215) |
| அரந்தை | - துன்பம் (உ.பெ.க.3) |
| உழி | - அளவு (14:213) |
| தவ்வை | - தாய் (15:80, 16:35) |
| பாசவர் | - இலையமுது இடுபவர் பதவுரை கயிறு திரித்து விற்பவர் |
| விழ்குடி | - உழவின்மேல் விரும்புங்குடி யாவரும் விரும்பும்குடி |

### 2.கருத்துரை

உரைநூல்கள் பெரும்பாலும் பதவுரை, கருத்துரை, விசேடவுரை என்ற மூன்று பகுதிகளில் அமையும். விசேட உரையிலே பல்வேறு செய்திகளைத் தருவர். கருத்துரை பெரும்பாலும் பொருள்முடிவு பெறும் பாடலுக்கு அல்லது தொடர்களுக்குத் திரண்ட கருத்துரைக்கும் முறையில் அமையும். பொருள்முடிபுக்கு ஏற்பப் பல பகுதிகளாகப் பிரித்து, அதற்குத் திரண்ட கருத்து கூறுவதாய் அமைந்துள்ளது நல்லாரின் உரை. மிகச்சிறிய காதையான மங்கல வாழ்த்துப் பாடலை 21 பகுதிகளாகப் பகுத்து உரை தந்துள்ளார். இவ்வாறு, ஒவ்வொரு காதையும் பொருள்முடிபுக்கு ஏற்பப் பல பகுதிகளாகப் பகுப்பட்டு திரண்டகருத்து உரைக்கப் பட்டுள்ளது.

> நெடியோன் குற்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு (8:1-2)

என்ற அடிக்கு, வடக்கின்கண் வேங்கடமலையும் தெற்கின்கண் குமரிக்கடலும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் ஒழிந்த கடல்களுமே தமிழ்நாட்டுக்கு எல்லை என்று கூறுபடுத்த மூவேந்தருடைய குளிர்ந்த புனலையுடைய நல்ல நாட்டிடத் தென்க.. என்று நல்லார் கருத்துரை தந்துள்ளதைக் காணமுடிகிறது.

### 3.முடிப்புரை:

காதைச் சுருக்கமாக அல்லது ஒரு நீண்ட பாடற்கருத்துச் சுருக்கமாக அவ்வப் பகுதியின் இறுதியில் குறித்துச் சொல்வது உரையாசிரியர்தம் வழக்கம். இத்தகைய முடிப்புரை தருவதை நல்லார்

தர, இலக்கண விளக்கம் செய்ய ஆளப்படுகின்றது. பிறர் உரையை மறுக்கும் முகமாகவும் ஒருசில மேற்கோள் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

**6.இலக்கண மேற்கோள்கள்:**

அடியார்க்குநல்லார் தம்முரைக்கு ஆதாரமாகத் தொல்காப்பியத்தையே இலக்கணமாகக் கொண்டுள்ளார் என்பது அவர்தம் பதிக உரையின் வாயிலாக அறியமுடிகிறது. அன்றியும் அவர்தம் இலக்கண நூல் மேற்கோள்களை நோக்கும்போதும் இவ்வுண்மை புலப்படுகின்றது. தொல்காப்பிய நூற்பாக்களை 89 இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். தொல்காப்பியம் அன்றிப் புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாக்களை ஆறு இடங்களிலும், அணியியல் நூற்பா ஓரிடத்திலும் மேற்கோள் காட்டியுள்ளார்.

நானிலத்திற்குரிய முதல் கரு உரிப்பொருள் பற்றிப் பதிகஉரையில் விளக்குகின்றார். தரவு, தேவபாணி, கலிவெண்பாட்டு, பாட்டிடைவைத்த குறிப்பு, தொடர்நிலைச்செய்யுள், கொற்றவை நிலை, முதுபாலை, குடைச்சிறப்பு போன்றவற்றை விளக்கத் தொல்காப்பியத்தைத் துணை கொண்டுள்ளார்.

இவ்வாறு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி பற்றிய இலக்கணச் செய்திகளை விளக்க அடியார்க்கு நல்லாரால் இலக்கண மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**7.பிறர்உரையைச் சுட்டல்:**

தேவையான இடத்தில் பிற உரைநூல்களைத் தழுவிக்கோடலும் மறுத்தலும் பண்டை உரையாசிரியர்களின் உரைமரபாகும். இந்நிலையில் நல்லார் பெயர்ச் சுட்டிய நிலையில் அரும்பத உரையாசிரியர், இளம்பூரணர் ஆகிய உரையாசிரியர்களைச் சுட்டுகின்றார். சிலம்பிற்கு அரும்பத உரையன்றிப் பிற உரைகளும் உண்டென்பதை நல்லார் எட்டு இடங்களில் சுட்டிச் சென்றுள்ளார்.

தாதுறைப்ப (5:235) – 'தாதெறிப்ப' என்று பாடமோதித் 'தாது ஒளிவிட' எனப்பொருள் உரைப்பாருமுளர்.

வந்தீக்கு...காணீர் (16:11-12) இனி 'வந்தாய்க்கு' எனவும், 'காணின்' எனவும் பாடங் கூறுவாரும் உளர்.

அடியார்க்கு நல்லார், அரும்பத உரைக்கு மாறுபடுகின்ற இடங்களும் உண்டு. ஏறத்தாழ 99 இடங்களில் நல்லார் உரை மாறுபடுகின்றது. அவற்றுள் சில:



பெருங்குணத்துக் காதலாள் (1:28-29) -
- பெருங்குணத்தாற் காதலித்தவள்(அரும்பத.)
பெருங்குணங்களைக் காதலித்தவள்(அடியார்க்.)

பிண்டி (3:18)
- ஒற்றைக்கை: அவை பதாகை முதலாக இருபத்திரண்டு (அரும்பத.)
ஒற்றைக்கை: இணை வினைக்கை:
இது 33 வகைப்படும் (அடியார்க்.)

பிணையல் (3:18)
- இரட்டைக்கை: அவை அஞ்சலி முதலாகப் பதின்மூன்று (அரும்பத.)
-இரட்டைக்கை: அஃதாவது இணைக்கை.
அது 15 வகைப்படும் (அடியார்க்.)

**8.பொருள்கோள்:**

மூலநூலாசிரியான் கருத்து விளக்கத்திற்குச் சொற்களை மாறிக்கூட்டுவதும், கொண்டுகூட்டுவதும், வினைமுடிவு காட்டுவதும், சொல்வருவித்துப் பொருள் கோடலும் உரை மரபாகப் பண்டை உரையாசிரியர்கள் பின்பற்றியுள்ளனர். அடியார்க்கு நல்லார் வினை முடிபு காட்டால் (முடிப்புரை பார்க்க), சொல் வருவித்துப் பொருள்கோடல் ஆகிய இரு பொருள்கோள் மரபுகளையும் பின்பற்றியுள்ளதைக் காணமுடிகிறது.

சொல்வருவித்துப் பொருள் கொள்ளும்நிலை 18 இடங்களில் அமைந்துள்ளது. பொன்செய் கொல்லன் தன்கைக் காட்ட (பதி.20-22) எனும் பதிகவுரையில், கண்டு என ஒருசொல் வருவித்துப் பொருள் கொள்கின்றார்.

**9.பின்முன் நோக்கி உரை வரைதல்:**

உரையாசிரியர் நூல் முழுமையையும் மனத்தகத்தே இருத்தி உரை எழுதத் தொடங்குவதால், பின்-முன் உள்ள நிகழ்ச்சிகளையும் சொற்களையும் தொடர்களையும் இணைத்து உரை காண்பதைக் காணலாம். ஓரிடத்து உரை எழுதுகின்றபோது அதன் விளக்கத்தைப் பிறிதொரு இடத்துப் பார்க்க என எழுதும் வழக்கமும் நல்லாரிடம் காணப்படுகின்றது. ஏறத்தாழ 170 இடங்களில் நல்லார் சிலப்பதிகார வரிகளை மேற்கோள் தந்து உரை எழுதுவது இத்தகைய முழுமையுணர்வால் என்பது அறியலாம். 'நேறியின் நீங்கியோர்

நீர்மையோனாகி சிறுமையுற்றேன்' (14:17-20) என்ற ஊர்காண்காதை உரையில், 'வம்பப் பரத்தை வறுமொழியாளன் கூற்றான்' (10:219-228) முன்னிகழ்வை எடுத்துக்கூறி உரை வகுப்பதும் நல்லாரின் முழுமை உணர்விற்குச் சான்றாகும்.

**10. காரண காரிய முடிவு கூறுதல்:**

மூலநூலாசிரியர் ஏன் இவ்வாறு கூறினார்? அல்லது எதற்காக இதனைக் கூறாது விடுத்தார்? என்ற வினாவை எழுப்பி, அதற்கு விடை கூறுமுகமாக அமைவதே இவ்வகை உரை. இது உரையாசிரியரின் திறனாய்வுச் சிந்தனையைத் தெளிவுபடுத்தும். இவ்வகை உரை மரபை நல்லார் பல இடங்களில் பின்பற்றியுள்ளர்.

**முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது**
**அடிகள் நீரே அருளுக** (பதி.61-62)

எனச் சாத்தனார் கூற்றை விளக்கும் நல்லார், 'எனச் சொல்லியவாறோ எனின், இச்செய்கின்ற காப்பியம மூவேந்தர்க்கும் உரியதென்பதால், ஏனையோரை இவர் புகழ்ந்துரையார் ஆகலின். யாம் காப்பியம் செய்யக் கடவேம் என்பது கருதி நீரே அருளுக!' என ஏகார வினாப்பொருண்மை தோன்ற இதுகருதி, 'இது சொன்னதற்கு அவர் கருதியதன் பொருளிற்கு உடம்படாது சொல்லிற்கு உடம்படார் என்பதாயிற்று'.. என வினா-விடை முறையில் காரண-காரியப் பொருண்மை தோன்ற உரை வகுத்துள்ளார்.

**11. பாத்திரப் பண்புரைத்தல்:**

பல பாத்திரங்களைக் கொண்ட கதைத் தொடர்புடைய காப்பியத்திற்கு நல்லார் உரை எழுதியிருப்பதால், பாத்திரங்களின் அவ்வப்போதைய மனநிலைகளையும் பண்பு நலன்களையும் படிப்பவரின் உளங்கொளக் கூறவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றார். இந்நிலையில் கண்ணகி, கோவலன், கவுந்தி, பாண்டியன், சோழன் ஆகியோர் மனநிலைகளையும் பண்பு நலன்களை ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளார்.

**குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைத்த**
**இலம்பாடு நாணுந்தரும்** (9:70-71)

என்ற 'கோவலற்குச் சிலம்புள கொண்ம்' (9:73) என்கிறாள் கண்ணகி. இதற்கு சிலம்புள என்றாள். இவை ஒழிந்த கலன் எல்லாம் தொலைதலால். இவை அணியாதிருத்தலின் அவன் அறியானாகக் கருதினும், அவன் தளர்ச்சி வுறுதலால் தான், இவை உண்மை நினைத்துக் கூறினாள்



என்க. 'புலந்து கூறினாள் எனிற் கற்பிற் தன்மையன்றாம்' என உரை எழுதுகின்றார் நல்லார்.

**12. காப்பியக் கொள்கை கூறுதல்:**

இயலிசை நாடகப் பொருள், தொடர்நிலைச் செய்யுள், நாடகக் காப்பியம், காப்பியம், பெருங்காப்பியம் என்ற சொற்களால் காப்பியத்தைக் குறிக்கின்றார் நல்லார். 'தோல்' என்னும் வகுப்பில் அடங்கும் காப்பிய வகையே சிலப்பதிகாரம் என்பது அவர் கருத்து. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள் பயப்பதே காப்பியம் என்பது அவர் கருத்து. இத்துடன் இந்நூற் பொருள் கூத்திலக்கியத்திற்கும் நாடகத்திற்கும் உரியது எனவும் மொழிந்துள்ளார்(3:13).

**13. அணிநலம் கூறுதல்:**

இளங்கோ தம் இலக்கியப் படைப்பில் கையாண்டுள்ள உவமை முதலான அணிகளை உரையாசிரியர் என்ற நிலையில் நல்லார் எடுத்துரைக்கின்றார். இங்கு அடிகள் காட்டிய எல்லா அணிகளையும் நல்லார் வியந்து கூறினார் என்று கூறமுடியாது. சிலவற்றை மட்டும் பொருள் தெளிவிற்காக – பொருள் மயக்கம் ஏற்படாமல் படிப்பவர் நூலை நுகரும் முகமாகச் சுட்டிச் சென்றுள்ளார் என்று கூறலாம்.

உவமையணியை நல்லார் பண்பும் பயனும் கூடின உவமம், தொழில் உவமம், இல்பொருள் உவமம், புகழுவமம் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

திங்களைப் போற்றுதும் ... அளித்தலான் (1:1-2)
- இது பண்பும் பயனும் கூடிய உவமம்

ஞாயிறு போற்றுதும் ... திரிதலான் (1:4-6) - இது தொழிலுவமம்

கதிர் ஒருங்கிருந்த காட்சி போல - ஒருங்கிருத்தல் -
- இது இல்பொருள்உவமை (2:31)

அந்திமாலை சிறப்புசெய் காதை உரையில் (4:72-76) 'அன்னம்' என்றது முதல் 'விழிப்ப' என்னும் துணையும் கூறிய இவை உருவகம் என்னும் அலங்காரம் என்றுணர்க... என உருவக அணி குறித்துப் பேசுவார்.

**14. திணை-துறை விளக்கம் தருதல்:**

உரையாசிரியர்கள் சங்க இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் ஆதலானும், தொல்காப்பியப் பொருளதிகார அக-புறத்திணை ஒழுக்க

நெறிகளைக் கற்றுத் துறைபோகியவர்கள் ஆதலானும், காப்பியங்களிலும் இவற்றின் சுவடுகளை இனம்காண முயன்றுள்ளனர். அடியார்க்கு நல்லார் பதிக முதலிருவரி உரையில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலைத் திணைகட்கு உரிய முதல் கரு உரிப்பொருள்களை மிகவிரிவாகச் சிலம்பிலிருந்து எடுத்துக் காட்டுத் தந்து விளக்கியுள்ளார்.

ஊர்காண் காதையில், மறத்துறை என்பதற்கு வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி உழிஞை தும்பை என்ற ஏழு புறத்திணைகளைச் சுட்டுவர்(14). 'திங்களைப் போற்றுதும் என்பது நடைமிகுந் தேத்திய குடைநிழல் மரபு எனும் துறை'(1:1) என்றும், 'சோழன் ஒருவன் வாளும் குடையும் மயிர்க்கண் முரசும் நாளொடு பெயர்த்து வாள்நாட்கோள், குடைநாட்கோள், முரசுநாட் கோள் என்னும் துறை' (5:91-92) என்னும் வேட்டுவவரி முழுவதையும் கொற்றவையைப் பராவும் புறத்துறையாகக் கொண்டு 'கொற்றவைநிலை, கொடை, அவிப்பலி, பலிக்கொடை, வெட்சிப்புறனடை' முதலான துறைகளைக் கூறிச் செல்வர். ஆய்ச்சியர் குரவைப் பாடல் மூன்றினை (17:29-31) பூவைநிலைத் துறையாக விளக்கிக் கூறியுள்ளார்.

## 15. இசை நாடகக்கலை விளக்கம் கூறுதல்:

உரையாசிரியர்களில் நல்லாரைத் தனித்து இனம்காணச் செய்வது அவர்தம் இசை, கூத்துக்கலைப் புலமையே. இசை, நாடகத் தமிழ்நூல்கள் அழிந்த நிலையில், இவ்விரு கலைகளின் காப்புப் பெட்டமாகத் திகழ்வது நல்லார்தம் உரையே.

நல்லார், இசைத் தமிழுக்கு ஆதாரமாகச் சிகண்டியார் செய்த இசைநுணுக்கம் நூலையும், யாமளேந்திரர் செய்த இந்திரகாளியம் நூலையும் குறிப்பிட்டுள்ளார். தவிர தம்காலத்தே இறந்துபட்ட பெருநாரை, பெருங்குருகு, தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலான இசைத் தமிழ் நூல்களையும் குறிப்பிட்டுள்ளார். இசைக்குப் பிறப்பிடம், ஆளத்தி, பண்பகை 103, செம்பாலையுட் பிறக்கும் எண்வகைப்பண்கள், ஆசான் பண்ணின் நான்கு சாதி, பதினொரு வகைப் பண்ணிர்மை, 11,991 வகை ஆதியிசை, பாலைப்பண் நான்கு, பன்னிரு பாலையாழில் பிறக்குமுறை, அகம்புற நாடக இசைப்பாடல்கள், ஒன்பதுவகை இசைப்பா, பத்துவகை இசையளவு பா, இசைக்கருவிளான யாழ், அதன் வகைகள், யாழ் வாசிக்கும் முறைகள், குழல் கருவியின் இலக்கணம், தண்ணுமை முதலான 31 தோற்கருவிகள் முதலான இசை பற்றிய பல்வேறு செய்திகளை மிகவும் விரிவாகத் தந்துள்ளார் நல்லார்.



நாடகத் தமிழுக்கு ஆதாரமாக அறிவனார் செய்த பஞ்சமரபு, ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதீயம், மதிவாணர் செய்த நாடகத்தமிழ்நூல் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். தவிர மறைந்துபோன நாடகத்தமிழ் நூல்களான பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் பற்றியும் தம்பாயிர உரையில் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

கூத்துக் கலையைப் பொறுத்தமட்டில், மிக விரிவான விளக்கத்தைத் தருகின்றார். மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல், எண்வகை வரிக்கூத்துகள் பற்றியும் விளக்கிச் சென்றுள்ளார். இருவகைக் கூத்தின் இலக்கணம், ஒன்பான் சுவை அவிநயம், கூத்துக்கலை முத்திரை தவிர கூத்து நிகழும் முறை, ஆடரங்க அமைப்பு, தலைக்கோல் பற்றி நல்லார் தரும் விளக்கங்கள் வியப்பில் ஆழ்த்துகின்றன.

## 16. வழக்கு மரபு சுட்டுதல்:

தொன்றுதொட்டு வரும் தமிழர் மரபு உலகியல் வழக்கு, பழமொழிகள் முதலானவற்றைச் சுட்டிச் செல்வது உரையாசிரியர்களின் வழக்கம். இலக்கியம் மரபுவழிப் பட்டதாகலின் அம்மரபு எங்கெங்கே இலக்கியங்களில் போற்றப்படுகின்றன என்பதைக் காட்டுவது உரைநூலாரின் கடமையாகின்றது.

புரையோய் போற்றி(13:92) என்ற மாதவி மடல் பற்றிய உரையில், 'குரவர்க்குக் காப்புகளைக் குறித்துப் போற்றி என்றல் மரபு என்கிறார். சுடுமண் ஏறா ...கடிமனை' (3:39-40) என்பதன் உரையில், 'பதியிலாரிற்குடிக் குற்றப்பட்டாரை ஏழு செங்கல் சுமத்தி ஊர்சூழ்வித்துப் புறத்திடுதல் மரபு' என்பர்.

பணிமொழி(8:13) என்பது பணிவிடை என்னும் வழக்கு. அடிகள் நீரே அருளுதீர் ஆயின் (10:62) நீயிரே இது செய்வீராயின் என்றது ஒரு வழக்கு. பணிந்து, நெளிந்து, சிறுமியர் என்பன குடநாட்டர் வழக்கு. புதை என்பது மலைநாட்டு வழக்கு. நாத்தாண் நங்கை (16:19) என்பது அக்கால வழக்கு. இவ்வாறு பல இடங்களில் மரபையும் வழக்கையும் பற்றிப் பேசியுள்ளார்.

## 17. புராண வரலாற்றுக் குறிப்புகள் தருதல்:

இறையியல்புப் பழங்கதையும் வரலாற்றுப் பழங்கதையும் பின்னிப் பிணைந்து அமைவதே காப்பியம் என்பர். மூலநூல் ஆசிரியர் ரத்தினச் சுருக்கமாகச் சொல்லியப் புராணச் செய்திகளை விரித்துக் கூறுதல் உரையாசிரியர்களின் கடமையாகும். இந்நிலையில் நல்லார்

ஊர்வசி (6:18-25) சயந்தன்(3:14) ஆகியோர் பெற்ற சாப வரலாற்றை நீண்ட இருபாடல்கள் வாயிலாக விளக்கிக் கூறியுள்ளார். இதுபோன்றே கீரிப்பிள்ளை-பார்ப்பனி கதை, நாளங்காடி பூதக்கதை, சிகண்டி சாரகுமாரன் வரலாறு, வேலெறிந்து கடலை வற்றச்செய்த பாண்டியன் வரலாறு (11:17-20) பழந்தமிழகமும் முச்சங்கமும் பற்றிய வரலாறு(உ.வரா.பா.28:1-2) ஆகியவற்றையும் நல்லார் அழகுற விளக்கிச் சென்றுள்ளதைக் காணமுடிகிறது.

## 18. சமய தத்துவ விளக்கம்:

சமயக் கொள்கையைப் பொறுத்தவரை நல்லார் எல்லாச் சமயங்களையும் நன்குணர்ந்து போற்றுகின்றார். நால்வகை தேவர், வேறு கணங்கள்(5:176-178), பஞ்ச பரமேட்டிகள்(10:15-25), பஞ்சமந்திரம்(10:98-101), மூன்று அதிசயம்(10:156-163), எண்வகைக் கன்மம்(10:177), எண்குணம்(10:138), முக்குடை(11:1-4) முதலானவை பற்றி நல்லார் தரும் விளக்கங்கள் குறிப்பிடத்தக்கன. துறவறம் பற்றி விளக்கம் தருகையில்,

'துறவறமாவது நாகம் தோலுரித்தாற் போல, அகப்பற்றும் புறப்பற்றும் அற்று இந்திரிய வசமறுத்து முற்றுந் துறத்தல், அதன் துறையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. அவற்றுள், சரியை- அலகிடல் முதலியன. கிரியை- பூசை முதலியன, யோகம் - எண்வகைய. அவை: இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்ப'. எனக்கூறிப் பின்னும் இவ்வெண் வகை யோகம் பற்றி விளக்கம் தந்துள்ளார் (14:11-12). இது இவரது சமயத் தத்துவச் சிந்தனைக்குச் சான்றாக விளங்குகின்றது.

## 19. உரை நயம் காட்டுதல்:

நல்லாரின் உரைநடை நயம், திறனாய்வு நெஞ்சம் வாசகரது மனநிலை உணர்ந்து உரை வகுத்தல், கால உணர்வுடன் உரை எழுதிச் செல்லுதல் முதலானவை அவரது உரை நயத்திற்குச் சில சான்றுகளாகும். நல்லார் நடை சில இடங்களில் கவிதைத் தன்மை பெறுகிறது. பல உருபுகளை அடுக்கித் தொடரமைக்கும் முறை, வினாவிடை நோக்கில் உரை கூறல் முதலானவை அவரது நடை நயத்திற்குச் சான்றாம். பதிக முதலிரு வரியுரை,

குமரியொடு வடவிமயந்
தொகுமொழிவைத் துலகாண்ட
சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்....



என 26 வரிகள் கொண்ட ஒரு நிலைமண்டில ஆசிரியப்பாவைக் கவிதை நடையில் எழுதியிருப்பது அவரது கவிதை நடையைக் காட்டுகின்றது. இதுபோன்று பல இடங்களில் அவரது கவிதை நடையைக் காணலாம்.

மங்கல வாழ்த்துப் பாடல் உரையில் கண்ணகியை முற்கூறினார். பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான் என்றும், ஆய்ச்சியர்குரவை உரையில் இவற்றுள் சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியது என்னையெனின், 'இது மதுரைக் காண்டமாதலானும், இக்காப்பியம் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேரமுனி யாதலானும், முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது எனச் சாத்தனார் கூறினமையாலும் என்க' என்றும் நல்லார் எழுதும் உரை அவரது திறனாய்வுத் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

## 20. பாடபேதம்:

ஓலைச் சுவடியில் எழுதப்பட்ட இலக்கியங்கள் காலஓட்டத்தில் பிற ஏடுகளில் பிரதி செய்யப்படுகின்ற பிழைகள் பல. இப்பிழைகளே பல பாடபேதங்களை உருவாக்குகின்றன. இவற்றில் எது மூலபாடம் எனக் காண்பது மிக அரிய செயல். சிலப்பதிகாரத்தில் ஏறத்தாழ 1276 பாட வேறுபாடுகளைப் பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார். அடியார்க்கு நல்லார் 37 பாட வேறுபாடுகளைக் காட்டி அவற்றிற்கு உரையும் கூறுகின்றார். அவற்றுள் சில வருமாறு:

1. கிளர் முத்தொழுக்கத்து (5:150)
   – கிளை பாடமாயின் கொத்தாகத் தோன்றும் முத்தென்க.
2. உள்கை நறுந்தா துறைப்ப மீதழிந்து (5:235)
   – தாதெறிப்ப என்று பாடமோதித் தாது ஒளிவிட எனப் பொருள் உரைப்பாரும் உளர்.
3. திருத்துவேல் அண்ணற்குத் தேவன் ஏவ (6:12)
   – தேவர் என்பது பாடமாயின் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி என்க.

## முடிவுரை:

அடியார்க்கு நல்லார் உரை எதுகை மோனையுடன் இனிய ஓசையுடன் கவிதைபோல் அமைந்துள்ளது. ஒவ்வொரு காதையிலும் முன்பின் நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்குவது இவரது இயல்பாக அமைந்துள்ளது. மூலபாடத்தில் திசைச்சொல்லும் பழமொழிகளும் இடம்பெறின் அவற்றை ஆய்ந்து உரைத்துள்ளார். ஒவ்வொரு காதையின் ஒவ்வொரு பகுதிக்கும் பொழிப்புரை தந்து, அதன்கீழே அருஞ்சொற்பொருள்,

விளக்கம், நயம், மேற்கோள், இலக்கணக்குறிப்பு ஆகியவற்றைத் தந்து விளக்கிச் செல்லும் பண்பு இவரிடம் காணப்படுகின்றது. அரங்கேற்று காதைக்கு இவர் எழுதியுள்ள உரைவிளக்கம் நுண்கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

சிலப்பதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதிய நல்லார் தனக்கென ஓர் உரை இலக்கியக் கோட்பாட்டை - மரபை உருவாக்கித் தனிச் சிறப்புடன் பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய்ப் பொலிகின்றது. இவ்வுரை பிற்கால ஆராய்ச்சி அறிஞர்கட்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக முன்னோடியாகத் திகழ்வதைக் காணமுடிகிறது. அவரது உரை சிலப்பதிகார முழுமைக்கும் கிடைத்திருப்பின் சிலப்பதிகாரக் காப்பியச் செழுமை இன்னும் ஒருபடி உயர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சுருங்கக் கூறின், சிலப்பதிகாரத்தில் தொட்ட இடமெல்லாம் கலைமணம் கமழச் செய்த இளங்கோவடிகளைக் காட்டிலும், உரை வரைந்த இடங்களிலெல்லாம் தமது புலமைப் பரப்பைப் பரவச் செய்து அனைவரையும் வியக்க வைத்துள்ள அடியார்க்கு நல்லாரைத் தமிழுலகம் என்றும் போற்றும்.!

சான்றெண் விளக்கம்:

1.உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகாரம், 3ஆம் பதிப்பு. முடிவுரை,ப.13.
2.ச.வே.சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப.53.
3.மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 12ஆம் நூற். நூலறிமுகம்.

பார்வை நூல்கள்
1. சிலப்பதிகாரம், உவேசா. 3ஆம் பதி. சென்னை
2. அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ச.வே. சுப்பிரமணியன், மணிவாசாகர் பதிப்பகம், சென்னை.
3. தமிழ் இலக்கிய வரலாறு, மு.அருணாசலம்.
4. உரையாசிரியர்கள், மு.வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.



## பரிமேலழகரின் உரைத்திறன்

*மு. ஜெயலட்சுமி*
*தேர்வுநிலை கூட்டுறவு சார்பதிவாளர்*
*(பணி நிறைவு)*
*குரோம்பேட்டை, சென்னை 44.*

### முன்னுரை

சங்க இலக்கியம், தொல்காப்பியம் போன்ற பழைய இலக்கிய, இலக்கணங்களைப் புரிந்து கொள்ள நமக்குப் பெரிதும் துணை நிற்பன. அவ்விலக்கியங்களுக்கான உரைகள்தாம் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது. உரைகள் மூலநூலை ஒரு குறிப்பிட்ட கால மொழிக்குப் புடை மாற்றம் செய்து தருவதே அடிப்படை நோக்கம். மூலநூலை உரையாசிரியர் தாம் வாழுங்காலத்து மொழியில் விளக்குவதாகவே உள்ளது. அந்த வகையில் திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகரின் உரைத் திறன் சிறப்புக்குரியது. இத்தகையச் சிறப்புகள் எவையெவை என்பதை இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கம்.

### உரைப் பரிமாணங்கள்

"பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதிகாரம் துணிபு பயனொடு
ஆசிரிய வசனமென்று ஈரேழு உரையே" (நன். பொ.20)

என்பது உரையின் பொது இலக்கணம். பாடம் சொல்லுதல், சூத்திரத்தின் கருத்துரைத்தல், சொல்லின் வகைப்பாட்டைக் குறிப்பிடல், பதப் பொருளாகிய சொற்பொருள் கூறல், பொழிப்புரைக் கூறல், உரிய உதாரணத்தைக் காட்டுதல், இதுவே இச்சொற் பொருள் என முடிவுகட்டுதல், இலக்கணத்திற்குச் சரியான ஆசிரியவசனம் எனப்படும் மேற்கோள் காட்டுதல் என்பன போன்ற பதினான்கு கூறுகளை உடையதாக இந்தப் பொது இலக்கணம் வரையறுக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் சொற்பொருள் என்பதையே மையப்படுத்தியவையாக உள்ளன. எனவே உரைகளின் பங்கு நூலுக்கானப் புரிதலில் முக்கியமானதாக உள்ளது. இதனால்தான் அந்த மரபு இன்றுவரை தொடர்ந்து இருந்து வருகின்றது என்று தமது நூலில் குறிப்பிடுகிறார் (பெ.மாதையன், உரையியல்).

### திருக்குறள் உரைகள்

தமிழ்மொழியில் தோன்றிய நூல்களுள் திருக்குறளுக்குப் பலவகையானச் சிறப்புகள் உண்டு. உரைகள் காலந்தோறும் தோன்றி

# வைணவ இலக்கியங்கள் ஆய்வுக் கோவை



முனைவர் வேல் கார்த்திகேயன்
முனைவர் இரா. ஜெகதீசன்
முனைவர் வேல். மகேஸ்வரி

பெறுகிறது. இத்தகைய நிலையில்தான் மார்கழி மாதத்தில் பொழுது விடியும், நேரத்தில் நிராடி நோன்பு நோற்கும் முறை உருவானது.

தமிழர்கள் வாழ்க்கையை ஆரோக்கியத்துடனும், சிந்தனை நோக்கிலும் அமைத்துக் கொண்ட பெற்றி புலனாகிறது. வழிபாட்டின் நோக்கம் உள்ளும் புறமும் தூய்மையைப் பெற்று நலமாக வாழவழி செய்வதே எனலாம்.

**''மார்கழி திங்கள் மதிநிறைந்த நன்னாளில்**
**நீராடப் போதுமீர் போதுமினோ நேரிழையீர்''** (திருப்பாவை 1-2)

என்று பாடிய ஆண்டாள் விடியற்காலையில் அனைவரையும், அழைத்து பாவை நோன்பை கடைப்பிடிக்க வேண்டுவது சிறப்புக்கு உரிய ஒன்றாகும்.

### காலப்பிரிப்பும் வழிபாடும்

சூரியன் தை மாதம் முதல் ஆனி மாதம் வரை வடக்கு திசையில் பயணிப்பதை 'உத்திராயணம்' என்னும் கோடைக்காலம்.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை சூரியன் தெற்கு திசையில் பயணிப்பதை 'தட்சிணாயன காலம்' எனும் மழைக் காலம் ஆகும். மார்கழி மாதம் தேவர்களின் இரவு காலம் முடிந்து வைகறை பொழுதாக அமைகிறது. இதை 'உஷா காலம்' என்றும் வைகறைப் பொழுது என்றும் கூறுவர். விடியற்காலை 4மணி முதல் 6மணி வரையுள்ள காலம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. பனிவிழும் அவ்வேளையில் அதிகாலை வழிபாடு உடல் சுறுசுறுப்புக்கும் உள்ளத் தெளிவுக்கும் எப்போதும் சிறந்தது.

தனுர் மாதமாகிய இம்மாதம் பகவானை தியானிப்பதும், அவனை நினைப்பதும் சகல சுகத்தையும் அளிக்கிறது. மார்கழி மாதம் விரதம் இருப்போர் இந்தப் பிறவியிலும், மறுபிறவியிலும் அனைத்து நலன்களும் கிடைக்கப்பெறுவர். உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் இந்த விரதம் பிறவிப்பயனே ஆண்டவனை அடைவதற்காகத் தான் என்பதை உணர்த்துகிறது.



# சரணாகதி (பிரபத்தி) தத்துவமும் வேதாந்த தேசிகரும்

முனைவர் இரா. ஜெகதீசன்
*பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்*
*வேலூர் 632 115.*

இந்தியத் தத்துவங்கள் வாழ்வின் தேடலைப் பிரதிபலிப்பதாய் அமைகின்றன. இவை தத்துவத்தைக் கூறுவதோடு மனித வாழ்வியலின் ஒழுக்க விதிகளையும் உருவாக்குகின்றன. மேலும் ஒருவன் பெறும் நன்மைகளையும் தீமைகளையும் விரிவாகப் பேசுகின்றன. இத்தகைய மனித வாழ்வியல் போக்குடன் அமைந்த தத்துவமரபு வேத காலத்தில் இருந்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது.

வேதங்கள் பிரமாணங்கள் என்றழைக்கப்படும். வேதச்சார் புடைய உபநிடதங்கள், ஆகமங்கள் அறுவகை சமயங்களைக் குறிப்பிட்டுள்ளன. இவ்வறுவகை சமயங்களும் சிவன்(சைவம்), திருமால் (வைணவம்), சக்தி (சாக்தம்), குமரன்(கௌமாரம்), சூரியன்(காணபத்யம்), இந்திரன்(சௌரம்) ஆகிய கடவுளர்களைக் கொண்டு அமைகின்றன.

இவற்றுள், வைணவ நெறி திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டமைந்துள்ளது. வேதகால பிரமாணங்கள் முதற்கொண்டு, தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பத்துப்பாட்டு முதலான நூல்களில் திருமாலின் அவதாரச் சிறப்புகள் ஆங்காங்கே சுட்டப்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

சங்க காலத்திற்குப் பிறகு சமணம், பௌத்தம் ஆகிய அவைதீக மதங்கள் தமிழகத்தில் செல்வாக்கு பெற்றன. இதனால் சிலகாலம் வைணவ சமயம் வளர்ச்சியில் தொய்வு ஏற்பட்டது. இத்தொய்வை மீறி வைணவநெறி கி.பி. ஆறாம் நூற்றாண்டில் செல்வாக்குடன் வளர ஆரம்பித்தது.

முதலாழ்வார் மூவர் தொடங்கிப் பன்னிரு ஆழ்வாழ்கள் திருமாலின் பல்வேறு அனுபவங்களைப் பாடிப் பரவினர். ஆழ்வார்

பாடல்களைத் தொகுத்த நாதமுனிகளும் நியாயபத் தத்துவம் முதலான நூல்களைப் படைத்துள்ளார்.

நாதமுனியைத் தொடர்ந்து இராமானுஜர், கூரத்தாழ்வார், நம்பிள்ளை, அழகிய மணவாள சீயர், வேதாந்த தேசிகன், வடக்குத் தீருவீதிப்பிள்ளை, பிள்ளை லேகாசிரியர், அழகிய பெருமாள் நயினார், மணவாள மாமுனிகள் முதலான பல அடியார்கள் தோன்றி நூல்களாலும் பிரபந்த உரைகளாலும் வைணவத் தத்துவங்களை நெறிகளைச் செழிக்கச் செய்தனர்.

பக்தி என்பது இறைவன்பால் கொண்ட பேரன்பாகும். இறைவனை உறுதியாக நம்பி இறைவன்பால் உய்த்திட வல்லது பக்தி. இவ்வுலகில் பிறந்து துன்ப வாழ்விலிருந்து விடுதலை அடைய உதவும் வழிகள் இரண்டு. அவையாவன:

1. பக்திநெறி
2. பிரபத்தி நெறி அல்லது சரணாகதி பக்திநெறி என்பது எட்டு அங்கங்களும் மூன்று நிலைகளையும் கொண்டது. அவை:

| | | |
|---|---|---|
| 1. இயமம் | - | தீயன கைக்கொள்ளாமை |
| 2. நியமம் | - | ஒழுக்கமும் இறைநம்பிக்கையுடனும் நடத்தல் |
| 3. ஆசனம் | - | ஆசனப் பயிற்சி |
| 4. பிராணாயாமம் | - | புலன்களை ஒருமுகப்படுத்துதல் |
| 5. பிரத்தியாகாரம் | - | புலனடக்கம் |
| 6. தாரணை | - | இறைவடிவத்தை மனதில் பதித்தல் |
| 7. தியானம் | - | இடைவிடாது இறைவனைச் சிந்தித்தல் |
| 8. சமாதி | - | இறையனுபவத்தில் திளைத்தல் |

***ஆகிய எட்டு அங்கங்களும்***

1. கர்ம யோகம்
2. ஞான யோகம்
3. பக்தி யோகம்

ஆகிய மூன்று நிலைகளையும் உடையது பக்திநெறியாகும்.

இந்த மூன்று யோகங்களும் படிப்பழயான வளர்நிலைகளாகும். இவற்றில் ஈடுபட்டு இறைவனை அடைதல் என்பது யாவர்க்கும் இயலாதது. பிரபத்திநெறியைக் கைக்கொண்டு இறைவனை அடையக் கூறும் வழிமுறைகளே பிரபத்திநெறி அல்லது சரணாகதிவழியாகும்.



'சரணம்' என்ற சொல் இறைவன் திருவடிகளைக் குறிக்கும் சொல்லாகும். இறைவனது திருவடிகளைத் தவிர வேறொன்றும் கதி இல்லை என்று இறைவனைச் சரணடைவதே 'சரணாகதி' ஆகும். இறைவனை நம்பி அவனது திருவடிகளில் அடைக்கலம் புகுவதே 'சரணாகதி நெறி' எனப்படும். சரணாகதியைப் பற்றிக் குலசேகர ஆழ்வார்,

**தருதுயரம் தடாயேல் உன்சரண் அல்லால் சரணில்லை** (நாலா. 688)

என்று திருமாலே உன்னிடம் சரணடைவவே சரண். அதைத் தவிர வேறு ஒரு சரணில்லை என்கிறார். இச்சரணாகதித் தத்துவத்தை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

***சரணாகதி:***

சரணாகதியைப் பரசமர்ப்பணம், பரநியாசம், உபயானுஷ்டானம், பிரபத்தி என்று பலவாறு பிரித்தறிவர்.; இறைவனுக்கு உகந்த நற்காரியங்களில் ஈடுபடுத்திக் கொண்டு உலக இன்பத்திலிருந்து விலகி இறைவனிடமே எல்லாப் பொறுப்புகளையும் ஒப்படைத்து சமர்ப்பித்து வாழ்தல் பரசமர்ப்பணம் ஆகும். இறைவன் திருவடிகளில் தம்மையும் தன்பொறுப்புகள் அனைத்தையும் ஒப்படைக்கும் தன்மையில் தன்கடன் என்று கருதாது இருப்பது பரநியாமம் ஆகும். பக்தி யோகங்களே அன்றித் துணையாய் அமைந்த வழியைக் கடைப்பிடிக்க வேண்டிய வழி உபயானுஷ்டானம் ஆகும். பிரபத்தி என்பது சிறப்புவழி எனனும் பொருளுடையது. முற்கூறிய மூன்று வழிகளில் கடைபிடித்து இறைவனை அடைய இயலாத எளியவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட நெறியே பிரபத்தி ஆகும். சிறப்புவழி என்பது பிற உபாயங்கள் கூறும் உபாசனைகளின் வழி ஒழுக இயலாதவர்கள் தம் மனத்தை ஆண்டவனிடம் ஒப்படைத்து அவனன்றி வேறு கதியில்லை என அவனுடைய பாதங்களை அடைதலே பிரபத்தி என்னும் சரணாகதி நெறி எனப்படுகிறது.

பக்தியில் ஈடுபட இயலாதவர்கள் மாற்றாகப் பிரபத்திநெறியைப் பின்பற்றுவர். பிரபத்தியும் பலவகைகளைக் கொண்டதாக

உள்ளது. ஆன்ம தரிசனத்திற்குப் பத்தியை மிகக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும். இறைவனைத் தொழுதல் ஒன்றே அறிந்த சாதாரண பக்தர்களுக்கு இந்த உபாசனை நெறிகள் துயர் தருவனவாய் அமையும். சாத்திர வழிகளோ சடங்கு முறைகளோ அறியாத ஏழை இறைநெறியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டால் அவனைக் கடைத்தேற்றுவது இறைவனின் பொறுப்பாகிவிடுகிறது. எனவேதான் கணணன் பகவத்கீதையில், 'எல்லாவித உலகியல் தருமங்களையும் துறந்து என்னைச் சரணடைதல் ஒன்றையே கொண்டால் பாவங்களைப் போக்கி மோட்சம் நல்குவேன்' எனக் கண்ணன் பகவத்கீதையில் (ப.18:66) கூறுவதைக் காணமுடிகிறது.

### சரணாகதியை நாடுவார் தன்மை

பிற நெறிகளில் செல்லாமல் பிரபத்தியை நாடிவரும் நிலையைப் பிரபன்னன் நிலை என்பர். பக்தி நெயில் கூறப்பட்ட கர்மயோகம் முதலானவற்றைச் செய்ய தினற்றிருக்க வேண்டும். சர்திரங்களின் உட்பொருளை உணராத நிலை கொண்டிருத்தல், பக்தி நெறிகட்குத் தகாத தன்நிலையினை எண்ணி வருந்துதல், முக்தியைப் பெறுவதில் எற்படும் தாமதத்தைப் பொறுத்துக் கொள்ளாத இறைப்பற்று ஆகிய காரணங்களில் ஒன்றேனும் அல்லது பலரேனும் கொண்ட ஒருவன் பிரபன்னன் என்ற நிலைக்குத் தகுதியாகின்றான். இவையேயன்றி எந்தத் தகுதியுமில்லாமல் இறைவனைச் சரணடைய வேண்டும் என்ற ஆவல் கொண்டோர்க்கும் பிரபத்தி நெறி மிகத் துணையாகிறது.

### சரணாகதியின் பெருமை:

சரணாகதியைக் கடைபிடிப்பவர்க்கு பிறவித்தடைகள் இல்லை. மேலும் பக்திநெறியின் கர்மயோகம், ஞானயோகம் ஆகியவை கைவரப்பெற்ற பின்னரே ஆன்ம தரிசனம் கிடைக்கும். அதுவே பக்திநெறியில் உயர்வைச் சேர்க்கும். ஆனால் சரணாகதி அவ்வாறு அல்ல. சாதிசமய வேறுபாடின்றி அனைத்து மக்களும் பிபத்தியைக் கொண்டாடலாம். பரபக்தியின் தன்மையில்பரஞானமும் பரமபக்தியும் தரவல்லது.

பக்திநெறியைச் சாதாரண மக்களால் துய்க்க இயலாது. கடினமானது. பிரபத்தியோ முழு நம்பிக்கை உடைய அனைவர்க்கும்



எளிமையானது. பக்திநெறியைச் சார்ந்தவன் தன் முன்வினைப் பயன் முடியும் வரை காத்திருக்க வேண்டும். எல்லா வினைப்பயன்களை அனுபவிக்க வேண்டியும் நேரும். பிரபத்தி இறைவனைச் சரணடையும் நிலையிலேயே தாமதமின்றிப் பலன் தரவல்லது. உடலை விட்டு ஆவி பிரிந்த நிலையிலேயே மோட்சத்தைத் தரவல்லது.

சரணாகதியில் ஒருவன் ஒருமுறை முழுமையுடன் தன்னை இறைவனிடம் ஒப்படைத்துக் கொண்டால், அவன் பிற சடங்குகள் ஏதும் செய்யத் தேவையில்லை. எட்டு உறுப்பமைந்த அட்டாங்க யோகம் இதில் இன்றியமையாதது.

பக்திநெறியில் மீண்டும் மீண்டும் பிறக்கும்படி முன்வினைப் பயன் தூண்டும். சரணடைந்தவன், பக்தியோகி போன்று முன் வினைப் பயனை அனுபவிக்க வேறொரு பிறவி எடுக்கத் தேவையில்லை. மீண்டும் மீண்டும் பிறவாது பரம அனுபவத்திலேயே திளைப்பான்.

### சரணாகதியின் நிலைகள்:

சரணாகதி ஆறு நிலைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்நிலைகள் யாவும் சரணாகதி அடைவோனின் உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

1. இறைவனுக்கு என்றும் அனுகூலமாய் இருக்கும் உறுதி
2. இறைவனுக்கு உகவாத செயல்களில் ஈடுபடாதிருத்தல்
3. ஓர் உபாயம் அல்லது சக்தி இல்லாத தன் எளிமையைப் பிரபன்னன் உணர்தல்
4. பெருமானிடம் முழுமையான நம்பிக்கை வைத்தல்
5. இறைவனிடம் காத்திடும்படி கோரும் நிலை
6. தன்னை இறைவன் திருவடிகளில்ஒப்படைத்துக் கொள்ளல்

எனச் சரணாகதி நிலையை ஆறுநிலைகளாகப் பிரித்துக் கூறுவர். இறுதிநிலையில் சரணாகதி அடைந்தாலும் முன் உள்ள ஐந்து நிலைகள் சரணாகதிக்குரிய படிகள் என்ற நிலையில் அவற்றையும் சரணாகதி என்றே கொள்ளலாம்.

தோற்றுப் போயிருந்தான். அந்த நிலையில் அருணகிரிநாதர் அரசன் வேண்டுகோளுக்கு இணங்க அவையில் முருகன் தோன்றிட வேண்டுமாறு நயமுடன் பாடினார்.

***அதல சேடனாராட அகிலமேரு மீதாட***
***அபின காளி தானாட - அவளோடன்று***
***அதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட***
***அருகு பூத வேதாளம் - அவையாட***
***மதுர வாணி தானாட மலரில் வேத னாராட***
***மருவு வானு ளோர் ஆட - மதியாட***
***வனச மாமி யாராட நெடியமாம னாராட***
***மயிலு மாடி நீயாடி வரவேணும்***
***உதய தாம மார்பான பிரபுட தேவ மாராஜன்***
***உளமு மாட வாழ்தேவர் - பெருமாளே !*** *(திருப்புகழ்.1056)*

என்று பாடியதும் அனைவரும் கண்டுகளிக்குமாறு முருகன் காட்சி தந்தானாம். மயிலின் நடன ஒலி அனைவர் செவியிலும் விழ, மின்னல்போல் காட்சி கொடுத்து அனைவரும் அஞ்சி வியக்க மறைந்தான் முருகன். அவைக்களப் புலவன் சம்பந்தாண்டான் வெட்கி ஓடிமறைந்தான். மறவாமல் இந்த அற்புத நிலையை அருணகிரிநாதர், இரண்டு இடங்களில் தலயாத்திரை செய்தபோது பாடியுள்ளார்.

***சயிலம் எறிந்த கைவேற் கொடு***
***மயிலினில் வந்தெனை யாட் கொளல்***
***சமகமறியும்படி காட்டிய - குருநாதா..***

என்று திருச்சிராப்பள்ளியிலும்,

***உலகினில் அனைவர்கள் புகழ்பாடி - அருணையில்***
***ஒருநொடி தனில் வருமயில் வீரா***

என்று திருமுது குன்றிலும் அந்த அற்புதக் காட்சியை எண்ணியெண்ணிப் பாடியுள்ளார்.

திருவண்ணாமலையிலேயே பல பாடல்களைப் பாடிய பின் பயணம் தொடங்கினார். அருணகிரிநாதர், கோவலூர், அதிகை, பாதிரிப்புலியூர் முதலிய இடங்களில் இறைவன் ஆலயங்கட்குச்



சென்று பாடிய பின் தில்லையை அடைந்தார். பலநாள் தங்கினார். பல பாடல்கள் பாடினார். பின்னர் பல தலங்களையும் கண்டு சீகாழியை அடைந்தார். முருகனே திருஞான சம்பந்தராகத் தோன்றினார் என்பது அருணகிரிநாதரின் கருத்து எனலாம். அதனால் நெடுநாள் தங்கி வழிபட்டார். அங்கே அவருக்கு மீண்டும் முருகன் காட்சி அளித்தான். விராலிமலைக்கு வருமாறு அழைத்தான். அங்கும் பலநாள் தங்கினார்.

கொங்குத்தலங்கள் பல சென்றார். பழனியில் தங்கிப் பல பாடல்களைப் பாடினார். அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற தலங்களில் பழனியே 96 பாடல்களைப் பெற்ற தலமாகும். பாண்டி நாட்டுக்கும் பயணம் செய்துள்ளார். மதுரை, திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை ஆகிய தலங்களை வணங்கிப் பிறதலங்கள் வழியாகத் திருச்செந்தூரை அடைந்தார்.

அருணகிரிநாதரின் திருவாக்கை எல்லாம் ஆய்ந்துப் பார்த்தால் அவருடைய சமயநெறி விளங்கும். முருகன் அடியார் அவர் என்பதில் ஐயமில்லை. ஆனால் தத்தம் கடவுளரை உயர்த்திப் பாடுவோர் ஏதேனும் ஓரிடத்திலாவது பிற கடவுளரைப் புறக்கணிக்கின்ற முறையில் பாடுவது இயற்கை. அருணகிரிநாதர் தாம் அன்புகொண்ட முருகனைப் போற்றிப் பாடியதோடு, பிற தெய்வங்களையும் உயர்த்தியே பாடியுள்ளார். அந்தக் கடவுளர்க்கும் முருகனுக்கும் உள்ள உறவைக் கூறி முருகனின் சிறப்பை மேலும் உயர்த்தினார். சிவபெருமானுடைய புகழாகவே கூறி இறுதியில் முருகனை அப்பெருமானின் மகனே என்று அழைப்பார். இவ்வாறே, திருமாலின் சிறப்பையே பாடல் முழுவதும் கூறி மருகோனே என்று முருகனை விளிப்பார். சமரச நெறியும் மேலான பக்தியும் கொண்டவர் அருணகிரிநாதர் என்பது நன்கு புலப்படும்.

❖ ❖ ❖

ISBN : 9789380366234

Designed by ...
Raj Printers
Mobile 9626116347

ஆய்வு நோக்கில் முத்தொள்ளாயிரம்

# ஆய்வு நோக்கில்
# முத்தொள்ளாயிரம்

பதிப்பாசிரியர்
முனைவர் இரா. ஜெகதீசன்

விழிச்சுடர்ப் பதிப்பகம்

## இரேவதியும் உத்திராடமும்

முனைவர் இரா. ஜெகதீசன்[69]

புறத்திரட்டில் இருந்து சேர சோழ பாண்டிய மன்னர்களைப் பற்றிக் கிடைக்கப்பெற்ற108 பாடல்களும், பழைய உரைகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற 22 பாடல்களுமாகத் தொகுக்கப்பெற்ற 130 பாடல்களுக்கு முத்தொள்ளாயிரம் என்று பெயரிட்டனர். சொற்சுவையும் பொருட்சுவையும் அணிச்சுவையும் அங்கதச் சுவையும் ஒருங்கே பொருந்திய இப்பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. மூவேந்தருடைய நாடு, நகர், கொடை, போர்மறம், யானைமறம், வெற்றி, காதல் முதலான பல செய்திகளை அழகுற விருந்து என்னும் வனப்பில் எடுத்துரைத்துள்ளது. அகம் புறம் சார்ந்த இருவகைப் பாடல்களும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் அகம் பற்றிய பாடல்களே மிகுதியாக உள்ளன. மன்னர்கள் மண்ணில் தோன்றிய நாளினைக் கொண்டாடும் வெள்ளணி நாள் விழாவைப் பற்றி முத்தொள்ளாயிரப் பாடல்கள்வழி ஆய்வதே இக்கட்டுரை.

ஓர் அரசன் தான் பிறந்தநாளைச் சிறந்த நாளாகக் கொண்டாடுவான். அன்றையதினம் அரசன் தன் சினத்தை நீக்கிப் பிறந்தநாள் விழாவைச் சுற்றத்துடனும் வீரர்களுடனும் பொது மக்களுடனும் கொண்டாடுவது உண்டு.

சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும் (தொல்.புறத்.36:7-8)

எனத் தொல்காப்பியம் கூறுகிறது. முத்தொள்ளாயிரத்தில் மன்னர் பிறந்த நாள்விழா பற்றி இரு பாடல்களே இடம்பெற்றுள்ளன.

பாண்டிய மன்னனது பிறந்தநாள் உத்திராட நட்சத்திரம். இந்த நட்சத்திர நாளைத் திருநாளாக பண்டைத் தமிழ் மக்களும், படை வீரர்களும், தளபதிகளும் சிறப்பாகக் கொண்டாடி உள்ளனர்.

69 இணைப் பேராசிரியர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.



மன்னனதுபிறந்தநாளன்று படையெடுத்துச் செல்வதில்லை. போர்க்கருவிகளைத் தொடுவதில்லை. எவரையும் வாள்கொண்டு கொல்வதில்லை. இதனை முத்தொள்ளாயிரப் பாடல்வழிக் காணலாம்.

**இரேவதி:**

சோழ மன்னன் கிள்ளியின் பிறந்த நாள் விழாவாகிய இரேவதித் திருநாளில் எல்லோரும் பரிசில் பெற்றனர். இலை போன்ற வேற்படையை உடைய கிள்ளி தனது பிறந்தநாளான இரேவதி நாளில் அந்தணர்கள் பசுவும் பசும்பொன்னும் பரிசிலாகப் பெற்றனர். காவலர்கள் மந்தரமலை போன்ற யானைகளைப் பரிசிலாகப் பெற்று அதன்மீது சென்றனர். அவர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்துள்ள இந்நாளில் சிலம்பிப் பூச்சிகள் மட்டும் கூடிழந்து தவிக்கின்றன.

சோழ மன்னனின் பிறந்த நாள்விழா கொண்டாடுவதற்காக ஊர் மக்களின் வீடுகளிலும், மன்னனின் மாட மதில்களிலும் வெண்சுதை பூசுவதற்காக அதனைச் சத்தம் செய்தனர். ஆங்காங்கே இருந்த சிலம்பிப் பூச்சிகளைக் களைத்தனா. அதனால், சிலம்பிப் பூச்சிகள் கூடிழந்து தவிக்கின்றன.

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்தந்தார் - எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு (முத்.82)

இதனைக் கண்ட ஒருவன் மன்னனின் பிறந்தநாள் விழாவின் போது எல்லோரும் மகிழ்ந்து கொண்டிருக்க, இந்தச் சிலம்பிப் பூச்சிகள் மட்டும் கூடிழந்து தவிக்கின்றனவே என்று இரங்கிக் கூறுகின்றான்.

இதனால், ஒருபக்கம் மகிழ்ச்சி என்றாலும் மற்றொரு பக்கம் துன்பமும் இரண்டறக் கலந்து உள்ளது என்ற உண்மையும் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

**உத்திராடம்:**

பகைவர்தம் மதிலை வளைத்துப் பாண்டியனின் படைகள் போர் தொடங்குகின்றன. பகைவர்கள் உள்ளே அடைத்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் தேர், யானை, குதிரை ஆகிய முப்படைகளைப்

போர்க்குத் தயாராக நிறுத்தி வைத்துள்ளனர். அப்பொழுது, சோதிடநூல் வல்லான் ஒருவன் அங்கு வருகின்றான். மன்னரே, இன்று தாங்கள் பிறந்த திருஉத்திராடத் திருநாள் என்று கூறிவிட்டான். மன்னவனோ உடனே போரை நிறுத்தக் கட்டளையிட்டான்.

பாண்டிய நாட்டு வீரன் ஒருவன் வருகின்றான். இதைப் பகைவீர்க்கு அறிவிக்கின்றான். பகைவர்களே, உங்கள் கோட்டைக் கதவுகளை அகலத் திறந்து வையுங்கள். உங்களது களிறுகளையும் தேர்களையும் காலாற நடக்கும் புரவிகளையும் அணியணியாக பவனிவரச் செய்யுங்கள். ஏனென்றால், இன்று நம்முடைய பாண்டிய மன்னன் பிறந்த நாள். அவன் பிறந்த நட்சத்திரமான திருஉத்திராட நாள் கொண்டாட உள்ளதால், மன்னன் இன்று யாருடனும் போர் புரிய மாட்டான் என்று அறிவித்தான்.

கண்ணார் கதவம் திறமின் களிறொடுதேர்
பண்ணர் நடைப்புரவி பண்விடுமின் - நண்ணாதீர்
தேர்வேந்தன் தென்னன் திருவுத்தி ராடநாள்
போர்வேந்தன் பூசல் இலன் (முத்.7)

இதனால், மன்னன் தனது பிறந்த நாள் விழா கொண்டாடியதும், அந்நாளில் பகைவர்களைக்கூட இனிதே இருக்குமாறு செய்துள்ளான் என்பதை அறிய முடிகிறது.

பாண்டிய மன்னனும் சோழ மன்னனும் தங்களுடைய பிறந்தநாள் விழாவைக் (பெருமங்கலம்) கொண்டாடி உள்ளதை முத்தொள்ளாயிரப் பாடல்கள்வழி அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், சேர மன்னன் பிறந்த நட்சத்திரமோ, பிறந்த நாள் விழா கொண்டாடியதையோ முத்தொள்ளாயிரப் பாடல்களில் செய்திகள் ஏதுமில்லை.

பாண்டிய மன்னனைப் பற்றி 64 பாடல்களும், சோழ மன்னனைப் பற்றி 43 பாடலகளும், சேரமன்னரைப் பற்றி 23 பாடல்களுமே நமக்குக் கிடைத்துள்ளன. சேர மன்னருடைய பாடல்கள் நமக்குக் கிடைத்திருப்பன மிகக் குறைவே.



இதனால், சேர மன்னர் பிறந்த நட்சத்திரத்தில் தமது பிறந்த நாள் விழா கொண்டாடியதாகச் செய்திகள் முத்தொள்ளாயிரப் பாடல்களில் கிடைக்கவில்லை. எனினும், சேரனைப் பற்றிய பாடல் ஒன்று பின்வரும் செய்தியைத் தாங்கி வந்துள்ளது.

சேரன் உலா வருகின்றான். அதனைப் பார்க்கின்றாள் நங்கை ஒருத்தி. இவ்வளவு சிறப்புடன் உலா வருகின்றானே இவன் இந்திரனாக இருப்பானோ? என்று நினைத்தாள். ஆனால் இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் உண்டு என்று கூறுவார்களே? இவனுக்கு இரண்டு கண்கள்தாமே உள்ளன. ஆதலால் இவன் இந்திரன் அல்லன் என்று எண்ணுகின்றாள். சிறிது நேரங் கழித்து இவன் சிவபெருமானாக இருப்பானோ? என்று நினைத்தாள். சிவபெருமானுக்கு சடைமுடியில் பிறையுண்டல்லவா? இவனுக்கு முடியில் பிறையில்லையே? முருகனாக இருப்பானோ? என்று நினைத்தாள். முருகனெனில் முகம் ஆறாக இருக்குமே? இவனுக்கு முகம் ஒன்றல்லவா? என்று எண்ணுகிறாள்.

இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னிற் பிறையில்லை - அந்தரத்துக்
கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று ((முத்.130)

இதனால், அந்நங்கை, இவன் இந்திரனுமல்ல. சிவபெருமானுமல்ல. முருகனுமல்ல. இவர்களைப் போல் வலிமை உடையவன் மன்னன் என்பதை உணர்கின்றாள்.

இப்பாடலைப் பாடிய புலவன், சேரமன்னனைப் பற்றி அதிகமான பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். அவை கால வெள்ளத்தால் அழிந்திருக்கக் கூடும் என்று ஒருவகையில் நாம் ஆறுதல் கூறிக்கொள்ளலாம்.

உலகத்தில் உத்திராட நாளில் பிறந்தவனை 'உதிராடத்தான்' என்றும், இரேவதி நாளில் பிறந்தவனை 'இரேவதியான்' என்றும், திருவோண நாளில் பிறந்தவனைத் 'திருவோணத்தான்' என்றும், விசாக நாளில் பிறந்தவனை 'விசாகன்' என்றும் கூறுவது பொருத்தமுடையதாக

இருப்பினும், என்றும் பிறப்பு இறப்பு இல்லாவதனைப் பிறவா யாக்கை உடைய பெரியோனை ஆதிரையான் என்றழைப்பது எவ்வாறு பொருத்தமுடையதாக இருக்கும்?

எனவேதான், சேரனைப் பாடிய புலவர் சிவபெருமானுக்கு இணையாகப் பாடிவிட்டார். பிறவா யாக்கைப் பெரியோனுக்கு எப்படிப் பிறந்தநாள் விழாவைப் பாட முடியும்? புலவரின் புனைவால், சேரமன்னன் பிறப்பு இறப்பு இல்லாதனாக ஆகிவிட்டான். பிறப்பு இறப்பு இல்லாத சேர மன்னனுக்கு எதற்குப் பிறந்தநாள் விழா? ஆகவே, அவனது பிறந்த நட்சத்திரமான திருவாதிரையைப் புலவர் பாடாது விடுத்திருக்கக் கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. இரேவதியும் உத்திராடமும் இருக்கும்போது திருவாதிரை இல்லாதது ஏன்? இரேவதியையும் உத்திராடத்தையும் இயக்குவது திருவாதிரையல்லவா?

மன்னர்கள் பெருங்குடி மக்கள் போன்றோரது பிறந்த நாட்களைக் கொண்டாடும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. மேலை நாட்டவரின் தொடர்பால் ஏற்பட்டதென இதனைப் பலர் கருதுகின்றனர். ஆனால், சங்க காலந்தொட்டே தமிழகத்தில் பிறந்த நாள் விழா கொண்டாடும் பழக்கம் இருந்துள்ளதை முத்தொள்ளாயிரப் பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இன்றைக்குப் பிறந்தநாள் விழா என்னும் பெயரில் பெரும் செல்வந்தர்களும் அரசியல்வாதிகளும் கொண்டாடுவதால் யாருக்குப் பயன்? இதனைப் பார்க்க மூவேந்தர்களும் வருவார்களா? ஆதிரையானுக்கே வெளிச்சம்.

பயன் நூல்: முத்தொள்ளாயிரம், வித்துவான் ந.சேதுரகுநாதனார், கழக வெளியீடு, சென்னை, 1970.



# முத்தொள்ளாயிரத்தில் போர்க்களக் காட்சிகள்

பா.ஜெனிபாராணி[70]

போர் பற்றிய செய்திகள் முத்தொள்ளாயிரத்தில் சிறப்பாகப் பேசப்படுகின்றது. போர்க்களத்தில் போரை நடத்திச்சென்ற மன்னன் தானே முன்னின்று போர் புரிவான். போரின் பொழுது புறமுதுகிட்டு ஓடும் வழக்கம் இல்லை. அவ்வாறு செல்பவனை வீரர் எவரும் தாக்குதற்கு முற்பட்டார். அத்தகையோரைத் தாக்குவோர் சிறந்த வீரராகார்.

## நாட்டின் பாதுகாப்பு

அந்நியர் படையெடுப்பின் போது நாட்டைக்காக்க கோட்டைகள் கட்டியிருந்தனர். மற்றப் பேரரசுகள் போலச் சிறிய எல்லையுடன் இல்லாமல் பரந்து விரிந்து கிடந்தன. பேரரசை நிருவகிக்க கோட்டைகளைப் பாதுகாப்பது எளிதன்று. இருப்பினும் எல்லைப்புறப் படையை எல்லைபுறங்களில் நிறுத்தி வைத்து அந்நியர் படையெடுப்பை கண்காணித்து வந்துள்ளனர்.

## படையும் - படைக்கருவிகளும்

அடிக்கின்ற கோலுக்கு அஞ்சாமல், அரவம் போன்ற நெஞ்சம் படைத்த வீரர்களைக் கொண்டது நம் தமிழகம். வேந்தர்களின் படைகளை இருவகையாகப் பிரித்துக் கூறலாம். அவை நிலப்படை, கப்பற்படை.

"நிலப்படையில் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவை இருந்தன என்பது பற்றிக் கல்வெட்டு கூறுமிடத்து,

> மும்முடிச் சோழத் தெறிந்த ஆனையாள்கள்
> சிங்களாந்தகத் தெறிந்த குதிரைச் சேவகர்
> கேரளாந்தகத் தெரிந்த பரிவாரத்தார்

என்று தெரிவிக்கின்றன.

---

70 முனைவர்பட்ட ஆய்வாளர், அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 010.

# நாட்டார் வாழ்வியல்



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

61

# குறுந்தொகையில் வழிபாட்டு முறைகள்



முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர் 632 115.

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியலோடு வழிபாட்டு நிலையும் வழக்கமாக இருந்துள்ளது. வழிபாடு என்பதற்கு வணக்கம், பின்பற்றுகை, வழக்கம், சமயக்கோட்பாடு என்னும் பொருள்களைக் கௌரா தமிழ் அகராதி குறிப்பிட்டுள்ளது. அட்பியாசம், ஆராதனை, தாழ்மை, வணக்கம், வழிபடல் என்னும் பல்வேறு பொருள்களைத் தமிழ்மொழி அகராதி இயம்பியுள்ளது. பண்டைத் தமிழ் மக்களின் நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய வழிபாட்டு முறைகள் பற்றி பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் எடுத்துரைத்துள்ளன. இக்கட்டுரை, குறுந்தொகைப் பாடல்களில் காணப்படும் ஒருசில வழிபாட்டு முறைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றது.

## தொல்காப்பியத்தில் இறைவழிபாடு

மக்கள் திணைநிலங்களுக்கு ஏற்பத் தெய்வங்களை உருவகித்து வழிபட்டு வந்துள்ளனர். இதனைத் தொல்காப்பியர்,

*மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய மைவரை உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்* ***(தொல்.அகத்.5)***

என்னும் நூற்பாவழித் தெளிவுபடுத்துகின்றார்.

காத்தல் தொழிலைக் கடமையாக உடைய திருமால் இருக்கும் வாழும் காட்டு நிலமும் (முல்லை), சிவந்த மேனியை உடைய முருகவேள் விரும்பி வாழும் மலைநாடும் (குறிஞ்சி), இந்திரன் இருந்து வாழும் நீர்வளம் நிறைந்த வயல் சூழ்ந்த பகுதியும் (மருதம்), மழைக்கடவுள் வருணன் இருக்கும் பெருமணல் கரையையுடைய கடல்சூழ்ந்த இடமும் (நெய்தல்), என நிலமும் நிலத்தில் வாழும் மக்களைக் காக்கும் தெய்வங்களையும் முறைப்படுத்தி உள்ளதால், திணைகளுக்கு ஏற்ப மக்களின் வழிபாட்டு முறைகளும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.



சங்கப் படலகளில் கடவுள், தெய்வம் என்னும் இரண்டு சொற்களும் மக்களின் வழிபாட்டிற்குரிய எல்லா சாமிகளையும் குறிப்பிடுவதாகவே வருகின்றன என்று அ.கா.பெருமாள் (பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயமரபுகள், ப.2) குறிப்பிட்டுள்ளார். இதனால் எல்லா சாமிகளுக்கும் மக்கள் பொதுவான பெயரிட்டு அழைத்துள்ளதை அறியமுடிகிறது.

## இயற்கை வழிபாடு

நாடோடியாகச் சுற்றித் திரிந்த மனிதன் அச்சத்தின் காரணமாக இயற்கையை வழிபடத் தொடங்கினான். இத்தகைய வழிபாடே இயற்கை வழிபாட்டின் தொடக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.

இயற்கை வழிபாட்டில் மரவழிபாடு குறிப்பிடத்தக்கதாகும். மரங்களில் தெய்வங்கள் இருப்பதாக நாட்டுப்புற மக்கள் நம்பினர். நம்பிக்கையின் அடிப்படையில் அம்மரங்களை வழிபடவும் தொடங்கினர். இத்தகைய மரவழிபாடு குறித்து, பேராசிரியர் க.ப.அறவாணன், ஷமரவழிபாடு மிகத்தொன்மையான வழிபாடாகும். எனவே, தொல்நாகரிகப் பழமை வாய்ந்த மக்கள் அனைவரிடமும் மரவழிபாடு இருப்பது இயல்பு. அதுவும் குறிப்பாக வெயில் நாடுகளில் மரவழிபாடு தலைமையிடம் பெறுவது தவிர்க்க இயலாதது' (மரவழிபாடு பண்பாட்டியல் நோக்கில் பண்டைத்தமிழர்களின் சமய மரபுகள், ப.82) என்று கூறியுள்ளார்.

மேலும், மரவழிபாடுபாட்டின் தொன்மையையும், அந்த மரவழிபாட்டில் கடம்பமரம் குறிப்பிடத்தக்க இடம் வகிப்பதையும், கடம்ப மரத்திற்கு வெண்கடம்பு, மராஅம் என்ற பெயர்கள் இருந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார். மரவழிபாட்டினைக் குறித்துக் குறுந்தொகை,

*மன்ற மராஅத்த பேஎம்முதிர் கடவுள்* ***(குறுந்.87:1)***

என்று கூறியுள்ளது. கடப்ப மரத்திலே அச்சம் தரும் தெய்வம் உறைந்திருக்கும் என்பதைத் தொல் பழமை வாய்ந்த இந்த மரவழிபாடு மக்களால் தொடர்ந்து இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

## பிறைவழிபாடு

மரவழிபாடு போன்றே பிறைவழிபாடும் பண்டைத் தமிழரிடம் இருந்துள்ளது. பிறை வழிபாட்டை ராவாண்டைப் பாட்டு (472) என்றும் அழைத்துள்ளனர்.

பிறைமதியின் சிறப்புகள் பலவற்றையும் அறிந்து, மக்களனைவரும் அதனைத் தொன்று தொட்டுத் தொழுது வந்துள்ளனர். இவர்களுள்ளும் மகளிரே பிறைதொழும் வழக்கம் மிகுதியும் இருந்துள்ளது என்பதற்கும் மகளிருள்ளும் கன்னியரே பிறை தொழுதலைச் சிறந்ததொரு நோன்பும் வழிபாடும் கொண்டாட்டமுமாக இருந்துள்ளனர் என்பதற்கும் போதிய சான்றுகள் உள்ளன' என்று

இராம. பெரிய கருப்பனின் கருத்தால் மக்களனைவராலும் பிறை வழிபாடு தொன்று தொட்டு போற்றி வழிபட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது.

***தொழுதுகாண் பிறையின் தோன்றி யாம்நுமக்கு***
***(குறுந்.178:5)***

மேற்காண் குறுந்தொகைப் பாடல் தலவனுடன் தலைவி அடைதல் என்பது பிறைதொழக் காத்திருக்கும் பெண்களைப் போன்று அறிதாக அமைகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வானகத்தில் தோன்றும் பிறையைப் பெண்கள் பலரும் வழிபடுகின்றனர். இத்தகைய வழிபாட்டிற்குரிய நிலவானது வளையலை உடைத்தாற்போன்று காணப்படுகின்றது எனக் கடம்பனூர்ச் சாண்டிலியன் எனும் புலவர் குறுந்தொகைப் பாடலில் வர்ணித்துள்ளார்.

***வளைஉடைத் தனையது ஆகிப் பலர்தொழ(குறுந்.307:1)***

இதனால் வளையல் உடைத்தாற்போன்று காணப்படும் நிலவைப் பலரும் தொழுதுள்ளதை அறியலாம். மேலும்,

***அரவுநுங்கு மதியினுக் கிவணோர் போல (குறுந்.395:6)***

தலைவன் பொருள்மீது கொண்ட வேட்கையின் காரணமாகத் தன்னைப் பிரிந்தான் இத்தகையப் பிரிவானது நிலவினைப் பாம்பு விழுங்கும் தன்மைப் போன்று காணப்படுகிறது என்ற கருத்தாலும் எட்டாம் நாள் பிறையைத் திருந்திய பெண்களின் நெற்றிக்கு உவமையாய்ப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் இயம்பியுள்ளது.

***மாக்கடல் நடுவண் எண்ண பக்கத்துப்***
***பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்***
***கதுப்புஅயல் விளய்க்கும் சிறுநதுல் (குறுந்.126:3-4)***

பெருங்கடலின் நடுவாக எட்டாந்திதிக்கு உரித்தான வெள்ளிய இளந்திங்கள் தோன்றியதைப் போல, ஒருபெண்ணின் கூந்தலுக்கு அயலாக விளங்கிய சிறுத்த நெற்றிதான் என்ற உவமையின் வழியாகவும், பிறைவழிபாடு இருந்துள்ளதை அறியமுடிகிறது.

பிறை பற்றிய பழமொழிகள் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் வழங்கி வந்துள்ளதையும் அறிய முடிகிறது. பிறை பற்றிய பழமொழிகள் தழிழகத்தில் வாழ்ந்த மக்கள் வழங்கி வந்துள்ளதையும் காண முடிகிறது.

***ஆடிப் பிறையைத் தேடிப்பாரு***
***தைப் பிறையைத் தடவிப்பாரு***
***மாசிப் பிறையை மறக்காமல் பாரு***

இதனால் பழமொழிகள் மக்களிடம் தொடர்ந்து வழங்கப்பட்டு வந்துள்தை அறியமுடிகிறது.

கன்னியரும் பிறமகளிலும் வழிபடக் கூடிய இப்பிறைவழிபாடு செட்டிநாட்டில் அண்மைக்காலம் வரை இருந்துள்ளது. இன்றும் மிக



அருகிய நிலையில் காரைக்குடி, தேவகோட்டை பகுதிகளில் மாசி மாதத்தில் ராவாண்டை போடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கையின் அமைதிக்கும் சிறப்பிற்கும் வழிபாடே தீர்வாகும் என்ற கருத்தை இரா. சந்திரசேகரன், தெய்வத்தை வழிபட்டால்தான் வாழ்க்கை அமைதியாக சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையே தெய்வவழிபாட்டிற்குக் காரணமாக அமைகின்றது.

மக்களால் வழிபடும் தெய்வங்கள் அவைகளின் இயல்புகளுக்கேற்ப பெருந்தெய்வங்கள் என்றும், சிறுதெய்வங்கள் என்றும் இருபிரிவாக அறிப்படுகின்றன. எனினும் நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் சிறுதெய்வ வழிபாட்டினை மையமாகக் கொண்டு வணங்கியுள்ளனர் எனலாம்.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டிற்கு ஆவிநம்பிக்கையும் ஒரு காரணமாக இருந்துள்ளதைப் பேராசிரியா ஓ. முத்தையா பின்வருமாறு குறிப்பிடுவார்.

'நாட்டுப்புறத் தெய்வங்கள் அனைத்திற்கும் ஆவி நம்பிக்கையே ஆதாரமாக உள்ளது. இறந்தவர்களின் ஆவி ஏதேனுமொரு பொருளில் உறைந்துகிடக்கும் என்ற நம்பிக்கையின்வழிப் பிறந்தவையாக இவை விளங்குகின்றன'. இறந்தவர்களின் ஆவி குறித்த நம்பிக்கை மக்களிடத்தில் இன்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

வழிபாடுகள் பெரும்பாலும் தனது வேண்டுதலை நிறைவேற்றும் தன்மை உடையதாகவே அமைக்கப் பட்டுள்ளன. தனது வேண்டுதல் நிறைவேறும் பொருட்டு நன்றிக் கடனாகப் பொருள்களை வைத்து வழிபட்டுள்ளனர். இத்தகைய வழிபாட்டு மரபுகளைப் பெரும்பாலும் இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றன.

## திணைத் தெய்வ வழிபாடு

நிலங்களுக்கு ஏற்பத் தெய்வங்களையும் மக்கள் வழிபட்டு உள்ளனர். குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், மருத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் என ஐந்து நிலத்திற்கும் ஐந்து தெய்வங்களை வகுத்துள்ளனர் பண்டைத் தமிழர்கள்.

குறுந்தொகைப் பாடல்களில் பெரும்பாலும் குறிஞ்சிநிலத் தெய்வமான முருகன் வழிபாடே சிறப்பாக இடம்பெற்றுள்ளது. வெறியாட்டு, வெறியயர்தல் போன்ற பெயர்களில் நிகழ்த்தப்பட்டு வரும் முருக வழிபாடான வெறியாட்டு குறித்து, வளர்ச்சி, கட்டு, கழங்கு, கன்னம் இவை ஒருங்கு கூடும் இடமாக வெறியாட்டு நிகழ்த்தப்பட்டு உள்ளதை அறிய முடிகிறது. வெறி என்பது மணம், ஒழுங்கு, வெறியாட்டு, தெய்வம் எனப் பல்வேறு பொருள்களிலும் வெறியாட்டு, வெறியயர்தல், வெறிகொள்ளல், வெறியுறுதல், வெறிக்கூத்து என்ற பெயர்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளதாகப் பேராசிரியர் ஓ.முத்தையா (பண்பாட்டுப் பதிவுகள், ப.16) குறிப்பிடுவார்.

நிலத்தில் விளைந்த முதற்தினையினை முருகனுக்கு வைத்து வழிபட்டுள்ளதைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

*புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்*
*கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல் (குறுந்.105:1-2)*

தன் தோட்டத்திலே முதற்போகத்தில் விளைந்த பொன்னைப் போலத் தோன்றும் சிறுதினை மணிகளைக் குறவன் தெய்வத்திற்குப் படையலாக வைத்து வழிபட்டுள்ளதைக் காணமுடிகிறது. வேலனுக்குச் செந்நெல், வெண்ணெல் பொரியை வைத்து வழிபட்டுள்ளதை,

*செந்நெல் வான்பொரி சிதறி யன்ன (குறுந்.53:4)*

என்ற பாடல் அடியும், வேலனுக்கு வெறி நிகழ்த்தும் பொழுது, 'அரலை மாலையும்' சூட்டியுள்ளதை,

*அரலை மாலை சூட்டி*
*ஏமுற்றன்று இவ்வழுங்கல் ஊரே (குறுந்.214:6-7)*

என்ற பாடல் அடிகள் வழி அறியமுடிகிறது.

நறுமணங்கொண்ட ஞாழற் பூக்களோடு புன்னை மலரும் பரப்பி வழிபட்ட வெறியயரும் நிகழ்வை,

*நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்*
*வெறியயல் களத்தினில் தோன்றும் துறைவன்*
*(குறுந்.318:2-3)*

என்ற குறுந்தொகைப் பாடலடி உணர்த்துகின்றது. வெறியயல் களத்தில் தூவப்பட்ட மலர்கள் பலவற்றை இப்பாடல் குறிப்பிட்டுள்ளது. இவ்வழிபாடு தலைவியின் துயரத்தைப் போக்கும் பொருட்டே நிகழ்த்தப் பட்டுள்ளன. வேலனின் சொல்லை ஏற்றுக்கொண்டு செயல்பட்ட அன்னையை,

*வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்*
*அதுஎன உணரும் ஆயின் (குறுந்.811:2-3)*

என்று ஒருபாடல் எடுத்துக்காட்டுகின்றது. வேலனின் சொல்லே உண்மை என ஏற்றுக்கொண்ட மக்களின் நிலையை இப்பாடல்கள் உணர்த்துகின்றன. அறிவு முதிர்ச்சி உடையோரை வைத்தே வெறிநிகழ்த்தப் பட்டுள்ளதை

*முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேலன் (குறுந்.362:1)*

என்ற அடி பதிவு செய்துள்ளது. வேலன் வெறியாட்டு, செக்கக் கூத்தின் தொடர்ச்சியாகும். இன்று தமிழகத்துக் கிராமப்புறத் தெய்வங்களின் வழிபாட்டில் இந்தத் தெய்வங்கள் அடியவர்கள் மேல வந்து ஆடி வருவதுரைத்தல் என்பது நாடு முழுக்கக் காணப்படுகின்றது' என்னும் முருகேசனின் கருத்தும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வேலன் வெறியாட்டு தற்போதும் ஆங்காங்கே நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வருவதைக் காணலாம்.



## கொற்றவை வழிபாடு

பாலை நிலத்திற்குரிய கொற்றவையை அச்சம்தரும் தெய்வமாகவே நாட்டுப்புற மக்கள் கருதினர்.

*விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்கு*
*(குறுந்.218:1)*

சூலிக்குப் பலியிடும் மரபும் இருந்துள்ளதை அறியமுடிகிறது. ஈண்டு சூலி என்பது கொற்றவையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நாட்டுப்புற மக்களின் வழிபாட்டுப் பிரிவுகளில் ஒன்றான பெருந்தெய்வ வழிபாட்டையும் குறுந்தொகைப் பாடல்களுள் காணமுடிகின்றது.

*வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி*
*(குறுந்.263:4)*

தலைவியிடத்தே தோன்றிய புதுப்பொலிவின் காரணமாகத் தலைவியின் தாய் வெறியாட்டு நிகழ்த்தியதோடு பெருந்தெய்வங்கள் பலவற்றையும் வாழ்த்தி வழிபட்டுள்ளதைச் சுட்டுகின்றது.

## சூரரமகளிர்

சூரரமகளிர் மலைவாழ் தெய்வமாகவே இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ளன. இம்மகளிர் வரையற மகளிர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. மலை உச்சியில் உள்ள சுனையில் உறையும் அச்சம் தெய்வமான சூரரமகளிர் குறித்த செய்தியைப் பின்வரும் குறுந்தொகைப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

*நேர்இறை முன்கை பற்றிச்*
*சூரர மகளிரோடு உற்ற சூளே (குறுந்.53:7)*

வரைவை நீட்டித்த தலைவனிடத்துத் தோழி முன்கையைப் பிடித்து சூரரமகளிரோடு நீ சூள் உற்ற செய்தியை நினைக்கும்பொழுது, வருத்தம் ஏற்படுகின்றது. எனவே வரைவை மேலும் நீட்டிக்காதே என்ற செய்தியைக் கூறும் இடத்து, 'சூரர மகளிர்' பற்றியக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பண்டைத்தமிழர்களிடையே இயற்கை வழிபாடுகளான மரவழிபாடும், பிறைவழிபாடும், திணைத் தெய்வ வழிபாடுகளான வெறியாட்டும், கொற்றவை வழிபாடும், பெருந்தெய்வ வழிபாட்டு முறையோடு சூரரமகளிர் என்னும் அச்சம் தரும் தெய்வவழிபாட்டையும் குறுந்தொகைப் பாடல்கள்வழிக் காணமுடிகிறது.

# நீதி இலக்கியங்களும் தமிழ்ச் சமுதாயமும்

பதிப்பாசிரியர்கள்

மருத்துவர் வி.பி. ரிஷிகேஷன்
முனைவர் கலை. இராம. வெங்கடேசன்
முனைவர் எஸ். பத்மநாபன்
முனைவர் கோ. ஜெயஸ்ரீ

வெளியீடு

தமிழ்த்துறை
ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561.
2018

முனைவர் இரா. ஜெகதீசன்
பேராசிரியர் திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர்.

# நீதி இலக்கியங்களின் தோற்றமும் மரபு மாற்றங்களும்

தமிழினம் தனித்துவம் வாய்ந்த காலத்தில் தோன்றியவை சங்க இலக்கியங்களாகும். மூவேந்தர்களின் ஆட்சியும், குறுநில மன்னர்களின் காவல்திறனும், வேளிர்களின் பங்களிப்பும் ஒருசேரக் கூடித் தமிழினத்தின் தனித்துவத்தைப் பாதுகாத்த காலம் சங்ககாலம் ஆகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்திற்கு அடுத்து உள்ள காலத்தைச் சங்கம் மருவிய காலம்' என்றழைப்பர். சங்ககால இலக்கிய மரபு அகம் - புறம் என இருந்தது. சங்க மருவிய கால இலக்கிய மரபு அறம், பொருள், இன்பம், வீடு என விரிந்தது. இதனால் காதலும் வீரமும் கொடையுமென இருந்த சங்ககாலப் போக்கு மாறியது. தனிமனித புலனுணர்வு வாழ்க்கையைப் பாடிப் புகழும் நெறியை விடுத்துப் மனிதனது நிலையாமையை எடுத்தியம்பி மனிதன் மேற்கொள்ள வேண்டிய நீதிநெறிகளைப் பாடும் புதிய மரபு பாடுபொருளாக மாறிக் காலூன்றியது. அறக்கருத்துக்கள் பலவற்றை வலியுறுத்திப் பாடும் புதுமரபு தோற்றம் பெற்ற காலமே நீதி இலக்கியக் காலம்' எனலாம்.

சங்க இலக்கியங்களிலும் நீதிக் கருத்துக்கள் இருந்தன. அவை வற்புறுத்தி வலியுறுத்தும் வண்ணம் பாடப்பெறவில்லை. சங்ககாலப் புலவர்களின் நோக்கமும் அதுவல்ல. தலைவன் - தலைவி இருவருக்கும் இடையேயுள்ள மேன்மையைப் பாடுவதே புலவர்களின் நோக்கமாக இருந்துள்ளது. இருவர்தம் அன்பைப் பாடும் போது உயரிய வாழ்வியல் விழுமியங்களை- நீதிக்கருத்துக்களை இடையிடையே இயைத்துப் பாடியுள்ளனர். இத்தகைய மரபுகள் சங்கம் மருவிய கால நீதி இலக்கியங்களில் பெரிதும் காண இயலாது. நீதிகளை வற்புறுத்துவதற்காகவே நீதி இலக்கியங்களைப் படைத்துள்ளனர் புலவர்கள்.

சங்க இலக்கியங்களில் பரத்தமையும் கள்ளுண்ணலும் கடியப்படவில்லை. நீதி இலக்கியங்களில் இவை இரண்டும் கடியப்பட்டன. கள்ளுண்ணுதல் நஞ்சுன்பதற்குச் சமம் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

> செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுன்பார் கள்ளுண் பவர்
> (குறள்.926)

இவ்வாறே, பரத்தமை உறவைக் கண்டிக்கும் வள்ளுவர்,

> அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்இன்சொல்
> இழுக்குத் தரும்.(குறள்.911)

என்றும்,

> இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்திருநீக்கப் பட்டார்
> தொடர்பு(குறள்.920)



என்றும் கண்டித்துப் பாடியுள்ளதைக் காணமுடிகிறது.

## நீதி இலக்கியங்களில் புதுமரபும் யாப்பும்:

நீதிக் கருத்துக்களைப் பழமொழிகளோடு இணைத்துப் பாடும் ஒரு புதிய மரபினை நீதி இலக்கியக் காலத்தில் காண்கிறோம். பழமொழி நானூற்றைப் பாடிய முன்றுறையரையனார்,

> கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்பொச்சாந்து தம்மைப்
> புகழ்ந்துரைப்பர் தெற்றஅறைகல் அருவி அணிமலை
> நாடநிறைகுடம் நீர்தளும்பல் இல(பழமொழி நானூறு.10)

என்று கற்றறிந்தோர் பெருமையையும் கல்லாதார் சிறுமையையும் பழமொழியுடன் இணைத்துப் பாடிப் புதுமரபினைப் புகுத்தியுள்ளார்.

கருத்து மாறும்போது அக்கருத்திற்கேற்பச் செய்யுள் வடிவமும் மாறும் என்பதை உணர்ந்த நீதி இலக்கியங்களைப் பாடிய புலவர்கள் வெண்பா யாப்பினைத் தேர்ந்தெடுத்தனர். வெண்பா செப்பலோசை உடையதாகவும், பிறர்க்கு ஆணையிடுவதாகவும், நீதிக் கருத்துக்கள் தெளிவாகவும் கட்டுக் குலையாமலும் கேட்பவர் பிறழ உணராமல் கருத்தை நேர்பட உணரவும் பெரும் உதவியாக இருக்கும் யாப்பு வடிவம் வெண்பா என்பதை உணர்ந்து நீதி இலக்கியங்கள் யாவும் வெண்பாவால் இயற்றப் பெற்றுள்ளன.

சங்க மருவிய காலப் புலவர்கள் தம் காலத்திற்கு ஏற்பப் புதுவகை இலக்கியங்களை உருவாக்கிய போதிலும் பழமையை அடியோடு மறந்துவிடவில்லை. பிற்காலத்தில் தோன்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி, உலகநீதி, வெற்றிவேற்கை எனப் பல நீதி நூல்கள் தோன்றினாலும் தமிழிலக்கிய வரலாற்றில் நீதி நூல்களின் காலம் என்பது சங்க மருவிய காலத்தையே குறிக்கும் எனலாம்.

## வலுவிழந்த அரசும் நீதிகூறிய பெரியோர்களும்:

மக்கள் இணைந்து இயைந்து வாழும் அமைப்புமுறைக்குச் சமுதாயம் என்று பெயர். குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்டகாலமாக ஒன்றுசேர்ந்து வாழ மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம் ஆகும். நீதி நூல்கள் பொதுவாக அறங்கள் மூலம் சமுதாயச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. அவை போதிக்கும் அறங்கள் சமுதாயத்தை நோக்கியே அமைகின்றன. அரசியல் முறை, குடும்ப ஒழுக்கம், சமயம் மற்றும் தனிமனித உணர்வுகள் போன்றவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

நாட்டில் நிலையான நல்லாட்சி நிலவாத காலகட்டத்தில சமுதாயம் மதிக்கும் தலைவர்களாகச் சான்றோர்களும் சமயப் பெரியோர்களும் உருவாவது இயற்கை. அப்பெரியோர்கள் மக்களுக்கு நீதி கூறுபவர்களாக மாறுவதும் இயற்கையே. அப்படிப்பட்ட ஒரு காலம்தான் சங்கமருவிய காலம். அதனால்தான் அக்கால கட்டத்தில் நீதி நூல்கள் வெகுவாகத் தோன்றின. சமயப் பெரியோர்களும் சான்றோர்களும் தமிழ்ச் சமுதாயத்தில் நீதியை நிலைநிறுத்த நினைத்தனர். நினைத்த

அப்பெரியார்களால் எழுதப்பட்ட நூல்களே நீதி இலக்கியங்களாகப் பிற்காலத்தே தொகுக்கப்பட்டன. இந்நூல்கள் அப்போதைய தமிழ்ச் சமுதாயத்தில் பின்பற்றப்பட வேண்டிய அற உணர்வுகளையும், நீதிகளையும், பண்பாட்டுப் பதிவுகளையும், வரலாற்றுச் சூழல்களையும், சமூகப் பின்புலத்தையும் இன்னபிற செய்திகளையும் வெளிக்கொண்டு வந்து தமிழக வரலாற்றில் தடம் பதித்துள்ளன.

நீதி நூல்கள் தோன்றிய காலத்தில் முடியுடை வேந்தர்களின் ஆட்சி பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம்.

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்தலைமிசைக் கொண்ட
குடையர் - நிலமிசைத் துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால் எஞ்சினார்
இவ்வுலகத் தில் (நாலடியார்,21) 'மலைமேல் காணும் சந்திரனைப் போல யானையின் தலைமேல் வைத்த குடையுடைய அரசரும் (மூவேந்தர்கள்) பூமியில் இறந்தார் என்று பலரறியக் காட்டி இகழப்பட்டவர்கள். அவ்விகழ்ச்சிக்கு உட்படாமல் மிகுந்தவர்கள் இவ்வுலகத்தில் இல்லை என்பதால், முடியுடை வேந்தர்கள் ஆட்சியில் இல்லை' என்பது பெறப்படுகிறது. எனினும், பெருமுத்தரையர்களை மற்றொரு பாடலில் நாலடியார் சுட்டியுள்ளது.

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்கருனைச்சோ றாவார் கயவர் -
கருனையைப் பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும
(நாலடியார்,200) பெருமுத்தரையர் மகிழ்வுடன் பொரிக்கறியோடு சோற்றைக் கொடுப்பர் அதனை மூடர் யாதொரு முயற்சியும் செய்ய இயலாதவர்கள் உண்பார்கள்' என்பதால் பெருமுத்தரையர்கள் அக்காலத்தே ஆட்சியில் இருந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

முத்தரையார்கள் முடியுடை வேந்தர்கள் அல்லர், சிற்றரசர்கள். ஆகவே நாலடியார் காட்டும் தமிழகம் முடியுடை வேந்தர்களோ முடிசூடிய மன்னர்களோ இல்லாத தமிழகம் எனலாம். பெரு அரசர்கள் இல்லாத தமிழகமாக இருந்தாலும், அவ்வப்போது நிகழ்ந்துக் கொண்டே இருந்துள்ளது. போரில்லாத அமைதியான தமிழகத்தைக் காண இயலவில்லை.

யானை எருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்சேனை தலைவராய்ச்
சென்றோரும் - ஏனை வினைஉலப்ப வேறாகி வீழ்வர்தாம்
கொண்ட மனையானை மாற்றார் கொள (நாலடியார்-3)

யானைக் குடையின் நிழலில் அதிபதியாகச் சென்ற அரசர்களும் தீவினையினால் முன்பிருந்த நிலையினின்று வேறுபட்டுத் தாங்கள் திருமணம் செய்துகொண்ட மனைவியைப் பகைவர் கொண்டுபோகக் கெடுவார்கள்' என்பதால், பொருளுக்காவும் பெண்ணுக்காகவும் போர் நடந்துள்ளது என்பது பெறப்படுகிறது.

சங்கம் மருவிய காலத்தில மூவேந்தர்களின் முடியாட்சி குலைந்தது. குறுநில மன்னர்களின் கோலும் தளர்ந்தது. ஆட்சி அரசியல் வலுவிழந்தது. இக்காலத்தில் சமயப் பெரியார்களே சமுதாயம் மதிக்கும் தலைவர்களாக மாறினர். வடபுலத்தில் இருந்து தமிழகம் வந்த சமயநெறிகள் தமிழகத்தில் ஆழமாக வேரூன்றின.



குறிப்பாகப் பௌத்த நெறியும் சமண நெறியும் தமிழ்ச் சமுதாயத்தில் மிக உயரிய இடத்தைப் பெற்றன. வடபுல நெறி, தென்புல நெறியுடன் கலந்து உறவாடியது. இலக்கிய நெறியும் மாறுதலுற்றது. அகம் - புறம் என்ற சங்ககாலக் கோட்பாடு, அறம், பொருள், இன்பம், வீடு என மாற்றம் பெற்றது. மாற்றம் பெற்ற கோட்பாடுகளின் வெளிப்பாடுகள்தான் சங்கம் மருவிய கால நீதி இலக்கியங்களாகும்.

# தமிழிலக்கியங்களில் - பல்துறை நுட்பம்



பதிப்பாசிரியர்கள்


முனைவர் அரங்க. பாரி

முனைவர் கிருஷ்ணன் மணியம்

முனைவர் அபிதா சபாபதி

முனைவர் ஒப்பிலா. மதிவாணன்

முனைவர் இரா.மோகனதாஸ்

தாங்காது என்று வள்ளுவர் கூறுவது சிந்தித்தற்குரியது. இவற்றில் ஒரு நிலம் மண்சார்ந்த நிலவுலகம். மற்றொன்று கடலுக்கடியில் உள்ள நிலம். இவ்விரண்டும் வெகுண்டால் இவ்வுலகம் என்னவாகும் என்பதனைச் சிந்திக்கவே இவ்வாறு குறித்தார்.

## முடிவுரை

திருவள்ளுவர் நிலம், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகியனபற்றி மிக விரிவாகச் சிந்தித்துள்ளார். நிலத்தின் இயல்புகளை, தன்மைகளை அறிவியல் நோக்கோடு வெளிப்படுத்துவதோடு, அவற்றைக் காத்திட வேண்டும் என்ற கருத்தினையும் தெளிவுறுத்துகின்றார். நிலம் பண்பட்டு நிற்றல் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் இயற்கை வளத்திற்கும் அரணாக நிற்கும் கருத்தாக்கங்கள் இன்றைய அறிவியலாளர்கள் ஏற்கும் வகையில் அமைந்துள்ளன.

O



# உடன்போக்கும் உளவியல்நோக்கும்

முனைவர் இரா.ஜெகதீசன்,
பேராசியர், தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
வேலூர் - 632 115.
jagantvugmail.com

அகத்திணை இலக்கணத்தின் உரிப்பொருளான காதல் தமிழினம் கொண்டொழுகிய உலகியல் நோக்கத்திற்கு முற்றும் இயைந்தது. காதல் தன்னரில்லா வலிய பெரிய உணர்ச்சியே ஆயினும், அதுஉருப்பெற்றும் உருப்பெறாமலும் ஓர் இலக்கியப்படைப்பு எய்துவதற்குத் துணைக்கூறுகள் எத்துணையோ வேண்டும். இக்கூறுகளும் காதலென்னும் மூலப்பொருளுக்கேற்ப உலகினவாக இருத்தல் வேண்டும. இலக்கியம் என்பது மக்கள் வாழ்வில் கண்டவை, நுகர்ந்தவை, எண்ணியவை, உணர்ந்தவை, தம்மைப் புலப்படுத்தும் பதிவேடு என்றும், மொழிவழிப்பட்ட வாழ்க்கை விளக்கும்என்றும் அட்சன் இலக்கியஆராய்ச்சி முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். (W.H.Hudson, An Introduction tothe Study of Literature, p.10)

தமிழர் இயற்கையோடு ஒன்றி இருந்தனர். ஆதலின் மனிதன் பண்டு அடர்ந்த இயற்கை நடுவண் இருந்தான். இயற்கையோடு உறவுற்றான் என்று பொதுப்படையாக மொழிவதைக் காட்டிலும் இயற்கை தன்னைச் சூழ்ந்த மக்களின் மனத்தை எவ்வெண்ண வாயிலாக ஊடுருவிற்று? அம்மக்கள் இயற்கையின்பல் பொருள்களைக் காணுந்தோறும் கேட்குந்தோறும் சொல்லுந்தோறும் தம்நெஞ்சகத்து எவ்வெண்ணப் பான்மையை வளர்த்துக் கொண்டனர்? வளர்க்க இடம் கொடுத்தனர்? என்று வரையறுத்துக் காண்பது நன்று. அகத்திணைச் செய்யுட்களில்

பரந்து செறிந்து கிடக்கும் இயற்கைப்புனைவுகளையும் அப்புனைவுகளுள் மறைந்தோடிக் கிடக்கும் ஒருபெரும் தன்மையினையும் ஆராய முனைந்தால், பண்டைத் தமிழினத்தின் தனிமனக்கூறு தெளிவாகத் தோன்றும். அக்கூறுகள்தான் அத்திணைப் படைப்பிற்கு முதற்காரணமாகும் என்பர் வ.சுப.மாணிக்கம். *(தமிழ்க்காதல், ப.158)*

## பாலையும் உடன்போக்கும்

அன்பின் ஐந்திணைகளுள் பாலைத்திணைக்கென்று தனியிடமுண்டு. இப்பாலைத் திணையில் தான் களவைக் கற்பாக்க முயலும் நிகழ்வு நடைபெறுகிறது. களவில் உடன்போக்கு பாலையாவது எவ்வாறு? தலைவனும் தலைவியும் உடன்செல்லும் நிலையைக் குறிஞ்சி என்றுதானே கூறவேண்டும்? அன்னோர் செல்லும் வழி நிழலுடையது நீருடையது பூவுடையது இளவேனில் நலமுடையது என்று புனையப்படுதலின் நிலத்தாற் பாலை காலத்தாற் பாலை என்று கூறுவதற்கு இல்லை. பெற்றோரைப் பிரிந்து செல்லுதலின் பாலையாயிற்று என்று கூறலாமோ? எனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற உரிப்பொருள்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடைநிகழ்வனவன்றிப் பிறரோடு தொடர்புடையனவல்ல. பாலையாவது பிரிதலும் பிரிதல்நிமித்தமும் ஆகும். உடன்போக்கு பிரிதல் நிமித்தத்தின் பாற்படும். உடன்போக்கில் இருவரும் கூடியிருப்பினும், இன்னும் மணமாகாமையின் பிரிவோமோ? பெற்றோரால் பிரிக்கப்படுவோமோ? என்ற பிரிவுணர்ச்சி இருவர்தம் உள்ளத்தும் ஓடிக்கொண்டிருக்கும்.

> இடைச்சுர மருங்கின் அவன்தமர் எய்துக்
> கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞர் எய்திக்
> கற்போடு புணர்ந்த கௌவை (தொல்.986)

என்று தொல்காப்பியர் உடன்போக்கில் உள்ளத்துயர் உண்டு என்பதை எடுத்துரைத்துள்ளார். இக்களவுப் பாலையையும் கற்புப் பாலையையும் அறமும் திறமும் பொருந்தப்பாடிய ஓதலாந்தையார் சிறந்த பாலைப் புலவர் ஆவார். அவர்தம் ஐங்குறுநூற்றைக் கற்கும்



மாந்தர்க்கு அகத்திணையின் இலக்கியவளத்தில் ஐயந்தோன்றாது. பாலைத்திணையில் தலைவனும் தலைவியும் உடன்சென்ற போதும் அவர்களிடம் துன்பம் தொடர்ந்து கொண்டே செல்கிறது என்பது தெளிவாகிறது.

## உளவியலும் நடத்தையும்

உளவியல் என்பது அறிவியல் துறைகளில் ஒருமுக்கிய பிரிவாகும். சைக்காலஜி (Psychology) என்னும் சொல், சைக்கி (Psyche) லோகஸ் (Logos) என்னும் கிரேக்கச்சொற்களில் இருந்து உருவானவை. சைக்கி என்றால் ஆன்மா என்று பொருள். லோகஸ் என்றால் அறிவியல் அல்லது ஒருவனுடைய குணம் என்று பொருள். இந்த இரண்டு கிரேக்க மூலச்சொற்களை இணைத்து உளவியலை மனிதஆன்மா அல்லது உள்ளத்தின் தன்மை, செயல்நிகழ்ச்சி பற்றிய ஓர் அறிவியல்என்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி வரையறை செய்கிறது. எனவே, உள்ளத்தின் இயல்புகளை ஆராய்ந்து எடுத்துக் கூறவே உளவியல் தோன்றிற்று எனலாம். இவ்வாறு தோன்றிய உளவியல் பலநூற்றாண்டுகளாக தத்துவஇயலின்(Philosophy) ஒருபிரிவாகவே இருந்து வந்துள்ளது. சைக்காலஜி (Psychology) என்ற சொல்லை முதன்முதலாகத் தமது நூலுக்குப் பெயரிட்டவர் 16ஆம்நூற்றாண்டைச் சார்ந்த குளோகல் (Glockel) என்பவர் ஆவார். இச்சொல்லே இன்றுவரை நிலைத்து விட்டது. இதனுடைய மொழி பெயர்ப்பாக உளவியல் என்ற சொல்லைப்பயன்படுத்தி வருகின்றோம்.

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நடத்தையைப் பற்றிய அறிய ஆர்வம் கொண்டவனாக இருக்கின்றான். மனிதனுடைய நடத்தையைப் பற்றிப் பல்வேறு சமூக அறிவியல்கள் அவனோடு தொடர்புடைய பிறரது நடத்தையைப் பற்றி ஏதாவது ஒருவகையில் ஆராய்கின்றன. அவை ஒவ்வொன்றும் மனித வாழ்வின் ஒவ்வொரு பண்பினை மட்டுமே ஆராய்கின்றன. ஆனால் உளவியல் மட்டும்தான் மனித வாழ்வின் எல்லா நிலைகளையும் ஆராய முயற்சி செய்கிறது. இதன்விளைவாகவே, பல்வேறு அறிவியல் துறைகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு உளவியல் ஆழமாகவும் அகலமாகவும் தன்னுடைய ஆய்வினைச் செய்ய முனைந்துள்ளது.

உளவியல் என்பது மனிதனின் நடத்தை பற்றிய ஓர் அடிப்படைக்கல்வி ஆகும். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், மனிதனின் உடல் மற்றும் உள்ளச் செயற்பாடுகள் அனைத்தும் நடத்தையின் பாற்படும். ஒருவனிடம் கண்டு நோக்குவதற்கு உரிய இயல்பு அவனது நடத்தை மட்டுமேஆகும். மெக்டியூகல் என்ற உளவியல் அறிஞர் உளவியலுக்கும் மனிதநடத்தைக்கும் இடையே உள்ள தொடர்பினைத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்.

1. நடத்தல், ஓடுதல், பேசுதல் போன்றன இயக்கச் செயல்கள்

2. காணல், கேட்டல், சிந்தித்தல் போன்றன அறிவுபூர்வச் செயல்கள்

3. மகிழ்ச்சி, துயரம், கோபம் போன்றன உணர்வுப்பூர்வச் செயல்கள்

இச்செயல்கள் யாவும் நடத்தையின்கீழ் அடங்கும். உட்வொர்த் (Woodworth, R.S.) என்பாரின் கருத்துப்படி, மனித வாழ்வின் ஒவ்வொரு வெளிப்பாடும் ஒருசெயல் எனப்படும். ஒருகுறிப்பிட்ட சூழ்நிலையில் வெளிப்படும் மனிதனின் எதிர்ச்செயலை நடத்தை என்று கூறலாம். தற்கால உளவியல் அறிஞர்கள் உளவியலை, மனிதநடத்தை பற்றிய ஓர்அறிவியல் என்று வரையறை செய்கின்றனர். உள்ளத்தின் வாழ்க்கையைப் பற்றிய அறிவியலே உளவியல் என்று வில்லியம் ஜேம்ஸ் வரையறை செய்கின்றார்.

மனத்தில் இருந்து தோன்றும் எண்ணங்களுக்கு ஏற்பவே நாம் செயல்படுகின்றோம். ஆனால், மனத்தைத் திட்டவட்டமாக நம்மால் அறியமுடிவதில்லை. மனதில் தோன்றும் எணணங்களை நடைமுறைப்படுத்துவது மனநிலைக்கு ஆதாரமான மூளையின் செயலாகும். எனினும், மனமும் மூளையும் ஒன்றல்ல. மூளையின் கட்டளைக்கு ஏற்பவே மனதின் எண்ணங்கள் செயல்படுகின்றன. எனவே, மனிதனுடைய மனம் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப உந்தப்பட்டு செயல்படுவதே நடத்தை என்று கூறலாம்.

மனிதன் மகிழ்ச்சியில் மூழ்கினாலும் துன்பத்தில் ஆழ்ந்தாலும் அவை அவனது நடத்தைகள் மூலமே வெளிப்படுகின்றன. மனதில் தோன்றும் எண்ணங்கள், செயல்கள் மனிதனுடைய நடத்தைகளாக வெளிப்படுகின்றன. இவ்வாறு மனிதனின்



உளவியல் செயல்களை அறிய அவனது நடத்தை உதவுவதால் உளவியல் நூலை மனிதநடத்தை நூல் என்று கூறலாம். மனித நடத்தையை அறிவதற்கு அவனது இயல்பூக்கங்களும் மனவெழுச்சிகளுமே காரணங்களாக அமைகின்றன.

## மனவெழுச்சிகள்

மனவெழுச்சிகள் இயற்கையாகத் தோன்றுபவை. இவற்றைத் தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் என்று கூறியுள்ளார். இம்மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும்.

அவையாவன:

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (தொல்.மெய்ப்.3)

இந்த மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் மேலும் நான்கு நான்காகப் பிரித்து 32 மெய்ப்பாடுகளாக விரிகின்றன. மனஉணர்ச்சிகள் என்பது ஒருவன் செய்யும் செயலுக்குப் பின்னணியாகத் தோன்றும் மகிழ்ச்சி அல்லது துன்பம் சார்ந்த அனுபவங்கள் எனலாம். மனஉணர்ச்சி முழுஉடலையும் உள்ளத்தையும் பாதிப்பவையாகும். மனவெழுச்சிகள் திடீர்தேவைகளை நிறைவு செய்ய இயல்பாக எழுபவையாகும்.

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் ஒருநிலையாகும். நம்மைப் பாதிக்கும் நிகழ்ச்சியிலோ அல்லது நாம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள ஒருசூழ்நிலையிலோ மனவெழுச்சிகள் நம்மிடம் இயல்பாகவே தோன்றுகின்றன. மனவெழுச்சிக்கு உட்பட்ட ஒருவரின் உடலும் உள்ளமும் கிளர்ச்சியுற்று இருக்கும்.

ஒவ்வொரு மனவெழுச்சியும் ஒருசில இயல்பூக்க நடத்தைகளுடன் சேர்ந்தே காணப்படுகின்றது. அச்ச உணர்வானது தப்பித்தல் அல்லது ஓடிவிடுதல் போன்றவற்றுடன் தொடர்புடையதாக உள்ளது. கோப உணர்வானது சண்டை, சிரிப்பு கலந்த வேடிக்கை, வியப்பு கலந்த ஆர்வம் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஓர் அடிப்படைத் தேவையானது எப்பொழுது மனநிறைவை அளிக்கின்றதோ அல்லது

எதிர்மறையாக வருகின்றதோ அப்பொழுதுதான் மனவெழுச்சியானது முக்கியப் பங்காற்றுகிறது.

### மனவெழுச்சியின்இயல்புகள்

மனவெழுச்சியானது ஒவ்வொரு உயிர்களிடத்தும் அதன் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப அமையும். தீவிரமான மனவெழுச்சிகளுக்கு உட்பட்ட ஒருவனது முகத்தோற்றத்தில் இருந்து அவனுடைய மனவெழுச்சி சினமா? அல்லது அச்சமா? அல்லது மகிழ்ச்சியா? என்று திட்டவட்டமாகக் கூறவியலாது. அவனது முகத்தோற்றத்துடன் அவனைச் சூழ்ந்துள்ள சுற்றுப்புறநிலையைப் பற்றிய அறிவும் நமக்கு இருந்தால்தான் மனவெழுச்சியைப் பற்றி உறுதியாகக் கூறஇயலும். மனவெழுச்சிகள் எந்த வயதிலும் காணப்படும். ஆனால், பருவத்திற்கு ஏற்ப மாறுபடும். குறிப்பிட்ட ஒருமனவெழுச்சிக்கு ஆட்பட்ட ஒருவர் அந்நிலை மாறிய பின்னரும் சிறிதுகாலம் அதேமனவெழுச்சியில் இருப்பர். இதனை மனவெழுச்சிநீட்சி என்பர். மனவெழுச்சிகள் தொடர்ந்து ஒருவர்க்கு இருப்பின், ஆழ்ந்து சிந்திக்கும் திறனைக் குறைக்கும். கற்றலையும் தீவிரமனவெழுச்சிகள் தடை செய்கின்றன. மனவெழுச்சிகளை ஆக்கநிலையுறச்செய்தல் எளிது. இவ்வாறு செய்வதால் முன்பு மனவெழுச்சிகளை, தோற்றுவிக்காத பொருள்களும் நிலைகளும் இப்பொழுது அத்தகைய மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்கச் செய்யும். மனவெழுச்சிகளால் ஒருசில உடல்நிலை மாற்றங்கள் நிகழ்கின்றன. குறிப்பாக அச்சம், சினம், முதலிய வெறுப்பூட்டும் மனவெழுச்சிகளில் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்களை நாம்தெளிவாகக் காணலாம்.

மனவெழுச்சிகள் நேர்மறை மற்றும் எதிர்மறை விளைவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. மகிழ்ச்சி அல்லாத மனவெழுச்சிகளான அழுகை, அச்சம், சினம், பொறாமை போன்றவை தனிநபர்வளர்ச்சிக்குக் கெடுதியை ஏற்படுத்துகின்றன. இவைகளே எதிர்மறை மனவெழுச்சிகளாகும். அன்பு, ஆவல், மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகளே நேர்மறை மனவெழுச்சி களாகும். நேர்மறை மனவெழுச்சிகள் நம்மை பயக்கும் என்றோ? எதிர்மறை மனவெழுச்சிகள் தீமை பயக்கும் என்றோ?



எதிர்பார்க்கக் கூடாது. அச்சம் போன்ற மனவெழுச்சியானது எதிர்மறையாகக் கருதப்பட்டாலும் ஆபத்தைச்சந்திக்க ஒருவரை ஆயத்தம் செய்ய உதவுவதைக் காணமுடிகிறது.

எனவே, மனிதனுடைய நடத்தை இயல்பூக்கத்தாலும், கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகளாலும் பாதிக்கப் படுகின்றன என்ற உண்மையை அறிய முடிகிறது. உளவியல் நடத்தை விதிகளில் ஒன்றான மனவெழுச்சியை உடன்போக்குத் துறையில் அமைந்துள்ள சங்க அகப்பாடல்களுடன் ஒப்பநோக்குப் பார்வையில் இக்கட்டுரை அமைகிறது.

### உடன்போக்கு

களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வது உடன்போக்குதுறை. இற்செறிப்பு, ஊரலர், வெறியாட்டு, நொதுமலர், வரைவு முதலான சூழ்நிலைகளை எல்லாம் கடந்த தலைவி அறத்தொடு நிற்பாள் அல்லது தலைவனுடன் உடன்போவாள். அறத்தொடு நின்றபின் உடன்போக மாட்டாள். உடன்போய பின்னர் அறத்தொடு நிற்கமாட்டாள். இந்த இரண்டில் ஒன்று நிகழ்ந்தால் மற்றொன்று நிகழாது. இந்த இரண்டு துறைகளே தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கைக்கு அழைத்துச் சொல்லும் பாலமாக விளங்குவன.

உடன்போக்குத்துறையில் அமைந்துள்ள சங்க அக இலக்கியப் பாடல்கள் வருமாறு:

உடன்போகிய மகளை நினைத்து நற்றாய் புலம்புவதாக (நற்.8;, ஐங்.10, அகநா.5) 23 பாடல்களும், உடன்சென்ற தன் மகளை நினைத்து தாய் வருந்துவதாக (நற்.1, ஐங்.10, அகநா.2) 13 பாடல்களும், மகட்போக்கிய செவிலி வருந்துவதாக (குறுந்..3, அகநா.13) 16 பாடல்களும், தலைவியை உடன்பட வைத்தும், நேர்வித்தும், நலம் பாராட்டியும் தோழி கூறுவதாக (நற்.1, குறுந்.6, ஐங்.3, அகநா.6) 16 பாடல்களும், உடன்போக்கின்போது தலைவியின் வழிஏதம் போக்கவும் தலைவியைப் பாராட்டியும் தலைவன் இயம்புவதாக (நற்.6, ஐங்.1, அகநா.3) 10 பாடல்களும், உடன்போகத் துணிந்த தலைவி, தன்நாணம் கரைந்து விட்டதாக வருந்தும் (குறுந்.1, அகநா.1) 2 பாடல்களும், போக்கின்போது

தலைவனையும் தலைவியையும் கண்டோர் கண்டு கூறுவதாக (நற்.1, குறுந்.1, ஐங்.10, கலித்.1, அகநா.1) 14 பாடல்களுமாக மொத்தம் 94 பாடல்கள் உடன்போக்குத் துறையிலும் உடன்போக்குத் துறையைச் சார்ந்தும் அமைந்துள்ளன. உடன்போக்குதுறையில் 34 பாடல்கள் மட்டுமே உள்ளதாகப் பேராசியர்நாகு அவர்களும், (Dr.R.K.Nagu, Palaittinai in Sangam Literature, p.15). 122 பாடல்கள் உள்ளதாக வ.சுப.மாணிக்கனாரும் (தமிழ்க்காதல், ப.66) குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும், உடன்போக்குத்துறை விளக்கத்தில் உரையாசிரியர்கள் சுட்டியுள்ள விளக்கங்கள்வழி இத்துறை செய்திகளை நேரிடையாகக் கூறும் பாடல்களும், துறை சார்ந்த செய்திகளைக் கூறும் பாடல்களும் இடம் பெற்றுள்ளதால் அவற்றையும் இத்துறையின்பாற் அடக்க 94 பாடல்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

அகமாந்தர் கூற்றுகளில் அமைந்துள்ள உடன்போக்குத் துறையில் அமைந்துள்ள ஓரிரு பாடல்கள் மட்டும் ஈண்டு மனவெழுச்சிகளோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது.

**தலைவி கூற்று:**

இன்னும் தாமதிக்காது தலைவனுடன் உடன்போக்கு செல்வது நன்று. அதுவே, உன் கற்பிற்குச் சிறப்பு, அறம் என்று பலபட பேசித் தலைவியைத் தலைவனுடன் செல்ல உணர்த்தி உடன்பட வைக்கின்றாள் தோழி. அப்போது தலைவி, நாணம் என்னும் நற்பண்பு இதுவரை நம்மோடு இருந்து நெடிய துன்புற்றது. நமது நாணம் தாங்கக்கூடிய அளவுவரை தாங்கி விட்டது. இப்போது காமமானது மிகுந்து நாணம் என்னை நெருக்குகின்றது. இனியும் என்னிடம் நிலைத்து நிற்காது. புதுவெள்ளத்தின் போது மணல்மேடாகிய சிறியகரை உடைந்து கரைந்து போவதுபோல அழிகின்றது. இனி என்னிடம் ஏதுமில்லை. தலைவனுடன் செல்ல உணர்த்தியதால் என் நாணத்தைக் கைவிட நேரிடும் என்று தோழிக்குக் கூறுகின்றாள்.

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் தெரிதர வீய்ந்து உக்காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காமம் நெரிதரக் கைநில் லாதே. (குறுந். 149)



தலைவியுடைய நாணம் அவளைச் செல்லவிடாமல் இதுநாள்வரை தடுத்து நிறுத்தியது. இப்போது தோழியின் உணர்த்தலால் உடன்பட்டு உடன்போகத் துணிந்ததால் தலைவியின் அச்சம் சற்று விலகியது. அதனால், அவளது நாணத்தைக் கைவிட நேரிடும் என்று தன்மனவெழுச்சியினை வெளிப்படுத்துகின்றாள். இதனைக் காமம் நெரிதரக் கைந்நில் லாதே என்ற அடியில் வெள்ளிவீதியார் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியை நாள்தோறும் சந்திக்க வருகின்றான். அதனை ஊரில்உள்ள பெண்கள் பார்த்து அலர் தூற்றுகின்றனர். இதனை அறிந்த தலைவி, ஊரலர் தூற்றுவதை விரும்பும் இவ்வூர்ப் பெண்டிர்கள் இன்னாத சொற்கள் பல கூறினாலும் அச்சொற்கள் என்மகளுக்குப் பொருந்துவன அல்ல என்று நினைப்பவள் தன்தாய். அத்தகைய தாய் நம்முடைய களவு ஒழுக்கத்தினை உணர்ந்தும் அமைதியுற்றிருக்கும் கொள்கையினை உடையவளாக உள்ளாள். அவளிடம் இன்னும் எத்தனை நாள்கள் நாம் களவொழுக்கத்தில் இருந்து கொண்டு ஏமாற்ற இயலும்? என்று கூறுகின்றாள். எனவே, தலைவனுடன் செல்லத் துணிந்துவிட்டேன் என்பதை மறைமுகமாகத் தெரிவிக்கின்றாள் தலைவி.

கௌவை மேலவர் ஆகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்ல என்மகட்கு எனப்பரைஇ
நம்உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர் யாம்என் இதற்படலே? (அகநா.95:11-15)

இவ்வூர்ப் பெண்கள் அலர் எழுப்பினாலும் அவ்வலருக்கும் என்மகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தலைவியின் களவு ஒழுக்கத்தை அறியாததாய் கூறுகின்றாள். இதனைத் தலைவி காண்கிறாள். என்மீது இத்தகைய நம்பிக்கை வைத்துள்ள தாயைக் களவொழுக்கத்தில் உள்ள நாம் நாள்தோறும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இன்னும் எத்தனை நாள்தான் ஏமாற்ற

முடியும்? உடன்போக்கு சென்றபிறகு நம்தாய் நம்முடைய களவொழுக்கத்தை அறிய நேரிடுமல்லவா? அதை இன்றே அறிந்து கொள்ளட்டும் என்று தலைவி தன்னுடைய மனவெழுச்சியின் உச்சியில் சென்று இயம்புகின்றாள். இதனைப் பாலைத்திணையில் ஓரோடோகத்துக்கந்தரத்தனார் நம் உணர்ந்து ஆறிய கொள்கை எனக் கூறியுள்ளார்.

## தோழிகூற்று

தலைவியுடன் பலவாறாகப் பேசித் தலைவனிடம் அடைக்கலமாகக் கொடுத்த தோழி, வயது முதிர்வின் காரணமாகத் தலைவியின் தனங்கள் தளர்ந்தாலும், அவளுடைய பொன்போன்ற மேனியில் கருமணி போன்று காணப்படும் கூந்தல் நரைத்தாலும் நீ தலைவியைக் கைவிடக் கூடாது என்று கூறித் தலைவியைத் தலைவனிடம் அடைக்கலமாகத் தருகின்றாள்.

அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனிமணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர (நற்.19:1-4)

தலைவியை அடைக்கலமாகக் கொடுக்கும் தோழி, தலைவியின் தனங்கள் தளர்ந்தாலும், கூந்தல் நரைத்தாலும் அவளைக் கைவிடக் கூடாது என்று உறுதிமொழியைப் பெறுவதற்குக் காரணம் அவளது அச்சமாகிய மனவெழுச்சியே என்று கூறலாம். இதனை, நீத்தல் ஓம்புமதிஎன்ற சொற்களால் புலவர் சுட்டியுள்ளதைக் காணமுடிகிறது.

மற்றொரு பாடலில், இவள் நினக்குப் பலவகையிலும் இன்பம்தரும் நிலையில் உள்ளாள். இவள்பால் இப்பொழுது அன்பு பூண்டு பாதுகாத்தல் பெரிதன்று. பின்னொருநாளில் இப்பொழுது அடையும் இன்பத்தை அடைய முடியாத முதுமைப் பருவத்திலும் இவளுக்கு நின்பாலுள்ள அன்பொன்றையே கருதிப் பாதுகாத்து வருவாயாக! இவளைப் பாதுகாப்பதற்கு வேறுயாரும் இல்லை என்று தோழிகூறி அடைக்கலமாகத் தருகின்றாள்.

பெருநன் றாற்றிற்பேணாரு முளரே
ஒருநன்று டையளா யினும்புரி மாண்டு



புலவி தீரவளி மதியி லைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
நன்மலை நாட நின்னல திலளே (குறுந்.115)

இவளால் இன்பம் தரஇயலாத முதுமைப் பருவத்திலும், இவளிடம் அன்பு வைத்துப் பாதுகாப்பாயாக! என்று அச்சம் மிகுதியால் ஏற்பட்ட மனவெழுச்சி காரணமாகத் தலைவனிடம் உறுதி கோருகின்றாள் தோழி. இதனைக் கபிலர் புரிமாண்டு புலவிதீர வளிமதி என்னும் அடியில் வெளிப்படுத்தி உள்ளார். உடன்போக்குத்துறையை ஒட்டி அமைந்துள்ள இப்பாடல் குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளது நோக்கத்தக்கது.

இவ்விரு பாடல்களிலும் தலைவன் இப்போது தலைவியிடம் அன்பாய் இருந்துவிட்டு, சிலகாலம் கழித்து தலைவியது முதுமைக் காலத்தில் கைவிட்டுவிடுவானோ? என்று தலைவியிடம் அச்சம் ஏற்படுகின்றது. அவ்வச்சம் காரணமாக எழும் மனவெழுச்சியைத் தோழி வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

## கண்டோர்கூற்று

வெப்பம் மிகுந்த பாலை வழியில் வருகின்ற முக்கோல்புரி அந்தணர்களே! என்மகளும் இன்னொருத்தி மகனும் பிறர் அறியாமல் காதலிற் கூடி இவ்வழியில் உடன்சென்றதை நீங்கள் கண்டீர்களா? என்றாள் செவிலித்தாய் கண்டோம். அது அறம் என்று கருதி எம்வழியே வருகின்றோம். நீர் அந்த அழகனோடு அரியவழியில் நடக்கத் துணிந்த நங்கையின் தாய் என்பதை உணர்கின்றோம்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!
ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!
எனவாங்கு

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தாள வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியாவாறு மற்றதுவே
(பாலைக்கலி,8:12-24)

மணம் மிகுந்த சந்தனம் அடர்ந்த மலையில் பிறந்தாலும், மலைக்கு அதனால் பயன் ஏதுமில்லை!. பூசிக்கொள்பவர்க்கு மட்டுமே மணமிகுந்த இன்பம் அளிக்கும். ஆழ்கடலில் முத்துக்கள் பிறந்தாலும், அவை கடலுக்கு எவ்வித பயனையும் தருவதில்லை! மாலையாய் அணிபவர்க்கு மட்டுமே இன்பம் பயக்கும். ஏழிசை யாழில் மென்மையான இசைதோன்றினாலும், அதனால். யாழுக்கு எவ்வித பயனுமில்லை! அவ்விசையைக் கேட்பவர்க்கு மட்டுமே இன்பம் தரும். அதுபோலவே உங்கள் மகள் தனக்குச் சிறந்த கணவனுக்குப் பணிவிடை செய்யச் சென்றிருக்கின்றாள். சிறந்த கற்பினை உடைய அவளுக்காக நீவீர் வருந்தாது செல்க! என்று செவிலியைத் தேற்றுகின்றனர்

இவ்வளவுநாள்தான்வளர்த்தமகள்இப்போது பிறன்மகனுடன் உடன்போகத் துணிந்து விட்டாளே! என்ற மனவெழுச்சி செவிலித்தாயை மேலும் மேலும் வருத்துகிறது. அவள்மனம் வருந்துகிறாள் என்ன செய்வது என்று அறியாமல், தலைவியும் தலைவனும் சென்ற வழியில் தனியாகச் சென்று தேடுகின்றாள். அவ்வழி வந்த அந்தணர்களைக் காண்கிறாள். இவ்வழியே என்மகள் ஒருத்தியும் பிறன்மகன் ஒருவனும் செல்லக் கண்டீர்களா? என்று வினவுகின்றாள். அவர்களின் பதில் அவளுக்கு ஓரளவு மனஅமைதியைக் கொடுக்கின்றது.

## தலைவன்கூற்று

தலைவியோடு உடன்போக்கில் செல்லும் தலைவன், தலைவிக்கு வழிநடை வருத்தம் தெரியாமல் இருக்கக் காட்டின் அழகினையும் பூக்களின் காட்சிகளையும் கூறுகின்றான்.

இளையவளே! நாம் செல்லும் வழியோ அழகிய பூக்கள் நிறைந்தவழி வரிப்புலியின் நகம்போன்ற சிவந்த மொட்டுக்கள் விரிந்த முருக்கமலராகிய வண்டுகள் சூழ்ந்த பூக்கள் பரவிக்கிடப்பதைப் பார்! மகளிரின் மார்பகம் போன்ற அரும்புகள்



மலர்ந்து சிந்திய கோங்க மலருடன் புலனலிப்பூக்கள் கிடப்பதைப் பார்! இதோ மணக்கும் பாதிரிப் பூக்களைப்பார். இவையெல்லாம் தெய்வ வழிபாட்டிற்கும் கோயிலில் ஒன்றாய்க் கலந்து கிடப்பது போலப் பரந்து கிடக்கும் பரவசமான காட்சியாக உள்ளதன்றோ?

இவ்வாறு பூக்களின் மணக்கும் இக்காடு உன்தந்தை செய்யும் போர்க்களத்தில் பகைவரை வெல்லும் போது பூண்சிதைந்த கொம்புகளை உடையதாகவும் பெண்யானைகளைச் சூழ்ந்து திற்பதாகவும் ஆண்யானைகளின் தோற்றம் போலச்சிறியதாகவும் பெரியதாகவும் உள்ளனஎன்று தலைவன் கூறுவதாகப் பெருங்கடுங்கோ பாடியுள்ளார்.

மற்றொரு பாடலில், தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றபோது அவள்நடந்து வருவதைப் பார்த்துத் தலைமகன் மகிழ்ந்து பாராட்டுகின்றான். இப்பாலை வழியில் என்னுடன் இணையாக நடந்து மகிழ்ச்சி கொள்வதற்காக உன்காற்சிலம்பு ஒலிக்க, பாதங்கள் சிவக்க, திரண்ட வலையல்களை அணிந்த முன்கையை உடைய மூங்கில் போன்ற தோள்களை வீசிவீசி நடக்கின்றாய். அவ்வாறு நடக்கும் ஆர்வத்தில் யான் உன்கூந்தலை நெருக்கமாக வாரிவிட்டு வெண்கடம்ப மலர்களைச் சூட்டி விட்டேன். அந்தக் கூந்தலில் வண்டுகள் சிறிதளவு உயரம் பறந்து மொய்க்கின்றன. அவற்றை ஓட்ட முயலாமல் நடக்கின்றாய். இந்த ஆர்வமும் நீ நடப்பதில் உள்ள புதுமையும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றனஎன்று பாராட்டுகின்றான்.

முன்கை
மெல்இறைப் பணைத்தோள் விளங்க வீசி
வல்லுவை மன்னால் நடையே (அகநா.257:10-12)

களவொழுக்கத்தில் இடையூறு மிகுந்தமையால் தலைவன் தலைவியுடன் உடன்போக்கில் சென்றான். அவன் மீண்டும் தலைவியின் இல்லத்துக்கு வந்தபோது தோழிக்குத் தாம் பாலை நிலத்துச் சென்றபோது இடைவழியில் நடந்த ஒருநிகழ்வைச் சொல்லிப் பாராட்டுகின்றான்.

தோழி, யானும் தலைவியும் உடன்போக்காகச் சென்றபோது, புலியின் ஒலியையும், மறவரின் ஆரவாரத்தையும் கேட்டு

அஞ்சுவாள் என்றுஎண்ணி, வேறுவழியில் செல்லலாம் என அவளுக்கு அவ்வழியைக் காட்டி, உனது இளங்கூந்தலில் பாதிரி, மல்லிகை, வெண்கடம்பமலர்களைக் கொத்தாக அணிந்துள்ளாய்! உன்கை வளையல்கள் ஒலிக்கக் கைகளைவீசியும் காலில் சிலம்பஒளிவீச மெல்லமெல்ல நட உன்பின்னழகைக் கண்டு மகிழ்வேன் என்றேன். அதைக் கேட்ட அவள் நாணம் கவ்வ தலைகுனிந்தாள் என்றுஅவளைப்பாராட்டுகின்றான்.

வான்கோல்
இலங்குவளைதெளிர்ப்பவீசிச்சிலம்புநகச்
சில்மெல்ஒதுக்கமொடுமென்மெலஇயலிநின்
அணிமான்சிறுபுறம்காண்கம்சிறுநனி
ஏகுஎனஏகல்நாணிஒய்யென
மாகொல்நோக்கமொடுமடம்கொளச்சாஅய்
நின்றுதலைஇறைஞ்சியோளேஅதுகண்டு
யாம்முந்துறுதல்செல்லேம்... (அகநா.261:4-11)

மேற்காண் பாடல்கள் மூன்றும், தலைவன் தலைவியுடன் உடன்போக்கில் சென்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளாக இடம்பெற்றுள்ளன. பாலைவழியில் செல்லும் தலைவி, தன்தாய் தந்தையைப் பிரிந்து தன்னுடன் வருவதை எண்ணித் தலைவன் மகிழும் அதேநேரத்தில் ஆண்களே நடக்க முடியாமல் பரற்கற்கள் நிறைந்த இப்பாலை வழியில் தலைவி துணிந்து வருகின்றாள். அவளுக்கு மனம் சார்ந்த சோர்வும், உடல் சார்ந்த களைப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற மனவெழுச்சியுடன் தலைவன் அவளை வியந்து பாராட்டி அழைத்துச் செல்கிறான்.

உடன்போக்குத்துறையில் அமைந்துள்ள பாடல்கள் யாவும் பாலைத்திணையில் அமைந்துள்ளன. எனினும், 3பாடல்கள் (குறுந்.115, 217, ஐங். 254) குறிஞ்சித்திணையில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் தோழி, தலைவனுடன் உடன்போகப் பலபட சொல்லித் தலைவியை உடன்படுத்துவதாகவும் உடம்பட வைப்பதாகவும் அமைந்துள்ளன. புணர்தலும் புணர்தல்நிமித்தமும் உரிப்பொருளாகக் கொண்ட குறிஞ்சித்திணையில் பிரிதலும் பிரிதல்நிமித்தமும் இடம்பெற்றிருப்பது எவ்வாறு? உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமேஎங்ஙனமெனில், என்பது தொல்காப்பிய நூற்பா. எனவே இங்கு உரிப்பொருள் மயங்கி



வருதல் கூடாது. உரிப்பொருள் மயங்கிவரின் இப்பாடல் பாலைத்திணையில் அடங்காது. மேலும், இதுபொருள்வயிற்பிரிவு அல்ல. உடன்போக்கில் பிரிதல் என்பது தலைவி தன்நற்றாய், செவிலி, தோழி உள்ளிட்டவர்களைப் பிரிந்து செல்கின்றாளே தவிர, தலைவனைப் பிரிந்து செல்லவில்லை. எனவே, இப்பாடல்கள்உடன்போக்குத்துறையில் அமைந்துள்ளன எனலாம்.

மேலும், உடன்போன தலைமகன் மீண்டு வந்தவுடன் நின்ஐயன்மார் பின்பற்றி வந்தபோது இடைச்சுரத்து நிகழந்தது என்ன? என்று தோழி கேட்க, நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைந்து கொள்வதற்கு உதவி செய்த மலையைத் தலைவி வாழ்த்துவதாகவும் (ஐங்.321), புணர்ந்தவுடன்போகும் தலைமகன் இடைச்சுரத்தின்கண்தலைமகன்விளையாட்டாகப்பூத்தொடுப்பதைக் கண்டு புகழ்கின்றான். இதற்கு அவன் நாணிக் கண்புதைத்தபோது மகிழ்ந்து கூறுவதாகவும் (ஐங்.319), உடன்போகிய தலைமகள், தலைமகன் வளைத்த கொம்பிற் பூக்கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுப்பதைப் பார்த்தவர்கள் கூறுவதாகவும் (ஐங்.383), இடைச்சுரத்தின்கண் தலைமகன், தலைவியினுடைய குணங்களை நினைப்பதனால் சுரத்தின் வெப்பம் நீங்கியது கண்டு சொல்வதாகவும் (ஐங்.322), உடன்போகிய தலைமகன் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்வதாகவும் (ஐங்.384), உடன்போகியவளின் தாய் படும் அவலப்பாங்கினையும் காட்டும் அன்பினையும் தெளிந்த அறிவினையும் முப்பது பாடல்களில் (ஐங்.371-340) ஓதலாந்தையார் ஏற்றம்பட கூறுவதாகவும் இத்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன.

மகளின் உடன்போக்கைத் தாய் ஒப்புகின்றாள். அறநெறி இதுவெனத் தெளிந்த என்மகள் என்று போற்றுகின்றாள். மகள் உடன்போக்கு சென்றதற்கு அவள் வருந்தவில்லை. உண்மையைச் சொல்லும் துணிவு மகளுக்கு இல்லையே. சொல்லியிருப்பின் உடன்போகவேண்டாவே என்று இரங்குகின்றாள். உடன்போக்கிற்கு உரிய வயதோ அவளுக்கு? முடிமுடிக்ககூட அறியாதவள் ஆயிற்றே என்று இளமையை நினைந்து புலம்புகின்றாள். என்பாவைக்கு இனிய பாலை இது. என்மகள் உடன்போக்கிற்கு காரணம் யார்? அவளும் இல்லை, அவனும் இல்லை, நானும் இல்லை என்று இறுதியில் தன்ஊழைக் காரணம் காட்டி

வெறுக்கின்றாள். தம்மகள் நடந்து செல்லும் பாலைவழி மழைபெய்து இனியதாகுக! என்று வேண்டுகின்றாள். உடன்போகிய காளையும் கூந்தல் எழிலியும் வரும்படி கத்துவாய் காகமே! உனக்கும் உன்சுற்றத்திற்கும் ஊனுடை உணவைப் பொற்கலத்தில் படைப்பேன்! என்று ஒருதாய் காக்கையிடம் வேண்டுகின்றாள். சிலம்புகழி நோன்பு அவன் வீட்டில் நிகழ்ந்தாலும் திருமணம் தன்வீட்டில நிகழ வேண்டும் என ஒருதாய் விழைகின்றாள். பெண்ணின் தாய்க்கும் ஆடவனது தாய்க்கும் எதிருணர்ச்சி இயல்பாகச் சமுதாயத்தில் இன்று போலவே அன்றும் இருந்துள்ளதைக் காணமுடிகிறது.

அகவிலக்கியத்தில் தலைவினுடைய தாய் தந்தை இடம்பெறுவர். தலைவனின் பெற்றோரைப் பற்றியும் அவளது காதலொழுக்கத்தைக் குறித்து அவர்களது கருத்து யாது? என்பது பற்றிப் புலவர் வாய்வாளார்,

நினைத்தொறும் கலிழும் இடும்பை எய்துக
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
வம்பமை வல்லில் விடலை தாயே (ஐங்.373)

மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே (ஐங்.399)

ஓதலாந்தையார் தலைவனது தாய்மேல் தலைவியின் தாய்க்குச் சினம்உண்டு என்று வெளிப்படுத்துவர். அவள் அத்தகையவனை அன்று பெற்றதனால் அன்றோ என்மகள் இன்று கடுஞ்சுர வழியில் செல்ல நேர்ந்தது என வளைத்துத் தொடுத்து வாயாடுவதைக் கணலாம். மகள் உடன்போக்குத் துறையில் வைத்துத் தாயார் தம் எண்ணவோட்டங்களைப் பலதிறமாக வடித்துக் காட்டுவர். இதனால் அகவிலக்கியம் பாடுவார் பாடும் வன்மைக்கு இயைந்து விரிந்துள்ளது. இருபால் தாயாரின் இகலுணர்ச்சி பாடப்பெறுவதால், அகவிலக்கியம் தமிழ்ச் சமுதாய மனப்பான்மையோடு இயங்குகிறது என்பதை அறியலாம். தலைவனது தாய்கூற்றில், வைப்புத் தலம் போலப் பாட்டின் அகத்து வருதலின் அகமரபு புதிய மரபிற்கும் வழிவிடுத்துள்ளதையும் அறியலாம்.

★



## துணைநின்ற நூல்கள்:

1. தமிழ்க்காதல், வ.சுப.மாணிக்கனார், சாரதா பதிப்பகம், சென்னை, 2012.

2. Palaittiai in Sangam Literature, Dr. R.K. Nagu, Aniyakam, Madras&30, 1981.

3. கல்வி உளவியல், முனைவர் இரா. ஜெகதீசன், முருகு பதிப்பகம், ஆம்பூர், 1998.

○